உ

சிவமயம்.

சிற்றம்பலசேகரம்.

இஃது

சென்னைமாநகரம்

சதுர்வேதசித்தாந்தசபைத்தலைவரும்

திருவண்ணாமலை

ஞானதீபக்குடைத் தருமகர்த்தருமாயிருந்த

சைதாபுரம்

சிற்றம்பலமுதலியாரால்

புதுமொழி வெண்பாவாகவும்

முதுமொழி விருத்தமாகவும் சேர்த்து

இயாவரும் எளிதிலுணரத்தக்க உரையுடன்

இயற்றப்பட்டது.

THUMBOO CHETTY

ஸி. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரவை

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்

பதிப்பிக்கப்பெற்றது

சென்னை.

1909.

அட்டவணை.

பக்கம்.	அட்டவணை.	பக்கம்.	அட்டவணை.
க-ல்	குறிப்பு	அகூ	திரேகாணம்
உ-ல்	பிறப்பு	கூக	நவாமிசம்
,,	சிறப்பு	கூசா	துவாதசாமிசம்
,,	நான்முகம	கூஎ	திரிம்சாமிசம்
ங	நால்	கூஅ	உயிர்உடல்
ரு	யுகடலௌா	,,	முன்னறியும்
,,	வருஷ...ளை	க00	உச்சகிரகம்
உசா	அயனம	க0உ	கஜ கேசரியோகம்
,,	ருது	,,	நீசபங்கம்
உக	மாசம்	0ங	கிரகமாலிகை
உங	தேதி	0சா	ஷை சேகரம்
ஙச	வாரம்	கசச	அஷ்டகவாக்கு
உஎ	பக்ஷம்	கசஎ	இராசிகளில்சந்திரன்
,	திதி	கஉங	சந்திரனைக் கிரகங்கள்பார்த்தல்
சங	நக்ஷத்திரம்	கஉஅ	இராசிகளில்சனி
ருஉ	யோகம்	கங0	கோட்சாரம்
சா	கரணம்	கஙஉ	விபரீதம்
சாரு	தியாச்சியம்	கஙங	அங்ககிரகம்
எக	அமிர்தகடிகை	கஙரு	காலசக்கிரம்
,,	நாழிகை	கசாஉ	துவாதசபாவம்
எங	காலம்	கசாஎ	நவக்கிரககாரகம்
,,	வேளை	கரு0	இலக்கினபலன் சுருக்கம்
எரு	இலக்கினம்	கருஉ	ஷை நவகிரகம்
அசா	இராசிசமயம்	கருச	ஆண்பெண்
,,	ஷை பாதசமயம்	கருரு	மூலைப்பால்
அஅ	ஷை நக்ஷத்திரபாதம்	,,	போஜனம்
,,	ஓரை		

பக்கம்.	அட்டவணை.	பக்கம்.	அட்டவணை.
கருசு	கல்வி	உருரு	எட்டுக்கிறைவன்
கருஎ	ஜீவனம்	,,	கேந்திராதிபத்திய தோஷம்
கசுச	இருப்பிடம்	உருச	பொதுச்சுபயோகம்
,,	விவாகம்	,,	இராஜயோகம்
கசுஉ	மரிப்பிடம்	உருசு	ஷெ பங்கம்
கசுரு	நக்ஷத்திரபாதம்	,,	மாரக லக்ஷணம்
கஅசு	நவக்கிரகதிசாபுத்தி	உருஎ	நித்தியபலன்
உஉக	மாரகதிசாயோகம்	,,	இராசிச்சக்கரபேட
உஉஉ	சனிசுக்கிரன்	உருஅ	காலச்சக்கரப்போ
,,	கோள்களின்குணம்	,,	ஸ்திரீஜாதகம்
,,	மேஷவிராசிமுதல்	உருகூ	அங்காரகதோஷம்
உருO	சுபாசுபாஸ்தானம்.	,,	நற்பலன் துற்பலன்
உருக	எல்லாக்கொள்குணம்	உசO	பிரசவவீடு
உருஉ	சுபகேந்திரம் பாபகேந்திரம்	உசச	சதுரங்கயோகம்
		,,	ஆருடம்

சாற்றுக்கவிகள்.

மதிராஸ் பிரசிடென்சிகாலீசு
தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய
தி - ஈ - ஸ்ரீநிவாசராகவாச்சாரியார்
அவர்களியற்றிய

கொச்சகம்.

பேராருஞ்சோதிடநூற்பெருமைபிறங்கிடவே
நேராதார்தாமுந்தெளிந்தாரி னேமாப்பக்
காரார்பொழிற்சைதைக்காவலன்சிற்றம்பலவன்
ஏரார்தன்பெயரொடுசேகரமெனுநூலியற்றினனே.

அஷ்டாவதானம்
பு - சபாபதிமுதலியாரவர்களியற்றிய

விருத்தம்.

சுரகுருமுதலோர்தொகுத்தபல்கணிதத்
தொல்லைநூற்பொருணணியாய்ந்து
திரல்பரவியசிற்றம்பலசேக
ரம்மெனநிலவுமோர்பநுவல்
வரனுறவிரித்தான்சைதைவாழ்ஐயா
சாமிமால்சுதனுமாபதிதன்
விரவுசோதரன்சிற்றம்பலக்குரிசில்
விளம்புதன்பெயரமைவுறவே.

சென்னை பிரசிடென்சி காலேசு

முதலாவது தமிழ்ப்பண்டிதர்

கோ - இராசகோபாலபிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முன்னைவினைப்பயன்வருங்கால்
முன்னுணராதிடரினளிழுழ்கியேங்கல்
என்னையிருங்கடலுலகீரினியேனும்
பொழிற்சைதையேயவேந்தல்
தன்னையொப்பிலாச்சிற்றம்பலப்பெயர்ந-
வலனிரைந்தவறிலாமே
கொன்னைநமக்களித்தனன்சிற்றம்பலசே-
கரமெனுநூல்குறிக்கொளீரே.

ஷை காலேசு

இரண்டாவது தமிழ்ப்பண்டிதர்

தொ - வேலாயுதமுதலியாரவர்கள்

இயற்றிய

ஆசிரியப்பா.

முதுமறைதெரித்தபழுதறுபொருட்பயன்
மண்ணகன்வரைப்பின்மண்ணருமக்கள்
யாக்கைபெற்றன்றியியையாயாக்கையு
நெடிதுறினல்லதுமுடிவுபோகா
படிமிசைநெடிதுறப்பல்வயின்வினைத்தடை
அடுக்கியவருதலினமையாவடுக்கிய
கறங்கெனக்கொட்புறலியற்கையேயதலைல்

சாற்றுக்கவிகள்.

அறிந்தனர்மறந்தனரலமந்துலண்டென
மறந்தலைமயன்றனருணர்ந்தனருய்பாக்
கருநெறிகடப்பக்குருட்டுக்கங்குற்
கொருசுடரளித்தெனமுழுதொருங்குணர்ந்தோ
ரருணெறிபடர்ந்தனரம்மையப்பனுய்த்
தெருணெறியாணிழல்செய்தவர்தேசிகன்
மயறபப்பயந்தவழியேவகுத்தனர்
தென்றமிழ்க்கடலினும்வடசொற்பரப்பினு
மன்றமற்றவைமயங்குநாளாக
வியறிரிதமிழ்நாட்டெல்லையினிலங்குற
முன்னையர்முதுமொழிதன்னுறுபுதுமொழி
விரைஇயவொருநூல்சேகரித்துத்தன்
விறற்புகழ்ப்பெயரின்விளங்கினனறத்து
வழிவருமாட்சிவான்குடிகெழுமிய
வண்டலம்புறுவயற்றொண்டநாடதன்வயிற்
றுவரத்தொகுத்ததவமுடைமூவரு
ளுலகுநிலைபெறீஇயவுழவுமுதனடாய்ப்
பொன்னேரிவிற்பெறுபுலஞ்செறிவேளாண்
டணிமரபோங்கச்சைதையம்பதிவாழ்
சிவராயகோத்திரஞ்செய்தவமெனவரும்
ஆண்டியப்பனுமணிவேலம்மையும்
பூண்டியல்பேரமைபொருந்துறத்திருந்து
மையாச்சாமியுமம்மணியம்மையும்
எய்யாத்தவத்தினினிதீன்றெடுப்பக்
கலபமஞ்ஞைருப்புலவன்சேவடிப்
போதுசூடுபுமேதகுமுமாபதி
முற்றுந்துணையெனமொழிந்துறு
சிற்றம்பலனெனுஞ்செய்தவத்தோனே.

காஞ்சீபுரம்
ம-ா-ா-ஸ்ரீ-சா. பச்சையப்ப முதலியார்,
ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
திருமணம்

கேசவசுப்பராயமுதலியார்

அவர்களியற்றிய
ஆசிரியவிருத்தம்.

விதுமொழிவாள்வதுமமிர்திளைமடவார்
வளர்சயிதைவிறிவாழு
மதுமொழியையாச்சாமிமுதலைசிற்றம்
பலப்புலவன்வையமுப்பயப்
புதுமொழியுமுதுமொழியும்புனைகணித
நான்மொழியின்பொலிவுநோக்கி
லெதுமொழிபோதிடமொழியேயிம்மொழிக்கு
நிகர்மொழியாயியம்பற்பாற்றே.

புதுவை சோதிடம்

தா - அப்பாசாமிபிள்ளை அவர்களியற்றிய

இரட்டையாசிரியவிருத்தம்.

சீருறுமறிவிற்சிறந்திமொதியாஞ்
சேடன்வானவர்முனிவரர்
திகழ்கின்றயாவருமருளினுற்றமிழினிற்
றெளியுமுபகாரமாக
ஏருறுசோதிடமியற்றிடாக்குறைவினு
லிலகுபலநூல்களாய்ந்தே
யிவணுறைவோர்முக்காலவர்த்தமானந்தெரிந்
தின்பசாகரமருந்தத்

தாரூறுசைதாபுரத்தினிற்பொன்னேரி
　　தவறில்வேளாளமரபிற்
றவமுறவுதித்தசிற்றம்பலக்கோமான்
　　றனிபெயரினன்மாணுற
ஏரூறுநல்லசிற்றம்பலசேகரமெனு
　　மியற்பெரியநூலளித்தே
யிகபரசுகம்பெற்றகங்களித்தியாவரு
　　மியம்புபுகழெய்தினனரோ.

கட்டளைக்கலித்துறை.

மெய்தானுணர்ந்தவர்சோதிடநூல்கள்விசேஷவன்மை,
பெய்தாவுரைத்தனனென்றாதிசேடன்றன்னேய்ப்பொழியச்
சைதாபுரத்துச்சிற்றம்பலப்பேர்கொடுத்தான்பிறந்து,செய்
தான்சிற்றம்பலச்சேர்க்கைநூல்யாண்டுஞ் சிறப்பிக்கவே.

(க-ரை.) ஆதிசேடன் - சோதியத்தில் ஒருநூலும் செய்யாததி னால், சைதாபுரம் சிற்றம்பலக்கோமானாகஜெனித்து, சிற்றம்பலசேகரமென்கிற இந்நூல் செய்தானென்பதாம்.

அக்கவுண்டாண்ட்
ஜெனரல் ஆபீசு
டிரேசரி சூபிரண்டெண்டாண்ட்
சி. வை. தாமோதரம்பிள்ளை
அவர்களியற்றிய
வெண்பா.

முன்னநந்தியோதமுனிவர்மிகுசோதிடநூல்
பன்னினர்சிற்றம்பலவேளின்-றன்ன
பலசேகரித்தொருங்குபார்த்தமைந்தான்சிற்றம்
பலசேகரநூல்பரிந்து.

சாற்றுக்கவிகள்.

டிப்டிமாஸ்டர்
அட்டெண்டாண்ட்
ஆபீசுமானேசர்
பொ. வெங்கடசுப்புமுதலியார்
அவர்களியற்றிய
வெண்பா.

சிற்றம்பலக்குரவன்சேர்த்தசேகரமுஞ்
சிற்றம்பலச்சூத்திரத்திகிரி - பெற்றவர்க்கு
எம்மணியமையாஸ்வாமியத்தையாய்த்துணைந்தோர்
கண்மணியாக்கொள்வர்களித்து.

உடுமலைப்பேட்டை
தாலுக்முனிசிப்
சை. காசிவிஸ்வநாதமுதலியார்
அவர்களியற்றிய
வெண்பா.

சோதிடநூல்பானுவெனத்தோன்றியசிற்றம்பலமே
ளோதிடுமிச்சேகரத்திற்கொட்புளதோ - ஜாதகவ
லங்காரமும்பின்னும்மற்றைநூலாயில்சஞ்ச
லங்காணும்புத்திசபலம்.

பட்டுக்கோட்டை
தாலுக்முனிசிப்
சை. அருணாசலமுதலியார்
அவர்களியற்றிய
வெண்பா.

ஆயிரஞ்ஜோதியுடேவண்ணிமெயாளிர்த்தாலுமவை
மாயிருஞாலமதியாமோ - ஆயிலவண்
சிற்றம்பலன்றந்தசேகரமெண்சிரமே
மற்றெதைச்சொல்லவரும்வாய்.

ஸ்ரீமகாபாரத
பாகவத முதலிய இதிஹாஸ கிரந்தங்களை
பிரசுரஞ்செய்த
இந்துமதாபிமானி
சை. உமாபதிமுதலியார்
அவர்களியற்றிய
வெண்பா.

உகாதியணியணியாயோர்சேகரமாப்
பகாப்பலன்களெல்லாம்பகர்ந்தான் - அகமுமுளன்
சீர்த்திசைதாபுரம்வாழ்செம்மல்சிற்றம்பலவேள்
நூர்த்துநூர்த்தாய்ந்துபலநூல.

கொன்றையூர
ஐயாசாமி முதலியார்
தவத்திரனெற்ற
செ. தணிகைராயமுதலியார்
அவர்களியற்றிய
நேரிசைஆசிரியப்பா.

திருவளர்க் கீரத் துருவளர் நரைத்திரைச்
சாகர நாப்பட் சகத்திர மாமணிச்
சேகர மாகிய செங்கதிர்க் கவிகைப்
படத்தை விரித்துப் பனிநிழற் கொடுத்துச்
சயனமாய்த் தயங்கும் தனியனந் தன்மிசைக்
கயனஞ் சனவிழிக் கமலைமா தொருபால்
பயனல் கலர்முலைப் பார்மக ளொருபால்

நயனங் குறித்துற நன்கிருந் திணைப்பத
வியனமென் மலரைமென் கரங்கொடு வருட
நயனம் வளரரி நாபிநீ ணளினத்
தயன முற்றுநா லரியவே தங்கள்
மயனெடு நவிறருஉ நாவுடை நான்முகன்
படைத்த வுலகத் திடைப்பயி லுயிர்கள்
உம்மை யிம்மை யம்மைம[illegible]ன் றேற்றமும்
ஆயுளி னளவையு மாயுமெந் நலனும்
ஆயுநட் சத்திர மாதிகோ ணிலையும்
விலக்கருங் கால விதியு மேனை
நிலைப்படு பொருளெலா நெஞ்சுற வுணர்பாக்
குற்றநா லொன்று மற்றிலை யென்று
பொன்மலை நிகர்தன மின்மருங் கிருட்குழற்
செங்கனி வாயுமை நங்கைமென் கொடியிடப்
பங்கினிற் படர்தரத் தங்கவெற் பினைவளைத்
தரண மூன்றையு மழித்தரு ளாதி
அரனுதற் கண்வயி னவதரித் தமரர்தம்
அருஞ்சிறை நீக்கி யடலொடு தாக்கி
வருங் கொடுந் தைத்தியர் மன்னுஞ் சூருடற்
கீறுவான் வேலெறி யாறுமா முகவன்
முன்னிய கீர னின்னறீர்த் தளித்தோன்
தன்றிரு வுளத்திற் றகவுற முன்னுபு
துன்றிய வுயிர்க டுன்பொழிந் துய்குவான்
நன்றிய றனாது நாமமார் தருமொரு
பொன்றலில் சோதிடம் புரிந்துமற் றதனை
வெள்ளியம் பொருப்பிடை வள்ளியல் சூலிதன்
ஒள்ளிய கற்பனை யுள்ளுவந் தொழுகுறூஉம்
நந்திநா யகற்குச் சிந்தையின் பரும்ப
அருள்செய வேத்திர மங்கையிற் சேர்த்திய
தெருளுறு நந்தி தேவனா ரணன்முதல்

இரண்டுநா லாக்கி யிருந்தவம் புரிந்துநிற்
பெற்றவர் பெயர்நிலை பெற்றிட வந்நாற்
கையாச் சுவாமீய மம்மணீ யம்மென
னையாப் பெயரினை நாட்டி நல்கினை
யெனினுமந் நாலினை மனிதரும் பவமுதல்
மடிதரு காறு மடைபலா பலன்களைச்
செப்பினை யிலையா லிப்பொழு தென்றிசை
அன்புகூர்ந் தவமறையோர் சுருக்கநா லாக்கி
நின்பெய ரதற்கு நிரீஇத் தருமென்று
மடனிகுத் தறிவினை வளர்க்கருங் கல்வியில்
விடலது பற்று மேவுறுஞ் செல்வியில்
தாதா விருந்துணை வீடுமொன் றருளும்
நீதா வெனிலவை நீட்டிடுந் தருமையில
யாவர் மாட்டு மிருந்திய கருணையில்
சேவல் கோட்டுத் திசையினை யெடுத்த
சுந்தரச் சண்முகக் கந்தனை நடுத்த
வரத்தொளி ரிராஜேஸ் வரப்பெய ரடுத்த
குகன்சர ணகம்பதி மகன்பராய்ப் புரந்திடச்
சோதிட னெல்லாஞ் சூழ்ந்தினி யாநன்
ஞூதிட னொண்ணூ லரிநீந்த நமக்கிது
மாதிட முறுபுகைக் கப்பலா மெனமகிழ்ந்
தோதிட வுந்தனை மீதுறை மற்றைய
மக்கணம் முடைய வாழ்நாட் குறுமைகண்
டக்கணத் தழியா வறஞ்செய நினைந்த
சொக்குவிட் டொழிந்து தூங்கு மகிழ்ச்சியோ
டிக்கணத் ததுபுரிந் தின்பநு கரவும்
செலுநம தாயுட் டீர்க்க நோக்குறீஇச்
சிலபகற் போக்கினித் தீதெனு வுன்னி
ஈண்டியற் பால பலவும் வேண்டிக்
காலமுண் டாக மூலமலந் தெறாஉம்

சாற்றுக்கவிகள்.

துறவு பூண்டியாம் பரபதந் துன்னவும்
ஆனவிது நமக்கோர் ஞானவிழி யென்னவும்
பூங்கணி தாடவி புகுந்துபன் னூட்டிநீஇ
வாங்கலைப் புவிநர் மருவுறூஉம் பலாபலத்
திருத்த மதுவினைச் சுரும்பிற் றிரட்டி
விருத்த முதுமொழி வெள்ளிப் புதுமொழி
யென்னமற் றவ்வைகை யிலக்கண முறவகுத்துத்
தென்னசிற் றம்பல சேகரர் பொற்கலத்
திட்டெடுத் தருந்துதற் கேற்ப சொற்பொருட்
சட்டுவந் தன்னெனுந் தகவிற் றங்குவன்
அறுதொழி லாள ரன்புடைச் சிறார்பயில்
மறையுய ராகம வன்றுறல் கேள்வி
யிதிவிலக் கிளைநிக ழிருகவிப் பொருபகர்
கதிரரத் தத்துணிக் கடிந்தகர்ந் துசுவை
மரகதப் பிறகர் வன்னிப் பத்திரி
கிரகாரஞ் சியற்றிக் கிளையொடு வதிதருஉம்
மாப்பல வின்கனி வெடிப்பவார் தருமதுப்
போய்ப்பல காவினும் புகுந்து பாய்தலின்
கன்னலிற் செந்நெற் கதித்து வளர்ந்து
பொன்னிற மணிகளைப் பொழிவய லுடுத்த
ணைமைதமா ளிகைதிகழ் ணைதைமா நகரினன்
நற்பொன் னேரி விற்பெறு மேழியன்
பொங்கலைக் கடவுட் கங்கையங் குலத்தினன்
தவராச ரேத்திடுஞ் சிவராசர் கோத்திரன்
பொற்புறு நறுமணத் துற்பலத் தாரினன்
மீயிடத் தவர்தினம் போயுவந் திடர்கெடத்
தோயறற் றில்லை நாயகிக் கிடமளி
ஐயாச் சுவாமி யடிமலர் நினைந்திசை
ஐயாச் சுவாமி யருந்தவத் துதித்தோன்
ஏதமற் றுயர்சதுர் வேதசித் தாந்த

சபாபதி பிறர்க்குரித் தாம்பொருள் வெஃகும்
அவாபதி தராமதி யுமாபதி சகோதரன்
அறிவொடொட் டுணையுமின் றரும்பொருட் கொடுபோய்ச்
சிறுபிறை நுதலியர் செங்கையிற் றவர்வாய்ச்
சிற்றம் பலமுணு சிறியவர் தனக்கிழை
குற்றம் பலவுங் குறியா தவர்தமக்
கெற்றம் பலவ னொருக்கர வணிமுடிச்
சிற்றம் பலவன் சேவடி பயக்குநன்
மதிசொலி நலம்புரி மதுரவா சகத்தான்
முதியவர் போற்று மதுரைமூ தூரில
சங்கப் புலவர் தஞ்செருக் கற்றுப்
பொங்குபொற் றாமரைப் பொய்கையில வீழ்தரத்
தங்கரங் கொண்ட தனித்திருக் குறளைத்
துங்கநற் பலகைமேற் சூட்டிய வள்ளுவர்
சொல்லிய வண்ண மில்லற மியற்றலின்
அலர்மக ளில்லினுங் கலைமக ளாவினும
பரிவொடு தாண்டவம் புரியப் பெற்றோன்
சிவனடிக் கன்பு சேர்த்திய தூயனை
அவமதி செய்யா தவனெனப் பராவுவோன்
அருணகிரி நாத ரறைதிருப் புகழணி
வ்வருண கிரிபுனை துவாதசப் புயமுடைச்
சண்முகப் பெருமான் றாட்டுணை மலர்க்குப்
பண்மலி கீர்த்தனம் பாடிச் சாத்தியோன்
ஆங்கறு பத்துநா லருட்கலைக் கடலிகந்
தோங்கிய சீலத் தொழுகுநர் புகழ்ந்து
தீங்கறு சினேகஞ் செய்யும
பாங்குறு சிற்றம் பலப்பெயர்க் கோவே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

சிவமயம்.

சிற்றம்பலசேகரம்.

பாயிரம்.

சிறப்பு.

இந்நூலாசிரியரின் பிதா

Assessment Office, Late Manager

ஸைதாபுரம்

ஞானசாமிமுதலியாரவர்களியற்றிய

இரட்டையாசிரியவிருத்தம்.

அத்தமுளவாங்கிரவான்டிலகுலைகாசியார்த்தபதின்மூன்றுதிகதி
யாதிவாரஞ்சோதிநாளில்திரையோதசியியாழ்லக்கினத்தன்னிலே
வந்தகுருசெய்புகர்மடங்கலிற்காரரவுமகிழ்கோலின்மதிவிற்சனி
வாலரவுகுடமேவமாலாடுகெதிரோதில்வாய்ந்ததேபோன்கணிலையா
மூக்துகதிராமோல்சனிபேறுபுகரியாழ்மூனேகேதுகளிர்சேய்துலா
முதலரவுமகரமிசைகுருசந்திரன்மீனமொழியிலிஃதமிசையாகச்
செந்திருவமர்ந்திடுஞ்சென்னைபுரிதன்னிலேசிற்றம்பலக்கோன்வரச்
செப்பினர்களுத்தமசிரோமணிகளிச்சுதன்றீர்க்காயுவும்பெறுகவே

	புத	சூரி	சு - கு ல - செ
கே	இராசி		
			ரா
சனி		சந்	

ல - சந் குரு	சூ	பு-ச	சு
	அமிசை		கே
ரா			
		செ	

பிறப்பு.

நேரிசைவெண்பா.

பொன்னேரி விற்பெற்ற பூவசியன் கங்காகு
லன்னுண்டி யப்பன்வே லம்மாள்பே—ரன்னையாச்
சாமியம்மா ணிக்குச்சேய் சைதையனேர்க் கேதரத்தத்
தாமன்கோத் ரன்சிவரா ஜன்.

சிறப்பு.

கிரிஸ்துமதத் ரஸ்காரங் கீர்த்திஹிதி காசஞ்
சரித்ரசதுர் வேதசித்தாந் தஞ்செய்—பெருத்தசபை
மேய்ந்தச்சேய்ந்த் ரம்ப்ரசங்க மேலருணேக் கைந்துவர்னம்
வாய்ந்தகுடை பாலிக்கு மன்.

உ

சிவமயம்.

நூன்முகம்.

கணபதி காப்பு.

வெண்செந்துறை.

அழகிய மலைமக ளம்பிகை பால
னெழிற்ரு கணபதி யிணையடி தொழுவாம்.

சிற்றம்பலசேகரம்.

வழிபடுங் கடவுளர் துதி

முடுதுவெண்பா.

முக்கணக்கி லிக்கணக்குண் முக்யபல னஃதுரைக்க
வெக்கணமு மக்களுக்கி லக்கணமா—முக்கணக்கன்
றந்தமுந்தி வந்ததொந்தித் தந்திபிந்தி வந்தகந்தன்
வந்துவந்து புந்திதந்த வர்.

காரணம்.

விற்பூட்டு வெண்பா.

தாரணியுந் தாய்தந்தை தம்பெயரான் முன்பிரண்டு
சீரியநூ லோதியபோற் றேர்பலனின்—பேரதனுற்
சேகரமாச் செப்பெனவென் சேயிரா ஜேஸ்வரன்செம்
பாகமுடன் சொன்னெனுப்ப லம்.

சுவரூப சூசகம்.

நேரிசை வெண்பா.

சோதிடத்திற் காதாரந் தாய்கோளுள் ராசியிவைக்
காதரவு நூலம்ம ணீயமாஞ்—ஜாதகத்திற்
குற்றதையாஸ் வாமீயங் கோரும் பலஞ்சொலுமிச்
சிற்றம் பலசே கரம்.

சித்தி விதி.

மாதா பிதாகுருதெய் வத்திடத்துப் பத்திசுத்தி
நீதா நவக்கோண் விதிபூஜை—யாதாரங்
கொண்டவருக் கெல்லாங்கை கூடுமெனில் வேறென்ன
பண்டுமொழி தப்பாதப் பா.

அருமை பெருமை.

பற்றவட் கேதெரியம் பிள்ளைப்பேற் றின்னருமை
மற்றவர்க ளென்னறிய மாட்டுவார்—சிற்றம்
பலச்சே கரத்தைப் படித்தவர்முன் பேசாச்
சொலச்சே பெருமைதோற் றும்.

அரசாசிஷி.

சென்னையினால்*சேகரித்தான் சீமை யெழுகடலுக்
கன்னையென வேவந் தவதரித்துக்—கன்னியுமாச்
செங்கோ னடாத்துகின்ற திண்டோளி விக்டோரி
தங்காலஞ் சிற்றம் பலம்.

அவையடக்கம்.

புலத்திலுயர் சோதிடர்முன் புன்மையேன் சிற்றம்
பலச்சே கரத்தைப் பகர்த—னிலத்தூர்பி
பீலிகைமான் முன்பளந்த பேருலகைத் தானளக்கக்
காலினிய றன்மையொக்குங் காண்.

நூல்.

தெய்வ வணக்கம்.

விநாயகர்தோத்திரம்.

சிற்றம் பலத்தினடஞ் செய்யு முமாபதிமுன்
பெற்றந்த யானைமுகப் பெம்மானை—யுற்றிறைஞ்சிப்
பாடியெழிற் சிற்றம் பலசே கரத்துரைத்து
நீடியயு காதிபல னோர்ந்து.

அமைப்பு.

அங்கா டலையெழுத்தை யாரழிக்க வல்லவர்க
ளெங்கா ணிதரிசன மீங்கிதுவா—முன்னுனை
யீசன்மா யோன்பிரம னிந்திர னுழ்லவவி
லேசந் திராணியிலை யேல்.

யுகபலன்.

முதுமொழி.

சந்தானதீபிகை.

விருத்தம்.

ஆதியாங் கிரேத யுகத்தினிற் கர்ப்பா தானமே யாதியா கவும்பின்
சோதியாந் திரேதந் தனிற்குறி கண்ட தாதியா கவுந்துவா பரத்திற்
பேதியாச் செனன தோற்றமே யாதி யாம்பெருங் கலியுக மிதனி
லீதியா மகவு பூமியிற் செனித்த தாதியா கவுங் கொள னெறியே.

(இதன்பொருள்.) நான்குயுகத்துள் முதன்மையாகிய கிரேத யுகத்தில் கர்ப்பதானஞ்செய்ய நியமித்தலக்கினமே ஜனன லக்கினமாகவும், பின்பு பிரகாசம்பொருந்திய திரேதா யுகத்தில் சூல்கொண்ட குறிப்பே ஜனன லக்கினமாகவும், துவாபர யுகத்தில் பேதிக்காத ஜனனத்தின் தோற்றமே ஜனன லக்கினமாகவும், பெரிதாகியகலியுகமென்னும் இந்தயுகத்தில் கிரமமாகக் குழந்தை பூபதமானதே ஜனன லக்கினமாகவும் கொள்ளுதல் முறைமையாம் என்றவாறு.

இச்செய்யுளிறுதியில் கொளலென்னுஞ் சொல்லுக்கு கொண்டு ஜாதகமெழுதுதல் என்பது தாத்பர்யார்த்தம்.

வருஷபலன்.

பிரபவ.

புதுமொழி.

வெண்பா.

த்கால க்ஷேபன் சகலகுண சம்பன்ன
னித்தியமு மாதே நெறியுடையோன்—புத்திமான்
கால மறிந்துதவுங் கண்ணியவான் றர்மியெனச்
சீலப் பிரபவனைச் செப்பு.

(இ-ள்.) நற்கருமத்திற் காலத்தைச் செலுத்துபவனும், எல்லா நற்குணங்களாலு நிறைந்தவனும், எப்பொழுது நன்மார்க்கத்தி னிற்பவனும், விவேகியும், அடுத்தவர்களுக்குத் ததியறிந்து உதவிசெய்யுங்கனவானும், அறத்தைச்செய்பவனும் ஆவனென்று பெண்ணே நீ பிரபவ வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (க)

விபவ.

நித்தியசந் தோஷமுள னிட்களங்கவி டன்றனவான்
புத்தியுள பந்துஜென பூஜிதன்மா—வித்துவான்
கீர்த்திபரன் முற்றிலுமே கிள்ளாக்குச் செல்வாக்யன்
சீர்த்திவிப வாண்டானைச் செப்பு.

(இ-ள்.) எப்பொழுதுஞ் சந்தோஷமாயிருப்பவனும், கபடமில்லாதவனும், காமுகனும், திரவியவானும், அறிவுள்ள பந்து ஜனங்களால் பூஜிதையுள்ளவனும், சிறந்த பண்டிதனும், மிகுந்த புகழையுடையவனும், தன் வாழ்நாளளவும் கிள்ளாக்கு எங்குஞ் செல்லும்படியான வாக்குநாணயமுள்ளவனும் ஆவனென்று விபவ வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ)

சுக்கில.

பரநாரி நேசன் பலவீன மெய்யன
றருமசீ லன்மிகுந்த தாதா—வுரைநிலையன்
வல்லவனும் வாய்க்கணக்கில் வண்மையுள நல்வசனன்
றுல்யசுக்ல வாண்டிலுதித் தோன்.

(இ-ள்.) பரஸ்திரீகமனனும், பலவீனமான தேகியும், தருமஞ்செய்பவனும், சுத்தனும், உதாரியும், சொற்றவறாதவனும், வாய்க்கணக்கில் வல்லவனும், இதமானவார்த்தையை உடையவனும் ஆவன், சுக்கில வருஷத்திற் பிறந்தவன். எ-று. (௩)

பிரமோதூத.

அரசர் புகழமைச்ச னுசில் சுபாஷி
பரநம்போர்க் களமதனிற் பேரான்—றிருவா

பரணப் பிரியன் பயனில்சொற் கேளான்
பிரமோதூ தன்னென்று பேசு.

(இ-ள்.) மன்னவர்களால் மதிக்கத்தக்க மந்திரியும், சுபவார்த்தைகள் பேசுபவனும், யுத்தத்திற் பின்னிடாதவீரனும், ஆபரணங்களைத் தரிப்பதில் விருப்பமுள்ளவனும்; அப்பிரயோஜனமான வார்த்தைகளுக்குச் செவிகொடாதவனும் ஆவனும், பிரமோதூத வருஷத்திற் பிறந்தவனென்று சொல்லுவாயாக. எ-று. (ச)

பிரஜோற்பத்தி.

தருமசுரூபி தனவான் வெகுபுத்
திரமித் திரகளத்ர தீர—னரிய
திரவாக்யன் பந்து ஜெனபூஷிதனுப்
பிரஜோற் பதியானைப் பேசு.

(இ-ள்) புண்ணியபுருஷனும், விசேஷதிரவியமும், மிகுந்த புத்திரர்களும், நல்ல சிநேகிதர்களும், இல்லறத்திற்குத்தக்க மனையாளும், தைரியமும், சொன்னிலைமையும் உடையவனும், பந்து ஜனங்களைப் பூஜிப்பவனும்,ஆகப் பிரஜோற்பத்தி வருஷத்திற் பிறந்தவனைச்சொல்லுவாயாக. எ-று. (ரு)

ஆங்கீரச.

நிபுணன் றயாள னெறியுள்ள சீலன்
செபதபந் தன்னிற் சிரேஷ்டன்—சுபவசன
னோங்கு புகழ்த் தேக னொரோவாக் கியன்றனவா
னங்கீரச னென் றறி.

(இ-ள்.) மிகுந்த கல்வியும், தயவும், பரிசுத்தமும், செபத்திலும் தபத்திலும் சிரேஷ்டமும், நல்வசனமும், புகழுடலும், மாறுதவாக்கும்,திரவியமும் உள்ளவனும் ஆங்கிரசவருஷத்திற்பிறந்தவனென்று அறிவாயாக. எ-று. (சு)

ஸ்ரீமுக.

போகி தனவான் புஜபெலவேந் தர்மெச்சுந்
தேகிபர நாரிசி னேகநிரு—வாகிகடற்

கூடுமுகமேற் கீர்த்தியொடு குன்றலில்பே ராண்மையுளோன்
சீமுகவாண் டானென்று தேர்.

(இ-ள்.) சுகமனுபவிப்பவனும், பாக்கியவானும் அரசர்கள்கொண் டாடத்தக்க சரீரமுள்ளவனும், அன்னியஸ்திரீயினிடத்தில் நேசமும், எடுத்தகருமத்தை முடிக்கும்வல்லமையும், உலகில் கீர்த்தியும், மிகுந்த பராக்கிரமமும் உடையவனும் ஆவன், ஸ்ரீமுக வருஷத்திற்பிறந்தவனென்று அறிவாயாக. எ-று. (எ)

பவ.

தனுவிற் பலமுள்ளோன் ஞாலத்தோர் போற்று
மினத்திற் பிரசித்த னென்னும்—கனவான்
றவறுத வாக்யன் றமோகுணத்த னென்று
பவவருஷத் தானைப் பகர்.

(இ-ள்). சரீரவலிமையும், உலகத்தார் யாவரும் தொழும்படியான விதத்தில் மகாபிரசித்தமும், கனமும், சொல்நிலைமையும், கோபகுணமும் உடையவன் ஆவனென்று பவ வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (அ)

யுவ.

உலுத்தன் குரூபி யுடல மெலிந்தோ
னிலைவரமாம் புத்தியிலா னீர்கு—முலகி
னவிதலிலாப் பேராசைக் காகர மாவன்
யுவவருஷத் தானென் றுரை.

(இ-ள்.) உலுத்தத்தன்மையும், அவலக்ஷணமானதேகமும், இளைத்த சரீரமும், உறுதியற்றபுத்தியை உடையவனும், அடங்காத அவாவிற்கு ஓர் வாசஸ்தலமும் ஆவன், யுவ வருஷத்திற் பிறந்தவனென்று சொல்லுவாயாக. எ-று. (கூ)

தாது.

சூரம்பிரி யன்றனவான் காரியத்தைச் சாதிப்போ
னைம்பிரியா நேச னருளாளன்—சோம்பலிலான்

வாதிபிணி தீர்க்கு மருத்துவன்மா தர்க்கியெனத்
தாதுவரு ஷத்தானைச் சாற்று.

(இ-ள்.) செம்மீரமும், திரவியமும், நினைத்தகாரியத்தை முடிக்கும் வல்லமையும், நீங்காச்சினேகமும், கிருபையும், சோம்பலின்மையும் உடையவனும், ரஸவாதஞ்செய்பவனும், வைத்தியனும், தருக்கம்பேசுபவனும் ஆவனென்று தாது வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧0)

ஈஸ்வர.

அழகுள்ள தேக னமிர்த வசனன்
குழவி பெருத்த குழாத்தோன்—பழுதில்லாப்
பாஸ்கரனைப் பூசிக்கும் பண்பிசெலவன் யோகனென
வீஸ்வரசம் வற்சரனை யெண்.

(இ-ள்.) அழகான சரீரமும், அமிர்தவாக்கும், அதிககுழந்தைகளும், குற்றமற்ற சூரியனைத் தொழுங்குணமும், செல்வமும், நல்ல யோகமும் உடையவனுமவனென்று ஈஸ்வர வருஷத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௧௧)

வெகுதானிய.

தனவான் வியாபாரி சாதுசங்கன் போகி
கனவா னலந்தருஞ்சத் கர்மி—நனிநீள்
புகழாளன் மட்டாப் புசிப்பவனு மென்று
வெகுதா னியனை விளம்பு.

(இ-ள்.) திரவியமும், வர்த்தகமும், சாதுக்கள் கூட்டமும் போகமும் சீர்மையும் உடையவனும், நன்மையைக் கொடுக்கும், நல்லகருமங்களைச்செய்பவனும், மிகுந்த கீர்த்தியுடையவனும், மிதமாகப்புசிப்பவனும், ஆவனென்று வெகுதானிய வருஷத்திற்பிறந்தவனைச் சொல்லுவாயாக எ-று. (௧௨)

பிரமாதி.

குரூரத் தொழிலோன் குலவீனன் கோபி
சிரோபூ ஷணமில் சிறியோன்—விரூபி

கரவாளன் கன்மனத்தன் காசளியா னாகப்
பிரமாதி யுற்றவனைப் பேண்.

(இ-ள்.) கொடுமையான தொழில்களைச்செய்பவனும், தாழ்ந்தகுலமும் கோபமும் உடையவனும், எப்பொழுதும் தலையில் வஸ்திரமில்லாமலிருப்பவனும், விகாரமான தேகமும், வஞ்சகமும், கடினநெஞ்சும் உள்ளவனும், ஒருகாசும் கொடாதவனும் ஆகப் பிரமாதி வருஷத்திற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (௧௩)

விக்கிரம.

தனவான்சே னாதிபதி தக்க வுதாரி
கனமான பார்வையுள கண்ணன்—தினமானுஞ்
சக்ரவர்த்தி போன்மகிழ்ச்சி சார்ந்திருப்ப னாமென்று
விக்ரமநல் லாண்டானை விள்.

(இ-ள்.) அதிகதனமும், தளகர்த்தத்துவமும், உதாரத்துவமும், கம்பீரமான பார்வையுள்ள கண்களும் உடையவனும் தினமும் சக்ரவர்த்திபோலச் சந்தோஷமாயிருப்பவனும், ஆவனென்று விக்கிரம வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௪)

விஷு.

மதியிலா மூடன் மலடனப வர்க்க
கதியளியாச் செய்கைபுரி கன்மி—யதிக
விஷமி விகடப் பிரசங்கி யென்று
விஷுவருஷ மேயவனை யிள்.

(இ-ள்.) புத்தியில்லாத பேதையனும், பிள்ளை யில்லாதவனும், மோட்சபதத்தைக் கொடாத திருடுதல் கட்குடித்தன் முதலிய தீயசெயல்களைச் செய்யும் பாபியும், மிகவும் விரோதங்களைச் செய்பவனும், விகடமாய்ப் பிரசங்கிப்பவனும், ஆவனென்று விஷு வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௫)

சித்திரபானு.

சுகிகிருத் தப்பிரியன் சூதாட்டந் தன்னில்
வெகுசமர்த்தன் பல்வகையில் வேட்கை—மிகவுடைய
மானவன் மேம்பாடு வாய்ந்தவனு கச்சித்ர
பானுவரு ஷத்தவனைப் பாடு

(இ-ள்.) சுகமும் நாட்டியத்தில் விருப்பமும், சூதாடுவதில் மிகுந்த சாமர்த்தியமும், பலவிதத்தில் ஆசையும், பெருமையும் உடையவன் ஆகச் சித்திரபானு வருஷத்திற்பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.

சுபானு.

குடும்பிகுலா சாரங் குறித்தியல்வோன் றன்மி
தடித்தெழுமுற் சாகன்சல் லாப—னிடம்வந்
தபானுவிற்ச பைக்கட் டலையொளிர்வ னென்று
சுபானுவிலே யுற்றவனைச் சொல்.

(இ-ள்.) பெண்சாதி பிள்ளை பந்துக்களை யுடையவனும், ஜாதியாசார விதிகளையெண்ணி நடப்பவனும், தருமஞ்செய்பவனும், மிகவுமெழுகின்ற மனக்கிளர்ச்சியுள்ளவனும், சல்லாடமாய்ப் பேசுபவனும், ஆகாயத்திலுதிக்கும் சூரியனைப்போலச் சபையில்தலைமையானவிடத்தில் பிரகாசிப்பவனும், ஆவனென்று சுபானு வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கஎ)

தாரண.

கட்டுடலன் பாக்கியவான் காணிற் கலகத்தை
யட்டிடுவன் யூகமொழி யாடுவா—னிட்டமுட
னாரணநூ லோது மமைப்புடைய னாமெனவே
தாரணசம் வற்சரனைச் சாற்று.

(இ-ள்.) திடமானதேகமும், மிகுந்தசெல்வமும் உள்ளவனும், கலகத்தைக் கண்டால் அதை யடக்கிவிடுஞ் சமர்த்தனும், விவேகமாக வார்த்தைபேசுபவனும், வேதாகம புராணங்களை அன்போடு வாசிக்கும் அமிசையுடையவனும், ஆவனென்று தாரண வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கஅ)

பார்த்திப.

மீனவர்க்கு நாயகனல் வாசமணி வான்றனதா
சானைமப வான்சேர் தநியினன்றித்—தானசையை
யார்த்திமன் கோதையர்பா லங்கனையா ஞமென்று
பார்த்திப வற்சரனைப் பாடு.

(இ-ள்.) மனிதருக்குத் தலைவனும், நல்லவாசனை திரவியங்களை அணிந்துகொள்பவனும், தனது குருவை மறவாதவனும், (வண்டுகள் சத்தித்துப் பொருந்துகின்ற பூமாலையை அணிந்துள்ள ஸ்திரீகளிடத்தில்) கூடுகிறகாலத்திலல்லாமல் தான மோகத்தை கொள்ளாதவனுமாவனென்று பார்த்திப வருடத்திற் பிறந்தவனைப்பாடுவாயாக. எ-று. ()

விய.

திடமினெஞ்சன் கோபி தெரிவையர்மே லாசை
விடமனதி லெண்ணன் வெளிற—னடர்த்
வியவான் சினேகம் விரும்பியுரு னென்னை
வியவாண் டினனை விளம்பு.

(இ-ள்.) ஸ்திரமில்லாத சித்தமுள்ளவனும், கோபியும், ஸ்திரீகண்மேல் மோகத்தைவிடுதற்கு உள்ளத்திற் குறியாதவனும் அறிவில்லாதவனும், மிகுந்த பொருளுள்ளவனும், பிறரிடத்தில் சினேகத்தைவிரும்பிச் செய்யாதவனும், ஆவனென்று விய வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ0)

சர்வசித்து.

சுகிர்தவாக் கன்விபவன் சோர்வுதபு சீலன்
றகுதி யுடையன் றயாளன்—றிகழ்கலைக
ளுய்த்துணர்ந்த வன்கனக முள்ளவனு மென்றுசர்வ
சித்துவரு ஷத்தானைத் தேர்.

(இ-ள்.) நல்லவாக்கும், வைபோகமும், கள்ளமற்ற ஒழுக்கமும் உள்ளவனும் யோக்கியனும் கிருபையுள்ளவனும், மேலான நூல்களை நன்றாகக் கற்றறிந்தவனும் தனவானும், ஆவனென்று சர்வசித்து வருஷத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (உக)

சர்வதாரி.

சத்தியவான் சிற்பி சகலவிதத்துஞ் சமர்த்த
னுத்தமப்ர புக்கணட்டை யுற்றிருப்பன்—மெத்தயிவ
காரி சினேகிதரைக் காத்தளிப்ப னென்றுசர்வ
தாரியிலே வந்தவனைச் சாற்று.

(இ-ள்.) வாக்குநிலைமை யுள்ளவனும், சிற்பசாத்திரம் அறிந்தவனும், சகல வகையிலும் சாமர்த்தியமுள்ளவனும், மேலான பிரபுக்களுடைய சினேகத்தை அடைந்திருப்பவனும், மிகவும் நியாயமெடுத்துச்சொல்லுபவனும், சினேகிதர்களை நன்றாக இரட்சிப்பவனும், ஆவனென்று சர்வதாரி வருடத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. ()

விரோதி.

ஏசுந் துரோகி யெதிரிலஞ்ஞை யாரிடத்து
நேசஞ் செயநினையா நெஞ்சுடையோன்—கூசுங்
குரோதி மிகுந்த கொடுமையனு மென்று
விரோதியிலு தித்தவனை விள்.

(இ-ள்.) இகழப்படும் துரோகியும், ஒப்பில்லாத மதிகேடனும், எப்படிப்பட்டவரிடத்திலும் அன்புசெய்ய எண்ணாதவனும், அஞ்சத்தக்க கோபியும், அதிக துஷ்டனும், ஆவனென்று விரோதி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௨௩)

விகிர்தி.

மணிமந்த்ர வாதி மதனு கமத்தன்
றுணிவுசெறி நெஞ்சினோன் றுல்யன்—கணித
மிகவுணர்ந்தோன் ஞானம் விளம்பிறைவ னாக
விகிர்திதனிற் சார்ந்தவனை விள்.

(இ-ள்.) ககனகுளிகை முதலியமருந்திலும், மாந்திரீகத்திலும் வல்லவனும், கொக்கோக முதலிய காமநூலறிந்தவனும், அதிக தைரியமுள்ளவனும், சுத்தமானவனும், சோதிடத்தில் மிகத்தேர்ந்தவனும், ஞானத்தைப்போதிக்கின்ற ஆசானும், ஆக விகிர்தி வருஷத்திற் பிறந்தவனைச்சொல்லுவாயாக. எ-று. (௨௪)

க ர.

தீனன் றிறமையிலான் றிப்பிரமை கொண்டசித்த
னீனனெவ ருக்கு மினியனல்லன்—போன
பொருளைக் குறித்துப் புலம்பிநிற்ப னென்று
கரவருஷத் தானைக் கருது!

(இ-ள்.) தரித்திரனும் சாமர்த்தியமில்லாதவனும், திகைத்து நிற்கின்ற குணமுள்ளவனும், இழிந்தவனும், எவர்களுக்கும் பிரியமில்லாதவனும், போக்கடித்த பொருளைக்குறித்து வியசனப்பட்டுக்கொண்டிருப்பவனும், ஆவன் என்று கர வருஷத்திற்பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௨௫)

ந ந் த ன.

மந்திரத்தில் வல்லோன் மணிமுடியோர் தங்களைச்சு
தந்தரித்துக் கொண்டிடுவன் சாத்திரங்கள்—சிந்தையிலு
வந்தறைவன் மேலான வங்கிசத்த னாமெனவே
நந்தனசம் வற்சரனை நாடு.

(இ-ள்.) மாந்திரீகத்தில் வல்லவனும், ரத்னகிரீடந்தரித்துள்ளவர்களாகிய அரசர்களை வசப்படுத்திக்கொள்ளுஞ்சமர்த்தனும், நல்லசாத்திரங்களைப் பிறருக்குச்சொல்லுபவனும், உயர்ந்தவமிசத்திற் பிறந்தவனும், ஆவனென்று நந்தன வருஷத்திற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (௨௬)

வி ஜ ய.

தீமையிலாச் சுற்றச் செறிவுடையோ னித்தியமு
நேமநிஷ்டை செய்வோ னிருவாகி—தோமி
னிஜமுறைப்போன் சீர்த்தியொடு நின்றிருப்ப னென்று
விஜயதனி லுற்றானை விள்.

(இ-ள்.) நல்லபந்துக்களால் சூழப்பட்டிருப்பவனும், பிரதிதினமும் தத்துவநூலாராய்தலும், நிஷ்டைசெய்தலும் உடையவனும், எக்காரியத்தையும் சரிப்பட நடத்துபவனும், குற்றமில்லாத உண்மை பேசுபவனும், கீர்த்தியுடன் வாழ்ந்துகொண்டிருப்பவனும், ஆவனென்று விஜய வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௨௭)

ஜ ய.

பூமின் கிருஸ்பயுற்றோன் பூவளந்தேர் யூகிவெகு
சாமர்த்திய னழகன் சால்புடையோன்—பூமி
த்யவிற் புரப்போன் சவுரியவா னாக
ஜயதனிற்சென் மித்தவனைச் சாற்று.

(இ-ள்.) தாமரை மலரிலிருக்கும் இலட்சுமியினுடைய அருளைப் பெற்றவனும், நிலங்களின் வளப்பங்களை அறியும் விவேகியும் மிகுந்த சமர்த்தனும், அழகு வாய்ந்தவனும், மேன்மையுள்ளவனும், பூமியைத் தயவோடு இரட்சிப்பவனும், பராக்கிரமனும், ஆக ஜய வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உஅ)

ம ன் ம த.

மதனு கமந்தெரிந்தோன் மண்டலத்தில் யார்க்கு
மிதமே யியற்றிமகி ழீச—னிதமுமெதி
ரொன்னலரைக் கண்டிக்கு முத்தண்டன் மெய்யனென்ன
மன்மதசம் வற்சரனை வாழ்த்து.

(இ-ள்.) காமநூல்களைக் கற்றவைகளிற் கூறியபடி நடப்பவனும், பூமியில் யாவருக்கும் நன்மையையே நித்தமும் செய்து சந்தோஷிக்கின்ற மேலோனும், தன்னையெதிர்த்த சத்துருக்களை அதஞ்செய்யும் பராக்கிரமனும், நிஜத்தைப்பேசுபவனும், ஆவனென்று மன்மத வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உக)

து ன் மு கி.

சீலமே யில்லான் சினமே வளரகத்தான்
சாலவே யன்னத்தைச் சாப்பிடுவான்—ஞாலமேற்
றன்மெய்ப் பிணியன் றரித்திரனுங் காரியென்று
துன்முகியிற் றோய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) ஆசாரமில்லாதவனும், கோபமே குடிகொண்டுவளரும் நெஞ்சினனும், அதிகமாகச் சோற்றைத்தின்பவனும், தேகத்தில் நோயுள்ளவனும், வறியவனும், ஆங்காரியும் ஆவனென்று துன்முகி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ - று. (கூ0)

ஏவிளம்பி.

எந்நாளு முண்மை யியம்பா னொளிமிகுசெம்
பொன்னா பரணந்தான் பூணலுறா—னின்னாச்சூ
தேவிளம்பி நெஞ்சிற் செருக்குவன்மா பாபியென
வேவிளம்பி வந்தானை யெண்.

(இ-ள்.) எப்பொழுதும் நிஜத்தைப் பேசாதவனும், மிகுந்த வொளியுள்ள சிவந்த பொன்னாற்செய்த நகைகளை அணியாதவனும், தீய சூதுக்களையே பேசித் சந்தோஷிக்கிறவனும், கொடிய பாவியும் ஆவனென்று ஏவிளம்பி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (ருக)

விளம்பி.

சன்மார்க்க சீலன் றயையுள்ளோன் சாந்தகுணன்
றுன்மார்க் கரைக்கண்டாற் றோத்திரிப்பன்—பின்னுங்
களங்கமிலான் ஞானி கனவானு மென்று
விளம்பியாண் டானை விளம்பு.

(இ-ள்.) நன்னடக்கையும், கிருபையும் சாந்தகுணமும் உள்ளவனும், துஷ்டரைக்கண்டால் அவர்களைத் தொழுபவனும், பரிசுத்தமான நெஞ்சனும், ஞானமும் கண்ணியமும் உடையவனும் ஆவனென்று விளம்பி வருஷத்திற் பிறந்தவனைச்சொல்லுவாயாக. எ-று.

விகாரி.

தனவான் பயஸ்தன் றனுப்பீடை யுற்றோன்
மனமேற் சலனமொடு வாழ்வோன்—றுனிதீர்
மகாரு முதவினரு மற்றிலனீங் கென்ன
விகாரியிற்சென் மித்தோனை விள்.

(இ-ள்.) பாக்கியவானும், பயமுள்ளவனும், வியாதியுற்ற தேகியும், மனதிற் சஞ்சலத்தோடு வாழ்பவனும், மகிழ்ச்சியைக்கொடுக்கும் பிள்ளைகளையும், உதவிசெய்யத்தக்கபந்துக்களையும் இல்லாதவனும் ஆவனென்று விகாரி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக, எ-று. (கரு)

சார்வரி.

ஆசார முள்ளோ னதிபோகி சத்தியவான்
றாசானு தாசன் றனவந்தன்—றேசாரு
நேர்மையுள மாவிரத னீதிபர னுமெனவே
சார்வரிசம் வற்சரனைச் சாற்று.

(இ-ள்.) நல்லொழுக்கமுள்ளவனும், மிகவும் போகம் அனுபவிப்பவனும், உண்மைபேசுபவனும், அடியார்களுக்குத் தொண்டுசெய்பவனும், பணக்காரனும், ஒளிபொருந்திய சரியான விரதங்களை அனுட்டிப்பவனும், நீதிதவறுதவனும் ஆவனென்று சார்வரி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (ருச)

பிலவ.

சாந்தகுணன் றனவான் றக்கோர்மெச் சும்புகழோன்
மாந்திரிய சாத்திரத்து மாவல்லோ—னேந்து
முலையவர்பா னேசன் முதிர்வசன னுகப்
பிலவதனிற் சார்ந்தவனைப் பேண்.

(இ-ள்.) சாத்துவிககுணமும் பொருளும் உள்ளவனும், சான்றோர்கொண்டாடும் கீர்த்திமானும், மாந்திரிய சாத்திரத்தில் மிகுந்த வல்லவனும், ஸ்திரீகளிடத்தில் இஷ்டமுடையவனும், நன்றாக ஆலோசித்துப்பேசுகிறவனும் ஆவனென்று பிலவ வருஷத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (ருரு)

சுபகிருது.

தந்துஜென போஷன் பராக்கிரமன் பாவையரைத்
தந்திரத்தி னேய்த்திடுவோன் சன்மார்க்க—னந்து
முபகாரஞ் செய்வோ னொளிர்தருமி யென்னச்
சுபகிருது வற்சரனைச் சொல்.

(இ-ள்.) பந்துக்களைப் பாதுகாப்பவனும், வீரனும், ஸ்திரீகளை உபாயத்தினாலே ஏய்ப்பவனும், ஒழுக்கமுள்ளவனும், மிகுந்த உபகாரியும் தருமவானும் ஆவனென்று சுபகிருது வருஷத்திற்பிறந்தவனைச் சொல்லுவாயாக, எ-று. (ருசு)

சோபகிருது.

அத்துவித மார்க்க னழகனமைச் சன்ஞானி
யொத்து பலபாஷை யோதுகிற்போன்—மெத்து
துரிதரகி தன்மன் சுகவானுச் சோப
கிருதுவிலுற் றானைக் கிள.

(இ-ள்.) அத்துவைதியும், சௌந்தரியனும், மந்திரியும், ஞான வானும், இஷ்டத்தோடு பலபாஷைகளைப் படிப்பவனும், பாபமில்லா தவனும், இராஜ அமிசையும் பேரின்பமுடையவனும் ஆவனென்று சோபகிருது வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. ()

குரோதி.

பலவகையூண் கொள்வோன் பரதார மோகன்
சலமிகவுஞ் சாதிப்போன் றர்க்கி—கலகன்
விரோதி விகடப் பிரசங்கி யென்று
குரோதியணோந் தானைக் குறி.

(இ-ள்.) பலவித வுணவுகளை விரும்பிப் புசிப்பவனும், பரஸ்திரீ கமனஞ்செய்பவனும், மிகவும் வயிரஞ் சாதிப்பவனும், தர்க்கம் பண்ணுபவனும், கலகமூட்டுபவனும், யாவருக்கும் பகைவனும், அகடவிகடமாகப் பிரசங்கிப்பவனும் ஆவனென்று குரோதிவருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௩அ)

விசுவாவசு.

தனவா னுறவினரைத் தற்காப்போன் றன்மி
மனமேற் களங்கமிலா மன்னன்—றினமு
நிசமே புகனெறியோ னீதிபர னென்ன
விசுவாவ சூற்பவனை விள்.

(இ-ள்.) தனாட்டியனும், பெரிய குடும்பங்களைச் சம்ரட்சணை செய்பவனும், தருமசீலனும், பரிசுத்தமான மனதுள்ள பிரபுவும், எப்பொழுதும் உண்மையே பேசுபவனும், நீதிமானும் ஆவனென்று விசுவாவசு வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௩௯)

பராபவ.

குலநாசன் மூடன் குரோதிமிகு பாவி
கலகமே செய்வோன் கபடி—யுலகிற்
பராவுதுணை வோரைப் படையாதோ னாகப்
பராபவசம் வற்சரனைப் பாடு.

(இ-ள்.) தன்னுடைய குடியை நாசஞ்செய்பவனும், மதிகேடனும், கோபியும், மிகுந்த பாபியும், கலகம் பண்ணுபவனும், வஞ்சகனும், உலகத்தில் சொல்லப்பட்ட சகோதரரையில்லாதவனும் ஆகப் பராபவ வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சூ0)

பிலவங்க.

புந்திதகை யில்லாதான் புன்சிறுவர் கேண்மையினன்
பந்துவை நேசிப்பான் பலரையுமு—வந்து
கலவங்க மாதருக்குக் கண்போல்வா னென்று
பிலவங்க வாண்டானைப் பேசு.

(இ-ள்.) அறிவும் யோக்கியதையும் இல்லாதவனும், தனக்குஞ் சிறியவர்களோடு சிநேகஞ் செய்பவனும், பந்துக்களிடத்தில் பக்ஷமுள்ளவனும், பொருள்கொடுக்கும் பலரையும் மகிழ்ந்து கூடுகின்ற ஸ்திரீகளாகும் வேசிகளுக்கு நேத்திரத்தை யொத்தவனாகிய விடனும் ஆவனென்று பிலவங்க வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சுக)

கீலக.

அதிசுந்த ரன்சூர னன்புடைய நேசன்
மதிமந் திரிபோகி மன்ன—னிதமுமிகு
சீலமுடன் றெய்வபக்தி செய்பவனு மென்னக்
கீலகவந்தானைக் கிள.

(இ-ள்.) மிகுந்த அழகனும், வீரியனும், யாவரிடத்தும் மிகுந்த பக்ஷமுள்ளவனும், விவேகமுடைய மந்திரியும், சுகங்களை அனுபவிப்பவனும், இராஜனும், நித்தியமும் மிகுந்த ஒழுக்கத்தோடு கடவுளை வழிபடுவோனும் ஆவனென்று கீலக வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சுஉ)

சௌமிய.

சாந்தகுண னேசன் சருவஜென முந்துநிகல்
வேந்தன் புறங்கொடா வீரியன்று—வாந்தர்
தவபுரா ணப்பிரியன் றன்னியனு மென்றே
சவுமியவிற் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) சாந்தகுணமும் யாவரிடத்தும் அன்பும் உடையவனும், எல்லாஜனங்களும் கொண்டாடுகின்ற நல்ல அரசனும், முதுகிடாத வீரனும், ஒளியுள்ள புண்ணிய புராணங்களை விரும்பிக்கேட்பவனும், தனவானும் ஆகச் சௌமிய வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சங)

சாதாரண.

பற்பல நூலின் பயனைமர பிற்புகலும்
விற்பனன் வீயாத மேம்பாட்டோ—னற்புடைய
மாதாவைப் போற்றிடுவான் மன்னுநடு வுள்ளவனுச்
சாதார ணேற்பவனைச் சாற்று.

(இ-ள்.) பலபலசாத்திரங்களின் அர்த்தங்களையும் சம்பிரதாயமாகச் சொல்லுகின்ற சிறந்தபண்டிதனும், அழியாத மேம்பாட்டையுடையவனும், அன்புள்ள தன்தாயாரைச் சம்ரட்சணைசெய்பவனும், அசையாத நடுவுநிலைமை யுள்ளவனும் ஆகச் சாதாரண வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சச)

விரோதிகிருது.

பேராசை கொண்டோன் பிணியனல்கூர்ந் தோன்சினத்த
னேராத வார்த்தையின னிட்டூரன்—தீராப்
பெருநடையன் லோபியெனப் பெண்ணே விரோதி
கிருதுவிலுற் றானைக் கிள.

(இ-ள்.) பேராசையுள்ளவனும், நோயாளியும், தரித்திரனும், கோபியும், தகாதவார்த்தைகளைப் பேசுபவனும், கொடியவனும், ஓயாமல் அதிகமாக நடப்பவனும், உலுத்தனும் ஆவனென்று பெண்ணே! விரோதிகிருது வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று

பரிதாபி.

குணமிலிகண் டோரைக் குலாவுவோன் பாங்காப்
பணமீட்டு வோன்வீணன் பாவா—யணுவும்
பிரீதியகத் தற்றேன பிணியாள னென்று
பரிதாபி வற்சரனைப் பாடு.

(இ-ள்.) குணமில்லாதவனும், கண்டவர்களெல்லாரையுங் கொண்டாடுபவனும், பத்திரமாகப் பொருளைச் சேர்ப்பவனும், பிரயோசன மற்றவனும், பிறரிடத்தில் அன்புசற்றுமில்லாத நெஞ்சனும், நோயாளியும் ஆவனென்று பெண்ணே நீ பரிதாபி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சசு)

பிரமாதீச.

பந்து துவிவேஷி பரதார மோக
னிந்தனையே சொல்லு நிருமூட—னெந்தக்
கிரமமுமில் லாதோன் கெடுதிபுரி வோனுப்
பிரமாதி சொற்பவனைப் பேசு.

(இ-ள்.) பந்துக்களை விரோதிப்பவனும், பிறனுடைய ஸ்திரீயை விரும்புவோனும், நிந்தனைகளையே பேசுகின்ற மகாமூடனும், யாதொருகிரமமுமில்லாதவனும், தீமைசெய்பவனும் ஆகப் பிரமாதி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சஎ)

ஆனந்த.

சகலகலை தேர்நிபுணன் சற்குணசம் பன்னன்
றகுமான காரியஞ்செய் சாந்தன்—வெகுமானி
தானந் தவமிவற்றைத் தானியற்று வோனெனவே
யானந்த வாண்டானை யாடு.

(இ-ள்.) சகல சாத்திரங்களையுந்தெரிந்த மகாபண்டிதனும், நற்குணத்தானிறைந்தவனும், தகுமான காரியத்தைச்செய்யும் பொறுமையுள்ளவனும், மிகுந்தமானியும், தானத்தையும் தவத்தையும் செய்பவனும் ஆவனென்று ஆனந்தவருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சஅ)

இராட்சச.

பேதையரைக் கொண்டாடிப் பேசுகின்ற நிர்மூடன்
தீதையே செய்யுந் திறமுடையோன்—சூதை
யிராப்பகலு மாடியுளத் தின்புறுவோ னென்ன
விராட்சசவிற் சேர்ந்தவனை யெண்.

(இ-ள்.) அறியாமையே வடிவாகிய ஸ்திரீகளைப்புகழ்ந்து பேசுகிற சுத்தமூடனும், பொல்லாங்கையே செய்யும் போக்கிரியும், எப்போதும் சூதாடிச் சந்தோஷிப்பவனும் ஆவனென்று இராட்சச வருஷத்திற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (௪௯)

நள.

சீல நெறிபடர்வோன் சிந்தாத் தருமபரி
பாலன்றீம் பண்டங்கள் பட்சணிப்போன்—கால
வளவறிந் தாகார மருந்துவோ னென்று
நளவருஷத் தானை நவில்.

(இ-ள்.) நல்லொழுக்கமென்னும் வழியிலே நடப்பவனும், அழியாத தருமங்களைப் பரிபாலிப்பவனும், மதுரமான வுணவுகளை உண்பவனும், காலத்தின் அளவை அறிந்து அதற்குத்தக்கபடி புசிப்பவனும் ஆவனென்று நளவருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக எ-று. (௫0)

பிங்கள.

தபசிதன வான்ஞானி சற்கருமஞ் செய்வோன்
சுபவாக் கியந்தனையே சொல்வோ—னிபமுள்ள
சங்கடமெல் லாந்தவிர்க்குஞ் சற்குணவா னாகப்
பிங்களவிற் றோய்ந்தவனைப் பேசு.

(இ-ள்.) தபசியும், திரவியவானும், ஞானியும், நல்லகருமங்களைச் செய்பவனும், சுபகரமான வாக்கியங்களையே சொல்பவனும், பழிப்பான பொல்லாங்குகளெல்லாவற்றையும் நிவிர்த்திசெய்யும் உத்தம குணமுள்ளவனும் ஆகப் பிங்கள வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௫௧)

காலயுத்தி.

திரிகாலச் செய்திகளுந் தேரு நிபுணன்
குருவாக்கை யென்றுமுளங் கொள்வோ—னரிசூழ்
ஞாலமிசைக் கீர்த்தியினை நாட்டுவோ னுமென்று
காலயுத்திச் சேர்ந்தவனைக் காண்.

(இ-ள்.) பூதபவிஷ்ய வர்த்தமானங்களில் நடக்குங்காரியங்களை அறியும் நிபுணனும், குருவாக்கை எப்போதும் எண்ணி நடப்பவனும் கடல்சூழ்ந்த உலகத்தில் தன் கீர்த்தியை ஸ்தாபிப்பவனும் ஆவனென்று காலயுத்திவருஷத்திற் பிறந்தவனை குறிப்பாயாக. எ-று. (நூச)

சித்தார்த்தி.

குருபத்தி யுஞ்சற் குணமுமுள கோமான்
பெருகுதனம் பெற்றோன் பிரான்றன்—றிருவடியை
மெத்தார்த்தி யோடிறைஞ்சு மேலோ னெனவணங்கே
சித்தார்த்தி வந்தவனைச் செப்பு.

(இ-ள்.) குருவினிடத்தில் பத்தியும், நல்லகுணமும் உள்ள அரசனும், மிகுந்த பொருளுடையவனும், சராசரப்பொருட்குத் தலைவனாகிய கடவுளினது திருவடிகளை மிகுந்த அன்போடுவணங்கும் பெரியோனும் ஆவனென்று பெண்ணே நீ சித்தார்த்தி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (ருரு)

ரௌத்திரி.

அன்னியநல் லாரை யணைந்துமகிழ்ந் திருப்போன்
கொன்னியலா மூர்க்ககுணங் கூடினோ—னன்ய
நுரைமதியைக் கேட்டொழுகு வோனு விரவுத்
திரிதனிற்சென் மித்தவனைத் தேர்.

(இ-ள்.) அன்னிய ஸ்திரீகளைப் புணர்ந்து மகிழ்ந்து வாழ்பவனும், பெருமையற்ற மூர்க்ககுணத்தையுடையவனும், பிறர்சொல்லும் புத்தியைக்கேட்டு நடப்பவனும் ஆக ரௌத்திரிவருஷத்திற் பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. (ருச)

துன் ம தி.

வெள்ளறிவோன் யோக விகற்பமுள மாமானி
துள்ளிவிளை யாடுந் தொடர்புடையோ—னுள்ளமொடு
பொன்மருவும் பண்டத்தைப் போற்றுவோ னுமென்று
துன்மதியிற் றேய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) அறிவில்லாதவனும், யோகபங்க முள்ளவனும், மிகுந்தமானியும், குதித்து விளையாடுகின்ற முயற்சியுடையவனும், கருத்தோடு பொன்னினாற் செய்த வஸ்துவையும் பொருந்திய மற்றைப் பண்டங்களையும் காப்பாற்றுவோனும் ஆவனென்று துன்மதி வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௫௫)

து ந் து பி.

அங்க முயர்ந்தோ னழகனதி போகவா
னெங்கும் பிரகாச மேய்ந்துளோன்—றங்கமுள
பந்து ஜெனப்பிரியன் பாவலர்கட் கன்பனெனத்
துந்துபியிற் சார்ந்தவனைச் சூழ்.

(இ-ள்.) உன்னதமான தேகமுள்ளவனும், அழகனும், மெத்த போகவானும், எவ்விடத்துங் கீர்த்தியைப் பொருந்தினவனும், பரிசுத்தமுள்ள பந்துக்களிடத்திலும் வித்துவான்களிடத்திலும் நேசமுள்ளவனும் ஆவனென்று துந்துபி வருஷத்திற் பிறந்தவனைக் குறிப்பாயாக. எ-று. (௫௬)

உருத்திரோற்காரி.

சத்தியவா னற்பிரபு சன்மார்க்கன் றன்னியவான்
வித்துவஜெனக்கோட்டி மேவினோன்—மெத்தசமு
சாரிகுரு மேற்பத்தி சார்ந்தோனு ருத்திரோற்
காரியனைத் தானைக் கருது.

(இ-ள்.) உண்மைபேசுபவனும், நல்லபிரபுவும், நல்லொழுக்கமுள்ளவனும், வித்துவான்கள் கூட்டத்தைப் பொருந்தினவனும், மிகுந்த குடும்பியும், குருவினிடத்தில் பத்தியுள்ளவனும் ஆக உருத்திரோற்காரி வருஷத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (௫௭)

இரத்தாக்ஷி.

செம்மைநிறத் தேகன் சிவந்தவுரோ மன்றனுவி
லம்மைவடுப் பெற்றோ னவாவுறுவோன்—பொம்ம
லிரத்தாட்சி யோன்விருதாச் சண்டைசெய்வோ னென்ன
விரத்தாட்சி யாண்டானே யெண்.

(இ-ள்.) சிவந்ததேகமும் சிவந்தமயிரும் உள்ளவனும், உடம்பில் அம்மைவடுவைப்பெற்றவனும், பேராசைப் படுபவனும், பொலிவாகிய இரத்தம்போலச்சிவந்த கண்களையுடையவனும், வீண்சண்டை செய்பவனும் ஆவனென்று இரத்தாக்ஷி வருஷத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (ருஅ)

குரோதன.

உலுத்தன் குரோதி யுழைப்பாளி யென்று
நலப்புடைய மெய்யுரையா னாவோன்—வலுத்த
திரேகிபிறர் தேடுபொருளைக்கவர்வோ னாகக்
குரோதனமாம் வற்சானைக் கூறு.

(இ-ள்.) உலோபியும், குரோதமுள்ளவனும், பிரயாசப்படுபவனும், எப்பொழுதும் நல்ல உண்மையைப்பேசாதவனும், திடமான தேகமுள்ளவனும், பிறர்சம்பாதித்த திரவியத்தை அபகரிப்பவனும் ஆகக் குரோதன வருஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.

அக்ஷய.

எல்லாப் பொருளு மியைந்திருக்குஞ் சம்பன்ன
னெல்லாப் பொருள்களுமற் றில்லாதோன்—பொல்லாத
கட்சியைக்கைக்கொள்ளான்கடிந்துரைப்பனென்றணங்கே
யட்சயவி லுற்றவனை யாய்.

(இ-ள்.) எல்லாப்பொருள்களாலும் நிறைந்திருப்பவனும், எல்லாப்பொருள்களும் இல்லாதவனும், பொல்லாதவழியிற் பிரவேசியாதவனும், கண்டிப்பான வார்த்தை சொல்பவனும் ஆவனென்று பெண்ணே நீ அக்ஷயவருஷத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று.

அயனபலன்.

உத்தராயனம்.

யுத்தரங் கப்பிரியன் யூகமுபா யத்தியற்றிச்
சத்துருவை யோட்டிச் சயமுறுவோ—னித்தியமுஞ்
சுத்திபரன் ஞானநூல் சூழுந் தகையனென
வுத்ரா யனத்தானை யோது.

(இ-ள்.) சமர் செய்வதில் விருப்பமுள்ளவனும், வியூகங்களை உபாயத்தினாலே கட்டிச் சத்துருக்களை ஓடச்செய்து வெற்றியை அடைபவனும், எப்பொழுதும் சுசிகரமுள்ளவனும், ஞானசாத்திரங்களை ஆராயுந் தன்மையுடையவனும், ஆவனென்று உத்தராயனத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (க)

தக்ஷிணாயனம்

சாகையினற் சீலன் றயவுநிறை காட்சியன்வே
தாகமபு ராணமிவை தானுணர்ந்தோன்—மோகமெனும்
பற்றற்ற ஞானி பரத்தினிலை தேர்பவனு
கற்றக்ஷி ணாயனனை நாடு.

(இ-ள்.) அழியாத நல்லசீலமும், கிருபை நிறைந்த பார்வையுள்ளவனும், வேதம் ஆகமம் புராணம் ஆகிய இவைகளைக் கற்றறிந்தவனும், மோகமென்று சொல்லப்பட்ட பற்று நீங்கிய ஞானியும், சிவத்தினிலையை விசாரிப்பவனும் ஆவனென்று நல்ல தக்ஷிணாயனத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (உ)

ருதுபலன்.

வசந்தருது.

தசும்புடனீ டாயுகமுஞ் சார்ந்தவன்சிற் றண்டி
மிசைந்திடுவன் வாசமணி மெய்யன்—பசும்பா
லசைந்தவனுச் சித்திரைவை காசிமதி நண்ணும்
வசந்தருது வந்தவனை வாழ்த்து.

(இ-ள்.) திரவியமும் தீர்க்காயுசும் பொருந்தினவனும், பலகாரங்களைத் தின்பவனும், வாசனைத் திரவியங்களைத் தேகத்திற் பூசிக்கொள்பவனும், பசுவின்பாலை விரும்பி யுண்பவனும் ஆகச் சித்திரையும் வைகாசியும் ஆகிய இவ்விரண்டு மாதங்களுங்கூடிய வசந்தருதுவிற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று. (க)

கிரீஷ்மருது.

மானிசம யோச்சிதமா வார்த்தைபகர் வோன்கனவான்
ஞானிமெலி வாருடல னல்லகுண—வானம்
விராய்க்குளிப்ப னென்றுனி யாடிமதி மேவுங்
கிரீஷ்மருது வோனைக் கிள.

(இ-ள்.) மானியும், சமயோசிதமாக வார்த்தை சொல்பவனும், கண்ணியமுள்ளவனும், ஞானியும், மெலிந்ததேகியும், நல்ல குணமுடையவனும், சலத்தில் முழுகிக் குளிப்பவனும் ஆவனென்று ஆனியும் ஆடியும் ஆகிய இவ்விரண்டு மாதங்களுஞ் சேர்ந்த கிரீஷ்மருதுவிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ)

வருஷருது.

துன்று சுசியுடையன் றூயதலத் தில்வசிப்பன்
பொன்றுமள வும்புசிப்பன் பொங்குவர்ப்பை—யென்று
வருமா வணிபுரட் டாதிமதி வாய்ந்த
வருஷருது வந்தவனை வாழ்த்து.

(இ-ள்.) அதிக சுசியுள்ளவனும், புண்ணிய ஸ்தலங்களிலே வாசஞ்செய்பவனும், சாகுமளவும் மிகுந்த உவர்ப்புப்பண்டங்களை விரும்பித் தின்பவனும் ஆவனென்று வராநின்ற ஆவணியும் புரட்டாதியும் ஆகிய இவ்விரண்டு மாதங்களும் பொருந்திய வருஷருதுவிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௩)

சரருது.

நாகக்குயத்தினை நாடியணை காமியுத்தி
யோகப் பெருமையினு ளெண்மகிப—னாகத்

திரமைப் பசிகார்த் திகைமாதஞ் சேர்ந்த
சரருதுவிற் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) மலையையொத்த முலைகளையுடைய ஸ்திரீகளை விரும்பிக் கூடுகிற காமியும், உத்தியோகப்பெருமையுள்ளவனும், நல்ல அரசனும் ஆவனென்று ஐப்பசியும் கார்த்திகையும் ஆகிய இவ்விரண்டு மாதங்களுஞ் சேர்ந்த சர ருதுவிற் பிறந்தவனை உறுதியாகச் சொல்லுவாயாக. எ-று. (ச)

ஏமந்தருது.

தண்ணிணரற் கூந்தலார்மே சன்சமர்த்த னெய்யுடல
னண்ணினனா யாதரிப்போ னற்பயிரன்—கண்ணியவான்
சுந்தரமா நோக்கனென மார்கழிதை துன்னியவே
மந்தருது வந்தவனை வாழ்த்து.

(இ-ள்.) குளிர்மையுள்ள மலர்களைச்சூடிய இருளையொத்த கூந்தலையுடைய ஸ்திரீகளிடத்தில் மிகுந்த ஆசையுள்ளவனும், மிருதுவான தேகியும், அடுத்தவர்களைச் சம்ரட்சணை செய்பவனும், நல்ல மேழிச்செல்வனும், கனவானும், அழகிய கண்களையுடையவனும் ஆவனென்று மார்கழியும் தையும் ஆகிய இவ்விரண்டு மாதங்களுங்கூடிய ஏமந்த ருதுவிற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று. (ரு)

சிசிரருது.

நன்னடைய னீரி னயந்தாடு வோன்சுசியன்
மன்னுமிசை தானணிந்த மாதீர—னென்னப்
பசுமையுறு மாசியொடு பங்குனிமா தஞ்சேர்
சிசிரருது வுற்றவனைத் தேர்.

(இ-ள்.) நல்ல நடக்கையுள்ளவனும், சலத்தில் விரும்பி விளையாடுபவனும், பரிசுத்தனும், நிலையான கீர்த்தியைத்தரித்த மகாதீரனுள்ளவனும் ஆவனென்று குளிர்மிகுந்த மாசியும் பங்குனியும் ஆகிய இவ்விரண்டு மாதங்களும் பொருந்திய சிசிர ருதுவிற் பிறந்தவனை அறிவாயாக. எ-று. (சு)

மாசபலன்.

சித்திரை.

வேதா கமத்தை விசாரணைசெய் வோன்றகப்பன்
மாதாயைப் பேணு மதிமகன்பூ—மீதாரு
மெத்தலமுங் கீர்த்தி யியைந்துமகிழ் வோனெனநற்
சித்திரையிற் சேர்ந்தவனைச் செப்பு.

(இ-ள்.) நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் ஆராய்ந்தறிபவனும், தகப்பனையும் சிறந்த தாயையும் போஷிக்கும் புத்தியுள்ள புத்திரனும், பூமியிலுள்ள எல்லாத்தேசங்களிலும் கீர்த்தியைப்பொருந்தி மகிழ்பவனும் ஆவனென்று நல்ல சித்திரை மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (க)

வைகாசி.

பற்பலநா லூட்பொருளைப் பாங்குடனே கூறுகின்ற
விற்பனனெப் பாஷையுந்தேர் வேந்தனிவ—ணற்படியிற்
செய்கா சுளதீரன் சீரியனென் றெண்ணுதலாய்
வைகாசி யானை வழங்கு.

(இ-ள்.) பலபல சாஸ்திரங்களிலுள்ள பொருளைச் சொல்ல வேண்டிய கிரமப்படி சொல்லுகின்ற பண்டிதனும், எல்லாப்பாஷைகளையும் அறிந்த அரசனும், உலகத்தில் நல்லவழியாற் சம்பாதித்த பொருளையுடைய தயிரியசாலியும், கண்ணியவானும் ஆவனென்று பெண்ணே நீ வைகாசி மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. ()

ஆனி.

தீர்க்கா யுசுவுடைய சேய்களுடன் வாழ்தனவான்
வேர்க்காச் சினத்தோன் மிகுசமர்த்த—னீர்க்கூவி
லீனமடை யாவமைச்ச னீண்டுதிட முள்ளவனு
வானியவ தாரனெயிங் காய்.

(இ-ள்.) தீர்க்காயுசு உள்ள புத்திரர்களுடன் வாழுந் திரவியவானும், அற்பகோபியும், மிகுந்த சாமர்த்தியத்தை யுடையவனும்,

கடல்சூழ்ந்த பூமியில் சிறந்த மந்திரியும், அதி தீரனும் ஆக ஆனி மாதத்திற் பிறந்தவனை ஆய்வாயாக. எ-று. (௩)

ஆடி.

தனவான் சுசீலன் றயாபரன்மாண் புள்ள
மனையா ளுடனே வசிப்போன்—கனிவோடு
கூடிமகிழ் தோகையர்கள் கூட்டத் தமர்வோனென்
றாடியிலுற் றானை யறி.

(இ-ள்.) திரவியவானும், பரிசுத்தனும், கிருபையுடையவனும், மாட்சிமையுள்ள மனைவியுடன் வாழ்பவனும், கனிகரத்தோடு கூடி மகிழும் ஸ்திரீகளுடைய கும்பலில் இருப்பவனும் ஆவனென்று ஆடி மாதத்திற் பிறந்தவனை அறிவாயாக. எ-று. (௪)

ஆவணி.

நற்பனவர் மேற்பத்தி நம்பிக்கை நாட்டுமவ
னற்பனை யெப்போது மணுகியிடான்—றற்பரனை
யாவலொடு பூசைதுதி யாற்றுநெறி யாளனென
யாவணியிற் றோய்ந்தவனை யாடு.

(இ-ள்.) நல்ல பிராமணர்களிடத்தில் பக்தியும் விசுவாசமும் வைத்திருப்பவனும், ஈனர்களை எப்பொழுதுங் கூடாதவனும், பரமசிவனை ஆசையோடு பூசையும் தோத்திரமும் செய்யும் நெறியையுடையவனும் ஆவனென்று ஆவணிமாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௫)

புரட்டாசி.

பற்பலதே சத்துவளப் பந்தெரிவோ னங்கணைவோன்
றற்புகழாப் பேசுந் தகையுடையோன்—வற்பின்
முரட்டாட்டங் கோப முனிந்திடுந்து யோனைப்
புரட்டாதிப் போந்தவனைப் போற்று

(இ-ள்.) பலபல தேசங்களின் வளப்பங்களை அறிபவனும், அத் தேசங்களிலே சஞ்சரிப்பவனும், தன்னைத்தானே புகழ்ந்து பேசுந் தன்மையுள்ளவனும், வலுமையான முரட்டுத்தனத்தையும் கோபத்

தையும் நீக்கிவிடுஞ் சுத்தனும் ஆகப் புரட்டாதி மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சு)

ஐப்பசி.

சஞ்சலன் செந்நிறத்தோன் ருங்கரிய செய்கையோன்
பஞ்சமுடை யோன்மதுரப் பான்மொழியாய்—நெஞ்சதனி
லெப்பொழுது நிட்டூர மெண்ணுகின்ற பாதகனென்
றைப்பசிவந் தானை யறை.

(இ-ள்.) சபலசித்தனும், சிவந்த நிறத்தையுடையவனும், சகிக்கக்கூடாத செயல்களைச்செய்பவனும், தரித்திரனும், மனதில் எப்போதும் கொடுமையைநினைக்கின்ற பாபியும் ஆவனென்று, சுவைபொருந்திய பாலைப்போலும் இனிய மொழியையுடையவனே நீ ஐப்பசி மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (எ)

கார்த்திகை.

தனவான் றடங்கண்ணன் றக்க சரீரி
கனமான செய்கைக்குக் கர்த்த—னினத்தாருட்
கீர்த்தியினு லேயொளிர்வன் கேளிருடன் வாழ்வனெனக்
கார்த்திகையிற் சேர்ந்தவனைக் காண்.

(இ - ள்.) திரவியவானும், விசாலமான கண்களையுடையவனும், மட்டதிட்டமான தேகியும், பெரிய காரியங்களைச்செய்யும் பிரபுவும், தன் ஜாதியார்க்குள் கீர்த்தியிலே பிரகாசிப்பவனும், சுற்றத்தாருடன்கூடி வாழ்பவனும் ஆவனென்று கார்த்திகை மாதத்திற் பிறந்தவனைக் குறிப்பாயாக. எ-று. (அ)

மார்கழி.

அன்னைபிதா வுக்கினிய ஞானி யெப்பொழுதுந்
தன்னிதயத் தேவைக்குஞ் சற்குணவான்—பொன்னைமிக
வார்வமொடார்ச் சிப்போ னறம்புரிவோ னுமென்று
மார்கழிமா தத்தானை வாழ்த்து.

(இ-ள்.) மாதா பிதாக்களுக்கு இனிமையாக நடந்துகொள்பவனும், குருவைச் சந்ததமும் மறவாமல் தன் மனதில் நினைத்துக்

கொண்டிருக்கும் நல்ல குணமுள்ளவனும், பொருளை மிகவும் ஆசையோடு சம்பாதிப்பவனும், தருமத்தைச் செய்பவனும் ஆவனென்று மார்கழி மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௯)

தை.

சஞ்சலமார் சித்தன் றனவான் குணசாலி
நைஞ்சவுட லன்வார்ந்த நாசியினை—னஞ்சநடைத்
தையலரைத் தான்பிரியான் றற்றுமமுக் காற்றினனுத்
தையிலிவண் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) கலக்கம் பொருந்திய நெஞ்சனும், திரவியவானும், விசாலமான குணமுள்ளவனும், மெலிந்ததேகியும், நீண்டமூக்கனும், அன்னத்தின் நடைபோலும் நடையையுடைய ஸ்திரீகளை விட்டுப் பிரியாதவனும், மிகுந்த பொறுமையுள்ளவனும் ஆகத் தை மாதத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௦)

மாசி.

அதர்மனவி வேகிகுலத் தாசார மில்லா
னிதமுமிக வேடுகின்ற நெஞ்சன்—றதியறிந்து
பேசுமியல் பற்றோன் பிணியாள னென்றணங்கே
மாசியனைத் தோனை மதி.

(இ-ள்.) தருமஞ் செய்யாதவனும், மதிகேடனும், குலத்துக்குரிய ஆசாரமில்லாதவனும், எப்பொழுதும் விரோதத்தைத் தேடுகின்ற நெஞ்சுடையவனும், சமயத்தையறிந்து பேசுந்தன்மை இல்லாதவனும், நோயாளியும் ஆவனென்று மாசி மாதத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௧௧)

பங்குனி.

கானத்தி லேபிரியன் காழ்த்தவினை யோட்டுகின்ற
தானமுந் தன்மஞ்செய் தகையுடையோன்—மானினியே
மங்கலமார் வாக்கை மருவுமகி பாலனெனப்
பங்குனியிற் சேர்ந்தவனைப் பாடு.

(இ-ள்.) சுரகானத்தில் இஷ்டமுள்ளவனும், வயிரமான தீவினை யைப்போக்குகின்ற தானத்தையும் தருமத்தையும் செய்யுங் கிருபை யுடையவனும், மங்களகரம் பொருந்திய வாக்கையுடைய அரசனும் ஆவனென்று, பெண்ணேநீ பங்குனிமாதத்திற் பிறந்தவனைச் சொல் லுவாயாக. எ - று. (௪௨)

தேதிபலன்.

குளித்தலதி போசனத்தைக் கொள்ளலெவர்க் குஞ்சோ
றளித்தல் பயப்படுத லாக்கல்—களித்துவிருந்
துண்டல்பர வீட்சணத்தோ டோங்குசுகிப் பூர்தியின்மேற்
கொண்டொழுகல் பல்வையக் கூட்டு. (௧)

கூட்டுதக யாத்ரை குடியிடம்விட் டேகறுய
ரோட்டுசுப யாத்ரைபரி யோக்கமுடன்—காட்டுகுலா
திக்கமு ராதிக்குஞ் சேர்குடும்ப ராதிக்கமொடு
தொக்கதுவ சாதிக்கத் தோய்வு. (௨)

தோயமுறுதேசா திக்கமனை மேற் சுளித்த
லோய்விறுயி லின்மே லுறுமோக—மாய்வதிலா
நித்திரையோ டொண்சயன நேர்ச்சிபர தாரநலந்
துய்த்த லொழியாத் துயர். (௩)

*துயல்பயண விக்கினமன் சூழ்ந்தியற்று தண்டந்
துயர்செய் விடநெருப்பாற் றுன்னும்—பயமுடனே
யோதுதனு ரோக மெனமுறைமையே யொண்ணுதலாய்
தேதிபல னுகுமெனத் தேர். (௪)

(இ-ள்.) நீராடலும், அதிகபோசனத்தைக் கொள்ளுதலும், யாசகர் யாவருக்கும் அன்னம் படைத்தலும், பயப்படுதலும், சமையல் செய் தலும், சந்தோஷித்து விருந் துண்ணலும், மேலான நோக்கமுடைத் தாதலும், மிகுந்த சுகங்களை அனுபவித்தலும், வாகனத்தின் மீதே

---

* இவை நான்கும் குளகம். தண்டியலங்காரம், "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்."

றிக்கொண்டு சஞ்சரித்தலும், பலவாகனங்களின் வாய்ப்பும், (அவற்றோடு) எண்ணப்பட்ட தீர்த்தயாத்திரை செய்தலும், ஸ்தானப்ரஷ்டமாகுதலும், துன்பத்தைப் போக்குகின்ற மங்கள யாத்திரை செய்தலும், வாகனாதிக்கமும், எடுத்துச் சொல்லப்பட்ட குலாதிக்கமும், கிராமாதிக்கமும், பொருந்திய குடும்பாதிக்கமும், துவசாதிக்கத்தின் சித்திப்பும், சலம்பொருந்திய தேசாதிக்கமும், மனைவிமேற் கோபித்தலும், ஒழியாத நெடுந்தூக்கமும், மனைவியிடத்து அதிக மோகமும், சொப்பனமுதலிய அவஸ்தையற்ற நித்திரையும், நல்ல சயனத்தின் வாய்ப்பும், பிறன் இல்லாளது இன்பத்தை அனுபவித்தலும், தீராத துக்கமும், செல்லும் பிரயாணத்தடையும், அரசனெண்ணிச்செய்யுந் தண்டனையும், துன்பத்தைச்செய்யும் விஷத்தாலும் அக்கினியினாலும் வரும் பீதியும், சொல்லப்பட்ட சரீரவியாதியும், என முறையாக முப்பது தேதிக்கும் பலனாகுமென்று பெண்ணே நீ தெளிவாயாக. எ-று.

வாரபலன்.

ஆதிவாரம்.

மாரனைப்போ லும்மழகன் மண்ணிற் பிரசித்தன்
வீரனுறு பொன்னுடையோன் மெல்லியலாய்—தேருமறை
வாயினரைப் பூசிக்கு மன்சிவந்த கண்ணனெனை
ஞாயிறவ தாரனைநீ நாட்டு.

(இ-ள்.) மன்மதனை ஒத்த அழகனும், பூமியில் பிரக்கியாதியுடையவனும், பராக்கிரமனும், மிகுந்த திரவியவானும், ஆராயப்பட்ட வேதத்தை வாயினிடத்துடைய பிராமணர்களைப் பூசைசெய்யும் அரசனும், சிவந்த நேத்திரமுள்ளவனும் ஆவனென்று, பெண்ணே நீ ஆதிவாரத்திற் பிறந்தவனை உறுதியாகச் சொல்லுவாயாக. எ-று. (௧)

சோமவாரம்.

விரதமனுட் டிப்போன் வெகுமானி தர்ம
பரிபா லனம்புரிவோன் பாவாய்—திரைபுடையிற்

றங்கவனி மேற்புகழைத் தாபிப்போ னுமென்று
திங்கடனிற் றோய்ந்தவனைத் தேர்.

(இ-ள்.) விரதங்களை அனுட்டிப்பவனும், மிகுந்த மானமுடையவனும், தருமத்தைப் பரிபாலிப்பவனும், கடல்சூழ்ந்த பூமியின்மேல் கீர்த்தியை நாட்டுபவனும் ஆவனென்று, பெண்ணேநீ சோமவாரத்திற்பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. (௨)

மங்களவாரம்.

சொன்ன மொழிதவர்வோன் சூதகத்த னேசுமற்பன்
மன்னுவரு மானமிலான் மாவபத்த—னென்னரத்தச்
செவ்வாய்க் கயனயனச் செந்திருவை யொப்பவளே
செவ்வாய்க் கிழமையனைச் செப்பு.

(இ-ள்.) வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாதவனும், வஞ்சகனும், இகழப்பட்ட ஈனனும், நிலையான வருமான மில்லாதவனும், சுத்த பொய்யனும் ஆவனென்று, இரத்தம்போன்ற சிவந்த வாயையும் கயல்போன்ற கண்களையும் உடைய இலட்சுமியை ஒப்பவளே நீ மங்களவாரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௩)

புதவாரம்.

சத்தியவான் விப்பிரரைச் சந்ததமும் பூசிப்போன்
புத்திமா னற்கருமம் போற்றுவோன்—சுத்த
பதமருள் கர்த்தாவைப் பராவுவோ னாகப்
புதனிடை வந்தானைப் புகழ்.

(இ-ள்.) பொய் சொல்லாதவனும், பிராமணர்களை எப்பொழுதும் பூசிப்பவனும், புத்திமானும், நல்ல காரியங்களைக் கருத்தோடு செய்பவனும், மேலான பதவியை அருளுகின்ற கடவுளை எப்பொழுதும் ஆராதிப்பவனும் ஆகப் புதவாரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௪)

குருவாரம்.

மகந்தன்னைச் செய்வோன் மதியூகி சீலன்
சகந்தன்னிற் சத்தியவான் றர்மி—மிகுந்த

கியாதியுள மன்னரசர் கேண்மையினு னென்று
வியாழமதி லுற்றவனை விள்.

(இ-ள்.) யாகங்களைச் செய்பவனும், விவேகியும், ஒழுக்கமுடையவனும், பூமியில் ஒருபோதும் பொய் பேசாதவனும், தருமங்களைச் செய்பவனும், மிகுந்த புகழுள்ள அரசனும், பல இராசாக்களுடைய சிநேகத்தை யுடையவனும் ஆவனென்று குருவாரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௫)

சுக்கிரவாரம்.

தனதானியஞ் செறிந்த சம்பத்து வாய்ந்தோன்
மனுநெறியின் மண்ணளிக்கு மன்னன்—கனகரும
முள்ளியியற்றுங் குணவா னென்னவொளி ரிழையாய்
வெள்ளியில் வந்தானை விளம்பு.

(இ-ள்.) தனமும் தானியமு மிகுந்த ஐச்சுவரியத்தைப் படைத்தவனும், மனு நெறியின்படி பூமியை ஆளுகின்ற அரசனும், மேலான காரியங்களை யோசித்துச் செய்கின்ற குணவானும் ஆவனென்று, பிரகாசிக்கின்ற ஆபரணத்தை யுடையவனே நீ சுக்கிரவாரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௬)

சனிவாரம்.

பரநாரி நேசன் பலவீன தேகன்
விரத மியற்றாத விழலன்—றரையிற்
கனமில் லினத்துக் கருமியென மாதே
சனியிற் பிறந்தவனைச் சாற்று.

(இ-ள்.) பரஸ்திரீயினிடத்துப் பட்சமுள்ளவனும், வலியற்ற சரீரத்தையுடையவனும், விரதங்களை அனுட்டிக்காத வீணனும், பூமியில் பெருமையில்லாத பந்துக்களையுடைய பாபியும் ஆவனென்று, பெண்ணே நீ சனிவாரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௭)

பக்ஷபலன்.

சுக்கிலபக்ஷம்.

தர்மகுண சீலன் றயையுள்ளோன் புத்திமான்
மர்மமிலாத் தூமனத்தன் மாதனவான்—கர்மபரி
பக்குவனும் போகியெனப் பாகைநிக ரின்மொழியாய்
சுக்கிலபக் கோற்பவனைச் சொல்.

(இ-ள்.) தர்ம சிந்தையும் ஒழுக்கமும் கிருபையும் உள்ளவனும், விவேகியும், களங்கமில்லாத பரிசுத்தமான மனதுடையவனும், மிக்க தனட்டியனும், காரியங்களை வெகுபக்குவமாகச் செய்பவனும், போகங்களை அனுபவிப்பவனும் ஆவனென்று, கற்கண்டைப்போலு மினிய மொழியையுடையவளே நீ பூர்வபக்ஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (க)

கிருஷ்ணபக்ஷம்.

சுயகாரிய வாதி சுகமில்லா னீச
னயமில்வச னன்பந்து நாசன்—பயமின்
முரட்டுக் குணமுடைய மூர்க்கனெனத் தோகாய்
கிருட்டிண பக்கத்தாற் கிளா.

(இ-ள்.) தன்னுடைய காரியத்தில் சாக்கிரதையுள்ளவனும், கஷ்டப்பிராணியும், அநுசாரனும், கடுஞ்சொல்லனும், குடும்பநாசனும், மிகுந்த முரடனும் ஆவனென்று பெண்ணே நீ கிருஷ்ணபக்ஷத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ)

திதிபலன்.

பிரதமை.

எல்லாக் கருமமு மெண்ணிப் புரிமதியோன்
சல்லாப வாக்கன் றனவந்த—னல்லாய்
தநற்படச் சீராக்குந் தகுதியுடை யோனு
முதற்றிதியிற் போந்தவனை முன்.

(இ-ள்.) எல்லாக் காரியங்களையும் யோசித்துச் செய்கின்ற புத்திமானும், யாரிடத்துஞ் சந்தோஷமாகப் பேசுபவனும், தனவானும், நிலைப்படும்படி கீர்த்தியைச்செய்கின்ற நடுவுநிலைமை யுடையவனும் ஆகப்பெண்ணே நீ பிரதமைத் திதியிற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (க)

துதியை.

கீர்த்திமான் சத்தியவான் கேதமிலாச் செய்கையான்
பூர்த்தியாந் தன்னினத்தைப் போஷிப்பன்—வார்த்தைத்
திதியுடையோன் மன்பொருளைச் சேகரிப்ப னென்று
துதியையிலே தோய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) மிகுந்த புகழையுடையவனும், பொய்பேசாதவனும், குற்றமற்ற தொழில்களைச் செய்பவனும், நிறைந்த தன் பந்துஜெனங்களை இரட்சிப்பவனும், வாக்கு நிலையுடையவனும், மிகவும் பொருளைச் சேர்ப்பவனும், ஆவனென்று துதியைத் திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ)

திருதியை.

புண்ணியவாக் குள்ள புரவலன்பீ தன்சீல
னெண்ணுங் கரும மியற்றிடுவோன்—மண்ணிற்
றிருப்பணியைச் செய்துவைக்குந் திண்ணியனு மென்னத்
திருதியையிற் சேர்ந்தவனைத் தேர்.

(இ-ள்.) சுபாஷிதமுள்ள அரசனும், அச்சமுற்றவனும், சுத்தமுள்ளவனும், நினைக்குங் காரியங்களைச்செய்து முடிப்பவனும், உலகத்தில் தேவாலயங்களைக் கட்டிச் சந்தோஷிக்கின்ற வலியதேகனும் ஆவனென்று திருதியைத் திதியிற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (ங)

சதுர்த்தி.

யாத்திரையே போவ னலகிறெழில் செய்வனன்பன்
பாத்திரநோக்கித் தருமம் பண்ணுவன்வேல்—சீத்து
மதர்த்தவிழி யாய்மந் திரவாதி யாகச்
சதுர்த்தியிடைச் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) பல தேசங்களிற் சஞ்சரிப்பவனும், அளவில்லாத காரியங்களைச் செய்பவனும், யாவரிடத்தும் நேசமுள்ளவனும், பாத்திரமறிந்து தருமத்தைப் பண்ணுபவனும், மந்திரவாதியும் ஆக வேலைத்தரத்தி மதர்த்த விழியையுடையவளே நீ சதுர்த்தித் திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௪)

பஞ்சமி.

சலனமதி யுள்ளவன்வே தாகமந் தேர்வோன்கோ
மலவுடல னெய்யவிடை மாதே—யுலகினிடை
வஞ்சியரைக் கூடிமகிழ் மாகாமி யாமெனவே
பஞ்சமியில் வந்தானைப் பார்.

(இ-ள்.) சஞ்சலபுத்தியுள்ளவனும், வேதாகமங்களை ஆராய்பவனும் மிருதுவான தேகமுடையவனும், உலகத்தில் ஸ்திரீகளைச் சேர்ந்து மகிழ்கின்ற மிகுந்த காமியும் ஆவனென்று, நுண்ணிய இடையையுடைய பெண்ணே நீ பஞ்சமித் திதியிற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௫)

சஷ்டி.

தேகமெலி வுள்ளோன் றேசமெச்சும் பிரபு
வாகையுறு மன்னவர்சன் மானத்தோன்—வேகமொடு
கிட்டூர மாஞ்சினமு நேர்ந்தவனு மென்றுமதி
சட்டியினிற் றோய்ந்தவனைத் தான்.

(இ-ள்.) இளைத்த சரீரமுள்ளவனும், தேசத்தார் கொண்டாடுகின்ற பிரபுவும், வெற்றியைப்பொருந்திய அரசர்களா லுபசரிக்கப் படுபவனும், அவசரமும் கொடிய கோபமுமுள்ளவனும் ஆவனென்று சஷ்டித்திதியிற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (௬)

சப்தமி.

காடினியாம் வாக்யன் கபரோகி மாபலவா
னீடுசெ பாக்கிர னேமியோன்—பீடுடனே
யத்தமதைத் தேடு மருளுடையோ னுண்டகையாச்
சத்தமியி லுற்றவனைச் சாற்று.

(இ-ள்.) கடினமான வார்த்தையைச் சொல்பவனும், க்ஷயரோகி யும், மிகுந்த பலமுள்ளவனும், பெரிய சபையில் அக்கிரகண்ணியனு யிருப்பவனும், அரசனும், பெருமையோடு திரவியத்தைச் சம்பாதிக் கின்ற தயாளனும், ஆண்டன்மையுள்ளவனும் ஆகச் சப்தமித் திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (எ)

அஷ்டமி.

காமாந்த காரன் கபரோகி புத்ரருள
சீமான் றிருவமருஞ் செங்கோலன்—பூமீது
விட்டகலாப் பேராசை மேவினோ னென்றணங்கே
யட்டமியிற் சார்ந்தவனை யாய்.

(இ-ள்.) காமுகனும், க்ஷயரோகியும், புத்திரரையும் பிறவிச்செல் வத்தையும் உடையவனும், இலட்சுமி விரும்பி வாசஞ்செய்யும்படி செங்கோலைச் செலுத்தும் அரசனும், உலகத்தில் நீங்காத அவாவை யுடையவனும் ஆவனென்று பெண்ணே நீ அஷ்டமித்திதியிற் பிறந்த வனை எண்ணுவாயாக. எ-று. (அ)

நவமி.

பெகுபிர சித்தன் பெருத்த சரீரி
தகுமனைவி புத்திரரைச் சாரான்—மிகவுங்
குவவுமுலை வேசியரைக் கூடியிருப் போனு
நவமியிற்சென் மித்தவனை நாட்டு.

(இ-ள்.) மிகப் பிரபலமானவனும், ஸ்தூலதேகியும், தனக்குத்த குந்த பெண்சாதி பிள்ளைகளைச் சார்ந்திராமல் மிகவும் விலைமாதர்க ளைச்சேர்ந்து அவர்களோடு வசிப்பவனும் ஆக நவமிதிதியிற் பிறந்த வனை உறுதியாகச் சொல்லுவாயாக. எ-று. (க)

தசமி.

வண்மையுள சீலன் வாக்கு நிலைமையோ
னெண்ணுமனை சேயிவர்பா னுட்டமுளோன்—மண்ணி
னிசமான தர்மி நிதியாள னென்க
தசமியவ தாரனைத் தான்.

(இ-ள்.) உண்மையான ஒழுக்கமுள்ளவனும், வாக்குப் பிசகாதவனும், பொருந்திய பெண்சாதி பிள்ளை ஆகிய இவர்களிடத்தில் விருப்பமுள்ளவனும், பூமியில் உறுதியான தருமத்தைச் செய்பவனும் தனவானும் ஆவனென்று, தசமித்திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (க0)

ஏ கா த சி.

வேதப் பிராமணர்பால் விஸ்வாசன் மாதனவான்
பேதமிலா வேலையாட் பெற்றிருப்பா—னீதிப்ரன்
வாகான செய்கைபுரி மானவனு மென்றுநல்லா
யேகாதசி யானை யெண்.

(இ-ள்.) வேதத்தை யோதும் பிராமணர்களிடத்தில் அன்புடையவனும், மிகுந்த திரவியவானும், இஷ்டப்படி நடக்கும் வேலைக்காரரையுடைத்தா யிருப்பவனும், நீதிமானும், அழகான செயல்களைச் செய்பவனும் ஆவனென்று பெண்ணே நீ ஏகாதசித்திதியிற் பிறந்தவனைக் கருதுவாயாக. எ-று. (கக)

துவா த சி.

புண்ணியமே செய்யும் புரவலனற் சீல
னெண்ணிறன தான்யமிவை யெய்தினோன்—மண்ணி
னவினகரு மத்தைத்தா னடிமுடிப் போனைத்
துவாதசியிற் றோய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) தருமத்தைச் செய்கின்ற அரசனும்,நல்ல ஒழுக்கமுடையவனும், அளவற்ற தனதானிய சம்பத்தைப் பெற்றவனும், உலகத்தில் புதுமையான காரியங்களை யோசித்துச்செய்து நிறைவேற்றுபவனும், ஆகத் துவாதசித்திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. ()

தி ர யோ த சி.

உலுத்தன் றனவா னுறவில்லாக் கர்மி
கலகலத்த மாந்த ரீகத்திற்—பலத்த
பிரயாசங் கொண்டு பெருமையுறு வோனைத்
திரயோ தசியானைத் தேர்.

(இ-ள்.) உலோபியும், திரவியவானும், உறவின்முறையில்லாத பாபியும், பயனற்ற மாந்தரீகத்தில் மிகுந்த வருத்தத்தை எடுத்துக்கொண்டு பெருமையை அடைபவனும் ஆகத் திரயோதசித்திதியிற் பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. (கங)

சதுர்த்தசி.

அசலார்தஞ் சொத்தை யபகரிக்குஞ் சித்தன்
விசுவாசம் யாரிடத்து மேவான்—பிசகே
பிதற்றிடுவன் மானே பெருங்கோபி யென்று
சதுர்த்தசியிற் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) அன்னியருடைய பொருளை அபகரித்துக் கொள்பவனும், யாவரிடத்தும் விசுவாசத்தை வையாதவனும், பிறருடைய குற்றங்களையே எடுத்துப் பேசுபவனும், மிகுந்த கோபியும் ஆவனென்றுபெண்ணே நீ சதுர்த்தசித்திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக எ-று. ()

பௌரணமி.

வித்தைபுத்தி யுள்ளவடல் வேந்தன்மிகு சாந்தனென்றுஞ்
சத்தியத்தி னீங்காச் சரித்திரத்தோ—னித்தலத்திற்
காருணிய னெஞ்சிற் கபடமிலா னென்றணங்கே
பூரணையுற் றானைப் புகல்.

(இ-ள்.) வித்தையும் புத்தியும் உள்ள கொற்றவனும், மிகுந்த பொறுமையுடையவனும், எப்பொழுதுஞ் சத்தியத்தினின்றுந் தவறாத ஒழுக்கத்தையுடையவனும், இவ்வுலகத்தில் தயாளனும், மனதிற் கள்ளமில்லாதவனும் ஆவனென்று பெண்ணே நீ பூரணைத்திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கரு)

அமாவாசி.

உக்கிரனென் றோளியரி யூர்திமுற் றெய்வந் தொழுவன்
றக்கமறை சாற்றிவசியஞ் செய்வன்—மிக்க
திமான மியற்றியின்பு மேவுவனு மென்ன
அமாவாசி யானை யறை.

(இ-ள்.) வீரபத்திரன் காளி துர்க்கைமுதலிய உக்கிரமுள்ள தெய்வங்களைப் பூசிப்பவனும், தகுந்த மந்திரங்களை உச்சரித்துப் பிறரை வசியம் பண்ணுபவனும், அனேகமான விமானங்களைச் செய்வித்துச் சந்தோஷிப்பவனும் ஆவனென்று அமாவாசித் திதியிற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௬)

நக்ஷத்திரபலன்.

அச்சுவினி.

சீமான் றனவான் சிறப்புடைய மேதாவி
கோமான் மிகுந்த குணவானிப்—பூமே
லிசையுறுவன் றேசாபி மானியா மெங்க
வசுவினியில் வந்தவனை யாய்ந்து.

(இ-ள்.) இலட்சுமிகரமுள்ளவனும், திரவியவானும், சிறந்த அறிஞனும், அரசனும், மிகுந்த நல்லகுணத்தையுடையவனும், இவ்வுலகத்தில் புகழைப் பெறுபவனும், தன் தேசத்தாாமேல் அபிமானமுள்ளவனும் ஆவனென்று யோசித்து அச்சுவினிநக்ஷத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧)

பரணி.

தாட்டிகமாந் தேகன் சரசகுண வாள
னீட்டியநன் றென்று நினைந்திடா—னாட்டிற்
கருவம் படைத்தவன்மா காமியா மென்று
பரணிநா ளோனைப் பகர்.

(இ-ள்.) காம்பீரமான தேகியும், இனியகுணமுடையவனும், பிறர் தனக்குச்செய்த நன்றியைச் சிறிது மெண்ணுதவனும், உலகத்தில் அகங்காரியும், மிகுந்தகாமுகனும் ஆவனென்று பரணி நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௨)

கார்த்திகை.

வாக்ஜாலகன் றனவான் வாதத்திலே பிரியன்
மூர்க்கன் படிப்பறியான் மூண்டபகற்—றாக்கமுளன்

பூர்த்தியாப் பொய்புகன்று பொன்னைக் கவர்வனெனக்
கார்த்திகைநாள் வந்தவனைக் காண்.

(இ-ள்.) வாயாடுபவனும், திரவியவானும், இரசவாதத்திலே விருப்பமுள்ளவனும், கோபியும், வித்தையைக்கற்றுணராதவனும், பகலிலேமிகுந்த நித்திரையை யுடையவனும், மிகுதியாகப் பொய்யைப் பேசிப் பிறர் பொருளை அபகரிப்பவனும் ஆவனென்று கார்த்திகை நட்சத்திரத்திற் பிறந்தவனைக் குறிப்பாயாக. எ-று. (௩)

உ ரோ க ணி.

பால்வெண்ணெ யுண்போன் பரநாரியர் பிரியன்
மேல்விலாசப் புருவன் மெய்ஞ்ஞானி—வேலைத்
தராதிபர் நேசன் சொற்றவறு தவனு
வுரோகணிநா ளுற்றவனை யோர்.

(இ-ள்.) பாலையும் நெய்யையும் விரும்பி உண்பவனும், அன்னிய ஸ்திரீகளிடத்தி லிச்சையுள்ளவனும், மேலே அகன்ற புருவத்தை யுடையவனும், தத்துவஞானியும், கடல்சூழ்ந்த பூமியையாளும் அரசர்களுக்கு அன்பனும், வாக்கு நிலையுள்ளவனும் ஆக உரோகணி நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௪)

மி ரு க சீ ரி ட ம்.

நற்புத்தி மான்குஞ்சி நன்குடனே காமமுளன்
பற்பலதே சஞ்சரியும் பண்பாளன்—புற்சிரங்கு
கூருடலன் வேலியலைக் கொள்கரத்த னுமிருக
சீரிடநாட் சேர்ந்தவனைச் செப்பு.

(இ-ள்.) நல்ல விவேகியும், குடுமியழகையும் ஆசையையுமுடையவனும், பலபல தேசங்களிற் சஞ்சரிக்கும் இயல்புள்ளவனும், புல்லிய சிரங்கு செறிந்த தேகியும், வேலினது சாயலைக்கொண்ட கையை யுடையவனும், ஆக, மிருகசீரிட நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௫)

தி ரு வா தி ரை.

இடத்தசரீ ரன்சிலன் சீறுசின முள்ளோன்
படித்தலத்தி னட்பியற்றும் பாங்கன்—கிடைத்த

பொருடேடிக் காப்பாற்றும் புந்தியிலா னென்னத்
திருவா திரையானைத் தேர்.

(இ-ள்.) வலுத்த தேகியும், பரிசுத்தனும், சிறுகின்ற கோபமுள்ளவனும், உலகத்தில் பிறரிடத்திற் சினேகஞ்செய்யும் உரிமையையுடையவனும், தனக்குக் கிடைத்த பொருளைக் காப்பாற்றும் விவேகமில்லாதவனும் ஆவனென்று திருவாதிரை நட்சத்திரத்திற் பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. (௬)

புனர்பூசம்.

அந்தரங்கத்த னதிகதன வான் காமி
விந்தைமலர்க் கையான்மா வித்துவான்—சிந்தை
மனதுடையன் பித்தன் மகாகீர்த்தி மானைப்
புனர்பூச நாளோனைப் போற்று.

(இ-ள்.) மருமியும், மிகுந்த செல்வனும், ஆசையுள்ளவனும், புதியதாமரைப் பூப்போலுங் கரத்தையுடையவனும், சிறந்த பண்டிதனும், கிலேசத்தை மனதினிடத்துடையவனும், பித்ததேகியும், மகாப்ரசித்தனும் ஆகப் புனர்பூச நட்சத்திரத்திற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று. (எ)

பூசம்.

பூஜா துரந்தரன் பூஜிதன் மாதனவான்
ராஜாதி ராஜ ரிரக்தியுளன்—மாஜால
னசையிற்றன் னீன்றோரை யாதரிப்போ னென்றணங்கே
பூசமணைந் தோனைப் புகல்.

(இ-ள்.) அரி அர பூஜை செய்தலை மறவாதவனும், தனவானும், அதிக தனுட்டியனும், இராஜாதி இராஜர்களுடைய நேசத்தையுடையவனும், சிறந்த மாயவித்தையைச் செய்பவனும், ஆசையோடு தன்னைப்பெற்ற தாய் தந்தையரை இரட்சிப்பவனும் ஆவனென்று பெண்ணே நீ பூசநட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. ()

ஆயிலியம்.

கண்டவற்றைத் தின்பன் கபடியெவர்க் குங்கலங்கா
மிண்டன் மிகுந்த வெகுளியினன்—கண்டிதமா

ஞாயமதைச் சொல்வ னயனகாம் பீயனென்
ருயிலியத் தார்ந்தவனே யாய்.

(இ-ள்.) கண்ட பண்டங்களைத்தின்பவனும், தன் கருத்தைப்பிறர்க் கொளிப்பவனும், எவருக்கும் அஞ்சாத திண்ணியனும், அதிக கோபியும், கண்டிப்பாக நியாயத்தைச் சொல்பவனும், பெருத்த கண்களையுடையவனும் ஆவனென்று ஆயிலிய நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (கூ)

மகம்.

புண்ணியவான் மானி புருஷோத் தமனதிக
கண்ணியவா னய்ந்தெடுத்த கலவிமான்—பண்ணின்
மிகுமழகன் வார்த்தை மிதமாச் சொல்வோனு
மகவுடு பிறந்தவனே வாழ்த்து.

(இ-ள்.) தருமஞ்செய்பவனும் அபிமான முள்ளவனும், உத்தமபுருஷனும், மிக்க தனவானும், நூல்களை நன்றாகப் படித்தறிந்த பண்டிதனும், பூமியில் மகாசுந்தரனும், மிதமாக வார்த்தையுரைப்பவனும் ஆக மகநட்சத்திரத்திற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று.

பூரம்.

பல்லழகன் சபலன் பண்ணுமதி கேடனுரை
சொல்வன்மிகு சமர்த்தாத்தோகையரைப்—புல்லியெங்கெந்
நேரமுமே நீங்கா னெடிய தியாகியெனப்
பூரமணைந் தோனைப் புகல்.

(இ-ள்.) அழகிய தந்தங்களையுடையவனும், சபலசித்தனும், துற்புத்தியுள்ளவனும், அதிசமர்த்தாக வார்த்தையாடுபவனும், ஸ்திரீகளை எந்நேரமுங்கூடி அவரைவிட்டுப் பிரியாதவனும், அதிக வுதாரியும் ஆவனென்று பூரநட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.

உத்திரம்.

நன்றிமற வாதநெஞ்ச னல்லகுணம் படைத்தோ
னென்றுமே யோக மிசைந்தவன்பேர்—குன்றுமற்

புத்தியில்யோ சித்தியல்வோன் போற்றுமபி மானியென
வுத்திரநா ளூற்றவனே யோர்.

(இ-ள்.) பிறர் தனக்குச்செய்த உபகாரத்தை என்றும் நிலைப்பவனும், நல்லகுணமுள்ளவனும், யோகவானும், தன் கீர்த்தி அழியாதபடி மனதில் யோசித்து நடப்பவனும், அபிமானமுள்ளவனும் ஆவனென்று உத்திர நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று.

அஸ்தம்.

நற்கருமஞ் செய்வ னயமெவர்பா லும்முரைப்போன்
விற்பனன்பூங் கோதாய் மிகுகாமி—பொற்பணியும்
வித்தமுமுள் ளோனெடிய மேம்பாட்டோ னுமெனவே
யத்தமதில் வந்தவனை யாய்.

(இ-ள்.) சற்காரியங்களைச் செய்பவனும், யாவரிடத்தும் இனிய வார்த்தையைச் சொல்பவனும், மிகுந்த ஆசையுடையவனும், பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்களும் திரவியமும் உள்ளவனும், அதிக பிரபலியனும் ஆவனென்று பூவையணிந்த கூந்தலையுடையவளே! நீ அஸ்த நட்சத்திரத்திற் பிறந்தவனை மதிப்பாயாக. எ-று. (கங)

சித்திரை.

நடையிற் கதியுடைய னற்கருமஞ் செய்வோன்
மடியின் முகத்தின் மறுவன்—புடவிதனிற்
சுத்த மருமிபிறர் தோகையரை வீழ்பவனுச்
சித்திரையிற் சேர்ந்தவனைத் தேர்.

(இ-ள்.) நடக்கும்போது வேகமாக நடப்பவனும், நல்ல காரியங்களைச் செய்பவனும், வயிற்றிலு முகத்திலும் மச்சத்தையுடையவனும், உலகத்தில் மிகுந்த மருமியும், அன்னியர்களுடைய ஸ்திரீகளை விரும்புகிறவனும் ஆகச் சித்திரை நட்சத்திரத்திற் பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. (கச)

சுவாதி.

தெய்வமுபா சித்தன் றிடதேகி பாக்கியவான்
வைவளரு மாயுதங்கை வைத்திடுவன்—பொய்விளம்பான்

சாதலுறு மட்டுந்தாய் தந்தையர்பா லன்புளனுச்
சோதியிடைத் தோய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) தெய்வங்களை வழிபடுவோனும், வலுத்த சரீரத்தை யுடையவனும், திரவியவானும், கூர்மைபொருந்திய ஆயுதத்தைக் கையிற் பிடித்திருப்பவனும், மெய்பேசுபவனும், சாமளவும் தன்னைப் பெற்றோரிடத்தில் பட்சமுள்ளவனும் ஆகச் சோதி நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கரு)

விசாகம்.

கீதநட மாதியிடைக் கேண்மைமிக வைத்திருப்பன்
சூதன் பரிகாசச் சொல்லுறைவன்—போதி
னிசாவனைய கூந்தலாய் நீள்யூகி யென்று
விசாகமதி லுற்றவனை விள்.

(இ-ள்.) சங்கீதம் நாட்டிய முதலியவைகளில் இட்டத்தை மிகவும் வைத்திருப்பவனும், வஞ்சகனும், பரிகாசவார்த்தைகளைச் சொல்பவனும், மிகக்கூரிய புத்தியுள்ளவனும் ஆவனென்று இராவையொத்த பூவையணிந்த கூந்தலையுடையவளே நீ விசாக நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கசு)

அனுஷம்.

அன்னியர்பெண் ணேசனடைக்காய் நனிதின்பன்
மன்னவர்சன் மானனுயர் வாக்குடையன்—மின்னு
தனவான் சுகவான் றமரையளிப் போனு
வனுடவனைத் தானே யறை.

(இ-ள்.) பிறர் மனைவியரிடத்து விருப்பமுள்ளவனும், வெற்றிலையும் பாக்கும் மிகவுந் தின்பவனும், அரசர்களா லுபசரிக்கப்படுபவனும், மேலானவாக்கை யுடையவனும், பிரகாசிக்கின்ற பொருளுள்ளவனும், சுகத்தை யனுபவிப்பவனும், பந்துக்களை யிரட்சிப்பவனும் ஆக அனுஷ நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்வாயாக. எ-று. ()

கேட்டை.

பரநாரி தோளைப் பரிசிப்பன் வேகி
பிரபுவெனும் பேர்படைப்பன் பெண்ணே—தருமத்தை
நாட்டவர்கண் மீக்கூற நாட்டிடுவ னுமெனவே
கேட்டையில்வந் தானைக் கிள.

(இ-ள்.) அன்னியருடைய ஸ்திரீகளைப் புணர்பவனும், தீவிர முள்ளவனும், பிரபுவென்று சொல்லப்படும் பெயரை யடைபவனும், தன்தேசத்தார் புகழும்படி தருமத்தை நிலைப்படுத்துபவனும் ஆவ னென்று பெண்ணே நீ கேட்டை நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧அ)

மூலம்.

என்றுந் தொழில்செய்வ னின்னு வசுசமுள
னன்றலாச் செய்கை நனிபுரிவன்—மன்றவா
சாலன்செய்ந் நன்றி தனைமறப்பன் செல்வனென
மூலஞ் செறிந்தவனை முன்.

(இ-ள்.) எப்பொழுதும் யாதா மொருவேலையைச் செய்து கொண்டிருப்பவனும், வெறுப்பைத் தருகின்ற அசுத்தத்தை யுடைய வனும், புண்ணியமல்லாத பாவச்செயல்களைச் செய்பவனும், மிகப் பேசுபவனும், பிறர் தனக்குச்செய்த நன்றியை நினையாதவனும், பொருளுடையவனும் ஆவனென்று மூலநட்சத்திரத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (௧௯)

பூராடம்.

பரவுப காரி பணிவாளன் யூகி
மருவுசுகந் துய்ப்பனனி வாய்ந்த—கரமுடையன்
சோராத மானியெனச் சூட்டோ திமநடையாய்
பூராடத் தானைப் புகல்.

(இ-ள்.) பிறர்க்குபகாரஞ் செய்பவனும் வணக்கமுள்ளவனும், புத்திமானும் சுகத்தை யனுபவிப்பவனும், மிகவும் நீண்ட கைகளை யுடையவனும், நீங்காத மானமுள்ளவனும் ஆவனென்று, தலைச்சூட

டையுடைய அன்னத்தின் நடைபோலும் நடையை யுடையவளே நீ பூராட நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ0)

உத்திராடம்.

புகழை விரும்புவோன் சுத்தனவாப் புல்லா
வகமுடையன் சாந்த னணங்கே—சுகபோகி
வித்தியா பேட்சையுளன் மிக்கதன வானென்ன
வுத்திரா டோற்பவனே யுன்.

(இ-ள்.) கீர்த்தியை விரும்புவோனும், பரிசுத்தனும் பேராசையைப் பொருந்தாது திருப்தியை அடைந்த மனதை யுடையவனும், பொறுமை யுள்ளவனும், சுகத்தை அனுபவிப்பவனும், கல்வியிற் பிரியமுள்ளவனும், மிகுந்த திரவியவானும் ஆவனென்று பெண்ணே நீ உத்திராட நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (உக)

திருவோணம்.

தனவா னிராஜன் றரும குணத்தன்
மனதினிடைத் தெய்வ மறவான்—தினமுங்
குருவின்மேற் பட்சத்தைக் கொண்டுறைவா னென்று
திருவோணத் தானைத் தெரி.

(இ-ள்.) பொருளுடையவனும் அரசனும் தருமத்தைச்செய்யுங் குணமுள்ளவனும், மனதில் தெய்வத்தை மறவாதவனும், எப்பொழுதும் குரு பந்து ஆகிய இவர்களிடத்தில் விசுவாசத்தைப் பொருந்தி வாழ்பவனும் ஆவனென்று திருவோண நட்சத்திரத்திற் பிறந்தவனை அறிவாயாக. எ-று. (உஉ)

அவிட்டம்.

தொடைக ளிரண்டுந் தொனிக்கு மிடறுந்
தடித்தவனற் பாவாய் தனவான்—படியிற்
றெவிட்டாத வேட்கையினன் றேர்சுரவா னென்ன
வவிட்டாவ தாரனையிங் காய்.

(இ-ள்.) இரண்டு தொடைகளும் தொனிக்கின்ற கண்டமும் பருத்தவனும், திரவியவானும், பூமியினிடத்தில் அதிக ஆசையை

புடையவனும், நாடப்பட்ட சுகத்தை யனுபவிப்பவனும் ஆவனென்று, அழகியபிரதிமையை யொப்பவளே நீ அவிட்ட நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (உங)

சதயம்.

காலங் குறித்தியல்வன் கண்ணியவான் புத்திவி
சாலன் முயற்சியுளன் சாந்தனனு—கூல
னதிகமா யாது மருந்திடா னென்று
சதயமதிற் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) காலத்தையெண்ணி அதற்குத் தக்கபடி நடப்பவனும், கனவானும் விசாலமான புத்தி யுள்ளவனும், முயற்சியை விடாதவனும், பொறுமையை யுடையவனும், யாவர்க்கும் அனுகூலமானவைகளைச் செய்பவனும், புசிக்கப்படுவதெதையும் அற்பமாகப் புசிப்பவனும் ஆவனென்று சதய நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக எ-று.

பூரட்டாதி.

பயந்தவனைப் போலப் படர்வனதி சோர
னயந்தமொழி நாவா லெவர்க்கு—மியம்பியவர்
சேரொட்டா தோட்டுஞ் செயலுடையோ னமெனவே
பூரட்டா திக்குரியற் போற்று.

(இ-ள்.) பயப்பட்டவனைப்போல நடப்பவனும், மிகுந்த திருடனும், எவர்க்கும் நயமானசொல்லை வாயாலேசொல்லி அவர் தன்னைக் கிட்ட ஒட்டாமல் அவரை ஓட்டுகின்ற தொழிலை யுடையவனும், ஆவனென்று பூரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உரு)

உத்திரட்டாதி.

மிதமா வுரைப்பன் மிகுந்த தனவா
னதிபண் டிதன்சீல னவ—னிதமுங்
கரக்காது தானமிடக் கற்பிப்ப னென்றுத்
திரட்டாதி யுற்றவனைத் தேர்.

(இ-ள்.) மிதமாகப் பேசுபவனும், அதிகதிரவிய முள்ளவனும், சிறந்த வித்துவானும், ஒழுக்கத்தை யுடையவனும், நித்தியமுந்

ஞானத்தை ஒளியாது கொடுக்கும்படி கட்டளையிடுபவனும் ஆவ னென்று உத்திரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவனை எண்ணுவா யாக. எ - று. (உசு)

இ ரே வ தி.

அங்கமதின் மச்ச னழகன் றிடமதிய
னெங்கணும் பந்துக்களுட னேயிருப்பன்—செங்கோல்
லரோவிறைய ளுதிமனே யாணேச னென்ன
விரேவதியிற் போந்தவனை யெண்.

(இ - ள்.) தேகத்தில் மறுவுள்ளவனும், சுந்தரனும் ஸ்திரமான புத்தியை யுடையவனும், எவ்விடத்தும் பந்துக்களோடு சேர்ந்து வாழ்பவனும், கொஞ்சம் பொருளுள்ளவனும், முதற் பாரியாளிடத் திற் பிரியத்தையுடையவனும் ஆவனென்று, இரேவதி நட்சத்திரத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. அரோ-அசைநிலை. (உஎ)

யோகபலன்.

வி ஷ் க ம் ப ம்.

பசுமாடு வாய்ந்திருப்ட ன் பந்து ஜெனத்தோ
னிசைவகிப்பன் மின்னு மிழையாய்—நசையுடனே
புட்பந் தனையணிவன் புல்லாரைக் கொல்வனென
விட்கம்ப முற்றவனை விள்.

(இ-ள்.) பசுக்களையும் திரவியத்தையும் அடைந்திருப்பவனும், பந்துஜெனங்களை யுடையவனும், கீர்த்தியைப் பெறுபவனும், ஆசை யோடு புஷ்பத்தை அணிந்து கொள்பவனும், சத்துருக்களை அதஞ் செய்பவனும் ஆவனென்று பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய வளே நீ விஷ்கம்ப யோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக.எ-று.

பி ரீ தி.

எல்லாக் கருமத்து மிட்டங் கொளுமனத்தன்
பொல்லாக் கருமத்திற் போகானே—நல்லாய்
சிரேயசெவர்க் கும்புரிவன் றீரமுடை யோனாய்
ப்ரீதியிற்சென் மித்தவனைப் பேண்.

(இ-ள்.) எல்லா விஷயங்களிலும் இஷ்டத்தைக் கொள்ளுகின்ற, மனதை யுடையவனும், தீயகாரியங்களிற் பிரவேசியாதவனும், யாவருக்கும் சுகவாழ்வையே விரும்புவோனும், தைரியமுள்ளவனும் ஆகப் பெண்ணே நீ பிரீதியோகத்திற் பிறந்தவனைக் கருதுவாயாக. எ-று. ()

ஆயுஷ்மான்.

பெலமான தேகன் பிழையற்ற சீல
னலமான காரியத்தை நாட்டுந்—தலைமையோ
னோயுணரா னுண்ணறிவ னூறுண் டிருப்பனென
வாயுஷ்மான் வந்தவனை யாய்.

(இ-ள்.) வலுத்த சரீரியும் குற்றமற்ற ஒழுக்கத்தை யுடையவனும், நல்லகாரியங்களை நிலைசிறுத்துஞ் சிரேஷ்டனும், வியாதியால் வாடாதவனும், கூரியபுத்தியுள்ளவனும், நூறுவருஷம் வரையும் சீவிப்பவனும் ஆவனென்று ஆயுஷ்மான் யோகத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (௩)

சௌபாக்கியம்.

சுகபோகி நல்ல சுரூபியுரை காப்போன்
றகையனெவ ரும்மகிழத் தக்கோன்—மகியிற்
சிவயோக சீலனெனச் செந்திருவை யன்னாய்
சவுபாக் கியோற்பவனைச் சாற்று.

(இ-ள்.) சுகங்களை யனுபவிப்பவனும், அழகியவடிவை யுடையவனும், சொற்பிசகாதவனும் பெருமையை யுடையவனும், யாவருஞ் சந்தோஷிக்கத்தக்கவனும், பூமியில் சிவயோகத்தைச் செய்யும் பரிசுத்தனும் ஆவனென்று இலக்குமியை ஒப்பவளே நீ சௌபாக்கிய யோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௪)

சோபனம்.

நற்குணமும் பொன்னுமுள னல்லகரு மம்புரிவன்
பற்பலலங் காரமவை பண்ணுவதில்—விற்பனன்வெம்
பாபநசிக் கும்பதிக்குப் பாங்கினடப் போனெனவே
சோபனமுற் றோனைத் துதி.

(இ-ள்.) நல்லகுணத்தையும் பொருளையும் உடையவனும், நல்ல காரியங்களைச் செய்பவனும், பலபல அலங்காரங்களைச் செய்வதில் சமர்த்தனும், வெய்ய பாபங்களைக்கெடுக்கும் புண்ணியஸ்தலங்களுக்குக் கிரமத்தோடு யாத்திரை போவோனும் ஆவனென்று, சோபன யோகத்திற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று. (௫)

அதிகண்டம்.

நிலத்திற் பலவகையி னிள்குழலாய் பொன்னைச்
சொலும்பக் குவத்திற் றொகுப்பன்—குலத்திற்
பதியாக வீற்றிருக்கும் பாடுடைய னென்ன
வதிகண்ட வுற்பவனை யாய்.

(இ-ள்.) பூமியினாலும் இன்னும் பலவிதத்தினாலும் திரவியத்தைச் சொல்லப்பட்ட பக்குவத்தோடு சேர்ப்பவனும், தன்குலத்தில் அரசனைப்போல வீற்றிருக்கும் பெருமையை யுடையவனும் ஆவனென்று, நீண்ட கூந்தலையுடையவளே நீ அதிகண்டயோகத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௬)

சுகர்மம்.

புனிதன் வெகுசென பூசித னல்ல
வனிதையர் நேசன் மதியன்—றனிக
னிகமும் பரமு மிரண்டு மடைவோனுச்
சுகர்மஞ் செனித்தவனைச் சொல்.

(இ-ள்.) பரிசுத்தனும் வெகுஜெனங்களால் கொண்டாடப் படுபவனும், நற்குணமுள்ள ஸ்திரீகளிடத்தில் அன்புடையவனும், விவேகியும் தனவானும் இம்மை மறுமையாகிய விரண்டுபயன்களையும் அடைபவனும் ஆகச், சுகர்மயோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக.எ-று.

திருதி.

பிறர்பொருளை வெஃகும் பெருநசையை யேய்ந்தோன்
றிறமுடனே காரியத்தைச் செய்வோன்—பொறையா
விருதயமுள் ளோனினிய வார்த்தையனு மென்று
திருதியிடைச் சேர்ந்தவனைத் தேர்.

(இ-ள்.) அன்னியருடைய பொருளை விரும்பும் பேராசையைப் பொருந்தினவனும், ஒழுங்கோடு காரியங்களைச் செய்பவனும், பொறுமைதங்கிய நெஞ்சையுடையவனும், இன்சொற் சொல்பவனும் ஆவனென்று திருதியோகத்திற் பிறந்தவனைத் தெளிவாயாக. எ-று. ()

சூலம்.

கலகப் பிரியன் கடுமையுளன் கோபி
நிலவனைய துண்டத்தாய் நீசக்—குலத்தினரைப்
பாலித்தல் செய்வன் பகைஞரைத்தான் வெல்வனெனச்
சூலத்தி லுற்றவனைச் சூழ்.

(இ-ள்.) கலகஞ்செய்வதில் விருப்பமுள்ளவனும், கொடியவனும் கோபியும், தாழ்ந்த சாதியாரை இரட்சிப்பவனும், சத்துருக்களைச் செயிப்பவனும் ஆவனென்று பூர்ணசந்திரனையொத்த முகத்தையுடையவளே நீ சூலயோகத்திற் பிறந்தவனைக் குறிப்டாயாக. எ-று.

கண்டம்.

அனுசார வாச னருமை யறியான்
மனோதிடமில் லாதவன் மானே—வினுவிற்
சண்டை யிடுவன் றருக்குமகங் காரியென்று
கண்ட மடைந்தவனைக் காண்.

(இ-ள்.) அனுசாரம் தன்னிடத்திற் குடிகொண்டிருக்கப் பெற்றவனும், அருமையை அறியாதவனும், தைரிய மற்றவனும், ஒன்றைக் கேட்டால் சண்டைபோடுபவனும், மிகுந்த அகங்காரத்தை யுடையவனும் ஆவனென்று பெண்ணே நீ கண்டயோகத்திற் பிறந்தவனை யுணர்வாயாக. எ-று. (௯0)

விருத்தி.

பலகா வியமுமுணரை பண்டிதனுஞ் சில்லோர்
குலங்கோத் திரமறிவன் கோமா—னுலகத்
திருக்குமே லோரை யிணங்குதன வானு
விருத்திமே யோனை விளம்பு.

(இ-ள்.) பலகாவியங்களையும் பிறர்க்குச் சொல்லுகின்ற வித்துவா னும், சிலருடைய் குலவளத்தையும் கோத்திரவளத்தையும் அறிபவ னும் அரசனும், பூமியின்கணுள்ள பெரியோரைச்சேர்ந்திருக்கும் செல் வனும் ஆக விருத்தியோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.

துருவம்.

அதிக தனமுடைய வாசாரி யன்றன்
பதமபய மாகப் படிவன்—மதியார்
கருவமிதத் தோட்டிக் கலந்துறைவ னென்று
துருவமதிற் றோய்ந்தவனைச் சொல்.

(இ-ள்.) மிகுந்த பொருளுடையவனும், தன் குருவினுடைய பாதங்களை சரணாக அடைந்திருப்பவனும், தன்னை மதியாதவர்க ளுடைய கருவத்தை இன்சொல்லாலேபோக்கி அவர்களோடுகூடிச் சினேகமாயிருப்பவனும் ஆவனென்று துருவயோகத்திற் பிறந்த வனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௨)

வியாகாதம்.

நேசமிலான் விகட னின்மூடன் மாவாசா
பாசந் தனிலிருக்கப் பார்த்தமரா—னேச
தியாகத்தன் றேசாந் தரம்போவ னென்று
வியாகாத முற்றவனை விள்.

(இ-ள்.) சினேககுண மில்லாதவனும், பரிகாசம் பண்ணுபவனும், அதிகமூடனும் ஒருவர் மிகுந்த ஆசாபாசத்தி லிருக்கப்பார்த்துச் சந் தோஷியாதவனும், வஞ்சம் பொருந்திய மனதையுடையவனும், அன் னியதேசங்களிற் போய்ச் சஞ்சரிப்பவனும் ஆவனென்று, வியாகாத யோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௧௩)

அரிஷணம்.

ஞானி மிகுதனவா னற்கா ரியம்புரிவோன்
மானி விருந்தினரை வந்திப்போன்—சீனிச்
சருக்கரையும் பாலுஞ் சரியாவுண் போனென்
றரிஷண முதித்தவனை யாய்.

(இ-ள்.) அறிஞனும் மிகுந்த பொருளுடையவனும், நல்லகாரியங்களைச் செய்பவனும் மானமுள்ளவனும், விருந்தாளிகளை யுபசரிப்பவனும், சீனிச்சருக்கரையும் பாலுஞ் சமமாகப் புசிப்பவனும் ஆவனென்று அரிஷ்டயோகத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று.()

வச்சிரம்.

காமமிகு செல்வன் கனவான் சுரோத்திரிய
பூமியுளன் மேடையொடு பூங்காவு—நேமியோர்
மெச்சுமா வைத்திருப்ப னென்னவே மெல்லியலாய்
வச்சிரமேல் வந்தவனை வாழ்த்து.

(இ-ள்.) காமுகனும் தனவானும் கண்ணியவானும், சுரோத்திரிய பூமியுள்ளவனும், மேல்வீடும் பூந்தோட்டமும் உலகத்தார் கொண்டாடும்படி வைத்துக்கொண்டிருப்பவனும் ஆவனென்று, பெண்ணே நீ வச்சிரயோகத்திற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று.()

சித்தி.

சகல செனப்பிரியன் சற்கீர்த்தி வேந்த
னகில மெலாம்புகழு மன்பன்—பகவனிடைப்
பத்தியொடு தொண்டுமிகப் பாங்கிற் புரிவனெனச்
சித்தியதிற் சேர்ந்தவனைத் தேர்.

(இ-ள்.) சகல செனங்களாலும் விரும்பப்பட்டவனும், நல்ல புகழைப்பெற்ற அரசனும், உலகத்தார் யாவரும் கொண்டாடும்படியான விசுவாசமுள்ளவனும், குருவினிடத்தில் மிகவும் பத்தியையும் பணிவிடையையும் கிரமத்தோடு செய்பவனும் ஆவனென்று, சித்தி யோகத்திற் பிறந்தவனை அறிவாயாக. எ-று. (௧௬)

விதிபாதம்.

வஞ்சகமுஞ் சூது மடநல்லாய் தங்கிவளர்
நெஞ்சன் சிநேகிதரை நீணிலத்தி—லஞ்சச்
சதியாற்றி விட்டுத் தனிநடப்ப னென்று
விதிபாத மேயவனை விள்.

(இ - ள்.) வஞ்சனையுஞ் சூதும் பொருந்தி வளர்கின்ற மனதை யுடையவனும், தன் சிநேகிதர்களுக்கும் விரிந்த உலகத்தில் அஞ்சும் படி பொல்லாங்கைச் செய்துவிட்டுத் தனியேபோய் விடுபவனும் ஆவ னென்று பெண்ணே நீ விதிபாதயோகத்திற் பிறந்தவனைச் சொல் லுவாயாக. எ-று. (கஎ)

வரியான்.

துஷ்டர்தங்கோ யாரெனினுந் தூங்கக் கழுத்தரிவா
னிஷ்டர்களை யெல்லா மிழந்திட்டுக்—கஷ்டம்
பரிவா னபத்தம் பகர்ந்திடுவா னென்க
வரியா னுதித்தவனை மற்று.

(இ-ள்.) துஷ்டர்களுக்குத் தலைவனும், யாராயினுந் தூங்காநிற்ப அவர்கழுத்தை யறுப்பவனும், சிநேகிதர்களையெல்லாம் இழந்துவிட் டுக் கஷ்டத்தை அனுபவிப்பவனும், பொய்யையே பேசுபவனும் ஆவ னென்று வரியான்யோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக.எ-று.

பரிகம்.

பொல்லாங்கைச் செய்து பொருள்சேர்த் திடும்பிசுனன்
சல்லாப மேயறியாச் சண்டாள—னல்லாய்
மரீஇயவரை யும்மெத்தும் வஞ்சகனு மென்று
பரிகமணைந் தானைப் பகர்.

(இ - ள்.) தீயகாரியங்களைச்செய்து பொருளைச் சம்பாதிக்கும் உலோபியும், சரசகுணம் இன்னதென்றறியாத ஈனனும், தன்னோடு சிநேகித்தவரையும் மோசஞ்செய்கின்ற கபடனும் ஆவனென்று, பெண்ணே நீ பரிகயோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.

சிவம்.

சதாகா லமுநல்ல சாத்திரத்தை யோர்ந்து
நிதான முடனடக்கு நேமன்—பிதாவை
யுவகையொடு போற்று முரவோ னெனவே
சிவமதிலுற் றானைத் தெளி.

(இ-ள்.) எப்பொழுதும் புண்ணியநூல்களை ஆராய்ந்து அவை களிற் சொல்லப்பட்ட உண்மைப்படி நடக்கு நியமத்தை யுடையவ னும், தன்தகப்பனைச் சந்தோஷத்தோடு காப்பாற்றுகின்ற விவேகி யும் ஆவனென்று, சிவயோகத்திற்பிறந்தவனை யுணர்வாயாக. எ-று. ()

சி த் த ம்.

வேந்தர்கள் சன்மானன் மெய்ய ரபிமானன்
காந்தியுடன் பெண்ணே கடலுலகிற்—சார்ந்திருப்பன்
முத்தி வசனனெங்குஞ் செல்லு மொழியனெனச்
சித்த முதித்தவனைத் தேர்.

(இ-ள்.) அரசர்களா லுபசரிக்கப்படுபவனும், பிராமணர்களிடத் தில் அபிமானமுள்ளவனும், புகழுடனே கடல்சூழ்ந்த உலகத்திற் பொருந்தி வாழ்பவனும், மோட்ச நெறியைப் பிறருக்குச் சொல்லு பவனும், எவ்விடத்துஞ் செல்லுகின்ற சொற்சத்தியை யுடையவனும் ஆவனென்று பெண்ணே நீ சித்தயோகத்திற் பிறந்தவனை அறிவா யாக. எ - று. (உக)

சா த் தி ய ம்.

வேத விதியும் வியாகரண முங்கிரமத்
தோதி யுணர்ந்த வுயர்புலவன்—பேதைநல
கோத்திரத்திற் பெண்ணைக் கொளல்கொடுத்தல் செய்வனெ
சாத்தியத்திற் புக்கவனைச் சாற்று. [ன்று

(இ-ள்.) நான்கு வேதங்களிற் கூறிய விதிகளையும் இலக்கணத் தையும் முறையாகக் கற்றறிந்த மேலான பண்டிதனும், நல்ல கோத்தி ரத்தில் பெண்ணைக்கொள்ளுதலுங் கொடுத்தலுஞ் செய்பவனும் ஆவ னென்று பெண்ணே நீ சாத்தியயோகத்திற் பிறந்தவனைச் சொல் லுவாயாக. எ-று. (உஉ)

சு ப ம்.

அழகார் முகத்த ணரிவையர்க ணேசன்
கழிபொருளை யீட்டுங் கருத்தன்—பிழைசேர்
கபரோகி கீர்த்திமான் காரிகையே யென்னச்
சுபயோகஞ் சேர்ந்தவனைச் சூழ்.

(இ-ள்.) அழகிய முகத்தையுடையவனும், ஸ்திரீகளிடத்தி லன் புள்ளவனும், மிகவும் பொருளைச்சேர்க்கும் கருத்தை யுடையவனும் குற்றம்பொருந்திய க்ஷயரோகத்தை யடைந்தவனும், பிரபலியனும் ஆவனென்று பெண்ணே நீ சூபயோகத்திற் பிறந்தவனை எண்ணுவா யாக. எ - று. (உ௩)

சுப்பிரம்.

சஞ்சலன்விற் பன்னன் சமர்த்தனழ கன்றருமி
வெஞ்சினத்தன் கட்டுடலன் மெல்லணைமேற்—றுஞ்சிடுவன்
செப்பிகழுங் கொங்கையாய் சீர்த்தியுறு செல்வனெனச்
சுப்பிரமிங் குற்றவனைச் சொல்.

(இ-ள்.) கவலைபொருந்திய நெஞ்சனும், பண்டிதனும் வல்லவனும், சுந்தரனும் தருமஞ் செய்பவனும், வெய்யகோபத்தை யுடையவனும், திடதேகியும் மிருதுவான பஞ்சணைமேற் சயனிப்பவனும், கீர்த்தியைப் பெற்ற தனவானும் ஆவனென்று செப்பினைப்பழிக்கின்ற முலைகளை யுடையவளே நீ சுப்பிரயோகத்திற் பிறந்தவனைச் சொல்லுவா யாக. எ - று. (உ௪)

பிரமம்.

பொன்னைக் கலனைப் புதைத்துவைத்து மற்றவற்றைத்
தன்னை யளித்தோர்க்குஞ் சாற்றிடா—துன்னித்
தருமத்தைச் செய்வன் றயாளனு மென்று
பிரமத்திற் போந்தவனைப் பேசு.

(இ-ள்.) செம்பொன்னையும் ஆபரணங்களையும் பூமியிற் புதைத்து வைத்து அவைகளைப் பற்றியொன்றும் தன்னைப் பெற்றெடுத்தவர் களுக்கும் சொல்லாதவனும், தீர்க்காலோசனைசெய்து தருமத்தைச் செய்பவனும், தயாளகுணமுள்ளவனும் ஆவனென்று பிரமயோகத் திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ௫)

மாகேந்திரம்.

எல்லா மறியு மியல்புடையன் பாக்கியவா
னுல்லாச மாயெவர்க்கு மோதியவை—யெல்லாரு
நாகேந் தியகரத்தாய் நல்கும் பிரபுவென
மாகேந் திரத்தவனை வாழ்த்து.

(இ-ள்.) எல்லாவிதங்களையும் அறியுந் தன்மையுள்ளவனும், தனவானும் எவர்களுக்கும் அவர்கள் கேட்டவற்றைச் சந்தோஷமாய்க் கொடுக்கின்ற பிரபுவும் ஆவனென்று, ஒளிபொருந்திய சங்கைத்தாங்கிய கைகளையுடையவளே நீ மாகேந்திரயோகத்திற் பிறந்தவனைப் புகழ்ந்து சொல்லுவாயாக. எ-று. (உசு)

வைதிருதி.

பரதூஷணன்பலவான் பாதகத்தன் றுன
தருமம் புரிவன் றனவான்—மருமலியுங்
கைதைமல ராதி களிப்போ டணிவனென்று
வைதிருதி யானை மதி.

(இ-ள்.) பிறரைத் தூஷிப்பவனும், வலியுள்ளவனும், துரோகியும், தான தருமங்களைச் செய்பவனும், திரவியவானும், வாசனைமிகுந்த தாழம்பூ முதலிய பூக்களை மகிழ்ச்சியோடு தரித்துக்கொள்பவனும் ஆவனென்று வைதிருதியோகத்திற்பிறந்தவனை எண்ணுவாயாக எ-று.

கரணபலன்.

பவம்.

பாபகரு மம்புரிந்து பாரிற் பலருமிடு
சாபந் தனைச்சுமந்து சஞ்சரிப்பன்—சோபங்
கவியுடலன் சற்றுங் கருணையிலா னாகப்
பவகரண முற்றவனைப் பாடு.

(இ-ள்.) பாவத்தொழில்களைச்செய்து பூமியிலுள்ள பலரு மிடுஞ் சாபத்தைச் சுமந்துகொண்டு திரிபவனும், சோம்பலால் மூடப்பட்ட தேகியும், அற்பமுந் தயையில்லாதவனும் ஆகப் பவகரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. (க)

பாலவம்.

பூமண் டலமெல்லாய் போற்றுகின்ற கண்ணியன்பிற்
சாமத்திற் சங்கீர்த் தனஞ்சுரங்க—ளாமன்பிற்
பாலனைய தீமொழியாய் பாலவ னென்று
பாலவம்வந் தானைப் பகர்.

(இ-ள்.) உலகத்திலுள்ளவர்கள் யாவரும் புகழுகின்ற கண்ணிய வானும், உஷத்காலத்திற் சங்கீர்த்தனங்களையும் சுரங்களையும் ஆசையோடு பாடுபவனும் ஆவனென்று பாலையொத்த இனியசொல்லையுடையவளே நீ பாலவ கரணத்திற பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (உ)

கௌலவம்.

தேர்களிறு வாசி திறற்காலா ளென்னுமிவை
சேர்கருமந் தன்னையே செய்திடுவன்—பேருஞ்
சவுபாக் கியமுமுள னாமென்று தையால்
கவுலவமுற் றானைக் கருது.

(இ-ள்.) இரதகஜதுரக பதாதிகளென்று சொல்லப்பட்ட இவைகள் சேர்ந்த இராஜகாரியங்களைச் செயபவனும், கீர்த்தியையும் ஐசுவரியத்தையும் உடையவனும் ஆவனென்று, பெண்ணே நீ கௌலவ கரணத்திற் பிறந்தவனை எண்ணுவாயாக. எ-று. (௩)

தைதுலை.

புண்ணிய சீலன் புனிதவச னம்புகலுந்
திண்ணியனி யாவர்க்குஞ் செம்மையோன்—மண்ணிடத்துக்
கைசலியா தீயுங் கனவா னழகனெனத்
தைதுலையிற் சார்ந்தவனைச் சாற்று.

(இ-ள்.) அறநெறியில் நடப்பவனும், களங்கமறற வார்த்தையைச் சொல்லுகின்ற வலுத்த தேகியும் யாவருக்கும் ஏற்ற நடப்பவனும் உலகத்தில் ஓயாமற் கொடுக்கின்ற கனவானும் அழகனும் ஆவனென்று, தைதுலகரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (௪)

கரசை.

சத்துருவைச் சேதிக்குஞ் சாமர்த் தியன்புகழோன்
மித்துருவை யாதரிப்போன் மேவன்னை—யத்தன்
குருவிறையை நித்தங் குறித்தேத்து வோனைக்
கரசை யடைந்தவனைக் காண்.

(இ-ள்.) பகையாளிகளை அடர்த்து வெல்லுகின்ற வல்லமையுடையவனும், கீர்த்திமானும் சினேகிதர்களைப் பரிபாலிப்பவனும், தன்

னிடத்து ஆசைவைத்துள்ள மாதாவையும் பிதாவையும் குருவையும், தெய்வத்தையும் நிதமுந் தியானித்துத் தோத்திரிப்பவனும் ஆகக் கரசைகரணத்திற் பிறந்தவனை யெண்ணுவாயாக. எ-று. (ரு)

வணிசை.

நிபுணன்வாக் காளி நிலைதவறும் பெண்ணைச்
சபலிக்கச் செய்வன் சரசன்—விபவப்
பணிதுகிலை நாளும் பரிந்தணிவ னென்று
வணிசையுதித் தானை வழங்கு.

(இ-ள்.) மிகவல்லவனும் தட்டப்படாத வாக்கையுடையவனும், கற்பு நிலைகுலைந்த ஸ்திரீகளை மயங்கும்படி செய்பவனும், இனிய குணமுள்ளவனும், பகரமான ஆடை ஆபரணங்களை யெப்பொழுதும் விரும்பி அணிந்து கொள்பவனும் ஆவனென்று வணிசைகரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (சு)

பத்திரம்.

சமயத்தைப் பூசிக்குஞ் சம்பிரதா யன்னோர்
நிமையளவும் பெண்ணாசை நீங்கா—தமர்வனெளிர்
புத்திநிலை யில்லாப் புருடனென மெல்லியலே
பத்திரமீ துற்றவனைப் பார்.

(இ-ள்.) தன்னுடைய சமய மான்மியங்களைச் சிறப்பிக்கும்படியான சம்பிரதாயனும், ஒரு நிமிஷநேரமும் ஸ்திரீ ஆசை ஒழியாதிருப்பவனும் பிரகாசமானபுத்தி ஸ்திரமில்லாதவனும் ஆவனென்று பெண்ணே நீ பத்திரகரணத்திற் பிறந்தவனைக் கவனிப்பாயாக. எ-று.

சகுனி.

அகங்கையினுன் முன்ன மகிலத் தவரைப்
பகைத்துப் பிறகு பரிவ—னகத்தை
மிகவியற்றும் பேதையென மின்வளைக்கைத் தோகாய்
சகுனியிற்சென் மித்தவனைச் சாற்று.

(இ-ள்.) முன்னம் ஆங்காரத்தினுல் உலகத்தாரை விரோதித்து பின்புதானேபரிந்து அவரை வேண்டிக்கொள்பவனும், பாபத்தை மிக

வுஞ் செய்கின்ற மூடனும் ஆவனென்று பிரகாசிக்கின்ற வளையலை யணிந்த கரத்தையுடைய மயிலையொப்பவளே நீ சகுனிகரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (அ)

சதுஷ்பாதம்.

எல்லா மறியு மியல்புடைய னெண்கலையில்
வல்லார் மொழிதருஞ்சீர் மாலையினை—னல்லாய்
புதுப்பொருள்செய் தற்குருற்று மானவனுப் போற்று
சதுஷ்பாத மேயவனைத் தான்.

(இ-ள்.) சகல விபகாரங்களையும் அறியுங்குண முடையவனும், நல்ல சாத்திரங்களில் வல்லவாகள் சொல்லுகின்ற புகழாகிய மாலையை அணிபவனும், அதிகபொருளைச் சம்பாதிக முயற்சி செய்பவனும் ஆகச்சதுஷ்பாத கரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று.()

நாகவம்.

சுந்தரஞ் சேர்வதனன் சொற்சமர்த்தன் பூக்கியவா
னிந்திரனைப் போல்வாழ் வியைந்திருப்பன்—சந்தநமும்
தேக வலியுடையன் சீரியசெய் வோனெனவே
நாகவமுற் றானை நவில்.

(இ-ள்.) அழகிய முகத்தை யுடையவனும், சாதுரியமாகப் பேசு பவனும், தனவானும் எப்பொழுதும் தேவேந்திரனைப்போல வாழ்க் கையைப் பொருந்தியிருப்பவனும், தேகவலி யுடையவனும், சிறப் பானகாரியங்களைச் செய்பவனும் ஆவனென்று நாகவகரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக., எ-று. (௧0)

கிமிஸ்துக்கினம்.

சஞ்சலமார் புத்தியினன் சந்தோஷ மாப்பேசு
மஞ்சன் பலவிதத்து மாசமர்த்தன்—கிஞ்சித்
சமயோ சிதனதிக தந்திரியா மென்று
கிமிஸ்துக் கினனைக் கிள.

(இ-ள்.) சஞ்சலம் பொருந்திய புத்தியையுடையவனும், யாவரிடத் தும் சந்தோஷமாகப் பேசுகின்ற மைந்தனும், நானுவகையிலும்

மெத்த திறமையுள்ளவனும் சிலசமயங்களிற் கற்பனையாகப் பேசுபவனும் மிகுந்த தந்திரவாதியும் ஆவனென்று கிமிஸ்துக்கின கரணத்திற் பிறந்தவனைச் சொல்லுவாயாக. எ-று. (கக)

தியாச்சியங்கள.

வருஷாதிவருமாறு.

முதுமொழி.

விருத்தம்.

மோனமாம் வருடாந்தத்தின் மூவைந்து நாளதாகும்
மானினி னண்டிற்பானு மருவிட முன்னும்பின்னும்
ஆனது மூன்றுநாட்க ளயனகு லங்களாகும்
ஈனமி லாடிகோலி லென்றுமூன் றரைநாளென்றே. (க)

ஏதமின் மற்றைமாத மெவற்றிற்கு மரைநாளாகும்
ஓதிய பஞ்சாங்காந்த முள்ளது கடிகைமூன்றும்
தீதுறு கிரகணந்தத் தினிலொரு வாரமாகும்
மூதுரை யாகக்கொண்டு மொழிந்திடு சூலந்தானே. (உ)

(இ-ள்.) வருடமுடிவு பங்குனியின் பின்னிட்ட பதினைந்துநாளும் இரண்டயனத்து தையின் ஆடியின் முதலில் மூன்றுநாளும் கடைசியில் மூன்றுநாளும் சித்திரை ஐப்பசி முதலிலும் கடைசியிலும் மூன்றரைநாளும் மற்றையமாதங்களில் முதலிலுங் கடையிலும் அரைநாளும் பஞ்சாங்கமாகிய வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இவ்வைந்திற்குரிய நாழிகைகளுக்கு முடிவில் மூன்றுநாழிகையும் கிரகணந் தொட்டுவிட்டநாள் தொடங்கி ஏழுநாட்களும் சூலம். எ-று.

மாசாதிவருமாறு.

புரிவிதி முதன்மாதத்திற் பூசமுஞ் சோதிநெய்யும்
ஏருதிலுத் திராடம்பிண்டி யாழ்தனி லுத்திராடம்
விரிசிறைப் புண்ணீர்நண்டில் விளம்பரி தனிலாடங்கள்
வரமகள் சதையமந்த வணிகனீள் புரட்டைநாளே. (க)

பூசமா மகன்றீத்தேளிற் புகழ்ந்திடு முரசிறேடு
வீசிய சுளகுதாமே வில்லிற்பாம் புங்கைமானிற்
கேசவன் மூலஞ்சாலிற் கேட்டைநீள் பரணிமீனில்
வாசநற் குழலாய்தீதா மாதசூ னியத்திறேளே. (௨)

(இ-ள்.) சித்திரைமீ பூசம் சோதி சித்திரையும் வைகாசிமீ உத்திராடம் புனர்பூசமும் ஆனிமீ உத்திராடமும் ஆடிமீ அவிட்டம் பூராடமும் ஆவணிமீ பூராடம் உத்திராடமும் புரட்டாசிமீ சதையமும் ஐப்பசிமீ பூரட்டாதியும் பின்னும் கார்த்திகைமீ பூசம் கேட்டை கிர்த்திகையும் மாாகழிமீ உத்திரட்டாதி விசாகமும் தைமீ ஆயிலியம் அஸ்தமும் மாசிமீ திருவோணம் மூலமும் பங்குனிமீ கேட்டை பரணியும்சோந்தது மாதசூனியம். எ-று.

திகதியா திவருமா று.

இரட்டை யாசிரிய விருத்தம்.

புதுமொழி.

மேடத்தி லாறுபதி னைந்திடப மேழுபதி ஞறுபதி
னேழ்விளக்கம், மேவியாழ் முதலாறு கடகமுப யம்பத்து
வீறுமிரு பதுதேதியாம், சேடிலகு வரியிரண் டொன்ப
திருபத்தெட்டு சிறுமிபதி ஞறுமிருபான், றிகழொன்பதொ
டுதுலா மாறுதேட் டிங்கண்முதல் சேர்பத்து பதினேழி
னில், கோடுவில் லாறுநவ பதிஞென்று மான்முதல் கூடி
ரண் டொருமூன்றுடன், குறகுபதி ஞறுபதி னேழ்மாசி
பதினேந்து கொண்டபதி ஞறுபதினேழ், ஓடுமீன் வருமாறு
பதினேந்து பத்தொன்ப தொடுகூடு கரிநாள்களில், ஒரு
பலனை விழையுலகர் நற்காரியஞ்செயா தொழிகமற் றவை
கொள்கவே. (௧)

(இ-ள்.) சித்திரைமீ ௬௨ ௧௫௨ வைகாசிமீ ௭௨ ௧௬௨ ௧௭௨ ஆனிமீ ௧௨ ௬௨ ஆடிமீ ௨௨ ௧0௨ ௨0௨ ஆவணிமீ ௨௨ ௬௨ ௨௮௨ புரட்டாசிமீ ௧௬௨ ௨௧௨ ஐப்பசிமீ ௬௨ கார்த்திகைமீ

௯௨ ௧௦௨ ௧௭௨ மார்கழிமீ ௬௨ ௬௨ ௧௧௨ தைமீ ௧௨ ௨௨ ௩௨ ௧௬௨ ௧௭௨ மாசிமீ ௧௫௨ ௧௬௨ ௧௭௨ பங்குனிமீ ௬௨ ௧௫௨ ௧௬௨ ஆகாவாம் எ-று.

வாராதிவருமாறு.

புதுமொழி.

வெண்பா.

இரவிமணி நாலரைமே லிந்தே ழரைசேய்
பரவுமூன் றேமால் பனிரெண்—டரசு
ரொன்றரைமேல் வெள்ளி யுறும்பந் தரைசனிநா
ரன்றென்பான் ராகுகா லம்.

(இ-ள்.) ஞாயிற்றில் ௪௬-மணி, திங்களில் ௭௬-மணி, செவ்வாயில் ௩-மணி, புதனில் ௧௨-மணி, வியாழத்தில் ௧௬-மணி, வெள்ளியில் ௧௦௬-மணி, சனியில் ௬-மணி, மேலிராகுகாலம் ஒரு முகூர்த்த காலம் வரையி லிருக்கும். எ-று.

திதியாதிவருமாறு.

முதுமொழி.

விருத்தம்.

செப்புதிதி தியாச்சியத்தின் வகை யுரைக்கக்கேணீ
திகழுகின்ற பிரதமிக்கே நாலாற தாகும்
ஒப்பரிய துதியைக்கீ ராறுதிரி தியைக்கே
யுயரைம்ப துடனேந்தா மோதிடபஞ் சமிக்கும்
தப்பறுசட் டிக்குமிங்ஙனகம் பாகிஞேநொன்காங்
தக்கசதுர்த் திக்குநவ மிக்குதகு மைந்தாம்
முப்பஃதோ டொன்றுகு மொழிந்திடு சத்தமிக்கே
முன்னிடுமட் டமிக்கிருபா னுமெனவே யுரைப்பர். (௧)

உரைத்திநெற் றசமிக்கு முப்பதுடன் மூன்று
மொன்றுமே காதசிக்கே யோதுதுவா தசிக்கே
விரைக்குழலா யொழிபஃதோ டைந்தாகு மேழு
மேவுசதுர்த் தசிக்காறும் விளம்பிருடத் தாறும்
திருத்துதிரை யோதசிக்கே யிருபானோ டொன்பான்
றிகழ்கின்ற பூரணைக்காஞ் செப்பிடுமோ ராறே
புரைத்தவிரு னூற்றவமா வாசைக்கே யீங்குப்
புகலுவர்நாற் கடிகைவிட மெனப்புலவர் புகழ்ந்தே (உ)

(இ-ள்.) சொல்லுகின்ற திதிகளினுடைய தியாச்சியத்தின்வகை விபரமாவது பிரகாசம்பொருந்திய பிரதமைதிதி - உச, ஒப்பிடக் கூடாத துதியைதிதி - கஉ, திரிதியை திதி-ருரு, ஓதாநின்ற பஞ்சமி சஷ்டிதிதி - ருச, சதுர்த்தி நவமிதிதி-ரு, சப்தமிதிதி-ஙக, அஷ்டமி திதி-உ0, பின்னும் தசமிதிதி-ஙங, ஏகாதசிதிதி-க, துவாதசிதிதி-கரு, சதுர்த்தசிதிதி - எ, திரையோதசிதிதி - உசு, பௌரணைதிதி - உகூ, அமாவாசைதிதி - சூ, நாழிகைக்குமேல் நாலுநாழிகை தியாச்சிய மென்று புலவர்சொல்லுவார்கள்; இதை வாசனைபொருந்திய அளபாரத்தை யுடையவளே நீ அறிவாயாக. எ-று.

நக்ஷத்திராதிவருமாறு.

இதுவுமது.

புகறருபூ ராடமுடன் பரணியுத்ரட் டாதி
பொருந்திருபா னுடனுன்காம் புனர்தமகந் தோணி
இகலுமங்கி தனக்காறைந்தாஞ்சோதி விசாக
மியன்மிருக சிரங்கேட்டை யிவைக்கீ ரேழாகுந்
தகையனுட மோணமவிட் டந்தனக்கீ ரைந்தாஞ்
சாற்றுகுரு நாள்பூரஞ் சித்திரை யுத்ராட
நகைதருநா லைந்தாகு நாலெட்டா யிலிய
நாலெந்தோ டிரண்டென்றே நாட்டிடு நவ்விற்கே. (க)

நவ்விவிழி யாய்சதைய முத்திரமீ ரொன்பா
னல்லபரி நாடனுக்கே நவிலுவதைம் பானே

திவ்வியமாம் ரோகணிக்கே நாற்பானு மென்ப
திருந்தியநல் லாதிரைக்கே செப்புபதி னென்றுங்
கவ்வுமிரு பத்தொன்று மாமென்ப மூலங்
கருதுமிரு பானுடனேம் பத்தாறும் பத்தோ
டொவ்வியவா றும்பூரட் டாதியிவற் றின்மே
லுறுகடிகை நான்குவிட மெனவுரைப்ப ருயர்ந்தோர். ()

(இ-ள்.) பூராடம் பரணி உத்திரட்டாதி உதித்த நாழிகை முதல் உச - நாழிகைக்குமேல்; புனர்பூசம், மகம், ரேவதி, கார்த்திகை, ௩௰ - க்குமேல்; சுவாதி, விசாகம், மிருகசிரம், கேட்டை, கச-க்கு மேல்; அனுஷம், திருவோணம், அவிட்டம், க௰-க்குமேல்; பூசம், பூரம், சித்திரை, உத்திராடம், உ௰-க்குமேல்; ஆயிலியம், ௩உ-க்கு மேல்; அஸ்தம், உஉ-க்குமேல்; பின்னும் சதையம், உத்திரம், கஅ-க்கு மேல்; அசுவனி, ௫௰ - க்குமேல்; ரோகணி, ச௰-க்குமேல்; திருவா திரை, கக, உக-க்குமேல்; மூலம், உ௰, ௫௬-க்குமேல்; பூரட்டாதி, ௬-க்குமேல்; நாலு நாழிகை தியாச்சியமென்பதாம். எ-று. (௧)

யோகாதிவருமாறு.

கலித்துறை.

கருதுவிட்கம்பமைங் கன்னின்மேலதி கண்டங்கண்டம்
விரவியவேழின் மிசைசூலமெட்டிற்கு மீதணங்கே
யுரவியல்வச்ரம் வியாகாதமொன்பதின் மேனலமாம்
பரிகமொடுவை த்ருதிவிதிபாதம் விடமுற்றுமே.

(இ-ள்.) விஷ்கம்பம் உதித்தநாழிகை ௫-க்குமேலும், அதிகண் டம் கண்டம் எ-க்குமேலும், சூலம் அ - க்குமேலும், வச்சிரம் வியா காதம் ௯-க்குமேலும் நன்மையாம்; பரிகம், வைதிருதி, விதிபாதம், இம்மூன்றும் முற்றிலுங் விஷமாம்; பெண்ணே நீ இதை எண்ணுவா யாக. எ - று. (௧)

கரணுதிவருமாறு.

புதுமொழி.

நேரிசை வெண்பா.

சரந்திர மாங்கரணந் தன்னில்விட்டி யாம்பத்
திரஞ்சகுனி யேசதுஷ் பாத—மருவிய
நாகவங்கி மத்துக்ன மிவ்வைந்து நாடுங்காற்
ரோகையுத வாவென்று சொல்.

(இ-ள்.) இருவகைப் பக்ஷத்திதி யொன்றிற்கு இரண்டுகரணங்கள் வருவனவற்றில் சரம் திரமென்றெண்ணிய கரணங்களில் விட்டியாகிய பத்திரமும் தொடர்பாய்ச் சதுர்த்தசி அமாவாசி, பிரதமை, இம் மூன்றில் வருகிற சகுனியும் சதுஷ்பாதமும் நாகவமும், கிமஸ்துக்கினமுமாகிய இவ்வைந்தும் ஆராயுமிடத்து ஆகாவாமென்று பெண்ணே நீ சொல்லுவாயாக. எ-று. (க)

இலக்கினுதிவருமாறு.

விருத்தம்.

மகள்விடை சிலேயிஞேடு மறிமுதற் சொல்லுங்கூறு
மிகலரி குடங்கோல்வீணை யிவையின்மத் திமமாங்கூறு
மகரமீ னண்டிஞேடு மன்னுதேள் கடையின்கூறுந்
திகழ்பணி கழுகுபன்றி தீதுறு விடமதாமே.

(இ-ள்.) கன்னி, ரிஷபம், தனுசு, மேஷம் உதித்த முதலில் ஹ-நாழிகை பாம்பு உண்ணும், சிங்கம், கும்பம், துலாம், மிதுனம், உதித்த நடுவில் ஹ-நாழிகை கழுகு உண்ணும், மகரம், மீனம், கடகம், விருச்சிகம் உதித்தமுடிவில் ஹ-நாழிகை பன்றி உண்ணும், நாழிகை தீதென்பதாம். எ-று. (உ)

அமிர்த கடிகை.

புதுமொழி:

வெண்பா.

வருடமதி தேதியொடு வாரந் திதியும்
பெருவுடுயோ கங்கரணம் போரா—விராசியுட
னின்னுமுள தீக்கடிகை யெண்ணியதன் மேலுற்ற
கன்னலமிர் தக்கடிகை காண்.

(இ-ள்.) வருஷம், மாதம், தேதி, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இராசிமுதலானவற்றோடு இன்னுமுள்ள தீயநாழிகைகளையு மெண்ணி (தள்ளவேண்டிய நாழிகையைத்தள்ளி) அதன் மேல் வரும் கடிகையை அமிர்தகடிகையென்று எழுதுவாயாக. எ - று. (க)

அறுபதுநாழிகையின்பலன்.

முதுமொழி.

விருத்தம்.

கோரமவுண் டேவரள கைக்குமன்றுற் கிரியை
கோடையின சனக்கோபங் கொடுவிடந்தீ கோதற்
றூர்தன்மய லாந்தகம்பி ரேதபுரி பாவ
மதிதேவங் கணநாத மெமனரவ மமிர்த
மேர்மிருது கோமளம் ப்ரபலம் வாசமீச
மியம்பிறைதி கம்பரம்வா னிறைகவிதை நாசம்
பாரதிப மலர்சனிசேய் ப்ரவர்த்தகந் தீக்கோரம்
பார்ப்பான்சேய் சுதமமிர்த பூரணம்பான் மதியே.

மதிமயக்கம் பாக்கியங்கே ளைசம்வெகு மானம்
வங்கிசக்கே டுற்பாத மறலியுரு மகிழ்மாய்

வதிதனமற் பகல்சுமுகந் தெட்சண குரூர
மாதண்ட மமலமதி சுபமல ததீதஞ்
சதியில்பயோ ததிசுழல்சந் த்ராங்கமறு பதற்காஞ்
சார்ந்திரவி யுதயமுதல் ஜனனவரை கன்னல்
விதியில்வருந் தொகையெதுவோ வதற்குநிகழ் பலனே
விளம்பிடுவை களங்கமற விடிந்தகடிப் பலனே.

(இ-ள்.) க-வது கோரம், உ-வது இராக்கதம், ங-வது தேவம், ச-வது குபேரம், ரு-வது இராக்கதயோகம், சு-வது கின்னரம், எ-வது இஷ்டகுலகோபம், அ-வது விஷம், கூ-வது அக்கினி, க0-வது அகளங்கம், கக-வது மாயாந்தகம், கஉ-வது பிரேதபுரிபாவம், கங-வது அதிதேவம், கச-வது கணேசம், கரு-வது காலன், கசு-வது சர்ப்பம், கஎ-வது அமிர்தம், கஅ-வது அபிராமம், ககூ-வது மிருது, உ0-வது கோமளம், உக-வது பிரபலம், உஉ-வது சுவாசம், உங-வது ஈசம், உச-வது வாகீசம், உரு-வது திகம்பரம், உசு-வது தேவேந்திரம், உஎ-வது கவிதை, உஅ-வது நாசம், உகூ-வது பூபதி, ங0-வது கமலம், ஙக-வது சனிசுதம், ஙஉ-வது பிரவர்த்தகம், ஙங-வது அக்கினிகோரம், ஙச-வது எமகண்டம், ஙரு-வது சுதம், ஙசு-வது அமிர்தபூரணம், ஙஎ-வது சந்திரம், பின்னும் ஙஅ-வது மதிமயக்கம், ஙகூ-வது சௌபாக்கியம், ச0-வது குலநாசம், சக-வது உபசாரம், சஉ-வது வங்கிசநாசம், சங-வது உத்பாதம், சச-வது காலரூபம், சரு-வது சந்தோஷம், சசு-வது மிருதம், சஎ-வது சுசீதனம், சஅ-வது திமிரம், சகூ-வது திவா, ரு0-வது சந்திரமுகம், ருக-வது பிரதெக்ஷணம், ருஉ-வது காலாக்கினி, ருங-வது தண்டம், ருச-வது நிருமலம், ருரு-வது சுபம், ருசு- அசுபம், ருஎ-வது அதிதம், ருஅ-வது பயோததி, ருகூ-வது சுழல், சு0-வது சந்திரதேகம், ஆகையால் சூரிய உதயமுதல் ஜனன காலவரையில் எண்ணிவருந் தொகைக்குள்ள பலனை விளம்புவாய். எ-று. (க)

கா ல ப ல ன்.

முதுமொழி.

விருத்தம்.

அஞ்சலென வர்தரித்த லதிகஜெனத் துறவெற்
  கற்கெனில ஞசார மற்பசுத ரமைந்து
மிஞ்சுமிருள் பருகிரவி வருமுதய மாகில்
  வெகுமானந் தனம்பாக்யம் வெகுஜெனமித் திரமாம்
விஞ்சுறவு மொழிச்செலவோ டிறைபரிசில் ருணமில்
  வெகுதனமத் யான்மெனி லபரமிதிற் சமமா
மெஞ்சுமத்த மனமவமா னங்குறையற் பாயு
  வெனக்கால பலனையறி யிடுகிடைய மாதே.

(இ-ள்.) பகற்காலமாகில் வெகுஜெனரட்சகன், வெகுஜென மித்திரன் ஆம்; நிசிகாலமாகில் அஞசாரம், அற்பபுத்திரர், அடக்கம் ஆம்; உதயகாலமாகில் வெகுமானம், தனம், பாக்கியம், வெகுஜென மித்திரம் ஆம்; மத்தியானகாலமாகில் வெகுஜெனமித்திரம், வெகு ஜெனங் கௌரவசனம், இராஜவெகுமானம், இருணமின்மை, வெகு தனம் ஆம்; அபரான்னமாகில் சமபாக்கியம் ஆம்; அத்தமன சந்தி யாகில் அவமானம், தரித்திரம், அற்பாயு ஆம் என்று ஒடுங்கிய இடையையுடைய பெண்ணே நீ காலபலனை அறிவாயாக. எ-று.

வே ளை ப ல ன்.

மு து மொ ழி.

விருத்தம்.

சா த் வீ க ம்.

பரவுசாத் திகவேளைக்குப் பளிங்கொளி நிறமுமுள்ளான்
விரவுநல் லறிவுபுத்தி விதரண ஞானமுள்ளான்
குரவர்மேற் பத்தியுள்ளான் கொடுமைசேர் துன்பமில்லான்
வரவுறு மின்பமெல்லாம் வருமவன் றனக்குமாதே.

(இ-ள்.) பிரகாசம் பொருந்திய தேசசும், நல்ல அறிவும், புத்தி யும், விதரணஞானமும், குருபத்தியும், கொடுமைசேரும் படிக்கான

பொல்லாங்கை நீக்கலும் அடையவேண்டிய சுகத்தையடைதலும, உளவாம் சாத்விகவேளையில் பிறந்தவனுக்கு. எ-று.

இராஜசம்.

அன்பிரா சதவேளைக்கே சனித்தவ னறிவுமுள்ளான்
இன்பத்தி லாசைபற்று மியலுநல் லுரைகற்பாளன்
பொன்புவி கலைகளிந்தப் புவிக்குப காரமுள்ளான்
துன்பமற் றரசாய்நீதி செலுத்துவான் சுகமுமுள்ளான்.

(இ-ள்.) அன்பும், நல்லறிவும், இன்பத்தில் விருப்பமிகுதியும், இயற்கையிலே நல்வசனத்தோடு கல்வியும், சொர்னதானம், பூதானம், வஸ்திரதானம் செய்யும் லோகோபகாரமும், ஒருவருக்குத் தீமை யில்லாமல் நடுநிலையாய் அதிகாரம் செலுத்தலும், சுகமும், உளவாம், இராஜசவேளையில் பிறந்தவனுக்கு. எ-று.

தாமசம்.

வலியதா மதவேளைக்குள் வந்துசன் மித்தோன்செய்கை
பொலியநித்திரையெப்போதும் புரிந்துளான்பொய்யேசொ
லலியவே மயக்கஞ்சோம்பு நன்ணிடு மந்தனுவான் [ல்வன்
பலகலை யறிவுமில்லான் பாவசிந் தையனேயாவன்.

(இ-ள்.) நித்திரையிலெப்போதும் விருப்பமும், பொய்யே பேசுதலும், நிதானமில்லாமையும், சோம்பலுள்ளமனமும், கல்வி யறிவில்லாமையும், பாபத்தைச்செய்யும்படியான மனசும், உளவாம் தாமதவேளையில் பிறந்தவனுக்கு. எ-று.

வேளைக்குள் வேளைபலன்.

இருந்துசாத் விகந்தன்னிற் சாத்விகந் துறவுசாந்தி
வருந்திடா வகையுற்சாகி மற்றதில் ராசதந்தான்
திருந்திய தானசிந்தை சிறந்திடுஞ் சாந்தமுள்ளான்
பொருந்திய தாமதந்தான் போதவே மந்தனுவான்.

(இ-ள்.) சாத்விகத்தில் சாத்விகமாகில் துறவியாதலும், சாந்தகுணமும், வருத்தப்படாமையு மனோத்சாகமும் உளவாம்; சாத்

வீகத்தில் இராசசமாகில் தானஞ்செய்வதில் மனமும் பெருமை பொருந்திய சாந்தமும் உளவாம்; சாத்வீகத்தில் தாமதமாகில் அதிக மந்தபுத்தி உளதாம். எ-று.

தக்கரா சதத்தில்ராச தம்பெறிற் றருமராகம்
ஒக்கவே யதனிற்றும தம்பெறி லிகழ்ச்சியுள்ளான்
திக்கெனப் பாவஞ் செய்யுஞ் சிந்தைய னுவன்கண்டீர்
மிக்கசாத் வீகமாயின் மெய்ஞ்ஞானி யிரக்கவானும்.

(இ-ள்.) இராஜசத்தில் இராஜசமாகில் தருமஞ்செய்வதில் விருப்பம் உளதாம்; இராஜசத்தில் தாமதமாகில் அவமானமும், ஒருவர் மனம் திடுக்கென்னும்படியான பாவத்தைச்செய்யு மனதும் உளவாம்; இராஜசத்தில் சாத்வீகமாகில் மெய்ம்மைபொருந்திய ஞானமும், காருண்ணியமும் உளவாம். எ-று.

ஈறுதா மதத்திற்றும தம்பய மிகழ்ச்சிபாவம்
கூறுநித் திரைமயக்கங் குறித்ததி லாசையுள்ளான்
வேறிரா சதங்களிப்பு வெகுளியுண் ணுததுண்டல்
சீறிலாச் சாத்துவீகஞ் செல்விபோய் வருத்தஞ்செய்யும்.

(இ-ள்.) தாமதத்தில் தாமதமாகில் அச்சமும், அவமானமும், பாபமும், நித்திரையும், தியக்கமும், நினைத்தநினைப்பில் பிரியமும் உளவாம்; தாமதத்தில் ராசசமாகில், களித்தலும், கோபித்தலும், தின்னப்படாததைத் தின்றலும் உளவாம்; தாமதத்தில் சாத்விகமாகில், சீதேவிபோய் மூதேவிவாசம் உளதாம். எ-று.

இலக்கினபலன்.

முதுமொழி.

விருத்தம்.

மேடம்.

நாடியமேட லக்கினபலன்றுன் ராசபூ சிதன்றிர புத்தி-
கைசெய்வ னடிமை யுளனுயரந்த நலிந்தமெய் தனமுளன்

சமர்த்தன்,—நீடியதரும சாத்திரங்கேட்ப னீள்கழுத்தோ
னெறிவசன - னிறைந்திடுகோபி யிளைத்திடு முழந்தா ணேர்
படு மிருகத்தை வதைப்பன்,—பாடியவைந்திற் றீப்பயமே
ழிற் பத்தினிற் சுரமிரு பதிலோர் - பாவலன்வாக்கா னே
யுளதிரண்டு பத்திரண்டினிற்பயம் பாம்பால்,—தேடியை
யைந்திற் சலத்திறற்கண்டஞ் செறிந்தநாலேழினிற் பிள
வை - சென்மலக் கினத்தைச் சுபக்கிரகங்க டெரிசிக்க வய
துநாறுண்டே.

(இ-ள்.) இயாவரும் நாடத்தகுதியான மேடலக்கினத்தில் பிறந்தவனுக்கு இராஜர்மெச்சுதலும், சபலிக்காத புத்தியும், நகை நாணயங்களை விருத்திசெய்தலும், ஆளடிமைகளைப் பெறலும், மிகுந்த அழகும், இளைத்தசரீரமும், திரவியமும், சாமர்த்தியமும், சார்வதாய் தர்மசாஸ்திரங் கேட்டலும், நீண்டகழுத்தும், சொல்வண்மையும், முன்கோபமும், சிறுமுழங்காலும், கண்டமிருகங்களைக் கொல்லலும், ஐந்தாவது பிராயத்தில் அக்கினிபயமும், ஏழாவது பத்தாவது பிராயத்தில் சுரபீடிதமும், இருபதாவது பிராயத்தில் கவிராயனது வாக்கினல் வியாதியும், இருபத்திரண்டாவது பிராயத்தில் சர்ப்பபயமும், இருபத்தைந்தாவது பிராயத்தில் ஜலகண்டமும், இருபத்தெட்டாவது பிராயத்தில் பிளவைப்புண்ணும் உளவாம்; இது ஜென்மலக்கினமாக இருந்து, சுபக்கிரகங்கள் பார்வையுண்டாகில் வயது - ௱ - வரையிலிருப்பான். எ-று.

கலிவிருத்தம்.

மார்கழி பூரணை மன்னிய வியாழம்
ஏர்பெறு ரோகணி யிரவொரு பத்தாம்
சீர்பெறு கடிகையிற் சேர்தலே நோயால்
நேர்பெறப் புகல்வர் நிரியாண மென்றே.

(இ-ள்.) தனுர்மாதப் பூரணைத்திதியில் வியாழக்கிழமையும், ரோகணியும், கூடிய இராத்திரி ௧0 - நாழிகையில், சிரரோகயால்

நிரியாணமென்று சோதிடப்பகுப்பை யறிந்தவர்கள் சொல்லுவர் களாம். எ - று.

ரு ஷ ப ம்.

ஆண்டிடமிடப லக்கினம்பரமர்க் கன்புறு பூசைசத்தி யவான் - அற்பபோ சனவான் றூலதேகத்த னடிமையா ளன்புளிப் பிரியன்,—வேண்டிய கணிதன் வஸ்திராபர ணன் மெல்லிய செவியினன்புத்தி - விரும்பியகுழவி போல் விளையாடி வெற்றியாய்ப் பிறர்பொருள் கொள்வன்,—தாண் டிடமிரும லுளன்பெறு மைந்தர் சொல்விருப் பன்வயதை ந்தில் - சுரபயங் கழுத்திற் பிணிபதினுறிற் றுலங்குபத்தொ ன்பதி லிருமல்,—தாண்டியவிருப துடனிருபத்தேழ் தன் னிலே சுரஞ்சுபக்கிரகம் - தானுமேபார்க்க வயதெழுபத் தேழ் தரையினில் வாழ்ந்திருப்பானே.

(இ-ள்.) ஆண்டுகொள்ளும்படியான இடபலக்கினத்தில் பிறந்த வனுக்கு பரமசிவனைப் பக்திவிசுவாசமாய்ப் பூஜைசெய்தலும், வாக்கு நிலைமையும், மிதபோஜனமும், பருத்ததேகமும், ஆளடிமையுண்டா தலும், புளிப்புவத்துவைப்புசித்தலில் ஆசையும், வேண்டியமட்டும் கணிதசாஸ்திரத்தை விசாரித்திருக்கலும், வஸ்திரம், ஆபரணம், அணிதலும், மெதுவானகாதும், புத்தியறியாக்குழந்தையைப்போல் வேடிக்கைவிநோதமாய்ப் பராக்குக்காட்டிப் பராளுடையசொத்தை லகுவாய்க் கிரகித்தலும், தரிக்கவொட்டாத இருமலும், பெற்றபிள்ளை களுடைய மழலைச் சொல்லைக்கேட்பதில் விருப்பமும், ரு - வது வய தில் சுரபயமும், கரு-வது வயதில் கண்டத்தில் வியாதியும், ககூ-வது வயதில் க்ஷயமும், உ0-வது உஎ-வது வயதில் காய்ச்சல் காணலும் உளவாம் ; இந்தலக்கினத்தைச் சௌமியக்கிரகங்கள் வீக்ஷிக்கில் வயது எஎ - வரையில் வாழ்ந்திருப்பான். எ-று.

ஆவணி முற்பக் கத்திரை யோதசி
மேவுநல் லுத்தி ராடமுந் திங்கள்

தாவறு சாயங் காலவே ளையினில்
ஓவறு சுரத்தா னிரியாண முறுமே.

(இ-ள்.) ஆவணிமாதம் பூர்வபக்ஷம், திரையோதசியில் உத்தி ராடமும், திங்கட்கிழமையும், கூடியமாலைப்பொழுதில், சுரபீடிதத் தால் நிரியாணமாம். எ-று.

மிதுனம்.

இனியதோர் மிதுன பலன்புக ழுடையோ னிலச்சையு முளன்வெகுகபடி - இயலுமாசார பரனிருசொல்ல னியற் றுவன் விரதநல் வசனன்,—புனிதமாய்த் தனது காரியம் பார்ப்பன் போந்திடு பித்தரோ கியுமாம் - பொருந்தியசாம வண்ணமெய்யாளன் புகலுமூன் றினிலப மிருத்தாம்,— நனியுமோரைந்தி லக்கினிபயமா நாலிரண்டாயுதபீடை - நண்ணியபத்திற் சத்துருபயமா நாடுமீரொன்பதில் வா தம்,—தனிமையா மிருபத் தெட்டினிற்கண்ணோய் தருஞ் சுபக் கிரகமே பார்க்கில் - தக்கதோர்வருஷ மறுபதுமைந் துந் தரையினி லிருப்பனென் றுரைப்பாய்.

(இ-ள்.) இன்பம் பொருந்திய மிதுனலக்கினத்தில் பிறந்த வனுக்கு கீர்த்தியும், வெட்கமும் மிகுந்த கபடமும், ஆசாரநேமமும், இரண்டுவிதச்சொல்லும், நோன்பும்; குளிர்ந்தவசனமும், சுத்த மாய்த்தன்னுடைய சொந்தகாரியத்தைமாத்திரம் பார்த்தலும், பித் தாதிகமும், கருமை அல்லது பச்சைநிறமும், ௩-வது பிராயத்தில் அக்நீதச்சாவும், ரு-வது பிராயத்தில் நெருப்புப்பயமும், அ-வது பிராயத்தில் ஆயுதத்தினால் தீங்கும், ௧0-வது பிராயத்தில் பகை யாளியால் சங்கடமும், ௧அ-வது பிராயத்தில் அண்டவாதமும், உஅ-வது பிராயத்தில் நேத்திரவியாதியும் உளவாம்; இந்த லக்கி னத்தைச் சுபக்கோள்நோக்கில், ௬ரு-பிராயம் வரையில் பூமியில் வாழ்ந்திருப்பான். எ-று.

சிங்க மதிமுற் பக்கச் சதுர்த்தசி
பொங்கு வெள்ளி புணரு மோணத்தில்
மங்குல்பன் னொன்கின் மார்புநோ யாலே
தங்குநிரியா ணம்மெனச் சாற்றே.

(இ-ள்.) சிங்கமாதம், வளர்பிறை சதுர்த்தசியில், வெள்ளிக் கிழமையும், திருவோணநட்சத்திரமும், கூடிய இராத்திரி கச-நாழிகையளவில் மார்படைப்பினால் நிரியாணமாம். எ-று.

கடகம்.

உரைசெறிகடக லக்கினபலன்க ளுடன்மிகச் சிவப்புளன் சமர்த்தன் - உரமொடுநடப்பன் வேசையர்கமன னுயர்நவ தானியஞ் றனவான்,—குருவிசுவாசன் பிதாவினுக்கிசையான் குறிமறு கண்டிடா விடத்தில் - கூறுவர்சிலநாடரித்திரன்வயது குலவியவைந்திலீ ரெட்டில்,—இருபதிருபத் தைந்திலிந் நாளி லெய்திடு மவமிருத்துவமே - இனியகோள்சன்ம லக்கினம்பார்க்கி லிருந்துதொண் ணூறுமட் டுலகில்,—பரவியமாசி சுக்கிலபக்ஷப் பஞ்சமி புந்திவாரத்தில் - பண்பொடுமிருக சிரவுடுவதனிற் பரன்பத மடைந்திடுவானே.

(இ-ள்.) சொல்லுதற்குச் சமீபமாகிய கடகலக்கினத்தில் பிறந்தவனுக்கு, சரீரம் மிகுந்தசிவப்பும், கெட்டித்தனமும், உதட்டியாய் நடப்பதும், வேசிகளுடைய விகிதமும், தனதானியபுஷ்டியும், குருபத்தியும், பிதாவுக்கடங்காமையும், கீர்த்தியும், ஆண்குறி பெண்குறியில், அல்லது காணாவிடத்தில், மறுவும், சிலகாலந் தாரித்திரமும், ரு-கசு-உ0-உரு-ஆகிய இந்தவயதில் அகாலமரணமும், உளவாம்; இந்த லக்கினத்தை நன்மையானகிரகம் பார்க்கில், கூ0-வயதுவரையிலிருந்து மாசிமீ வளர்பிறையில் பஞ்சமியும், புதவாரமுங்கூடிய மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சிவபதமடைவான், எ-று.

சிங்கம்.

அடைவொடுசிங்க லக்கினபலன்க ளமுதுசா லவும் புசித்திடுவன் - அருச்சனைபுரிவன் றருமசிந் தையினு னனு தினம் பெரும்பசியாளன்,—திடமுறும்புத்தி மான்பிணி வந்து தீர்ந்திடு முடன்றொழிற் பிரியன்-செப்புமோரைந்து பத்திருபத்தேழ் செறிவயதிற்சுரம் வந்து, — புடமருந்த ருந்தி முப்பது நாளும் போனபின் றிரும்லக்கினத்தைப் - புருகுகோன்காணி லெண்பதுவயதும் பூமியி லிருந்துபங் குனியில்,—வடிவறுமபர பக்கபாட்டிமையின் மன்னுமத் தத்திற்சன்பகலில்-மதிநதிமுடிந்த சடையர்பொற்பதத்தில் வாழ்வனென் றுரைப்பர்மா தவரே

(இ-ள்.) கிரமமாகிய சிங்கலக்கினத்தில் பிறந்தவனுக்கு வெகு வுணவு புசித்தலும், சிவார்ச்சனைசெய்தலும், தருமகுணமும், பிரதி தினம் பெருகியபசியும், திரண்டபுத்தியும், வியாதிவந்தா லுடனே தீருதலும், வேலைசெய்ய விருப்பமும், ரு - ௨௰ - ௨எ - இந்தவயது களில் சுரம்நேரிட்டு முப்பது நாள்வரையில் அவுஷதமருந்தி, அதன் பேரில் வியாதி நிவர்த்தியும் உளவாம்; இந்தலக்கினத்தைச் சுபக்கிர கங்கள் பார்வைசெய்யுமாகில், அ௰ - வயது வரையில் உலகத்தின் கண்ணிருந்து, பங்குனிமீ அழகற்றதேய்பிறையில் பாட்டிமைத்திதி பொருந்திய அஸ்தநட்சத்திரம் கூடிய சனிவாரம் பகலில் சந்திரனை யும், கங்கையையும் தரித்திருக்கின்ற சடாமகுடத்தையுடைய சிவ னுடைய பொற்பாதகமலத்தில் வாழ்வடைந்திருப்பான். எ-று.

கன்னி.

மாதெனுங்கன்னி லக்கின பலன்கண் மகிழ்தரு மன்ற ரித்திரவான்-மாசிலாசார முளன்பலகரும வகையறிந் திடு வன்பின் வயதில், — மீதெனுந்தனிங்க டேடுவனேர்தின் மேவிய வக்கினி பயமாம்-விளங்கியபத்திற் சுரம்பதினெட் டின் மேவிமேம்மைநோ யென்ப,—மேதகு நல்லோர் காணி லெல்வயதோ லியைந்திடு மேழுபத் தேழாம் - மேன்மை

•வைகாசி குறைபக்கம்பன்னுன் கெனும்திதி யிசைந்தசித்தி ரையில்,—கோதுறுகுன்ம வியாதிவாதையினுற் குறிநிரியா ணமேயாகும் - குலவுசர்க்கரைகறு கண்டுதேன்பால்போல் கூறுசொற் கோவ்வைவாய் கொடியே

(இ-ள்.) ஸ்திரீ என்று சொல்லப்பட்ட கன்னியாலக்கினத்திற் பிறந்தவனுக்கு தருமஞ் செய்தலும், தரித்திரமும், குற்றமற்ற ஆசாரமும், அனேக காரியங்களைத் தெரிதலும், பின்னிட்ட வய தில் அதிக தனத்தைச் சம்பாதித்தலும், வயது ரு - ல் நோய மும், கO - ல் சுரபீடிதமும், கஅ - ல் வைசூரியும், மேனமை பொருந்திய சுபக்கிரகம் பார்வையுண்டாகில், ஆயு எஎ - கருக் குறைவில்லாமையும், மேலான வைகாசி மாதம் அபரபக்ஷம சதுர்த்தசி சித்திரை நட்சத்திரத்தில் குற்றமுள்ள குன்மரோகயி னல் மரணமாம். நல்ல சருக்கரையும், கற்கண்டும், தேனும், பாலும் கலந்ததுபோல் சொல்லும். கோவைப்பழமன்ன வாயினை யுடைய ஸ்திரீயே. எ-று.

துலாம்.

கொடியனுங்காரிக் குச்சமாந்துலாத்தோன் குறித்திடு மனேவியிருவர் - குமரர்கடிரண்ட குலனபிமானி கூறுசம் பத்துளன் றனவான்,—படியில்வாழ்மன்னர்க் கினியனுஞ் சுகவான் பரிமளகந்தபூப்பிரியன் - பற்றுளதமரோன் றரும் சிந்தையினுன் பரவுமேழாண்டினேய் தீயால்,—கடியவீரா றுண்டதனில்வைசூரி காணுபத்தொன்பதிற் பகையாங் - கண்டதோரிருபத் தெட்டில்வேல்புனலாற் கண்டநாற் பத் திரண் டினியர்,—நெடியபார்வையினு லெண்பதோடைந்து நின்றுதேள் குறைத்திதியாறில் - நிறைகதிர்வாரம் விருத்தி யோகத்தி னீளுதயத்தி னீங்குவனே.

(இ-ள்.) க்ரூர கிரகமாகிய சனிக்கு உச்சத்தானமாகிய துலா லக்கினத்தில் பிறந்தவனுக்கு சொல்லத்தகுந்த பெண் சாதிகள் இரண்

டும், குழந்தைக் கூட்டமுள்ள குலமும், அபிமானமும், சொல்லத் தகுதியான அயிஸ்வரியமும், திரவியமும், பூமியில் வாழும் அரசர் களிடத்தில் சிநேகமும், நல்ல சுகமும், பரிமளமிகுந்த மலர்களை யணிதலும், நத்திய உறவினர்களும், தருமகுணமும், எ-ம் வருடத்தில் அக்கினிபயமும், உடனே கஉ-ம்வருடத்தில் ஸ்போடகமும், ககூ-ம்வருடத் தில் சத்துரு பகையும், உஅ-ம் வருஷத்தில் ஆயுதபயமும், சஉ-ம் வருஷத்தில் ஜலகண்டமும், இந்த லக்கினத்தை சௌமியகிரகம் பார்க்கில் அ௲ - வருடம் வரையி லிருந்து கார்த்திகைமீ கிருஷ்ண பக்ஷ சஷ்டியில் ஆதிவாரம் விருத்திநாமயோகத்தில் சூரியோதய காலத்தில் இறப்பாம். எ-று.

விருச்சிகம்.

நீங்கருந்தேளாம் லக்கினபலன்க ணேசனுந் தந்தை தாயிடத்தில - நித்தமாய்மனைவி யிடத்தினிற்பிரிய னிரந் தரமினியசொற் பகர்வன்,—பாங்குடன்றெடுத்த காரிய முடிப்பன் பரவுநாலாண்டினிற் கழுத்தில் - பயிலுநோ யைந்திற் சுரங்களீரைந்திற் பன்னிரண்டிற் பதினெட்டில்,- ஓங்குமக்கினியாற் பயமதாநாற்பா னுறுசன்னி வாதமுஞ் சுரமும் - உத்தமர்ஜென்ம லக்கினங்காணி னொருபதுகுறை நூறுண்டாம்,—தீங்கறுமாசி சுக்கிலபக்ஷ துவாதசியுஞ் சனிக்கிழமை - திகழ்விசாகத்தி லந்திவேளையினிற் றிண் ணமாய்வருநிரியாணம்.

(இ-ள்.) நீக்கமில்லாத விருச்சிக லக்கினத்தில் பிறந்தவனுக்கு பிதா மாதாவினிடத்திலிஷ்டமும், சார்வதாய் தாரத்தினிடத்திற் பிரியமும், எப்பொழுதும் நல்ல வார்த்தையைச் சொல்லுதலும், கிரமமாக எண்ணிய கருமத்தை முடிவு செய்தலும், ச-ம் வயதில் கண்ட தோஷமும், ரு-ம் வயதில் பலசுரமும், க0 - கஉ - கஅ - ம் வயதில் நெருப்பினு லபாயமும், ச0-ம் வயதில் சன்னிபாதசுரமும், இந்த லக்கினத்தை உத்தமகிரகம் நோக்கில் பத்து குறைய நூறு

வயதும். குற்றமில்லாத ஆனிமாசம் வளர்பிறைத் துவாதசி சனி வாரம் பிரகாசம் பொருந்திய விசாக நக்ஷத்திரம் கூடிய சாயுங் காலத்தில் உண்மையாய் சாதலுமாம். ஏ-று.

வேறு

தனுசு.

ஆணியெனுந் தனுசுலக்கின பலன்மூத்தானுக்
கண்ணுமிளையோர்க்கஞ்சுவான்வண்மைபுகழோன்
பேணியநற்போகவான்சத்துருவையறிவன்
பெரியவித்தையிளவயதிற்பெற்றிடுவனிதியம்
நாணியலேச்சற்படுவனடுவயதிலேதான்
நான்மூன்றிற்பதினைந்திருலெட்டிறுற்பான்
காணுநேத்திரரோகஞ்சுபரெழுபத்தேழாம்
கருதுநிரியாணந்தேட்கானபடிகண்டாய்.

(இ-ள்.) பொன்னுரையாணிபோன்ற தனுசு லக்கினத்தில் பிறந்தவனுக்கு பெரியவர்களாக இருக்கின்றவர்களுக்கு மரியாதையில் அச்சப்படுகிறதுபோல சிறியவர்களுக்கும் அச்சப்படுதலும், நன்மை பொருந்திய கீர்த்தியும், பொருத்தமான நல்லபோகமும், சத்துருக்களைக் கண்டுபிடித்தலும், மேலான கல்வியை இளமையிற்றுனே கற்றுகொள்ளலும், கிரிச்சலும், நடுப்பிராயத்தில் திரவியப் போக்கினுல் அலைச்சல்படலும், ௧௨-ல் ௧௫-ல் ௩௨-ல் ௪0-ல் கண்ணோயும், இந்த லக்கினத்தைச் சுபக்கோள் தரிசித்தால் ௭௭-ம் ஆண்டில் நிரியாணம். விருச்சிக லக்கினத்திற்குச் சொல்லியபடி பார்த்துக்கொள்ளவும். ஏ-று.

மகரம்.

கண்டசுறுலக்கினங்காணுவிடத்தின்மறுவாம்
கண்கணீண்டிருண்டிருக்குங்கமழ்புஷ்பப்பிரியன்
மண்டுதிரபுத்தியபிமானிசுகதேகி
வருஞ்சிவந்தமெய்யுடையன்மனையாளுக்கினியன்

மீண்டுபக்ஷிகொன்றிடுவன்மேவுமொருபத்தில்
விளம்புசுரநாலெட்டுவிதேசமுப்பத்தேழில்
உண்டுசேர்ப்பயமுஞ்சுபக்கோணேக்கவறுபத்தேழ்
உயர்பாரில்வதிந்திடுவனெனவுரைசெய்வரே.

(இ-ள்.) மகரலக்கினத்தில் பிறந்தவனுக்கு தெரியாவிடத்தில் மச்சமும், நேத்திரம்—நீட்சியாகவும், உருட்சியாகவு மிருக்கும் வாசனை புஷ்பத்தி னிடத்தில் விருப்பமும், மிகுந்த புத்திரமும், மானமும், சொகுசானதேகமும், சிவப்பானநிறமும் பெண்சாதியி னிடத்தில் பிரியமும், பறவைகளைக் கொல்லுகையும், ௪0 ல் காச்ச லும், ௬௨ - ல் யாத்திரையும், ௩௭ - ல் பாம்புபயமும், இந்த லக்கி னத்தை, சுபக்கிரகம் பார்த்தால் ௬௭ - வயது வரையில் உலகத்திலே உயிரோடிருப்பனெனச் சொல்லுவர்களாம். எ-று.

வெண்செந்துறை.

பூசமா தங்குறை புகலும் பஞ்சமி
ஆசி லுத்திரட் டாதி யருக்கனுள்
வீசு காலையின் மென்கொன்றை சூடிய
தேசிக னன்னடி சேர்வது திண்ணமே.

(இ-ள்.) மகரமதியில் அபரபக்ஷ பஞ்சமி, குறைவற்ற உத்தி ரட்டாதி, ஆதிவாரம் உதயத்தில் கொன்றைமாலையை யணிந்த பரமசிவனுடைய திருவடிசேர்வது உண்மையாம். எ-று.

கும்பம்.

பரிந்தகும்பலக்கினத்தான்றன்னையேபுகழ்வன்
பழிப்பன்மற்றோர்தம்மைக்குள்ளன்னறபவித்தை
தெரிந்தபித்தசாரீரன்செய்ந்நன்றிமறப்பன்
செங்கண்ணன்சுகமுள்ளன்ஸ்திரீகளுக்குநண்பன்
பொருந்துபதினோராண்டிற்சுரமாம்பீத்தொன்பான்
புரிந்தசன்னிவாதசுரம்புண்ணியர்பார்த்திடினே
இருந்துவயதெண்பதுசித்திரையைந்தாந்திதியில்
திகழ்செங்கைபொன்வாரத்தந்தியிலந்தியமே.

(இ-ள்.) முயலும்படிக்கான கும்பலக்கினத்தில் பிறந்தவனுக்கு, தன்பெருமையைத் தானே புகழ்தலும், மற்றப்பேர்களை இகழ்தலும், குள்ளமும், அற்பமான கல்வியும், பைத்தியசரீரமும், ஒருவர்செய்த உபகாரத்தை உடனே மறத்தலும், சிவந்தகண்ணும், சௌக்கியமும், ஸ்ரீ கணேசமும், ௧௧ - ல் சுரம் ௧௬ - ல் மிகுந்த சன்னிபாதசுரமும், இந்த லக்கினத்தை நல்லவர்கள் பார்த்தால் திருத்தமாய் ௮௰ - வய திருந்து சித்திரைமாதம் பஞ்சமி திதியில் திருவாதிரை நக்ஷத்திரத் தில் வியாழக்கிழமை அர்த்தகாலத்தில் நிரியாணமாம். எ-று.

மீனம்.

அந்தமுறுமீனலக்கினந்தனைவான்சூரன்
அழகியமெய்யன்ஞானியகோரவிருதாரன்
கந்தமலர்ப்பிரியன்றண்கண்கிருபையாளன்
காதுநோய்பிறருடைமைக்காசிப்பன்கண்டே
முந்துசமயத்தன்பல்லூணருந்துமூர்க்கன்
முந்நான்கிலிருபதினின்மூளுமிகச்சுரந்தான்
நொந்திருமலெழுநான்கிற்சுபக்கோணெக்கிடினே
நூறுண்டுநிரியாணநுவல்கும்பத்தடைவே.

(இ-ள்.) கடைசியாகிய மீனலக்கினத்தில் பிறந்தவனுக்கு திரவி யமும், சௌரியமும், சௌந்திரியரூபமும், ஞானமும், அகோர முள்ள இரண்டுகளத்திரமும் பரிமள மிகுந்த புஷ்பத்தினிடத்தி லிஷ்டமும், குளிர்ச்சிபொருந்திய கண்ணும், தயையும், கர்னரோக மும், அன்னியாள் பொருளை யபகரித்தலும், எதற்கும்முன் ஜாக் கிரதைப்படுதலும், கண்டதெல்லாம் தின்னும்படிக்கான மௌட்டிய மும், ௧௨ - ல் ௨௰ - ல் சுரமும், ௨௮ - ல் இருமல் வியாதியும், இந்த லக்கினத்தை மேலான கிரகம் பார்க்குமேயானால், ௱ - ம் வயதில் நிரியாணம் கும்பத்திற்கு ஒத்தபடி சொல்லுக. எ-று.

வேறு.

புதுமொழி.

கலித்துறை.

இராசிசமயம்.

சீராங் கமனசிந் தைவிசனஞ்சுகஞ் ஸ்நானஞ்செயல்
நேரோங்கு தானந் தவமுடிசூட்டலூ நீளுணவு
போரோங் கியகுரோ தம்பினிராஜ்ஜியம் பொங்குசுத்தி
பாரீங் கிவைபன் னிருசமயந்தகர் பான்முதலே.

(இ - ள்.) க - வது சிறப்புபொருந்திய யாத்திரை, உ - வது துக்கம், ங - வது சவுக்கியம், ச - வது ஸ்நானம், ரு - வது தானம், கூ - வது தபம், எ - வது கிரீடாதாரணம், அ - வது போஜனம், கூ - வது குரோதம், கo - வது ராஜ்ஜியபாரம், கக - வது சந்தோஷம், கஉ - வது தேகசுத்தி, ஆக பன்னிரண்டும் மேஷாதிமீனாந் தம் பார்த்துகொள்ளவும் எ-று.

வேறு.

புதுமொழி.

ஆசிரியசந்தவிருத்தம்.

இராசிபாதசமயம்.

சீரடைகாய்தர்ப் பணமாலஸ்யஞ் சிவதுதிபெண்கூட்டம்
சிலவுற்சாகம் பலபலதுக்கந் தேகங்காயமுறல்
தேர்வுபாசனஞ் சந்தோஷம்மாத் யானிகம்புத்திரர்சீர்
தெளிவின்னித்திரை போஜனுபாசஞ் சயனம்பற்சுத்தி
நீரில்ஸ்நானம் அனுஷ்டானஞ்சத் துருபயநேருணவு
நிகழ்துக்கஞ்ஜெய மிகுபோகம்மரு ணீண்டவிலாசம்பின்
கோரியஜெபமுத் தம்வைபோகங் குலாசமாமோகம் [வே.
கொள்துயரம்மிலேமூர்ச்சைமுத்தணிகோசபைதெரிதிரு

திருமுடிவாங்கன் முடிசூட்டல்வஸ் திரந்தானே தரித்தல்
தெய்வச்சபைகாண்வந்திடவிந்திரன்றெரிசனவார்க்வாதந்

திரிவிக்கிரமம் வீண்பிரசங்கம் தேவிப்பிரசாதம்
செஞ்சந்தோஷம் வேதியரீட்டம் தெருளுமுற்சாகம்
கரிமுகில்கூந்தல் தெரிவையேயிங்கு கணிக்கவாறெட்டாம்
காணத்தகர்முன் மீனம்பகர்பின் காலொருநாலோரைநம்
உரியதுவென்றே தெரிவையேஜனன வோரைக்குளசைமய
ஓதிவோதிடல் தீதெனபோதிநீ யுண்மைக்சண்மணியே.

(இ-ள்.) க-வது தாம்பூலம், உ-வது தாப்டணம், ௩-வது ஆலஸ்யம், ச-வது சிவபூஜை, ரு-வது ஸ்திரீகள் கூட்டம், சு-வது மனோற்சாகம், எ-வது பலதுயரம், அ-வது காயம்படல், கூ-வது அவுபாசனம், க0-வது சந்தோஷம், கக-வது மாததியானிகம், கஉ-வது புத்ரலாலனை, க௩-வது அதிகநித்திரை, கச-வது போஜனுபாசம், கரு-வது சயனம், கசு-வது தர்தசுத்தி, கஎ-வது ஸ்நானம், கஅ-வது அனுஷ்டானம், ககூ-வது சத்துருவேதை, உ0-வது போஜனம், உக-வது தூக்கம், உஉ-வது விஜயம், உ௩-வது வைபோகம், உச-வது மயக்கம், உரு-வது முகவிலாசம், உசு-வது ஜெபம், உஎ-வது சன்டை, உஅ-வது போகம், உகூ-வது சிலாக்கியம், ௩0-வது மோகம், ௩க-வது துக்கநாசம், ௩உ-வது மூர்ச்சை, ௩௩-வது முத்தாபரணம், ௩ச-வது ராஜசபை, ௩ரு-வது கிரீடம்வாங்கல், ௩சு-வது கிரீடாதாரணம், ௩எ-வது வஸ்திரமணிதல், ௩அ-வது தேசசபை காணல், ௩கூ-வது சபைக்குள் வரல், ச0-வது இந்திரதரிசனம், சக-வது வாக்குவாதம், சஉ-வது பராக்கிரமம், ச௩-வது வீண்பிரசங்கம், சச-வது காளியைக்கண்டு வெகுமதி பெறல், சரு-வது வெகு சந்தோஷம், சசு-வது பிராமணருடனிருத்தல், சஎ-வது பகுவிலாசம், சஅ-வது உற்சாகமாம். கறுத்த அளகபாரத்தையுடைய ஸ்திரீயே, இவ்விடம் எண்ணிப்பார்க்க, சஅ-என்னுந்தொகை காணும், ஆகையால் மேஷமுதல் மீனம்வரையில் ஒவ்வொரு ராசிக்கு பங்கு கால் நான்காகும், அதற்குரிய தொகை யொட்டி நின்ற ஜனன லக்கினத்தினுடைய பங்கின் காலுக்கு சமயம்பார்த்துச் சொல்வாயாக. எ-று.

புதுமொழி.

ஆசிரியவிருத்தம்.

இராசிநக்ஷத்திரபாதகிரகசமயம்,

ஓரிராசிக்குரிய வுடுபாதமொன்பது வுற்றராசியிலெங் தகோ, ளுறையுமந்தப்பதம் பெற்றசமையப்பல ஞேதிலது வொன்பதாகும்,—பேரறிய வொன்றிற்கி ராஜ்ஜியமிரண் டிற்கு பீடுதனமூன்றிற்கெனில், பிசகாததுக்கநான் கிற்கு கோபுரமைந்து பேர்பெற்ற சிங்காதனம்,— ஊரறியவாறிற் கு கோகிலம்மேழிற்கு வுள்ளதேபோகமெட்டு, உறங்கலா மொன்பதிற் காகாததாமச மூகித்தெடுக்கவறிவாய்,—நாரி யர்கணத்திலே காரியகுணத்திலே நயவார்த்தைசுயமாக சொல், நங்கையேமங்கையே பங்கஜமணங்கையே நவபா தகிரகசமயமே.

(இ-ள்.) இராசி க-று நக்ஷத்திரபாதம் கூ ஆகையால், எந்த ராசியிலெந்த கிரக மிருக்கின்றதோ அந்த ராசியி னந்த பாதத்திற் குள்ள சமயம் க-று இராஜ்ஜியபாரம், உ-று தனநாசம், ங-று துக்கம், ச-று கோபுரம், ரு-று சிங்காதனம், சு-று கோகிலம், எ-று ஸ்திரீபோகம், அ-று சயனம், கூ-று தாமசம். எ-று.

வேறு.

முதுமொழி.

ஒரைபலன்.

சாற்றுவோரையிலாண்முதற்பாதியிற்
றக்கவாண்கோள்வலியுறிலாணதாம்
தோற்றுமோரையிற்றேகைமுற்பாதியிற்
றுய்யபெண்கோள்வலியுறிற்பெண்ணதாம்
போற்றிலங்குவலிபெற்றகோணிறம்
பொருந்துமாருயிர்புத்தியும்பூணுமே
ஆற்றல்பொன்புகர்மான்மதிவந்தசே
யமுகாமவம்சாருடனேககாணுமே.

(இ-ள்.) ஆண்ராசி யுதிக்க முற்பாதியி லாண்கிரகம் வலிபெற்று நோக்க பிறந்தகுழந்தை புருஷப்பிரஜை எனவும், பெண்ராசியுதிக்க முற்பாதியில் பெண்கிரகம் வலிபெற்றுநோக்க பிறந்தகுழந்தை ஸ்திரீ பிரஜை என்வும், அப்போது தோஷரகிதமாய் தேறிநின்ற கிரகத்தினுல் கிறமும் ஆயுவும் குணமும் சொல்லுக. குரு, சுக்கிரன், புதன், சந்திரன், இவாகள் ஷை ஓரையில் இருக்க, பார்க்க, பிறந்த குழந்தை யழகுள்ளதாம் விமீசுரா கிருபையுமுண்டாம். எ-று.

திரைகாணபலன்.

சனிதிரயமுதற்காணங்கண்டமட்டேயாகும்
நவிலிரண்டுநாபிவரைமூன்றப்பர்னுடும்
வினவியுதோரிவ்விடத்திற்பாபிகளேநின்ருல்
விரணமுண்டாஞ்சுபக்கிரகமேவின்மறுவாகும்
புனிதமொடுசுபர்பார்வையுறினுமறுவாகும்
பொருந்துநிறந்தெரிந்ததனைப்புகன்றிடவேண்டிடிலே
இனிமையுடனிருந்தகிரகத்தின்வன்னந்தானே
யிருந்தபடிக்கேயிருக்குமெனவிளம்புவீரே.

(இ-ள்.) திரேகாணமென்பது மூன்றுபங்காகும், அதாவது— ஜனித்தலக்கினத்தை மூன்றுபங்கு செய்க, அதில் முதலாம்பங்கு சிகைமுதல் கழுத்தளவு, இரண்டாம்பங்கு அதுமுதல் தொப்புள் ளவு, மூன்றும்பங்கு அதுமுதல் பாதமளவு, முக்கூறும். இத்தானங் களில் குரூரகிரக மிருந்தால் விரணம், சௌமியகிரக மிருந்தால் மறு, இதல்லாமலும் சுபக்கிரக பார்வையுண்டாகில் விரணமில்லை மறுவுண்டு, நிறமுதலானதைச் சொல்வதற்கு அந்த அந்த கிரகவர் னம்போ லிருக்குமென்று சொல்லுக. எ-று.

விரமுறுங்கதிரிருந்தால்விலங்கினத்தினுலும்
விளங்குசசியிருந்தக்கான்மெய்விரணங்கொம்பால்
பார்மகனுற்றிடிலங்கியாற்படையினுலும்
பாகனுறிற்பூமிநிமத்தம்விரணம்பற்றும்

ஆரியனுங்குருசுங்கருறின்விரணமில்லை
ஆங்காரியுறிற்கல்லால்ராகுவிஷமத்தால்
கூரியகேதிரணமுள்ளானல்லோர்கள்கண்டால்
கூறுமிரணந்தீர்ந்துகுலவும்வடுவாமே.

(இ-ள்.) மேற்சொல்லிய பங்கில் வைரம்பொருந்திய சூரியனிருந்தால் மிருகத்தினல் விரணம், சந்திரனிருந்தால் கொம்பாலாகிய விரணம், செவ்வாயிருந்தால் நெருப்பினுலும் ஆயுதத்தினுலும் விரணம், புதனிருந்தால் பூமி நிமித்தியத்தால் விரணம், குரு சுக்கிரனிருந்தால் விரணமில்லை, சனியிருந்தால் கல்லினுலும், இராகிருந்தால் சேஷ்டை விஷமத்தாலும், கேதிருந்தால் முட்களினுலும் விரணமாம், சுபக்கிரகபார்வை யுண்டாகில் விரணந்தீரும், ஆனல் அடையாளமாத்திர மிருக்கலாமென்க. எ-று.

வடுவுரைக்கில்சிரத்திரவிமுகத்தின்மதியாகும்
மார்பிற்சேயுறின்மறுவுமன்னுமிரணமுந்தான்
முடியரசனுதரத்திற்புந்தியிடைதனிலே
மூரிநெடுங்காரியிருதுடைதனிலேயாகும்
கடுவுறையுங்கருநாகங்கரந்தனிலேயாகும்
காலிரண்டிற்செம்பாம்புதான்கலந்துநிற்கும்
நடுமுதுகிற்சுக்கிரனுமாம்விரணம்பாவர்
நண்ணுமிடந்தனிலென்றேநாட்டுவர்நல்லோரே.

(இ-ள்.) அடையாளமாவது மேற்சொல்லிய பங்கில் சூரியனிருந்தால் சிரசில், சந்திரனிருந்தால் முகத்தில், செவ்வாயிருந்தால் மார்பில், குருவிருந்தால் வயிற்றில், புதனிருந்தால் இடுப்பில், வலிமைச்சனி இருந்தால் இருதுடையில், இராகிருந்தால் இருகையில், கேதுவிருந்தால் இருகாலில், சுக்கிரனிருந்தால் முதுகில், விரணமுண்டாமெனச் சொல்லுமிடத்தில் பாபக்கிரகங்க ளிருந்தால் மாத்திரம் மேலோர் கில்நாட்டுவர். எ-று.

முதுமொழி.

நவாம்சபலன்.

சூரியனமிசம்.

சூரியதோரிரவியங்கிசந்தனக்குகோபி
கோலவிழிமெய்சிவப்பன்குலவுசுசியாளன்
வீறுடனேசுருண்டுநீண்டிருக்குமயிருடலன்
மிகவயிறுபருத்திருப்பனசத்யமொழியுடையன்
ஆறிலியாத்திரைப்பிரியன்மோவாய்நீண்டிருப்பன்
அழகன்மிகுசிநேகிதவானவிர்புத்தியுளனும்
தேறுதலையுணர்ஞானிதியாகியாஞ்சாந்தன்
சீமானுகும்பித்ததேகமுளன்றானே.

(இ-ள்.) சூரிய னமிசத்தில் பிறந்தவனுக்கு கோபமும், அழகிய கண்களும், சிவந்த தேஜசும், பிரகாசம் பொருந்திய ஒழுக்கமும், தாட்டியாய் சுருண்டு நீண்டிருக்கும் ரோமதேகமும், வயிறுபெருத்திருத்தலும், சத்தியவாக்கும், நதியிலும் - யாத்திரையிலும்-இஷ்டமும், முகக்கட்டை நீட்சியும், சுந்தரமும், மிகுந்த சிநேகமும், நல்ல விவேகமும், தேர்ந்த அறிவும், தியாகமும், சாந்தமும், ஸ்ரீமானுகவும், பித்ததேகமுமாம். எ-று.

சந்திரனமிசம்.

உள்ளமதிவித்தைசெல்வனுமுகததின்மறுவாம்
உறுந்தீர்க்காயுளன்சிறியவிழியன்னனவுரைப்ப
தெள்ளியநற்குணவழகனுஞ்சூரன்றியாகி
சிநேகிதனந்தன்னறிவுகுன்றாதான்றீரன்
கள்ளமிலான்வாதசேத்துமரோகதேகன்
கருத்துளன்பின்னிரக்கமுளனீராடப்பிரியன்
எள்ளலிலான்மோவாய்நீண்டேயிருப்பனளக
மினியசிரரோமநீண்டிருந்திடுவன்கண்டாய்.

(இ-ள்.) சந்திரனமிசத்தில் பிறந்தவனுக்கு கல்வியும், செல்வமும், முகத்தில் மறுவும், ஆயுர் தீர்க்கமும், சிறியகண்களும், தெளிந்தவச

னமும், நல்ல குணவழகும், சூரத்வமும், ஈதலும், சிநேகமும், ஆக்தமும், அறிவு குறையாமலும், தைரியமும், கபடமில்லாமை யும், வாதஸ்லேத்தும சம்பூத ரோகதேசமும், சனிவும், பின்னே இரக்கப்படலும், நீர்விளையாட்டில் பிரியமும், இழிவில்லாமையும், முகக்கட்டை நீட்சியும், அளகமாகிய ஈகை மயிர் நீண்டிருத்தலு மாம். எ - று.

குஜனமிசம்.

கண்டசெவ்வாய்கடுஞ்சொல்லன்பேடியெனும்ரூபன்
கழறுவாய்திக்குடையன்மெய்சிவப்பன்கோபி
சண்டைவிருப்புடையன்றபனிதிபித்தரோகி
தாணிதிரிந்திடுவன்சிற்றுண்டிவிருப்பினனும்
மிண்டியவஞ்சகன்லோபிமூதுக்ன்மறுவினனும்
விருதுதத்வன்கிலேசிதீரன்பிரகாசி
கண்டுமொழிமானேகேடுக்கமுளானிழிசொல்
கழறிற்பொருன்பொய்பன்கனவான்கீர்த்தியினன்.

(இ-ள்.) குஜனமிசத்தில் பிறந்தவனுக்கு கடுகடுத்த சொல்லும், அலியுருவமும், பேசும்வாய் தெத்தலும், சிவந்ததேகமும், முன்கோ பமும், வீணசண்டையில் விருப்பமும், சுவல்பதிரவியமும், பித்த வியாதியும், ஊரைச்சுற்றுதலும், சோறுவைததின்னுதலும், கொடிய வஞ்சனையும், உலுத்தத்தன்மையும், முதுகில் மறுவும், வீரம்பேசுத லும், கிலேசமும், மிகுந்த தைரியமும், பேர்பிரகாசமும், கற்கண் டைப்போல் வசனமுள்ள பெண்ணே கேள் துக்கம்பொருந்தலும், இழிவான வார்த்தையைக் கேழ்க்காதலும், அபத்தமும் கன்னிய மும் பெருமையும் ஆம். எ-று.

புதனமிசம்.

ஆனபுந்தியங்கிசத்தஞர்ந்தருமசீலன்
ஐச்சுவரியன்வித்தையுளனரிவையருக்கன்பன்
ஞானிபிசைத்தமிழோன்பொய்யாதமொழியாளன்
ஒன்றிமறவான்கயம்போனடையுடையனழகன்

கானவித்தையுளன்சூரன்பசியநரம்புடையன்
காரியஞ்சற்றும்வழுவான்கதித்தகுணமுள்ளான்
மானமுளன்றேவர்களைச்சந்ததமும்பணிவன்
வன்மனத்தினச்சமிலான்மகிழ்ச்சியுளனுகும்

(இ-ள்.) புதனமிசத்தில் பிறந்தவனுக்கு நாமமும், சுசியும், ஐஸ்வரியமும், கல்வியும், ஸ்திரீகாரியத்தில் சம்பந்தமும், ஞானமும், பிரகாசம்பொருந்திய இசைத்தொழிலும், அழுக்கும் பொய் பேசாமையும், உபகாரத்தை மறவாமலும், மதயானையைப்போல் நடையும், நீலவண்ணியமும், சங்கீத வித்தையும், சூரமும், பசுமையான நரம்புகள் தேகத்தில் காணலும், கூருபமாத்திரமும் காரியத்தில் பிசகாமலும், பெருமையான குணமும், மானமும், தெய்வங்களைச் சந்ததம் தொழுதலும், கடின மனமுடையதால் பயமற்ற தன்மையும் மகிழ்வும் உண்டாம். எ-று.

வியாழனமிசம்.

ஆகியநல்வித்தையுளன்பொன்போலுமெய்யன்
ஆண்பெறுவன்செவ்விழியனமச்சனுகுவனும்
வாகுசெறிரோமமுளன்மேனோக்கன்செல்வன்
மகிழ்வுடையன்சுசியுடையனவன்றாலதேகி
மோகமுடனீராடுவன்மோவாய்நீண்டோன்
மொழிமதுரன்விசிட்டமுளனுயர்ஞானியழகன்
போகமிகுசுகவானல்லறிவுடையன்விசயன்
புகழுடையன்புத்தியுளன்பொன்னங்கிசத்தோன்.

(இ-ள்.) வியாழனமிசத்தில் பிறந்தவனுக்கு நல்லகல்வியும், தங்கச்சாயல்போன்ற சரீரமும், ஆண்குழந்தைகளைப் பெறுதலும், சிறப்பாகியகண்ணும், மந்திரித்தன்மையும், நெருங்கியரோமமும், மேலாகிய பார்வையும், செல்வமும், மகிழ்ச்சியும், பரிசுத்தமும், தபமும், பருத்த சரீரமும், சந்தோஷமாய் ஸ்நானபானஞ்செய்தலும், மூகக்கட்டைநீட்சியும், சொற்சுவையும், கபடில்லாக்குணமும், கல்விவேக

மும், அழகும், போகமிகுந்த சௌக்கியமும், நல்லகியானமும், பராக்கிரமமும், கீர்த்தியும், அறிவும், உண்டாம். எ-று.

சுக்கிரனமிசம்.

பிரபலனாகியசுங்கனங்கிசத்திற்பிறந்தோன்
பெருந்தூலசரீரனெழிற்பெருஞ்செல்வமுடையோன்
திரமாகச்செய்நன்றியுணர்ந்திடுவன்றருமன்
செப்பியவுத்தமன்சூரன்கல்வியுளன்சுகவான்
கருமயிர்தான்சுருட்டையுளன்காந்தியுளன்சிநேகன்
கதிர்வடிவன்கால்வளமையுடையன்கிளைக்குறவன்
அரன்பெருமையோதவிருப்புளனுமன்புடையன்
ஆகுமென்றேயுரைத்திடுவரறிந்திடுநல்லோரே.

(இ-ள்.) பிரபலம்பொருந்திய சுக்கிரனுடைய அமிசத்தில் பிறந்தவனுக்கு காத்திர தேகமும், அழகிய மிகுந்த செல்வமும்; ஒருவர் செய்த உபகாரத்தை நினைத்தலும், தாமமும், உத்தமகுணமும், சௌரியமும், கல்வித்திறமும், சுகமும், கறுத்த சுருண்ட ரோமமும், தேககாந்தியும், நேசமும், செவ்வியஅழகும், நாற்கால்ஜீவன் விர்த்தியும், பந்துக்களிஷ்டமும், ஈஸ்வரனுடைய புகழைப் பேசுதலில் விருப்பமும், அன்புடைமையும் உண்டாமென்று தெரிந்த புண்ணியவான்கள் சொல்லுவார்களாம். எ-று.

சனியினமிசம்.

நல்லசனிவங்கிசத்தோன்கீர்த்தியிலானாகும்
நவில்வன்பொய்தள்ளாடிநடப்பன்கைவீசிச்
சொல்லுவன்மெய்க்குறளன்ராகூத்தரூபனுவன்
தொடைபுறந்தாள்பருத்திருக்குந்தூயகருநிறத்தோன்
அல்லலுறுந்தரித்திரவானிரக்கமிலானாகும்
அன்னமெத்தவும்புசிப்பனரும்பொருளன்லோபி
வல்லதொந்தியனீலதேகனஞ்சாமனத்தன்
மன்னுதயவினைச்சற்றுமனத்திலவையான்றானே.

(இ-ள்.) நன்மை பொருந்திய சனியினுடைய அமிசத்தில் பிறந்தவனுக்கு புகழில்லாமையும், பொய்பேசுதலும், சோர்ந்துநடக்கலும், கைநீட்டிப்பேசலும், குள்ளமும், ராக்ஷசவடிவும், தொடை - குதிக்கால் மிகவுங் கனத்திருத்தலும், கரிகறுத்த ரூபமும், அலைச்சலுள்ள வறுமையும், தயவில்லாமையும், சோறு மிச்சமாய் தின்பதும், அருமையாய் கொஞ்சம் பொருள் சேர்த்தலும், உலுத்த தன்மையும், பருத்த தொந்தியும், நீலதேகமும், பயமற்ற மனதும், தயவென்பதைச் சற்றேனும் மனதில் வைக்காதவனுமாம். எ-று.

இராகுவினமிசம்.

தானவனுமிராகங்கசந்தனக்குபலன்தான
 தருமகுணஞ்சவுரியமுநிறைந்தவசனத்தால்
ஞானவரம்பைக்காட்டுநடையுள தகுமதியான்
 நன்றியறியுந்தன்மைநகராளும்பூபன்
ஆனவர்கள்சன்மானமாசாரமில்லான்
 அந்தமிலாமந்திரமுமாகாத்யஞ்செய்வன்
போனவரைக்குறித்துநிதம்புகழ்ந்துமிகப்பேசும்
 புத்திமதியுள்ளவனும்பொற்கொடிபெண்ணமுதே.

(இ-ள்.) இராகுதராகு என்னும் கிரகாம்சத்தில் பிறந்தவனுக்கு தானம், தருமகுணம், பராக்கிரமம், இவைகளையும் வாய்நிறைந்த வார்த்தையால் மோக்ஷ நெறியையும் புரட்டுகின்ற செய்கையும், அவ்வித தகுந்த புத்தியும், நன்றி விசுவாசமும், பட்டினத்தை ஆளும் ராஜாங்கமும் தாக்ஷண்யமில்லாமலும், அனுச்சாரமும், முடிவில்லாத மாந்திரீகமும், வஞ்சகமும், சென்றவர்களைக்குறித்து நித்தியம் புகழ்ந்து பேசுதலும், இவ்வித விதரணபுத்தியும் உளவாம். பொற்கொடிபோன்ற பெண்களில் அமிர்தமானவளே. எ-று.

கேதுவினமிசம்.

அமுதமுளகேதம்சமதனையுற்றுகேளு
 அறுபத்துநான்குகலைக்கியானமெலாமறிவன்

சமதாயன்வயித்தியத்தில்தான்சமர்த்தனவன்
சத்துருவைமித்துருவாய்சமயத்திற்கொள்வன்
திமிதமிலாமனதுடையன்றிப்பிரமைபூண்ட
தீனரையெலாங்காக்குந்தியாகமுளசெம்மல்
குமுதமலர்விழிபோன்றகோகனகப்பெண்ணே
கோள்களதுநல்லமிசங்கொண்டுபலன்கூறே.

(இ-ள்.) தேவாமிர்தம்புசித்த கேது என்னும் கிரகத்தினுடைய அமிசத்தில் பிறந்தவனுக்கு அறுபத்துநான்கு கலைக்கியானங்களைப் படித்துச்சொல்லலும், பொதுமையாய் வைத்தியஞ் செய்வகையில் சமர்த்தும், நல்லசமயத்தில் சத்துருவை மித்துருவாக்கிக்கொள்ளலும், சபலமும், திகில் பிடித்திருக்கின்ற ஏழைகளை ரக்ஷிக்கும்திராணியும், கேட்டதைக்கொடுத்தலும், ஆள் அரசுரிமையும் உளவாம். நீலோற்பலத்தைப் போன்ற விழியும், பொன்மயமான தேகமும் உடைய மாதே நவக்கிரகங்களுடைய நல்ல அம்சங்களைக் கொண்டு பலன்சொல்லுக. எ-று.

துவாதசாம்சபலன்.

புதமொழி.

விருத்தம்.

அசுபதிமுதற்கார்சோரமதில்ரெண்டுசுகமாமூன்றிற்
இசைபுத்திநாலிற்பொன்சேர்ந்திடுமேடப்பின்முதற்கால்
வசையிலேயோகம்ரெண்டுவலிமூன்றிலாண்மையாகும்
இசையுநாற்கால்தரித்ரமென்றனர்கலைவல்லோரே.

(இ-ள்.) அசுபதி க-ல் சோரம், உ-ல் சுகம், ௩-ல் அறிவு, ச-ல் தனம், பரணி, க-ல் கீர்த்தி, உ-ல் யோகம், ௩-ல் வலிவு, ச-ல் தரித்திரம் என்று சாத்திர மறிந்தவர் சொல்லுவரென்பதாம். எ-று.

கார்த்திகைமுதற்கானல்லநெறியுடைக்காலேரெண்டில்
வார்த்தைகாம்பீரமாகும்வகைபெறுமூன்றாங்காலில்
கீர்த்தியுண்மகிபனவன்கிளர்ந்தநான்கிற்குவித்தை
பார்த்துமும்மூன்றுநாளைப்பகுத்துடனுணர்ந்துகொள்ளே.

(இ-ள்.) கிருத்திகை க-ல் நற்குணம், உ-ல் காம்பீரம், ௩-ல் கீர்த்தி, ச-ல் வித்தை யுளவாம். இவ்வடைவே மற்றை நட்சத்திரங்களை மும்மூன்றாகப்பிரித்து பலனை யறிந்துகொள்க. எ-று.

திரிம்சாம்சபலன்.

புதுமொழி.

விருத்தம்.

சொன்னலக்கினத்தை முப்பதுபங்கு
துணித்துறுங்காலப்பாகத்திற்
கென்னகோட்பங்காமன்னகோளுதயத்
திற்கெந்தவீட்டினிலிருந்த
தன்னவீட்டின்பகாம்முதலெட்டுத்
திக்கினுண்மற்றைகோளறிந்து
மன்னவேபூர்வதனமுதலாபம்
வருமெனச்சொல்லுஞ்சோதிடமே.

(இ-ள்.) மேற்சொல்லிய ஜன்மலக்கினத்தை ௩0-பங்கு செய்து ஜனனகாலத்தின் பங்கு எந்தக்கிரகத்தின் பங்காகுமோ அந்தக்கிரகம் ஷை லக்கினத்திற்கு எந்தவீட்டி லிருந்ததோ அந்த வீட்டின் திசைமுதல் எட்டுத்திசையிலு முள்ள மற்றைக் கோள்க ளிருக்கின்றதிசையும் இவ்வடைவே அறிந்து, அந்த அந்த திசைப்பங்கம் பூர்வதனமும், லாபமும் உண்டென்பதைத்தெரிந்து கொள்க.

வேறு.

ஆட்சியுச்சமேயாகுமருகினில்
தாட்சிமூடநீசஞ்சத்துருதூரம்
மாட்சிநன்மைகோண்மாதேவதாபூமி
சூட்சிதீமைகோள்துர்க்கையின்பூமியே.

(இ-ள்.) மேற்சொல்லிய கிரகங்கள் ஆட்சி உச்சத்திலிருந்தால் பூர்வதனமும், லாபமும், சமீபமான இடத்தில் கிடைக்கும்; மூடம் நீசம் சத்துரு இவ்விதத் தானத்தி லிருந்தால் தூரமான இடத்தில்

அ

கிடைக்கும்; அந்தகிரகம் சுபக்கிரகமானால் அந்தப்பூமி நல்லதாக வும், அசுபக் கிரகமானால் மசான பூமியாகவும் தெரிந்துகொள்க.

வேறு.

உயிர், உடல்.

ஆதிநவக்கோளிரவி முதன்மைவீடா மாளரிமுன் மா
ன்வரையிலாறிராசி, ஓதிலதுவேயுயிரா மற்றைராசி யொ
ளிர்சான்முன் கடகம்வரை யாறிராசி, மாதிரமாஞ்சசிக்கு
ரிய மனையாந்தேக மன்னுமிந்த ராசிகளில் வரில்சுபக்
கோள், கோதின்மிகச் சுகமுண்டாங் கொடுங்கோள்வந்
தால் குழவிக்கு சுகமில்லை கூறுவாயே.

(இ-ள்.) நவக்கிரகங்களில் தலைமையான சூரியனுடைய ராசி சிங்கமுதல் மகரம்வரையில் ஆறும் உயிரென்றும், நிலைமையான சந்திரனுடைய ராசி கும்பமுதல கடகம்வரையில் ஆறும் உடலென்றும் இவ்விருவகை ராசிகளில் சுபக்கிரக மிருக்கப் பிறந்த குழந்தைகள் சுகமாகவும் அசுபகிரகமிருக்கப் பிறந்தகுழந்தைகள் அசுகமாகவும் இருக்கும், இதல்லாமல இவ்விதராசிகளில முன்னாசொன்னதை வெற்றியென்றும், பின்னாசொன்னதை தோல்வையென்றும் வழங்குகின்றன. எ-று.

வேறு.

ஜெனித்தநாழியிற் சேர்ந்தவிராசியை
இனித்திருக்கு முயிரெனவேலுமே
ஜெனித்தநட்சத் திரத்தினிராசியை
அனித்தமாமுட லாமென்றறைமினே.

(இ-ள்.) குழந்தை பிறந்தநாழியி னிராசியை உயிரென்றும் ஷை குழந்தைபிறந்த நட்சத்திரத்தி னிராசியை உடலென்றும் சொல்லப்படும். எ-று.

முதுமொழி.

விருத்தம்.

குழந்தைபிறந்தவுடன் முன்னிட்டறியும்பலன்.

மாமன்சிறுவன்றாய்தந்தைமரணமைந்திலீரைந்தில்
பூமன்காரிமதிவெய்யோன்புகழ்கோணைக்கிற்சாவில்லை

சோமற்கேழ்சேய்சனிதாய்சாஞ்சுடருக்கேழில்பிதாமரண
திமைக்கோள்களுடலுயிரைப்பற்றிநிற்கில்சிறுவன்சாம். [ம்

(இ-ள்.) அம்மான்-குழந்தை-தாய்-தந்தை - இவர்களுக்கு (தோஷம் உண்டு இல்லையென்கிற வினவுக்கு விடை) இலக்கினத்திற்கு ௫-ல் ௧0-ல் செவ்வாயிருக்கில் மாதுலனுக்கும், சனியிருக்கில் சிசுவுக்கும், சந்திரனிருக்கில் தாயிற்கும், சூரியனிருக்கில் பிதாவிற்கும் அரிஷ்டம்; சுபக்கிரகமிருக்க பார்க்க அரிஷ்டமில்லை, மேலும் சந்திரனுக்கு எ-ல் செவ்வாயாவது சனியாவது இருக்க பார்க்க தாய் மரணம், சூரியனுக்கு எ-ல் செவ்வாய் சனி இருக்க பார்க்க பிதாமரணம், பின்னும் அசுபக்கிரகங்கள் சந்திரலக்கினத்திலும் ஜனனலக்கினத்திலும் இருக்கில் குழந்தை இறந்துபோகும். எ-று.

வேறு.

நிலைசொலிற்பத்தோனெட்டோனிலக்கினத்துடையோன்
மலைவிலைதீர்க்காயுற்றுமத்திமமிரண்டுமிக்கேல் [மிக்கேல்
பலமொன்றேலெண்ணான்காகும்பலவினமூன்றுமாகில்
இலனென்றூர்வயதுமெத்தவீராறிற்குள்ளென்பாரே.

(இ-ள்.) சிசு நிலையைச்சொல்லுமிடத்து ௧0 - அ - ௧ - இவ்விடத்துள்ள கிரகமூவரும் பலம்பெற்றிருந்தால் (ஈவக்கிரகதிசாஹூ ௧உ0) ஆகிய உத்தமவயதும், இருவர் பலன் பெற்றிருந்தால் அதிற்பாதி ௬0-ஆகிய மத்திமவயதும், ஒருவர் பலன்பெற்றிருந்தால் அதிற்பாதி ௩உ - ஆகிய அதமவயதும், மூவரும் பலனீனராகில் ௧உ-குள்ளே அதமாவதமவயதென்பார்கள். எ-று.

உச்சகிரகதோகைப்பலன்.

விருத்தம்.

ஒருகோளுச்சமரிட்டம்போமோங்குமிரண்டேலரசாகும்
திருமூன்றுகிற்சதுரங்கத்தானைச்சமுகமன்னவனும்

"வருநால்மங்களம்புரிவிக்குமருவுமைந்தாறெனிற்றேவர்
பரவுநீதியார்முழுதும்பாரமாகியளித்திடுமே.

(இ-ள்.) ஒருகிரகம் உச்சம்பெறில் துன்பநிவாரணம், ௨-கிரகம் உச்சம்பெறில் இராஜ்ஜியாதிசாரம், ௩-கிரகம் உச்சம்பெறில் இரத கஜ துரக பதாதிகளுக்குத்தலைமை, ௪-கிரகம் உச்சம்பெறில் லட்சுமி தாண்டவம், ௫ - அல்லது ௬ - கிரகம் உச்சம்பெறில் தேவப்பிறப்பும் நீதியுடன் உலகமுழுமையும் காக்கலுமென்பதாம். எ-று.

உச்சகிரகவகைப்பலன்.

சூரியன், சந்திரன்.

வழுத்தியசெங்கதிருச்சம்பெறவுதித்தோன்றானும்
மன்னவனும்பிரதாபசாலிமகாபெலவான்
பழித்திடுபுன்னோயில்லான்றனதான்யமுள்ளான்
பலவிதவாகனனுடலிற்பழுதொன்றுமில்லான்
செழித்திடுசந்திரனுச்சஞ்சகலசனபிரீயன்
செல்வகுணம்புத்திரநவதானியமுஞ்சேரும்
விழித்துமயலளித்துமனமுருக்குமடமாதர்
வெகுபேரைப்புணருகின்றமிகுபோகியாவான்.

(இ-ள்.) சொல்லுதற்குரிய சூரியன் உச்சமாகப் பிறந்தவன் அரசுரிமையும் பராக்கிரமமும் மிகுந்த பலாட்டியமும் அவமதிக்கத் தகுந்த சொஞ்ச நோயு மில்லாமையும் தனம் தானியமும் நாலுவித வாகனங்களும் தேகத்தில் உறுப்பு குற்றமில்லாமையும்; செழுமை பொருந்திய சந்திரன் உச்சமாகப் பிறந்தவன் சகலமான யோகளிடத்தில் வாஞ்சையும் நல்ல மனதும் புத்திரவிருத்தியும் நவதானிய லாபமும் அனேகம் ஸ்திரீகளைச்சேருதலும் அதிகமான போகமும் உடைத்தாயிருப்பன். எ-று.

குஜன், புதன்.

ஆகுஞ்செவ்வாயுச்சங் கீர்த்திபிறர்க்கினியான்
அவனிதனினெடுங்கால மாயுளுடையவனும்
வாகுடையன்பித்தன்பிதிர்த் திரவியங்களுள்ளான்
மருவுமிகுபுத்திமான் மன்னவனுயிருப்பன்

மோகமுறும்புதனுச்சிரு சகலகலைவல்லன்
முறைமையுடன்சங்கீதப் பிரியன்வெகுகுணவான்
சேகரமாபுத்திமான் கணிதவகைதெரிவோன்
திண்புவிக்கோரரசனூ ரூண்டிருக்குஞ்சீமான்.

(இ-ள்.) அங்காரகன் உச்சமாகப்பிறந்தவன் சிறப்பும், அன்னிய ரிடத்தில் தயவும், உலகத்தின்கண் வெகுகாலம் உயிருடனிருத்தலும், பராக்கிரமமும், பித்ததேகமும், பிதாபாக்கியமும், பொருந்திய மிகுந்த விவேகமும், அரசனைப்போலிருத்தலும்; ஆசையைத்தரு கின்ற புதன் உச்சமாகப்பிறந்தவன், கலைக்கியானமெல்லா மறித லும், பந்துக்களும், கீதவாத்தியங்களில் சந்தோஷமும், மிகுந்தநற் குணமும், சிறப்புபொருந்திய புத்தியும், கணக்கதிகார மறிதலும் பூமியின்பேரில் ஒப்பற்ற அரசனைப்போலவும், நூறுவயதுவரையில் வாழ்வை உடைத்தாயிருப்பன். எ-று.

குரு, சுக்கிரன், சனி.

ஆமரசனுச்சத்தில்வெகுசம்பத்துள்ளான்
அரசன்மிகுபோகவானணிதனமுமுளனும்
காமரசவனிதைவாகனம்வித்தைபுதல்வர்
கனமாகமருவுமுபகாரனுகவிருப்பன்
பூமலிசுக்கிரனுச்சந்தனம்வித்தைபுதல்வர்
போகமிகவுளன்காரியுச்சமதிற்பெலவான்
ஏமமாரோக்யந்தீர்க்காயுணன்மையுடனே
இரணியங்கிராமஞ்சேனையிவைகளுளனுமே.

(இ-ள்.) பிரகஸ்பதி உச்சமாகப்பிறந்தவன் அதிகஜஸ்வரியமும், ராஜடீக்கும், மிகுந்தபோகமும், ஆடையாபரணங்களும், இன்பரச முள்ள ஸ்திரீகள்நேசமும், நல்லவாகனங்களும், கல்வியும், புத்திரர் களும், காம்பீரியமாகப்பொருந்த உதவிகள் செய்தலும்; புஷ்பவா சமுள்ள சுக்கிரன் உச்சமாகப் பிறந்தவன் திரவியமும், படிப்பும், குழந்தைகளும், ஸ்திரீபோகமும்; சனியன் உச்சமாகப் பிறந்தவன்

வன்மையும், இன்பமும், சவுக்கியமும் ஆயுர்தீர்க்கமும் நன்மை யுடன் பொன், பதி, படை, இவைகளை உடைத்தாயிருப்பன். எ-று.

வேறு.

இராகுகேது.

கருங்கோளுச்சமதுவாகிற் கனத்ததுடுக்குந்தகைமையும்பா
வருங்காரியஞ்சொன்மதியூகி மாறுவலிமைமனதுளனும் [ர்
அருங்கேதுச்சமதுவாகி லாயுள்வேதாந்தம்
ஒருங்கேயறிந்துவுலகத்தா ருவக்கநடக்குமுண்மையனே.

(இ-ள்.) இராகுகிரகம் உச்சமாகப்பிறந்தவன் மிலேச்சராஜவல்லமையும், இனிவருங்காரியத்தைச் சொல்லும்படிக்கான மந்திரித்தன்மையும், இளைக்காத நெஞ்சமும்; கேதுகிரகம் உச்சமாகில் ஆயுள்வேதமுதலிய வேத வேதாந்தங்களும் நன்றுயறிந்து சான்றோர்களால் சந்தோஷிக்க நடந்துக்கொள்ளும் மெய்ம்மையும் உடைத்தாயிருப்பன். எ-று.

கெஜகேசரியோகம், நீசபங்கராஜயோகம்.

வேறு.

இருட்கிறைசேலிடபம்பிற்சாலிற்கலைவர்த்தனையா
யில்லிசையுற்றிருப்பதுபொற்கெனிற்கெஜகேசரியாம்
விருப்பமுளவாழ்வதிகன்வேந்தனுமாநீச
மேவியவிற்கிறைவனந்தவீட்டிலுச்சத்தவனி
லருட்பெறவுற்றிடவதனுக்காதிபன்கோணிருக்கி
லல்லவெனிலம்புலிக்குக்கேந்திரிக்கிலதுதான்
மருட்பெறுமந்நீசனுக்காகிலுமாகிக்குருபேர்
வர்க்கமுறினீசபங்கம்பெயரிவன்மன்னவனே.

(இ - ள்.) பூர்வபக்ஷத்துச் சந்திரனும் வியாழனும் ௪-ம் ௧௦-ம் ஆக, மீனம், இடபம், தனுசு; கும்பம், இந்த ராசிகளிலிருக்கில் கெஜகேசரி யோகமாம், இதன்பலன் சகலஜனபிரியன், வெகுபாக்கியவான் இராஜனென்ப, இதன்மேல் நீசனிருந்த வீட்டுக்குடையவன் அந்த வீட்டுக்கு உச்சாதிபதி வீட்டிலிருக்க, இதற்குடையவன்

ரு - கூ - ல் இருக்க, அல்லது மதிக்காகிலும், கேந்திரிக்க, அல்லது அந்த நீசனுக்காகிலும் கேந்திரிக்க இது குருவர்க்கமுமேறில் நீச பங்க ராஜயோகம், இதன்பயன் அரசன். எ-று.

கிரகமாலிகாயோகம்.

எ-வீடு கிரகமாலை.

எண்ணிய லக்கினமுதலேழுவீட்டி லிடைவிடாமற்கி
ரக மாலையாக, நண்ணிடில்வல்லகி யோகம்பலன்கள்கூறி
னலமுளனுச்சாகிபர னீதியாளன், புண்ணியசம்பன்னனறி
வுடையகோமான் புகழ்பெறியும் பிரசங்கி வித்துவானும்,
திண்ணியநற் குலமுடைய னிபுணன்சீலன் றிரள்யோகவா
னென்றே செப்புவாரே.

(இ - ள்.) எண்ணத்தகுதியான இலக்கினமுதல் ஏழுராசிவரை யில் தொடர்பாய் கிரகங்கள் வரிசையாக யிருக்கப் பிறந்தவனுக்கு (வல்லகியோகம்) பலனுவது மனதில் உற்சாகமும் செங்கோன்மை யும் புண்ணிய சம்பததும் அறிவுடைமையும் கீர்த்தி பொருந்திய பிரசங்கமும் வித்துவத்தன்மையும வன்மையும் நல்ல குலமும் கெட்டித்தனமும் பரிசுத்தமும் தைரியமும் அயிஸ்வரியமும் உண் டாகும். எ-று.

கூ-வீடு கிரகமாலை.

வாருலவுமுலையாள்கேளிலக்கினங்கண்முதலாய்
மாறுமலையாறுவீட்டில்கோணிற்கப்,
பாருலவுசக்ரதரயோகங்களென்னப்
பகர்பலன்றனைத்தெரிந்துபார்த்திடுமெப்போது
சீருலவுமன்னவனுஞ்சுகதேகன்சீமான்
சினமில்லான்கிருபையுளன்சேர்ந்தபிரதாபன்
ஏருளவாக்கியன்ஞானந்தானபுத்திமானும்
இனியதாதாவென்றேயியம்பிடுவர்கண்டீர்.

(இ-ள்.) கச்சையணிந்திருக்கின்ற கொங்கையுடைத்தானவளே, இலக்கினமுதல், ஆறிராசிவரையில் இடைவிடாமல் கிரகங்களிருக்

கப்பிறந்தவனுக்கு (சக்கரதரயோகம்) பலனாவது, சிறப்புபொருந்திய இராஜத்வமும், சுகமானதேகமும், லட்சுமீகரமும், பொறுமையும், வாக்குதாட்டியம், கியானமும், அறிவும், உதாரத்வமும், உண்டாகும். எ-று.

ரு-வீடு கிரகமாலை.

கண்டலக்கினங்கண் முதலைந்துவீட்டிற்
கருணையுடனேகிரகஞ்சேர்ந்துநிற்கில்
ஒண்டொடிநற்பரசயோகங்களென்றதனை
யுரைப்பரவன்மேதாவியுச்சாகியாகும்
தண்டமிழன்பலகலையுந்தெரிந்துரைகள்பகர்வன்
சகலசனங்களும்புகழத்தான்மிகவேவாழ்வன்
எண்டிசைகள்புரந்திடுமன்னவராற்பூச்சியவான்
இனிபதனவான்வீட்டின்கருமமலாம்பார்ப்பன்.

(இ-ள்.) இலக்கினமுதல் ஐந்துராசிவரையில் நெருக்கமாய் கிரகங்களிருக்கப்பிறந்தவனுக்கு (பரசயோகம்) பலனாவது மேன்மையும், சந்தோஷமும், அழகிய தமிழ்ச்சாத்திரந் தெரிந்துரைத்தலும், சர்வத்திராளும் புகழவாழ்தலும், திக்கெட்டையும் காக்கின்ற அரசரால் பூஜிதமும், மிகுந்ததனமும், சம்சாரகிருத்தியங்களில் ஜாக்கிரதையும் உண்டாகும். எ-று.

வேறு.

௪-வீடு கிரகமாலை.

பார்க்கிலக்கினந்தன்னோடுபெயினன்குமனைக்குள்ளாக
ஏர்க்கவேகிரகநின்றால்துவேகேதாரயோகம்
தீர்க்கமாய்கிருஷிபண்ணிநிதிதேடிந்திடவான்சுற்றத்
தார்க்கன்பன்சுகவான்ராஜபூச்சியன்றகைமையுள்ளான்.

(இ-ள்.) இலக்கினமுதலாக நான்கிராசிவரையில் சரியாக கிரகங்களிருக்கப் பிறந்தவனுக்கு (கேதார யோகம்) பலனாவது தாராளமாய் விவசாயம்செய்து பொருளைச் சம்பாதிக்கும் கெட்டித்தனமும், உறவின் முறையார்களிடத்தில் பக்ஷமும், ராஜபூஜிதமும், பெருமையும் உண்டாகும். எ - று.

ரு-விடு கிரகமாலை.

உள்ளதோர்மூன்றுவீட்டி லுற்றிடிற்சூலயோகம்
மெள்ளவப்பலனநேக வித்தையுள்ளவனுச்சாகி
. தெள்ளியபேர்கவானுந் திரவியந்தேடுஞ்செல்வன்
கொள்ளவும்விலைகள்கூறி விற்கவுங்குறிப்புளாளன்.

(இ - ள்.) இலக்கினமுதல் மூன்றாம்ராசிவரையில கிரகங்களிருக்கப் பிறந்தவனுக்கு (சூலயோகம்) பலனாவது பலபாஷை யறிதலும், உத்சாகமும், சம்பத்தும், பொருள சம்பாதிக்கிஸ்ற சீரும், கிறய விற்கிறய வல்லமையும் உண்டாகும். எ-று.

உ-விடு கிரகமாலை,

ஆள்சன்மமிரண்டிலேழு கிரகமுமமர்ந்துநிற்கில்
நீள்கனயோகமென்ப ரிதன்பலனிதிமான்மிக்கோர்
தாள்தொழுதிறைஞ்சிநிற்குஞ் சரசவான்றீர்க்கஜீவி
கேள்சுபகன்மன்சென்மத் தேழுறிற்கௌளயோகம்.

(இ-ள்.) இலக்கினமுதல் இரண்டாம் ராசிவரையில் ஏழுகிரகங்கள் இருக்கப் பிறந்தவனுக்கு (மகாகனயோகம்) பலனாவது தனாட்டியமும், மகாபிரபுக்கள் அடிவணங்கி நிற்றலும், சரசகுணமும், நீண்டாயுளும், நற்கருமஞ் செய்தலும் உண்டாகும். எ-று.

க-வீடு கிரகமாலை.

யோகமாங்கௌளயோக முறுதனஞ்சற்றுமில்லான்
சோகமாயிளைத்திருப்பன் சிலவுளான்பகலிற்சோம்பன்
தோகைகேள்பொல்லான் சொற்பகாரியத்தொழிற்குவல்லா
வாகுடன்புவிசஞ்சார வல்லமையுள்ளனுமே [ன்

(இ-ள்.) இலக்கினத்தில் தானே ஏழுகிரகங்க ளிருக்கப் பிறந்தவனுக்கு (கௌளயோகம்) பலனாவது, துட்டில்லாமையும், தேகம் வாடியிருத்தலும், விரயமும், மூதேவித்தன்மையும், பொல்லாப்பும், சுவல்பகாரிய ஜீவனமும், தேச சஞ்சாரமும் உண்டாகும். எ-று. வலத்திற்குச் சொன்னதானாலும் இடத்திற்குஞ் சொல்லலாகும்.

இரவிசேகரப்பலன்.

பிள்ளைமதிமுதனோராயிரவியுடன்கூடிற்
பேரியல்காரியசமர்த்தன்பெண்டிர்வசப்படுவ
னுள்ளமதியாங்கபடமுரைதிடமாமவித்தை
யுருவநல்லபுத்தியுரமாமரசருறவு
கள்ளமிலான்வெகுமானிகனகமுளனரி
கள்வசியன்பந்துசனன்கருதலர்பெற்றவனு
மெள்ளலுளான்மந்தபுத்திரிபுசவனும்வீதுநே
ரெமனளவுமாதவனேசெய்துதற்கிப்பலனே.

(இ-ள்.) ரவியுடன் பூருவமதிகூடில்பிரபலவான, இயல்புடையவன், காரியசமாத்தன், களத்திரவசியன, அடக்கமுடையவன், ரவிசேய்கூடில்கபடன், திடவசனுதிகன், ரவிபுதன்கூடில் வித்தை, அழகு, புத்தி, சரீரபெலம் இவையுடையவன் - ரவிகுருகூடில் அரசருறவுடையவன், பரிசுத்தன, வெகுமாணி, தனவான்; ரவிசுக்கிரன் கூடில் களத்திரவசியன், பந்துசன சத்துருவுடையவன்; ரவிசனி கூடில் அபகீர்த்தி யுடையவன், மந்தபுத்தி யுடையவன், சத்துருவசன்-இவைமதிமுதனோசனிவரை, ரவிசகிதப்பலன். எ-று.

இதுவுமது.

பலனில்வசனம்புகழாமிராசசமானனுமாம்
பைம்பொனுக்குள்ளதுவாஞ்சத்துருவிடன்பொன்பவனு
நலமின்மதிதேசாந்த்ரியாம்புதலவர்தனமா
நல்வசனன்மந்திரிசேனபதியாநயனமுஞ்
சலவிரணநோய்போகந்தனகுலமாமபந்து
சனப்பிரிவுரோகிதனமூர்க்கனுமந்தனமு
நிலைமையுங்கீர்த்தியுமுடையனுங்காந்திவித்தை
நிலவனநேர்மால்புகராய்கிற்ட திறைப்பலனே.

(இ-ள்.) ரவிமதிசேய்கூடில் வீண்வார்த்தைசொல்பவன், கீர்த்திமான்; ரவிமதிபுதன்கூடில் ராசசமானன் ரவிமதிகுருகூடில் ராச

வெகுமானன், நல்லவன், பிரபுசேவையையுடையவன்; ரவி மதி சுக்கிரன் கூடில் சத்துரு உடையவன் விடமார்க்கன், பொன்னுடையவன், பாவஞ்செய்பவன்; ரவி மதி சனி கூடில் குணவீனன், தேசாந்திரி; ரவிசேய்புதன் கூடில் புத்திரவான், தனவான்; ரவிசேய்குரு கூடில் நல்லவசனன், மந்திரி, சேனுபதி; ரவிசேய்சுக்கிரன்கூடில் நயனசல விரணரோகமுடையவன், போகமுடையவன், தனமுடையவன், குலவான்; ரவிசேய்சனிகூடில் டந்துசனப்பிரிவுடையவன், ரோகமுடையவன், தனமுடையவன், மூர்க்கன்; ரவி புதன் குரு கூடில் தனம் நிலைமை கீர்த்தியுடையவன்; ரவி புதன் சுக்கிரன் கூடில் சரீரகாந்தியும் வித்தையுமுடையவன். எ-று.

இதுவுமது.

நிற்குணமனுசாரநிதனனுமாந்தனமு
 நேத்திரரோகமுமறிவும்வசியமுமாநிருபர்
சொற்கினியதொழிற்றிடமாங்கெருவமபிமானந்
 துற்கருமமால்சனிநேர்சுக்கிரன்சுள்ளளவு
மெற்கிறையோடிருபெயர்கூடற்கிதுவாமுப்பேர்க்
 கிதன்மேற்பொய்கபடசமர்த்தெழுதலுமாமிசைபொன்
சற்குணமித்திரபுத்ரகளத்திரனனீகன்
 சசியனன்மாலொடும்பொனெடுந்தபனனைச்சாருதற்கே.

ரவி புதன் சனி கூடில் குணவீனன், அனுசாரன், தரித்திரன்; ரவி குரு சுக்கிரன் கூடில் தனம், நேத்திரரோகம், அறிவு, சனவசியம் இவையுடையவன்; ரவிகுருசனிகூடில் ராசப்பிரியன், ராசப்பிரவர்த்தகன், மனேதிடன்- ரவிசுக்கிரன் சனிகூடில்கெருவி, அபிமானி, துற்கருமி - இவைரவியோடு இருபேர்கூடும்பலனும்; ரவி மதிசேய் புதன்கூடில் பொய்யன், மனேகபடி, சமர்த்தன், எழுதவல்லபி; ரவிமதிசேய்குருகூடில் கீர்த்திமான், தனவான் சற்குணன், புத்திரமித்திரகளத்திரவான், சேனுபதி. எ-று.

இதுவுமது.

சாரமிலன்விடன்கண்பிணியாஞ்சனவிரோதி
தரித்திரனும்புத்திதனம்ராசசமானனுமாம்
பாரியிடத்ததிப்பிரியன்பாடகனுங்குடிலன்
பண்டிதனுந்தாரசுதபாக்கியனும்பணஞ்சேய்
நாரியிவையிலானுந்தாய்பிதிர்தாரவீன‍
னுஞ்சமர்த்தன்சுந்தரனுநாடகவித்தையுமாஞ்
சோரமிரணம்விரணந்தூர்த்தெழிலாமதிசேய்
சுக்கிரனேரனன்மால்சுன்சுடரொடுந்தோன்றுதற்கே.

(இ-ள்.) ரவிமதிசேய் சுக்கிரன்கூடில் உதவியற்றவன், விடன், நயனரோகி; ரவிமதிசேயசனிகூடில் இனசனவிரோதி, தரித்திரன்; ரவிமதிபுதனகுருகூடில் புததிமான், தனவான், ராசசமானன்; ரவி மதிபுதன் சுக்கிரன் கூடில்களததிரமோகி, பாடவல்லவன்; ரவிமதி புதன் சனி கூடில் குடிலன், பண்டிதன், ரவிமதி குரு சுக்கிரன் கூடில் களத்திர புத்திரபாக்கியவான்; ரவிமதி குருசனிகூடில் தரிததிரன, புத்திரவீனன், ரவி மதி சுக்கிரன்சனி கூடில் மாதர் பிதிர் தாரகீனன்-ரவிசேய்புதன் குருகூடில் சமாத்தன், சுந்தரன்; ரவிசேய்புதன் சுக்கிரன்கூடில் நாட்டிய வித்தையாதிகன்; ரவிசேய் புதன் சனிகூடில்சோரம், ருணம், விரணம், தூர்த்தொழில் இவை யுடையவன். எ - று.

இதுவுமது.

தோன்றல்களந்தனமதிகங்கிரகமுமப்படியாஞ்
சுததாரகீனனுமாமிவையொடுபிச்சகனு
மீன்றுவசன்சுகிபோகியரசனுமாங்கெருவி
வித்தைநிதனத்தானும்விடனினவிரோதி
யின்றவர்த்துவேஷியுமாமின்மையவமான
மெய்துகளத்திரனுஞ்சேய்பொன்கவிநேரீழ
மான்றலேவன்சனிவரையூழணைதலுக்காகாற்பே
ராய்க்கூட்விதன்மேற்கேளகத்தியமாமுனியே.

(இ-ள்.) ரவிசேய்குரு சுக்கிரன் கூடில் வெகுபுத்திர களத்திர வான், தனவான், கிரகவான்; ரவிசேய் குருசனிகூடில் தாரசுத ஹீனன்; ரவிசேய்சுக்கிரன் கூடில் மன்மதசுகி, போகவான், தராபதி ரவிபுதன் குருசனிகூடில் ,கெருவி, வித்தையுள்ளான், தரித்திரன் ரவிபுதன்சுக்கிரன் சனிகூடில் விடன், இனசன விரோதி, மாதூர் பிதுர்த்துவேஷி; ரவிகுருசுக்கிரன் சனிகூடில் தரித்திரன், அவமா னகளத்திரவான் - இவை ரவியுடன் மூன்றுபோ கூடும் பலனும் இதன்மேல் நாலுபேர் கூடும் பலனையுங் கேட்பாயாக அகத்தியமா முனியே. எ-று.

இதுவுமது.

அமர்வல்லவன்கோட்சமர்த்தனுந்தயையுதார
மபாக்கியனுஞ்சுதஹீனமாசையற்பாயுவுமாந்
தமர்சனவிரோதியெத்தனுந்தாரஹீனன்
சலரோகநேத்திரனுந்துராசைபிச்சாடனுமாஞ்
சுமதிதனம்படைத்தலவனும்பாவிசுராபானி
துற்கருமனுநிதனிசோரனுமாஞ்சுகளம்
விமலமதிவித்தையுமாமதிசேய்மால்பொன்னேர்
விதிநிதிசுக்கிரன்விசிதன்வெயிலிடைமேவுதற்கே.

(இ-ள்.) ரவிமதிசேய்புதன் குருகூடில் போாவல்லவன், கோட் சமர்த்தன்; ரவிமதிசேய்புதன்சுக்கிரன் கூடில் தயவுடையவன், உதார முடையவன், அபாக்கியவான்; ரவிமதிசேய்புதன் சனி கூடில் புத்திரஹீனன், துராசையுடையவன், அற்பாயு வுடையவன் ரவிமதிசேய்குரு சுக்கிரன்கூடில் இனசனவிரோதி, எததன்; ரவி மதி சேய்குருசனிகூடில் தாரஹீனன், நேத்திரசலரோகநேத்திரன்- ரவிமதிசேய்சுக்கிரன் சனிகூடில் துராசையுடையவன், பிச்சகன்; ரவிமதிபுதன் குருசுக்கிரன்கூடில் நல்லபுத்தியுடையவன், தனவான், சேனுதிபதி; ரவிமதிபுதன் குருசனிகூடில் பாவி, சுராபானி, துற் கர்மி ரவிமதி புதன்சுக்கிரன்சனிகூடில் தரித்திரன், சோரன் -

ரவிமதிகுருசுக்கிரன் சனிகூடில் நல்லகளத்திரமுடையவன், பரிசுத்தன் வித்தையாதிகன். எ-று.

இதுவுமது.

மேவலர்ச்செற்றவன்விடனும்பிச்சகன்வத்திரமு
மெய்யுமழுக்குள்ளவனுமேன்மைவிதனமுமாய்ப்
பாவம்வதைசெய்வதற்குப்பயமிலனுந்தேவ
பத்தியபிமானனுமாம்பார்மகனோர்நால்வர்
நாவலன்பொன்கவிசனியுநணுமிதற்காமிதன்மே
னவில்வதைவர்க்காந்தீர்த்தயாத்திரையெந்நாட்கும்
போவததிற்சோரமுமாமோனமெய்ஞ்ஞானமுமாய்ப்
புசிப்புமிலதாமறுபேர்பொருந்துதற்கிப்பலனே.

(இ-ள்.) ரவிசேய்புதன் குருசுக்கிரனகூடில் சேனாபதி, விடன் ரவிசேய்புதன் குருசனிகூடில்பிச்சகன், சரீரமும் ஆடையும் அழுக்குடையவன்; ரவிசேய்புதன் சுக்கிரன்சனிகூடில்பெரியவன், மனோதுக்கி, பாவி, கொலைபாதகன்; ரவிபுதன் குருசுக்கிரன்சனி கூடில் தேவபத்தி யுடைவன், அபிமானி, இவைரவியோடு நாலுபேர்கூடும் பலனும்-ரவியுடன் ஐவர்கூடில் எந்நாளுந் தீர்த்தயாத்திரை சஞ்சாரமும் சோரமும் உடையவன். ஆறுபேர் கூடில்மௌன மெய்ஞ்ஞானமும் உடையவனாகிப் புசிப்பும் இல்லாமல் இருப்பன். எ-று.

மதிசேகரப்பலன்.

இப்பவுமன்முதலவருமிந்துவுஞ்சேர்தலுங்கே
ளியல்புதனநல்லகுலமிதையதிடவானாந்
தப்பறைசொல்பவன்றாதன்கவிஞனுமாஞ்சாது
சனப்பிரியன்புத்திரனுஞ்சகலசனத்துவேஷி
துப்புரவில்லானும்பொல்லாக்களந்தாய்தந்தை
துவேஷிதரித்திரனுந்துர்த்தொழில்புவமாதுலனுஞ்
செப்புதல்குருராம்விடன்ரோகியுமாந்தீரோர்
சேய்பொன்னளவும்மதியைச்சேருதற்கித்திறனே.

(இ-ள்.) மதிசேய்கூடில்பாக்கியம், தனம், நல்லகுலம், மனோ திடம், இவையுடையவன் - மதிபுதன் கூடில்பொய்யன், தூதன், புலவன்; மதிகுருகூடில் சாதுமார்க்கன், வெகுசனப்பிரியன், புத்திரவான்; மதிசுக்கிரன்கூடில் சகலசனத்துவேஷி, அனுசாரவான்- மதிசனிகூடில் பொல்லாத களத்திரமுடையவன், மாதுர்பிதுர்த்து வேஷி, தரித்திரன்; மதிசேய் புதன்கூடில் துற்கர்மி, பாவி, தரித்திரன்; மதிசேய்குருக்கூடில் குரூரவாக்குடையவன், விடமார்க்கன், ரோகி. எ-று.

இதுவுமது.

தற்குணமனுசாரஞ்சஞ்சாரந்தாரந்
தனையரிழப்பவனுமாதரவவமானியுமாஞ்
சொற்கணழகறிவுதனவானுந்துற்கருமி
துற்சனனும்வெகுமானிசுகிகொடைநல்லவனு
நற்குலநற்புத்தியபிமானியுமாம்விருத்தை
நாயகன்வாசாலகனும்புரோகிதனல்லவனு
மற்கிறையைக்களலிகவிநேர்க்கவிசுண்வரைக்கு
மணைதலிதாமிதன்மேற்சொல்வதுவுமுப்பேரதற்கே.

(இ-ள்.) மதிசேய்சுக்கிரன் கூடில் சுதந்தரன், அனுசாரன், சஞ்சாரன், தாரசுதஹீனன்; மதிசேய்சனிகூடில் ஆதரவு அவமானமுடையவன்; மதிபுதன் குருகூடில் அபிராமவசனன், அழகு நேத்திரமுடையவன், அறிவுடையவன், தனவான்; மதிபுதன்சுக்கிரன் கூடில் துற்கர்மி, துற்சனன்; மதி புதன்சனிகூடில் வெகுமானி, சுகி, விதரணன், நல்லவன்; மதிகுரு சுக்கிரன் கூடில் நல்லகுலம், நல்லபுத்தி, அபிமானம் இவையுடையவன் - மதிகுரு சனிகூடில் விருத்தைநாயகன் வாசாலகன்; மதிசுக்கிரன் சனிகூடில் புரோகிதன், நல்லவன் இதன்மேல் மூன்றுபேர் கூடும்பலன் சொல்லுவோம். எ-று.

இதுவுமது.

பேரதிகநல்லபுத்திராஜவசியனுமாம்
பிரக்யாதியழகுள்ளமிவனதுபெற்றிலனுஞ்

சீரலதிலாசைசதாரித்திரையாஞ்சுகியுந்
திடமனதுமுளனும்பொல்லாதகளத்திரனும்
வாரமறிவிசைதனலாபஞ்செவிமந்தமுமாம்
வங்கிசபூச்சியன்றனவானும்விடமார்க்கமுமாம்
போரதிகன்சனப்பகையாம்புவிமகன்மால்பொன்னேர்
புதன்கவியேமன்மதியைப்பொருந்துதற்கித்திறனே.

(இ-ள்.) மதிசேய்புதன்குருகூடில் பிரபலன், நல்லபுத்தியுடையவன், ராஜவசியன்; மதிசேய்புதன் சுக்கிரன்கூடில் கீர்த்திமான், ரூபகளத்திரன், அழகில்லாதவன்; மதிசேய்புதன்சனிகூடில் துராசை சதாரித்திரை உடையவன்; மதிசேய்குருசுக்கிரன் கூடில்சுகி, மனோதிடன்; மதிசேய்சுக்கிரன் சனிகூடில் அன்பு, அறிவு, கீர்த்தி, தனலாபம், செவிமந்தம், இவைஉடையவன் - மதிபுதனகுரு சுக்கிரன் கூடில் பந்துசனபூச்சியன், தனவான்; மதிபுதன்குரு சனிகூடில் விடமார்க்கன்; மதிபுதன்சுக்கிரன சனிகூடில் வெகுகலகன், சனப்பகையுடையவன். எ - று.

இதுவுமது.

திறற்கேடன்றுக்கிபொல்லாதவனுகுமதியைச்
சீவன்முதல்மூவர்களுஞ்சேரிலிவைதிரப்
பீறைச்சேர்வனல்வரெனிற்றனங்குலநல்லவனும்
பெரியவனுதுலனும்பிச்சகனுமீதுளனுங்
குறைத்தேகனுகுமைவர்கூடிலண்டத்தளவுங்
குணிக்குமறிவுடையனழுக்குடையவனுமிதன்மேற்
பொறைப்போதற்கொருதனையமான்முதனேர்கனற்பாற்
பொருந்துதல்கேளென்றனன்சந்தனைப்பொருப்புற்றவனே.

(இ-ள்.) மதிகுருசுக்கிரன் சனிகூடில்திறற்கேடன், பொல்லாதவன், துக்கி இதன்மேல், ௫, பேர்கூடிற்பலன் அறியும்படி - மதிசேய் புதன் குரு சுக்கிரன் கூடில்தனவான், குலமுடையவன்,

கல்லவன்-மதி சேய் புதன் குருசனிகூடில்பெரியவன், தரித்திரன்-மதிசேய் புதன் சுக்கிரன் சனிகூடில பிச்சகன் - மதிசேய் குரு சுக்கிரன் சனிகூடில் பிச்சகன்-மதி புதன குரு சுக்கிரன் சனிகூடில் அங்கவீனன் - மதிசேய்புதன்குருசுக்கிரன் சனிகூடில் அண்டத்தளவுங் குணிக்கும் அறிவுடையவன், அழுக்குடையவன். இதன்மேல் பிரமாவுக்குப் புத்திரனுனவர் செவ்வாய் சேகரப்பலனும் கேட்பாயாகவென்று திருவாய் மலர்ந்தருளினவன் சந்தனசைலத்தையுடைய சுப்பிரமணியக்கடவுள். எ-று.

சேய்சேகரப்பலன்.

தனமறிவுவயித்தியமாஞ்சற்குணனுஞ்சோதிடத்திற்
றயவுளனுந்தாதுருவாதந்தசடுற்றவனு
மனதிதமில்பாடகனும்வாத்யநடங்கீத
மனதுளனுமங்கமதில்வடுக்குறைமற்றுளனு
மினசனமில்விலக்குளனுமிறைவரிடத்துளனு
மியல்புடையன்றனிவிடனுமின்பமில்புத்திரனுஞ்
சினமில்சனத்வேஷனுமாந்தரித்திரனுங்கொடிய
சேவகனுங்களனுமானேரனற்சேருதற்கே.

(இ-ள்.) சேய்புதன் கூடில்தனவான், அறிவுடையவன், வைத்தியன் - சேய்குருகூடில் சற்குணன், சோதிடப்பிரியன் சேய்சுக்கிரன் கூடில் தாதுருவாதி, அசடன் - சேய்சனிகூடில் மனேசஞ்சலீ, பாடகன் - சேய்புதன் குருகூடில் வாத்தியசங்கீதநடனப்பிரியன் - சேய்புதன் சுக்கிரன்கூடில் அங்கவீனன் - சேய்புதன் சனிகூடில் பந்துசனவீனன், விலைப்படுவன் - சேய்குரு சுக்கிரன்கூடில் அரசரிடத்து உறவுடையவன் - சேய்குருசனிகூடில் இயல்புடையவன், தனவான், விடன், சேய்சுக்கிரன்சனிகூடில் துற்புத்திரனை யுடையவன் - சேய்புதன்குருசுக்கிரன் கூடில் சாந்தன், சனத்துவேஷி - சேய்புதன்குரு சனிகூடில் தரித்திரன் - சேய்குருசுக்கிரன் சனிகூடில் கொடியசேவகன் - சேய் புதன் குரு சுக்கிரன் சனிகூடில் சோரன், எ-று.

புத குரு சுக்கிரன் சேகரப்பலன்.

சேரல்புதப்பலனிதுபாக்கியமறிவும்முளனுஞ்
செப்புதல்விநோதவிதம்பாடகனுஞ்செஞ்சொற்
சாரசன்சோதிடந்தனவான்சத்துருவற்றவனுஞ்
சௌபாக்கியவானுஞ்சத்தியன்விடனுந்தனியாஞ்
சூரனுமாங்குருநேராய்த்தூதனையுற்றிடற்காஞ்
சுக்கிரனேர்பொன்னையுறிற்சொம்மழகாஞ்சுதனி
லாரெனலாஞ்சவுக்கியமாமசிதசிதற்சேரி
லவமானகளத்தாசரழிவதுமாவதுமே.

(இ-ள்.) புதன்குருகூடில் பாக்கியம், அறிவு,அழகு இவை உடையவன் - புதன்சுக்கிரன் கூடில்விநோதவசனன், பாடகன் - புதன் சனிகூடில் கல்விமான், கணிதன், தனவான், சத்துரு இல்லாதவன் - புதன்குருசுக்கிரன் கூடில் சௌபாக்கியன் - புதன்குருசனி கூடில் சத்தியவாக்குடையவன், விடமாரிக்கன், - புதன்சுக்கிரன் சனிகூடில் தனவான் - புதன்குரு சுக்கிரன்சனிகூடில் சூரன் இவை புதசேகரம் - குருசுக்கிரன்கூடில் தனவான், அழகன் - குருசனி கூடில் புத்திரவீனன்-குருசுக்கிரன்சனி கூடில் சௌக்கிய முடையவன் - இவை குருசேகரம், சுக்கிரன் சனிகூடில் அவமான களத்திரமுடையவன் ஆவதும் அழிவதுமான தாசிதாசருடையவன். எ-று.

அஷ்டவர்க்க சமதாயபலன்.

விருத்தம்.

வேறு.

ஐயாச்சுவாமியத்தி லார்ந்தசிற்றம் பலச்சக்கரம்
மெய்யாகவிங்குகொளின் மேலாம் நலனைத்தரும்
கையால்பரல்தப்பும் காணெனிரண்டதமம்
பொய்யாதமூன்றுமுதல் போற்றுவாயுத்தமமே.

(இ-ள்.) அஷ்டகவர்க்கு - ஐயாச்சுவாமீயத்தில் காணும் சிற்றம் பலச்சக்கிரத்தை, மெய்யாயிங்குகொண்டுபார்த்தால் - நன்மையாம்,

அதுதள்ளி - கையால் கணக்கிடும் பரல் தப்பிப்போனாலும் போம், அது நிற்க அஷ்டகவர்க்கில் - ஒன்றிரண்டு பரலின்பலன் அதமம், மூன்றின்மேலேறும் பரலின்பலன் உத்தமம். எ-று.

எழுவர்பலன்.

இரவிக்கொன்பான்மதிக்கும் புகுந்திக்குமீரிரண்டாம்
குருவிற்கைந்தாஞ்சேய்க்கு மூன்றுசுக்கிரனுக்கோரேழ்
வருசனிக்கிருநான்காகும் வாய்ந்திடுஞ்சமதாயத்தை [ளே.
விரிவுசோத்தியத்தால்தாக்கி மேன்மூவொன்பானுக்கீறா

(இ-ள்.) சூரியன் சமதாயத்தில் கூ - வது ராசிப்பரலைக்கொண்டு பிதாவுக்கும், சந்திரன் சமதாயத்தில்-ச-வது ராசிப்பரலைக்கொண்டு-மாதாவுக்கும் - நாதிக்கும், குருசமதாயத்தில் ரு - வது ராசிப்பரலைக் கொண்டு - புத்திரர்க்கும், குஜன்சமதாயத்தில் ங - து ராசிப் பரலைக் கொண்டு சகோதரருக்கும், சுக்கிரன் சமதாயத்தில் எ - வது ராசிப்பரலைக்கொண்டு களத்திரத்திற்கும் சநிசமதாயத்தில் அ - வது ராசிப்பரலைக்கொண்டு ஜாதகனுக்கும், யாதொருபலனைச் சொல்லுமிடத்தில் அந்த அந்த ராசியின்பரலை சோத்தியபரலினால் பெருக்கி உஎ-க்கு கொடுக்கநின்றது - நட்சத்திரமாகும் எ-று.

திருவளரொளிபிறைக்குச் சென்னிடண்முன்னாகக்கொள்
தெரிவையேதேய்பிறைக்குச் செப்பவிட்டம்முன்னாக
விரைவுடனெண்ணிக்கண்ட நாள்குருமேவுங்காலம்
பரவுநற்பலன்சுன்மேவில் பன்னுகாரகர்க்குவூனம்.

(இ-ள்.) அதனால் வருந்தொகைக்கு பூர்வபக்ஷத்தில் அச்சுவனி முதலாகவும், அபரபக்ஷத்தில் அவிட்டமுதலாகவும் எண்ணிக்கண்ட நக்ஷத்திரத்தில் குருவரில் நன்மையும் சனிவரில் தீமையும், அந்தந்த காரகருக்கு உண்டாம். எ-று.

ஊனமிற்பரன்முப்பான்மே லோங்கிடிலுத்தமந்தான்
ஆனவையைந்தின்மேலே யாகிடின்மத்திபந்தான்

போனதிற்குறையுமாகில் புகல்பலனதமமாகத்
தானுரையோரைத்தொட்டு சதுர்சதுர்சதுராக்கொள்ளே.

(இ-ள்.) ஜாதகனுடைய வாழ்நாளை முக்கூறுக்கியதற்கு சர்வாஷ்டகவர்க்கில்-இலக்கினமுதல் - நான்குவீட்டிலுள்ளதொகை ௱0 - க்கு மேல்பட்டா லுத்தமபலன் என்றும் அதற்குமேல் நான்கு வீட்டிலுள்ள தொகை உ௱-க்கு மேல்படில் மத்திபபலனென்றும் அதற்கு மேல் நான்குவீட்டிலுள்ளதொகை உ௱-இக் குறையில் அதம பலன் என்றும் சொல்வாயாக இதுதான் திரிவிதகண்டமெனப்படும். எ-று.

எக்காளமுற்றபல னேறுந்தினந்தினமும்
தொக்காதுமத்தளமே துஞ்சிமிஞ்சிதுஞ்சிடுமாம்
முக்காலும்டமருகமோ வோங்கிதுஞ்சிவோங்கிடுந்தான்
இக்காலத்தவருக்கு மிதுவேதிரிவிதயோகம்.

(இ-ள்.) மேற்சொல்லிய திரிவிதகண்டத்தில் எக்காளயோகபலனுவது - விர்த்தியாகிக் கொண்டிருக்கும், மத்தள யோகபலன் - குறைந்து-நிறைந்து - குறையுமாம், டமருக யோகபலன் - ஏறி - இறங்கி - ஏற்றமாகும். எ-று.

டதிடுனென்றிற்கீராறேங்கில் பகர்ந்திடுசெலவுமேலாம்
துதிபெறுபத்திலேறி வியந்துஞ்சிற்சகடமில்லை
வதியுமாறெட்டீராறின் மன்பரற்றொகைக்குமேலாய் [ம்.
பதிபுகழிரண்டொன்பான்பன் னென்றிற்குப்பகர்வாயோக

(இ-ள்.) லாபத்தானத்திற்கு விரயத்தானத்தொகையுயரில்செலவதிகம், ராஜ்ஜியத்தானத்திற்கு விரயத்தானத்தொகையுயரில் செலவதிகம், ௬-அ-கஉ.ன் தொகைக்கு உ-௯-௧௧-ன் பரல் உயர்ந்திருக்குமாகில் யோகபலன் சொல்லுவாய். எ-று.

இராசிகளிற் சந்திர னின்றபலன்.

மேடத்தினின்றபலன்.

விருத்தம்.
வேறு.

பன்னிருராசிகடோறுஞ்சந்திரன்றனின்ற
பலன்பகர்வர்மேடத்தின்மதியிற்கப்பிறந்தோன்
மின்னுவிழியுருண்டுசற்றேசிவந்திருக்குங்காமி
மிகுதூரநடந்திடுவன்சீக்கிரசந்தோஷி
பொன்னைமிகத்தேடியுடனேசெலவுபுரிவான்
புயபலன்வீரியன்மடவார்கலவிக்குவலியன்
சென்னிதனின்மறுவடுவொன்றுளன்சபலனாகும்
செலங்கண்டஞ்சுவன்முழந்தாட்செறிபிணிவுள்ளவனும்.

(இ-ள்.) இராசி கஉ-ல் சந்திரனின்றபலன் சொல்லுமிடத்தில் மேஷராசியில் மதியிருக்கப் பிறந்தவனுக்கு பிரகாசம் பொருந்திய நேத்திரமானது உருட்சியாகவும், சற்று சிவந்தும், காமாந்தகமும், அதிகநடையும், சீக்கிரமாய் சந்தோஷித்தலும், திரவியத்தைச் சம்பாதித்துச் செலவுசெய்தலும், புஜபல பராக்கிரமமும், ஸ்திரீகளுடன் விளையாடுவதில் கெட்டித்தன்மையும், தலையில் மறு அல்லது வடிவு புத்திசபலமும், ஜலத்தைக்கண்டால் பயமும், முழங்காலில் நோயும் உண்டாம். எ-று.

இடபத்தினின்றபலன்.

உள்ளமகிழ்தருளுமதியிடபத்திலிருக்க
உற்பவித்தோன்குணங்கிருபையுடையனல்லரூபன்
தெள்ளியகாசியின்முகத்திற்பக்கத்தின்மறுவான்
தியாகவான்றுடைவதனம்பருத்திருமலுவனும்

பிள்ளைகண்முந்தியுமுள்ளான்பெண்பெறுவன்பொறுமை
பெறும்பசியனிருசொல்லன்பின்புசந்தோஷிப்பன்
கள்ளவிழியார்க்கினியனன்பருக்குநண்பன்
கண்டிடுமெத்திமவயதோன்சவுக்கியவான்.

(இ-ள்.) ரிஷபராசியில் பிறந்தவனுக்கு இரக்கமுள்ள மனமும், அழகும், பிரகாசம்பொருந்திய மூக்கில் முகத்தில் பக்கத்தில் மறுவும், துடை முகம் பெருத்திருத்தலும், இரும்புதலும், முதலில் பிறப்பது ஆண்பிள்ளை, பின்னிட்டுப் பிறப்பது பெண்பிள்ளைகள், சாந்தம், அதிகபசி, வாக்கு மாறிப்பேசி பின்பு சந்தோஷமடைதல், பரத்தையருக்கு சிநேகம், சினேகிதருக்குச் சினேகன், ஆயுமத்திபம், சவுக்கியம், சம்பத்து உண்டா மென்பதாம். எ - று.

மிதுனத்தினின்றபலன்.

வான்மிதுனசசிபலன்மின்னார்மகிழுஞ்சுரதன்
மகிழ்தூதன்சிவந்தகண்ணன்மயிர்சுருண்டேயிருப்பன்
தான்மிகச்சூதுகள்பெறுவனழகன்சத்தியவான்
சாப்பாட்டினிற்பிரியன்றகும்புத்திமானும்
பான்மைசெறிபட்டுடுக்கப்பிரியமுளன்முகத்தில்
பருத்தமறுவுளன்பிரியவாக்குமிகுரசவான்
தேனனையமொழிமடவார்கொண்டாடிப்புகழ்வர்
திடமாயுன்னதமாகச்செறிந்திருக்குநாசி.

(இ-ள்.) மிதுனராசியில் மதியிருக்கப் பிறந்தவனுக்கு ஸ்திரீகள் சந்தோஷிக்கத்தகுந்த லீலாவினோதம், தூதுபோவதில் இச்சை, சிவப்புக்கண், சுருட்டைமயிர், மிகுந்த சூதுகள் தெரிதல், அந்தம், உண்மை, போஜனப்பிரியம், தகுதியானபுத்தி, நல்ல பட்டுவஸ்திர மணிவதில் சந்தோஷம், முகத்தில்மறு, பிரியமுள்ள ரசவசனமும், அழகிய ஸ்திரீகள் புகழ்தலும், ஆயுள்தீர்க்கமும், அழகியமூக்கும் உண்டாம். எ - று.

கடகத்தினின்றபலன்.

நாசமிலாக்கடகத்தின்மதியுலவச்சனித்தோன்
நண்ணுபலன்மடவாரைநகைபுரிந்துசயிப்பன்
வீசிவளைந்தோடுவனன்புடையநண்பருடையோன்
வீடதிகமாய்க்கட்டிமேவுவன்மெய்குறளன்
நேசமுறுமனக்கள்ளனுத்தேசமுள்ளான்
நிலையில்லாத்தனம்படைத்துநீணிலத்திலிருப்பன்
பாசமுளனெவருக்குபருத்தகழுத்துளனும்
பரவுசமவுபாயனெனவேபகரவேண்டும்.

(இ - ள்.) கடகராசியின் பலனாவது—ஸதிரீகளை கைவசம் செய்துக்கொள்ளல், வளைந்து வளைந்து ஓடல், அன்புள்ள சினேகிதருடைத்தாயிருத்தல், அனேகமாய் வீடுகளைக்கட்டிவாழ்தல், குறுகியதேகம், கபடசினேகம், யோசனை, நிலையில்லாததிரவியம் சம்பாதித்திருத்தல், யாவரிடத்திலும் பிரியம், பெருத்த கழுத்து, சமயத்திற்குத் தக்க வுபாயமெடுத்தல் உண்டாமென்பதாம். எ-று.

சிங்கத்தினின்றபலன்.

வேண்டிடுஞ்சிங்கத்தினிற்சந்திரனிருக்கும்பலன்கள்
மிகுகொடியனெடுங்கதுப்பன்மின்னார்க்குப்பகைவன்
நீண்டமலையிற்காட்டிற்சஞ்சரிக்கப்பிரியன்
நேயமிலான்பசிதாகமுடையவனூண்பிரியன்
தீண்டிடுந்தாம்பூலநேயன்மனோதுககன்
தியாகியெழில்பராக்கிரமன்றிரபுத்தியுளனும்
ஆண்டகர்விவன்னடையான்விசாலமுளவதனன்
அற்பகாரியக்கோபியாவனெனச்சொல்லே.

(இ-ள்.) சிங்கராசியின் பலனாவது—மிகுந்த கொடுமைநீண்டசிகை, ஸ்திரீவிரோதம், மலை-வனம்-இவைகளில் வாசம்செய்ய இஷ்டம், நேசமில்லாமை, பசிதாகம், போஜனப்பிரியம், தாம்பூலப்பிரியம், சஞ்சலம், கொடை, யுடைமை, வீரத்தன்மை, கெட்டி

மனசு, கெர்வம், உரத்தநடை, பாந்தமுகம், அல்பத்திற்கு கோபம் உண்டாம். எ-று.

கன்னியினின்றபலன்.

சொல்லுங்கன்னியிற்சோமன்சூழ்பலன்கள்பகரில்
சுகவான்சத்யவாக்கிசுரதத்திற்பிரியன்
கல்வியிற்சாத்திரவகையிலவல்லவன்மெய்யிளைத்தோன்
காயமுமுன்னதன்லச்சையுடன்படுநற்கருமன்
வெல்லுமேம்பாடுடையன்நற்மசிந்தையாளன்
விதேசத்திற்சஞ்சாரிமிருதுவாக்குமுளனும்
நல்லவர்கள்பலராலேபூசிதம்பெற்றிடுவன்
நாரிகேள்பிள்ளைகொஞ்சமாகவிலுங்காலே.

(இ-ள்.) கன்னியிராசியின் பலனாவது—சுகம், சத்தியவசனம், லீலாவிநோதம், கல்வியில் சாஸ்திரங்களில் வல்லமை, மெலிந்த தேகம், நெடியவுருவம், வெட்கம், சதகாரியதுரந்தரம், வெற்றிப் பிரதாபம் தர்மகுணம், பரதேசசஞ்சாரம், மிதவசனம், சன்மார்க் கர்களால் பூஜிதை, பெண்குழந்தை அதிகம், ஆண்குழந்தை கொஞ் சம் உண்டாம். எ-று.

துலாத்தினின்றபலன்.

கூலேகோவிடத்தினிற்சந்திரனிருக்கும்பலன்கள்
கன்னியரைச்சயித்திடுவனகல்வியிற்பண்டிதனும்
மேலேகிஞ்சிதரோகிசுகனிதியமுடையோன்
விப்பிரர்தேவர்களிடத்திற்பிரியன்வெகுசாந்தன்
கோலேபோலிளைத்தசையாப்பிரகிருதியிலேயான்
கொள்ளவும்விற்கவும்வல்லன்குலமாதருடையன்
மாலேகேடமர்பகைவனுமங்கவீனன்
மனதிற்சந்தோஷமிலான்வன்மனுங்கண்டீர்.

(இ-ள்.) துலாவிராசியின் பலனாவது—ஸ்திரீகளைச் செயித்தல், கல்வியில் பாண்டித்தியம், கிஞ்சத் வியாதி, சுகம், திரவியம், பிரா மண விசுவாசம், தெய்வபத்தி, சாத்விகம், கோல்போல் வளர்ந்தி

ருத்தல், மெலிவு, திரபுத்தியில்லாமை, கொள்ள - விற்க-வல்லமை, நல்ல குடியில் பிறந்த பெண்களை யடைதல், இனசத்துரு, உறுப்பு குறைவு, மனசில் துக்கமுடைமை, பகை உண்டாம். எ-று.

விருச்சிகத்தினின்றபலன்.

கண்டீர்சந்திரபகவான்விரிச்சிகத்தின்பலன்கள்
கருதுங்காற்றிரண்டமுழங்காலுடையனவன்
கொண்டாடும்வாலிபத்திலதாதையிழந்திடுவன்
கொடியசேஷ்டையன்மச்சங்கொள்வானேயாளன்
செண்டாடுஞ்செங்கைமன்னர்பூசிதனையிடுவன்
செனங்களறியாதொளித்துச்செய்குவன்பாவத்தை
மிண்டாரும்பக்ஷிமிருகம்பிடிக்குங்கையன்
விழிமார்பும்பருத்திருக்குமெனப்பலன்கள்கூறே.

(இ-ள்.) விருச்சிகவிராசியின் பலனாவது—திரட்சியானமுழந்தாள், தன்னைக் கொண்டாடல், பாலியதிசையில் பிதாவிழப்பு, மிகுந்த குறும்பு, பயப்படல், பிணி, ராஜபிரிதி, பிறரறியாமல்பாவத்தைச்செய்தல், மிருகங்களையும் பக்ஷிகளையும பிடிப்பதில் கைதேர்ந்தவன், கண்-மார்பு-விசாலம் உண்டாம். எ-று.

தனுசினின்றபலன்.

கூறுதனுராசியிற்சந்திரனின்றபலன்கள்
கூன்முதுகுள்ளவன்பலவான்குலவியகம்பீரன்
வீறுநிதிக்கினியனுற்சாகிசிற்பமறிவன்
மிகுவாசையுளன்வெலலுஞ்சொல்லன்வீரியவான்
தேறுபிதாநிதியதனைச்செலவுசெய்யுந்தியாகி
செறியும்புயந்திரண்டிருக்குந்திண்கவிதையறிவான்
மாறுசெய்தேதன்றமரைத்தூஷிப்பன்வசியன்
மணிகளணிந்திடுகழுத்தும்வதனமுநீண்டிருப்பன்.

(இ-ள்.) தனுசுவிராசிப்பலனாவது—முதுகு கூன், பெலம், காம்பீரம், பொருளாசை, சந்தோஷம், சிற்பசாஸ்திரம், பேராசை,

வெல்லுஞ்சொல், பராக்கிரமம், தகப்பன் தேடிவைத்த திரவியச் செலவு தாராளம், திரண்ட உருண்டதோள், நன்றாய் கவிலக்ஷணந் தெரிதல், செலவுசெய்தல், மோசமாகச் சுற்றத்தை இகழ்தல், வசீகரம், ரத்தினபரணம் பூண்டிருக்கும் கழுத்து, நீண்டமுகம் உண்டாம். எ-று.

மகரத்தினின்றபலன்.

நீண்டமகரச்சசிக்குப்பலன்றனமுமில்லான்
நிறைந்தகாவியந்தெளிவானிதியுதவாலுத்தன்
பூண்டசவுபாக்கியவான்கேடானசொல்லே
புகலுங்காமியகமனன்புயபலவானவன்
வேண்டியவிச்சைகளுடையன்சோம்பனினிதனும்
மின்னனையார்புகழழகன்மெய்க்கிருபையில்லான்
ஆண்டகையன்மனைவியைத்தன்மைந்தரைக்கொண்டாடி
அவனிமிசையிருப்பனெனவறிந்துரைகள்செய்வாய்.

(இ-ள்.) மகரவிராசிப் பலனாவது — திரவியம், இல்லாமை, பூரணமாகக் காவியாலங்காரந்தெரிதல், பொருளுதவி செய்யாத லோபி, சம்பத்து, கெட்டவார்த்தை பேசல், காமவிகாரம், புஜபலம், மிகவும் இச்சைகொள்ளல், சோம்பல், இனிமை, ஸ்திரீகள் மோகிக்கத்தக்க வடிவம், உள்ளன்பில்லாமை, புருஷரை வெல்லல், பெண்டு பிள்ளைகளை மெச்சுதல் உண்டாம். எ-று.

கும்பத்தினின்றபலன்.

செய்யகும்பச்சசிபலன்களிடுப்பின்மறுவுளனும்
சிலகருமமழிக்கவுமாக்கவும்வலியன்சில்லோர்
தையலுக்குமகட்குமிச்சையுறும்பாவிகொடியன்
சரீரமதுநீண்டிருப்பன்காறுடையும்பெரியன்
துய்யகழுத்தும்நெடியன்பெருமுதுகன்வழிகள்
துலைவாகநடக்கவலன்கந்தமலர்ப்பிரியன்
மெய்யினரம்புயர்ந்துதலைசிக்குமயிருள்ளான்
விரவுபெருங்குறியனெனவேவிளம்பவேண்டும்.

(இ-ள்.) கும்பவிராசியின்பலனாவது—இடையில்மறு, சிலகாரியங்களை அழித்தலில் ஆக்கலில் வல்லமை, சில சிறுபெண்களிடத்திலும் குமாரியிடத்திலும் புணர்ச்சிப்பாபமும், கொடுமையும், நெட்டைத்தேகம், பெருத்தமுதுவு, நெடுந்தூரநடை வல்லமை, வாசனை, புஷ்பத்தினிடம் பிரியம், சரீரத்தில் நரம்புகள் எழும்பியிருத்தல், சிக்குள்ள சிகை, ஆண்குறி நீட்சியும் உண்டாம். எ-று.

மீனத்தினின்றபலன்.

விளம்பியமீனச்சசிக்குப்பலனீரிற்பிறக்கும்
 மீன்முதற்செந்துக்களின்மேன்மிகப்பிரியனாவன்
வளம்பெரியபோகபோக்கியவஸ்துக்களினும்
 மருவுகிரகங்களினுமனமுடையனாவன்
ளுளமதனிற்பரதாரவிருப்புடையனழகன்
 உற்றகுலமகளிடத்துமுறவுடையன்சமவான்
இளம்பிறைநேர்நுதலதனிற்சிந்தூரதிலதம்
 எழுதியிளையோர்மனதையிழுக்குமடமானே.

(இ-ள்.) மீனவிராசிப் பலனாவது—ஜலத்தினிடத்தி லுண்டாகிய ஜீவசெந்துக்களை மிகத்தின்னல், வளப்பம்பொருந்திய போகபாக்கியமான பொருளிடத்தும், வீடு வாசல்களிடத்தும் பிரியம், பரதார்கமனம், அழகு, நல்ல பெண்சாதி யிடத்தில் நேசமும், சமுத்வம் நெற்றியில் சிந்தூரப்பொட்டிட்டுக்கொண்டு வாலிபர்மனதை வலிக்கும்படியான அழகுள்ள பெண்ணே. எ-று.

சந்திரனைக் கிரகங்கள் பார்த்தபலன்.

வேறு.

மேடம்.

ஆட்டில்வேள்குடையைப்புந்தியார்காணிலதிகவித்தை
பூட்டியபொன்சேய்காணிற்புரவலனாகிவாழ்வன்
கூட்டியபிருகுகாணிற்குணவானுங்காரிகள்ளன்
நீட்டியபதங்கன்காணிலிரணியமில்லையென்னே.

(இ-ள்.) மேஷத்தி லிருக்கின்ற மன்மதனுடைய குடையாகிய சந்திரனை புதன்பார்க்கில் கல்வி, குருவுங் குஜனும்பார்க்கில் இராஜனுக வாழ்வன், சுக்கிரன்பார்க்கில் குணசாலி, சனிபார்க்கில் திருடன், சூரியன்பார்க்கில் திரவியமில்லாமை, (இராகு கேது பார்க்கில் மிருகபயம், சிலவழக்கு) எ-று.

இடபம்.

என்னரன்விடையிலேறுமிராமனைச்செவ்வாய்காணில்
பொன்னிலான்புந்திகள்ளன்பொன்காணிற்புகழுளோனும்
பன்னியபளிங்குவேந்தன்பங்குபாதன்பொன்னுள்ளான்
துன்னியகதிரோன்காணிலேவியதொழில்செய்வானும்.

(இ-ள்.) ஈஸ்வரனுடைய வாகனமாகிய ரிஷபத்திலிருக்கின்ற இரவிற்கதிகாரியாகிய சந்திரனை குஜன்காணில் இல்லாமை, புதன் காணில் திருட்டு, குருகாணில் கீர்த்தி, சுக்கிரன்காணில் அரசு, சனிகாணில் திரவியம், சூரியன்காணில் இட்டவேலை செய்தல், (இராகு கேது காணில் வாகனம், பொருள்) எ - று.

மிதுனம்.

வான்றண்டல்லோனையாரல்காணவலவிரும்புவிற்பன்
கான்முடம்புந்திகாணின்மன்னனுங்கனகன்காணின்
மேன்மைபண்டிதனுஞ்சுங்கன்காணினல்லச்சமில்லான்
மான்சனிதனினூல்விற்பன்மார்த்தாண்டன்மிடியேதங்கும்

(இ - ள்.) மிதுனத்தில் இரவிற்கதிபனுகிய சந்திரனை சேய் காணில் இரும்பு வியாபாரம், மொண்டிக்கால், புதன்காணில் இராஜத்வம், குரு காணில் மேம்பாடு பாண்டித்தியம், சுக்கிரன் காணில் தைரியம், மகராதிபனுகிய சனிகாணில் பஞ்சுவிற்பன், சூரியன் காணில் தரித்திரம், (இராகு காணில் பெருமை, கேதுகாணில் ஞானம்) எ - று.

கடகம்.

தங்கியநண்டிலிந்துதன்னைவக்கிரன்முன்காணில்
பொங்கியகுசலைசெய்துபொருளடைபுதனில்வித்தை

துங்கமன்பார்க்கில்ஞானிசுங்கன்பார்வைக்குமன்னன்
செங்கதிர்நோக்கண்ணோய்திறல்சனியிருமலெய்ப்பான்.

(இ-ள்.) கடகத்தி லிருக்கின்ற சந்திரனை செவ்வாய் காணில் வாய்விற்று ஜீவனம், புதன்காணில் கல்வி, குருகாணில் ஞானம், சுக்கிரன்காணில் அரசு, சூரியன்காணில் கண்ணோய், சனி காணில் இருமல், இளைப்பு, (ராகுகாணில் வியாதி, கேதுகாணில்வாதம்) எ-று.

சிங்கம்.

உய்யரியிந்தைப்புந்திபார்க்கச்சோதிடநூலோதும்
செய்யபொன்றனவான்வெள்ளிதிருஷ்டிமன்னவனுங்காரி
மெய்யுறநோக்கினுநாவிதத்தொழிலவிளைப்பன்வெய்யோன்
பையவேகாணின்மன்னும்பயில்குசன்பாராள்விப்பன்.

(இ-ள்.) சிங்கத்தி லிருக்கின்ற சந்திரனை புதன்காணில் கணித சாஸ்திரம், குருகாணில் தனம், சுக்கிரன்காணில் அரசு, சனி காணில் நாவுவித்தொழில், சூரியன்காணில் இராஜத்வம், செவ்வாய் காணில் உலகாளும், (ராகுகாணில் விரோதம், கேதுகாணில் கலகம்.) எ-று.

கன்னி.

விற்பனமடந்தையிந்தைவேண்டியேகணக்கன்காணின்
நற்புவிபுரப்பன்பொன்றேகத்திற்சேனுபதியாம்
முற்பகர்சுங்கன்சாலநிபுணன்சேய்முடவன்வெய்யோன்
பொற்புறக்காணிற்கன்னியாற்பிழைப்புண்டாவானே.

(இ-ள்.) கன்னியி லிருக்கின்ற சந்திரனை புதன்காணில் லோக சம்ரக்ஷகம், குருகாணில் சேனுதிபத்தியம், சுக்கிரன் காணில் மிகுந்த வித்துவத்தனம், செவ்வாய் சனி சூரியன் காணில் ஸ்திரிமூலத்தில் ஜீவனம், (ராகுகாணில் இடம், கேதுகாணில் பொருள்.) எ-று.

துலாம்.

ஆவன்கோவிடத்தல்லோனைமால்காணினரசனவன்
மேவியபொன்னின்பார்வைமிகுசொர்னவேலைசெய்வன்

தாவியபிருகுகாணில்யாபாரிசனிசேய்வெய்யோன்
மூவர்கண்டிடில்வஞ்சிப்பன்பலரையும்முறைமைபோல.

(இ-ள்.) துலாத்திலிருக்கின்ற சந்திரனை புதன்காணில் பிரபுத்வம், குருகாணில் பொன்னுலாகுந்தொழில், சுக்கிரன் காணில் வியாபாரம், சனி செவ்வாய் சூரியன்காணில் வஞ்சனை, (இராகு காணில் பிரீதி, கேதுகாணில் மேன்மை. எ-று.

விருச்சிகம்.

போலுந்தேளிந்தைக்கண்டபுதனுக்குத்தாதைரெண்டாம்
மேலுமேகுருதிர்ஷ்டிக்குப்பிராமணசீலன்வெள்ளி
சாலவேகாணவண்ணார்பணிசனிவெய்யோன்செவ்வாய்
கோலமாமங்கவீனஞ்சரித்திரன்குணம்வேறுமே.

(இ-ள்.) விருச்சிகத்தி லிருக்கின்ற சந்திரனை புதன் காணில் தந்தையிருவர், குருகாணில் பரிசுத்தம், சுக்கிரன்காணில் வண்ணன்தொழில், சனி செவ்வாய் சூரியன் காணில் அங்கவீனம், தரித்திரம், குணமாறல் (ராகுகாணில் விஷபரிக்ஷை, கேதுகாணில் மயக்கம்) எ-று.

தனுசு.

ஆந்தனுவிராமன்றன்னைப்புதன்காணவறிஞன்ஞானி [ச்
யோந்தபொன்காணமன்னும்பொருந்துசுக்கிரன்றிர்ஷ்டிக்கு
சேர்ந்துநின்றுசரிப்பர்பலர்கூடிச்செவ்வாய்வெய்யோன்
ஏந்தியசனியுங்காணவிருமலாயிருப்பன்கண்டீர்.

(இ-ள்.) தனுசி லிருக்கின்ற சந்திரனை புதன் காணில் அறிவு, குணம், குருகாணில் அரசு, சுக்கிரன்காணில் பலபேர்கள் யனுசரித்தல், செவ்வாய் சூரியன் சனிகாணில் தேககூீணம், (இராகுகாணில் அரசு, கேதுகாணில் வித்வத்தன்மை) எ-று.

மகரம்.

கண்டிமெகரத்திக்தைக்கணக்கனுமரசன்காணப்
பண்டிதன்சுக்கிரற்குப்பயில்குருவேரேந்திரனுவான்

மொண்டிக்குத்தனவானுவன்முனிரவிதரித்திரந்தான்
மண்டியகுசனும்பார்க்கிற்பூபதியாகிவாழ்வான்.

(இ-ள்.) மகரத்தி லிருக்கின்ற சந்திரனை புதன் குரு காணில் வித்தியாவிலாசம், சுக்கிரன் காணில் குருபீடம், பிரபுத்வம், சனி காணில் திரவியம், சூரியன்காணில் தாரித்திரம், செவ்வாய் காணில் லோகாராடடியம், (இராகு காணில் மேம்பாடு, கேது காணில் யாத்திரை.) எ-று.

கும்பம்.

வாழ்கும்பச்சசியைப்புந்திகாணப்பூபதியுமாவன்
நீள்குருநோக்கிற்பூமிநிருபர்போனீளவாழ்வன்
சூழ்குசனிரவிகாரிசுக்கிரனல்வர்காணில்
தாழ்விலாப்பரதாரத்திற்றுற்பரியங்களுள்ளான்.

(இ-ள்.) கும்பத்திலிருக்கின்ற சந்திரனை புதன் காணில் இராஜ்ஜியாதிபதித்துவம், குருகாணில் ராஜ்ஜியாதிகாரம், செவ்வாய் சூரியன் சனி சுக்கிரன் காணில் பரஸ்திரீ கமனம், (இராகு காணில் தீபாந்திரம், கேதுகாணில் ஜலபதார்த்தம்.) எ-று.

மீனம்.

உள்ளமீனத்திலிந்தையுறும்புந்திகண்டகாலை
மெள்ளவேபிரியவாக்கிவேந்தற்குவேந்தேயாகும்
தெள்ளியவெள்ளிகாணப்பண்டிதன்செவ்வாய்வெய்யோன்
கள்ளமாய்காரிமூவர்காணவேபாவியாவன்.

(இ-ள்.) மீனத்தி லிருக்கின்ற சந்திரனை புதன்காணில் பிரிய வசனம், குருகாணில் இராஜாதித்வம், சுக்கிரன்காணில் சகலகலை வல்லபம், செவ்வாய் சூரியன் சனிகாணில் பாபத்வம், (இராகுகாணில் விரோதம், கேதுகாணில் கோபம்.) எ-று.

இராசிகளிற்சனிநின்றபலன்.

மேட-விரிச்சிகத்தினின்றபலன்.

வேறு.

மேடத்திற்காரிநிற்கின்மிகுமாயரூபிமூர்க்கன்
தேடிடானுறவுசற்றும்பிரமிக்கச்சூறிதுசொல்வன்
ஓடுதேள்காரிக்கேசட்டுண்டுமெய்க்கீறதாவன்
நீடியதனமுமில்லான்கொலைசெய்தேநிற்பன்றானே.

(இ-ள்.) மேடத்தில்சனியிருக்கப்பிறந்த ஜாதகன்—மாயாவதி மூர்க்கன், பந்துக்களை விரும்பாதவன், பிரமிக்கும்படியான வார்த்தைசொல்வனும். விருச்சிகத்தில் சனியிருக்க-ஒருவருக்கு கட்டுபடல், உடலம் வருத்தப்படல், துட்டில்லாமை, கொலைசெய்தலாம். எ-று.

இடப-துலாத்தினின்றபலன்.

நிற்குமோரிடபந்தன்னினிற்கிற்பெண்கட்குலோலன்
நற்குணன்மறதியில்லானரியர்பலரைச்சேர்வன்
முற்கோலிற்சவுரிநிற்கின்முற்றியதனவானவன்
சற்குணன்கியாதியுள்ளான்றருவனூர்மணியமாவன்.

(இ-ள்.) இடபபலன்—ஸ்திரீகளுக்கு லோலசன், நல்ல குணத்தியன், மறதியில்லாதவன், அனேகமாய ஸ்திரீகளைப் புணர்வனும். துலாப்பலன் — முழுதிலும் தனவான், சற்குணன், கீர்த்தியான், கிராமாதிகாரனும். எ-று.

மிதுன-கடக-கன்னியினின்றபலன்.

ஆனதோர்மிதுனங்கன்னிதனிற்சனியமர்ந்தகாலை
தானமாம்புதல்வரற்பந்தகைமையில்லார்க்குமாண்டன்
வானுறுநண்டிற்காரிமருவிற்றாய்மகன்பொன்னில்லான்
ஈனவான்ஞானவீனன்மங்கினபல்லன்மூர்க்கன்.

(இ-ள்.) மிதுனக் கன்னியின் பலன்—தவப்பேறுகியபுத்திரான் குறைவு, பாவரிடத்திலும் கணிசமாம். கடகபலன் — புத்திரன்,

பொருளில்லாமை, பாபச்செய்கை, அறிவில்லாமை, ஊற்றைப்பற்கள், மூர்க்கம் உண்டாம். எ-று.

சிங்கத்தினின்றபலன்.

மூலமாஞ்சிங்கவீட்டின்முனிவுறுஞ்சனிதானிற்கில்
சாலவாசாரமில்லான்சுகமிலான்முட்சியுள்ளான்
சீலமாங்குலம்விளங்கப்பெற்றிடுஞ்சேயுமில்லான்
வேலைவாரிதியைவண்டைமுனிந்திடும்விழியினாளே.

(இ-ள்.) மூலாதாரமாகிய சிங்கத்தின்பலன்—சாந்தமற்ற சனி நிற்கில், அனாசாரன், பீடையன், தாட்சியானவன், தன்குலம்விளங்கும் பேர்சொல்லப் பிள்ளையற்றவனும். வேலாயுதத்தை - சமுத்திரத்தை-வண்டை திரஸ்கரித்த கண்ணினையுடைய பெண்ணே. எ-று.

தனுசு-மீனத்தினின்றபலன்.

விழிமீனந்தனுவிற்காரிமேவின்மன்னவருக்கன்பன்
மொழிசுகமுடையன்மைந்தர்திரவியமுள்ளனவன்
வழிவசமானபெண்டிருள்ளவன்மலர்க்கண்ணையன்
செழியபெண்டிர்மேற்பக்ஷங்காட்டிடுஞ்சிந்தையானே.

(இ-ள்.) கண்ணிற்கினமாகிய மீனம், தனுசு, சனி நிற்கில் அரசர்களுக்கு அன்பான இனியவார்த்தையன, புத்திரபாக்கிய முள்ளவன், நல்லவழியில் பெண்டுடையவன், கண்ணையன், பெண்சாதியினிடத்தில் பிரியமுள்ளவனும். எ-று.

மகர-கும்பத்தினின்றபலன்.

சிந்துவாழ்மகரகும்பஞ்செறிந்துவன்காரிநிற்கில்
உந்தியநகரம்பட்டணமுடையவனாகண்ணையன்
சந்ததந்தனங்கள்சேர்ப்பன்செலவுளன்சரீரசுட்கன்
சுந்தரப்பரத்தைநண்பின்பலனுளன்சோரனுவான்.

(இ-ள்.) மகரகும்பத்தில் சனிநிற்கில், நாடு, நகரம், கண்ணைய், சார்வதாய் திரவியஞ்சேர்தல், செலவழிப்பு, இளைத்ததேகம், தாசிகாந்தம், பிரயோசனமுடைமை, திருட்டுத்தன்மையாம். எ-று.

கோட்சாரபலன்.

சூரியன்.

சூரியன்ஜென்மம்ரெண்டில்துலங்கியநாலேந்தேழில் [ல்
பாரியவெட்டோடொன்பான்பகர்ந்தபன்னிரண்டினின்று
காரியக்கேடலேச்சல்கண்வலிதலேநோய்வீணுய்
வீரியச்சண்டைவெட்டைவீடுவிட்டோட்டுந்தானே.

(இ-ள்.) சூரியன் க-ல், உ-ல், ச-ல், ரு-ல், எ-ல், அ-ல், கூ-ல், கஉ-ல், வந்தால் நினைத்தகாரியமுடியாது திரிச்சல் நேத்திரவியாதி சிரநோக்காடு வீண்சம்பம், சச்சரவு, சூடு, இடம்விட்டுப்போதலாம் ஆகையால் இதுமுதலான பலனை நிரனிறையாகக் கொள்கவும். எ-று.

சந்திரன்.

பனிமதிரெண்டினுலில்பரிவிலாவாறிலெட்டில்
கனிவிலாபன்னிரண்டில்கதிக்கவேவீற்றிருந்தால்
இனியநற்பொருளுமாடையினமாங்கேடுதுன்பம் [ணே.
தனிமையிற்செலவுதுக்கந்தான்கொடுத்திடுமென்றெண்

(இ-ள்.) சந்திரன் உ-ல், ச-ல், கூ-ல், அ-ல், கஉ-ல், வந்தால் நட்டு-துணி - குறைவு, கெடுதி, பொல்லாப்பு, விரயம், துயரமாம். எ-று.

செவ்வாய்.

நிலமகன்சென்மந்தன்னிநிறுவியரெண்டினுலில்
சிலுகுவாறெட்டிற்பத்தில்செறிந்தபன்னிரண்டினின்றால்
பலவிதக்கேடுபெண்டீர்பாழ்பொருளுசம்வெட்டை
சொலுவாயுதத்தால்பீடைதுக்கநீர்ப்பெருக்குண்டாமே.

(இ-ள்.) குஜன் க-ல், உ-ல், ச-ல், கூ-ல், அ-ல், க0-ல், கஉ-ல், வந்தால் நாலாவிதத்திலும் கெடுதி, மனைவி நாசம், பொருள் விரயம், உஷ்ணம், ஆயுதபீடை, துயரம், பிரமியம் ஆம். எ-று.

புதன்.

புந்திதோள்ஜென்மந்தன்னில்பொருந்திடாமூன்றினுலில்
விந்தையாறெட்டிலாறில்விளங்குபன்னிரண்டினின்றால்

சிந்தைபேதகமாம்வெட்டைதிரவியக்களவுபீடை
கொந்தலர்குழலாய்தோழன்கோவினல்குற்றமாமே.

(இ-ள்.) புதன் க-ல், ந-ல், ச-ல், கூ-ல், அ-ல், க0-ல், கஉ-ல், வந்தால் சிந்தை வேற்றுமை, சூடு, பொருணசம், வியாதி, சோரதனலும், ராஜாவினலும் தீமையாம். எ-று.

குரு.

பொன்னவன்சென்மந்தன்னில்பொதுமையாமூன்றினுவில்
மின்னுமாறெட்டிற்பத்தில்விரயம்பன்னிரண்டினின்றால்
தன்னுடன்பிறந்தார்சேதந்தானியமாடுமக்கள்
பின்னமாம்பதியிழந்தேபிழைப்பற்றுத்திரிவர்தாமே. [ல்

(இ-ள்.) வியாழன் க-ல், ந-ல், ச-ல், கூ-ல், அ-ல், க0-ல், கஉ-ல் வந்தால் சகோதர பீடை, தானியமும் மாடும் மக்களும் நாசம், ஸ்தானபிரஷ்டம், ஜீவனமில்லாமை திரிச்சலாம். எ-று.

சுக்கிரன்.

சுக்கிரன்மூன்றிலாறில்துலங்குமேறொன்பான்றன்னில்
உக்கிரமாகுமென்றேயுரைப்பர்கள்பலனேவென்றால்
நிக்கிரகமாகுமக்கணிலையினின்மாடுசாகும்
வக்கிரமாவார்பந்துவாய்ந்தபொன்னுசமாமே.

(இ-ள்.) சுக்கிரன் ந-ல், கூ-ல், எ-ல், கூ-ல் வந்தால் புத்திரர்விட்டுப் பிரிவார்கள், இருந்த இருப்பில் காலிமாடு சாகும், பந்துக்கள் பகையாவார்கள், கையிலிருந்த பொருளும் போகுமாம். எ-று.

சனி.

முடவன்றன்சென்மந்தன்னின்முன்னுளவிரண்டினுவில்
இடமுடனெட்டிற்பத்திற்செறிந்தபன்னிரண்டினின்றால்
உடமையும்பொருளுமாடுமொண்டொடியாளுங்கூட
அடிமையும்பதியுநாசமாதலுமானக்கேடே.

(இ-ள்.) சனியன் க-ல், உ-ல், ச-ல், அ-ல், க0-ல், கஉ-ல் வந்தால் உடைமைபோம், பொருள் நஷ்டி, நாற்கால்ஜீவன் ஹானி, மனைவி

மோசம், அடிமை இல்லாமை, இடம் விட்டு பேர்தலான மானக் கேடாம். எ-று.

இராகு-கேது.

ராகுவுங்கேதுவுந்தான்ரம்யமில்ஜென்மமெட்டில்
வேகமொன்பானீராறும்வீட்டினில்வந்திருந்தால்
பாகுசேர்மொழியாள்கேளுபதிவிட்டுபேருங்கெட்டு
தேகத்திலழகுமாறிதிடமற்றுப்போகுந்தானே.

(இ-ள்.) இராகு அல்லது கேது க-ல், அ-ல், கூ-ல், கஉ-ல் வந்தால் கருப்பஞ்சாற்றின் சுவைபோன்ற சொல்லினை யுடையவளே கேள் இருப்பிடம் பேர்தலும், பேரழிவும், நாசமும், உருமாறிய பலவீனமுமாம். எ-று.

வேறு.

புதமொழி.

விபரீத கோட்சார பலன்.

இரவியைந்தாமிடந்தனிலேதிங்களெட்டில்
ஏழதனிற்செவ்வாயுமிரண்டிற்புந்தி
விரவுகுருமூன்றிடத்திற்சுங்கனாறில்
மிக்கசனிசென்மத்திலிருபாம்பொன்பான்
திரமுடனேயித்தலங்கள்சேருமாகில்
சிறைகாவல்வெகுநோயுஞ்சிலுகுசண்டை
உரைதடுமாற்றமுங்கேடுமரணசேதம்
உண்டுபலன்பொல்லாதென்றுரைக்கலாமே.

(இ-ள்.) சென்மராசிக்கு ரு-ல் சூரியன், அ-ல் சந்திரன், எ-ல் செவ்வாய், உ-ல் புதன், ங-ல் குரு, சு-ல் சுக்கிரன், க-ல் சனி, கூ-ல் ராகு-கேது வருங்காலம், காராகிரகம், காவல், வியாதி, வில்லங்கம், வியாச்சியம், வாய்குளர்தல், சாவு - நஷ்டம், ஆகிய தீயபலனு மென்பதாம். எ-று.

வேறு.

அங்கச்சூரியன்.

காரார்குழலாய்தலைமூன்றுமரசாங்கல்லிவாய்மூன்றுஞ் சீரார்வயிறைந் திடமுன்னுஞ் செம்பொன்றேடுங்கையெட்டும், பாரேழ்நடத்துங் காலெட்டும் பகலோனுண்முன் பிறந்திடுநாள்,நேரேதொட்டுக்கோணின்ற தினமீதெண்ணி நிகழ்த்தியிடே.

(இ-ள்.) நக்ஷத்திரம் உள-ல், தலையில்நிற்கும் ந-ம், இராச்சியம் வாயில்நிற்கும் ந-ம், வித்தை; வயிற்றில்நிற்கும் ரு-ம், விருந்து வலக்கை நிற்கும் அ-ம், தனம்; காலில்நிற்கும் அ-ம், வழிநடை; இரவியிருந்த நக்ஷத்திர முதல் ஜாதகன் பிறந்தநாளளவு மெண்ணிப் பலன்சொல்லுக (இவ்வடைவேபார்த்துப்பலன்சொல்லவும்.) எ-று.

வேறு.

அங்கச்சந்திரன்.

ஆரன்முன்னேமூநாளுஞ்சிரசிலே - யமருமுன்மாசி முன்னேழ்முதுகிலே, பாரமேபனைமுன்னேழ்வயிற்றிலே, பாவைமுன்னேமூநாளிருகாலிலே,தீரசென்னிவயிற்றிருநாளலங் - தீயதாங்கான் முதுகுறுகால்களே, சாரவெங்கள் விமீசுரர்தாணினை - தக்கநன்மையுந் தீமையுஞ்சாற்றுமே.

(இ-ள்.) அங்கச்சந்திரன் கிருத்திகைமுதல்-எ, தலையில்; மக முதல்-எ, முதுகில்; அனுஷமுதல் - எ, வயிற்றில்; சதயமுதல் - எ, பாதத்தில் அமைத்து முன்சொன்ன சிரசிலும் வயிற்றிலும் உள்ள நாள் கச-நன்மை, காலிலும் முதுகிலும் உள்ளநாள் கச, தீமை அபித்தைக் கூட்டிப்பார்க்கவும். எ-று.

வேறு.

அங்கச்செவ்வாய்.

இடர்வாய்மூன்றும் வலக்கணிர டின்பமிடக்கணிரண் டழிவா, மிடறோர்மூன்றுங்கைமூன்று மேம்பாடிடக்கை

மூன்றுதுயர், மடவாய்வலப்பா லொன்றுநல மிடமொன்
றழிவுவயிறைந்தூண், இடையார்வலக்காலிரண்டுநல மிடக்
காலிரண்டு மியாத்திரையே.

•(இ-ள்.) வாயில் மூன்றுந் துக்கம், வலக்கணிரண்டு மின்பம், இடக்கணிரண்டும் அழிவாம், கழுத்திலுங் கையிலு மூன்றும் மேம்பாடு, இடக்கையில் மூன்றுந் துக்கம், வலப்பாலொன்று நன்மை இடப்பாலொன்றும் நாசம், வயிற்றில் ஐந்தும் உணவு, வலக்காலிரண்டும் நலம், இடக்காலிரண்டும் யாத்திரையுண்டாம். எ - று.

அங்கப்புதன் குரு-சுக்கிரன்.

சேதமாக்குந்தலைமூன்றுஞ்செல்வமாக்குங்கழுத்துமூன்
றேதினன்றுவலக்கைமூன்றுள்ளத்திடரா மிடக்கைமூன்
றுதிவயிற்றிலைந்தாக்கமரையிலிரண்டுமழிவுண்டாம்
பாதமெட்டுநடையுண்டாம்பச்சைமால்பொன்புகரென்றே.

(இ-ள்.) தலையில் நிற்கும் ௩-ம் ஆத்தநாசம், கழுத்தில் நிற்கும் ௩-ம் சம்பத்துண்டாம், வலக்கையில் நிற்கும் ௩-ம் நன்மை யுண்டாம், இடக்கையில் நிற்கும் ௨-ம் துக்கமுண்டாம், வயிற்றில் நிற்கும் ௫-ம் ஆக்கமுண்டாம், அரையில் நிற்கும் ௩-ம் அழிவுண்டாம், காலில் நிற்கும் ௮-ம் நடையுண்டாம், இப்படி புதன் வியாழன் வெள்ளி இம்மூவர்க்குள்ள பலனென்றறிவதாம். எ-று.

அங்கச்சனி.

என்றுந்தீதுவாயோர்நாளினிமைவலக்கைநாலாகும்
சென்றுநடத்துங்காலாறுந்தீமையிடக்கைநாலாகும்
நன்றியூணும்வயிறைந்தும்நயனமிரண்டுந்தனமுண்டாங்
கன்றும்புயங்களிரண்டுமுடிகவிழ்க்குந்தலைமூன்றுடன்காரி

(இ-ள்.) வாயில் ௧-ம் கெடுதி, வலக்கையில், ௪-ம் நன்மை, காலில் ௬-ம் திரிச்சல், இடக்கையில் ௪-ம் தீமை,. வயிற்றில் ௫-ம் போஜனம், கண்ணில் ௨-ம் திரவியம், புஜத்தில் ௨-ம் காலிமாடு, தலையில் ௩-ம் கிரீடக்கெடுத்தலாம். எ-று.

இராகு, கேது.

வேறு.

மாதுகேண்மேட முதற்கருநாகம் வாழ்மனையளவுமட் டெண்ணி, மீதிமீன்மட்டும் முறுதொகைதன்னில் விளங்க வே பெருக்கிமுந் நான்கில், போதவேகழித்து மீந்தலக்கி னத்திற் புணர்திரிகோணரா சியினில், ஏதமாங்காரி மருவு நாட்கண்ட மெனவறி கோட்சரந்தனக்கே.

(இ-ள்.) பெண்ணேகேள் மேஷராசிமுதல் இராகு சஞ்சரிக் கின்ற ராசிவரையி லெண்ணிய தொகையை ராகுநின்ற ராசிமுதல் மீனம் வரையி லெண்ணிய தொகையால் பெருக்கி கஉ-ல் கழித்து நின்ற சேடத்தொகைக்கு எந்த ராசியாகின்றதோ அதில் அல்லது அதற்கு திரிகோணராசியில் சனிவருங்காலம் கெண்டமாம். எ-று.

காலசக்கிரம்.

வலவோட்டு நக்ஷத்திரம்.

முதுமொழி

விருத்தம்.

பரிபுணர்பூசமத்தம் பைமூலம்பூரட்டாதி
எரிபணிமரக்கலாடி யீறுநாள்பத்துமொன்றும்
தெரிவையேபரணிபூசஞ் சித்திரைபொய்கைகூட
வரியவுத்திரட்டாதியோடைம்மூன்றும்வலவோட்டாமே.

(இ-ள்.) அஸ்வனி, புனர்பூசம், அஸ்தம், மூலம், பூரட்டாதி, கிர்த்திகை, ஆயில்யம், சோதி உத்திராடம் ரேவதி, ஆக க0 - ம், ஒருதொடர். பரணி, பூசம், சித்திரை, பூராடம், உத்திரட்டாதி, ஆக ருு-ம், ஒருதொடர். ஆக தொடர் இரண்டிற்கும் நக்ஷத்திரம் கரு-ம், வலவோட்டென்பதாம். எ-று.

இடவோட்டு நக்ஷத்திரம்.

உருண்மகம்விசாகமோண மொருநான்குமொன்றேயாகும்
பருமிர்கசிரமேபூரம் பனையவிட்டம்நான்கொன்றும் [றும்
அருள்செங்கையுத்திரங்கேட் டையுஞ்சேக்குநான்குமொன்
சருவநாளிதுமுன்னான்குஞ் சாற்றிடவிடவோட்டாமே.

(இ-ள்.) உரோகணி, மகம், விசாகம், திருவோணம், இந்நான்கும் ஒருதொடர். மிருகசீரிஷம், பூரம், அனுஷம், அவிட்டம், இந்நான்கும் ஒருதொடர். திருவாதிரை, உத்திரம், கேட்டை, சதயம். இந்நான்கும் ஒருதொடர். ஆக தொடர் ௩-க்கும், மொத்த நக்ஷத்திரம் ௧௨-ம், இடவோட்டாம். எ-று.

வலவோட்டுநக்ஷத்திரபாத சக்கிரகிரகவருஷம்.

வேறு.

காலச்சக்ரந்தகர்சேயேழ்காளைக்கவிபதினாறாண்டு
மேலேத்தண்டுபுதனென்பான்மீனளிசசிமூவேழரியின்
வாலைச்சூரியனைந்தாம்வின்மன்பத்தாகுஞ்சனினான்காண்
டேலுமிதுபோன்மற்றெந்த விராசிக்கதிபன்கணக்காமே.

(இ-ள்.) காலசக்கிரவருஷம் மேஷச்செவ்வாய்க்கு-எ, ரிஷபச்சுக்கிரனுக்கு-௧௬; மிதுனப்புதனுக்கு-௯, கடகச் சந்திரனுக்கு ௨௧, சிங்கச்சூரியனுக்கு-௫, தனுசுக்குருவுக்கு-௧0, மகரச்சனிக்கு-௪, இவ்வடைவே மற்றையராசிக் கிரக வருஷங்களைக் கண்டு கொள்க. எ-று.

கணக்குவலத்திற் காடாதி கயலீறுகு மிடத்திற்கோ, பிணக்குவிர்ச்சிக முன்பின்வில் பேசில்புத்தி வழிபெசகும், அணைக்கசகக்கிவுடுபாத மறிவாய்நாழி கோளாண்டை, பிணைத்துப் பெருக்கீந் தாண்டிருப்பு பெண்ணே செல்லைப் பிரித்துசொலே.

(இ-ள்.) வலவோட்டு நக்ஷத்திரபாத சக்கிரகணக்கு மேஷாதி மீனந்தமாகவும் இடவோட்டு நக்ஷத்திரபாதச் சக்கிரக்கணக்கு

விருச்சிகாதி தனுராந்தமாகவும் கொள்க. புத்திசக்கிரம் *சிலது ஒழுங்கிராது, எந்தச்சக்கிரத்தின் நக்ஷத்திரபாத வாதியந்த நாழிகையில் சென்ற நாழிகை, அல்லது நின்ற நாழிகைத்தொகைக்கும், அந்தச்சக்கிர கிரகவருஷத்தொகைக்கும் மாறிக்கொடுத்து செல்லுபோக இருப்பிவ்வளவென்று பிரித்துச்சொல்வாய் பெண்ணே. எ-று.

வலவோட்டுநக்ஷத்திரபாத புத்திசக்கிரம்.

மறியேறியாழ்நண் டரிபெண்கோல் வளர்தேடனுமா முதற்காலூண், டுறின்மான் கான்மீன் றேள்கோல்பெண் ணேய்நண்டரியா ழிருகாலூண், குறியேறுடு மீன்சான்மான் குனிவிற் கொறியே றியாழ்முக்கால், செறிபேர்நண்டு புலி பெண்கோ றேள்வின்மான்சான் மீனுற்கால்.

(இ-ள்.) முற்கூறிய வலவோட்டு நக்ஷத்திரம் பதினைந்தினுள் நகோள்தவிர ஒருதொடர் நக்ஷத்திரம் பத்தின் முதற்பாத புத்தி சக்கிரம் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசுவரையில் ஆக - கூ, இரண்டாம் பாதபுதிசக்கிரம் மகரம், கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி, கடகம், சிங்கம், மிதுனம் வரையில் ஆக - கூ, மூன்றும் பாதபுத்திசக்கிரம். ரிஷபம், மேஷம், மீனம, கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம்வரையில் ஆக-கூ, நான்காம்பாதபுத்தி சக்கிரம் கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் வரையில் ஆக-கூ, ஆம். எ-று.

கால்தேள்கோல்பெண் குளிரரியாழ் கனவேறஜமீன் பரணிமுற்கால், சால்மான்விற்கொறியிடபம்யாழ் தண்ணூர் நண்டரி பெண்ணிருகால், கோல்தேள்சிலைமான் குடமீன் றேள் கோல்பெண்முக்கால் குளிரரியாழ், மேல்பார்நளிர ரியாழ்விடைமேல் மேஷமீன்சான் மான்வில்லே.

(இ-ள்.) மற்றொருதொடர் நக்ஷத்திரம் நடுநாள் ஐந்தின் முதற்பாத புத்திசக்கிரம் விருச்சிகம், துலாம், கன்னி, கடகம், சிங்

கம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம் - கூ, இரண்டாம் பாத புத்திசக்கிரம். கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி - கூ, மூன்றும் பாதபுத்தி சக்கிரம். துலாம், விருச்சிகம், தனுசு, மகரம். கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி-கூ, நான்காம்பாத புத்திசக்கிரம் கடகம், சிங்கம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம், தனுசு-கூ. எ-று.

இடவோட்டுநக்ஷத்திரபாத புத்திசக்கிரம்.

மாவிற்சுறுசான் மீன்கொறிசே வளர்தண்டரிநண்டுரு
ண்முதற்கால், பூவிற்பெண்கோ றேண்மீன்சால் பொரு
மான்விற்றே டுலேயிருகால், தாவிப்பெண்ணரி நண்டியாழ்
சே தகர்வின்மானுங் குடமுக்கால், காவிக்கயலா டேறியாழ்
சிங் கங்குளிர்பெண்கோ றேணுற்கு.

(இ-ள்.) முற்கூறிய இடவோட்டு நக்ஷத்திரம் பனிரண்டினுள் தலைநாள் நான்கின் முதலாம்பாத புத்திசக்கிரம்—தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், சிங்கம், கடகம், ஆக-கூ, இரண்டாம்பாத புத்திசக்கிரம். கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம், ஆக - கூ, மூன்றும்பாத புத்திசக்கிரம்- கன்னி, சிங்கம், கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம், ஆக-கூ, நான்காம்பாத புத்தி சக்கிரம். மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், சிங்கம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், ஆக-கூ. எ-று.

குளமீன்சான்மான் விற்றேள்கோல் குமரிப்புலிநளிர்சிர
முதற்கால், களிகொளியாழும் விடைமறிவில் கலேசான்மீனு
டேறிருகால், துளிரார்மிதுனம் புலிகுளிர்பெண் டுலேதேண்
மீன்சால் கலேமுக்கால், கொளுவாய்சிலேதே டுலேபெணரி
குளிர்யாழ்குண்டை மறிநாற்கால்

(இ-ள்.) இடைநாள் நான்கின் முதற்பாத புத்திசக்கிரம் மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிங்கம்,

கடகம், ஆக-கூ, இரண்டாம் பாதபுத்தி சக்கிரம் மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், ஆக-கூ, மூன்றும் பாதபுத்தி சக்கிரம் மிதுனம், சிங்கம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம், ஆக-கூ, நான்காம் பாத புத்திசக்கிரம். தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிங்கம், கடகம் மிதுனம், ரிஷபம் மேஷம் ஆக-கூ. எ-று.

மறுண்மீன் சான்மான் விற்றேள்கோன் மாதரிநளிரா
திரை முதற்கால், குறியாறேறு கொறிவின்மான் குடமீனுடு
விடை யிருகால், நெறியாழ்புலிநளி பெண்கோறே ணீண்
மீன்சான்மா னிகழ்முந்நால், கறுவிற்றேடுலே பெண்ணரி
கற் கடகம்யாழ்விடை தகர்நாற்கால்.

(இ-ள்.) கடைநாள் நாலுகின், முதற்பாத புத்திசக்கிரம் மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிங்கம், கடகம், ஆக-கூ, இரண்டாம்பாத புத்திசக்கிரம், மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், ஆக-கூ, மூன்றும் பாதபுத்தி சக்கிரம், மிதுனம், சிங்கம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம், ஆக - கூ, நான்காம் பாதபுத்திசக்கிரம். தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிங்கம், கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம், ஆக-கூ, எ-று.

காலசக்கிர புத்திசக்கிரக்கிரகம் கொடுக்கும்பலன்.

வேறு.

குஜன்காலசக்கிரத்திற்குளிர்ச்சுரம்விரணங்கண்ணோய்
வசப்படாவுதிரகாசந்தனச்சேதமனதிற்றுக்கம்
துசமாயுதத்தாற்பீடைதுன்பங்கள்பலவுஞ்சொல்லு
நிஜமானபூமிநாசநின்றமாதாவுக்காணி.

(இ-ள்.) செவ்வாய்பலனுவது—குளிர்ச்சுரம், விரணம், நேத்திர வியாதி இரத்தகாசம், தனநாசம், மனோதுக்கம், பூமிநாசம், மாதுர்

பீடை, சண்டை, ஆயுதத்தால் காயம், இவ்விதத் துன்பங்களைக் கொடுக்கும். எ-று.

சொல்லுஞ்சுக்கிரற்குநல்ல தலம்வித்தை சுகம்பொன்னுண்
நல்லபுத்திரர் பசுக்கள் பிதுர்நன்மை பூமிலாபம் [டாம்
மெல்லவே பிணிபோம்புத்தி விலாசம்விற் பிரர்மேற்பத்தி
வல்லமை பிரியாதேவ தாபத்தி மருவுமென்றே.

(இ-ள்.) சுக்கிரன்பலனாவது—ஸ்தலதரிசனம், கல்வி, சௌக்கியம், திரவியம், சுபுத்திராள், பசுக்கள், பிதுர்சவுக்கியம், பூமிலாபம், வியாதிசாந்தம், புத்திதீக்ஷண்ணியம், விவாகம், பிராமண விசுவாசம், வல்லமை, தேவதாபத்தியுண்டு பண்ணும். எ-று.

என்றமால்சக்கிரத்தில்வித்தைபொன்லாபமீயும்
நின்றவாகனம்விவாகம்யாபாரநிறைந்தபைங்கூழ்
வென்றிகொள்பங்குலாபமேம்பாடுதீர்த்தசேவை
ஒன்றுநல்லுறவோர்வீட்டிலுரியசம்பந்தமுண்டே.

(இ-ள்.) புதன்பலனாவது — கல்வி, தனலாபம், வாகனசித்தி விவாகசித்தி, வியாபாரவிர்த்தி, விசேஷ வேளாண்மை, லாபமுள்ள பங்குபாகம், மேம்பாடு, நதிதரிசனம், சோந்த பாதியத்தில் நல்ல சம்பந்தம் உண்டாக்கும். எ-று.

உண்டாம்வெண்மதியின்காலசககிரம்வரிற்பொன்னோடு
கொண்டாடுமனதிலன்புகுணங்களுஞ்சாந்தமாகும்
விண்டாவாரோக்கியந்தான்வெகுபூமிலாபமுண்டோர்
வண்டாருங்குழலாயோமசாந்தியுமணமுமுள்ளே.

(இ-ள்.) சந்திரன் பலனாவது—திரவியலாபம், மனோற்சாகம், சாந்தகுணம், சௌக்கியம், விசேஷபூமிவரத்து, ஓமசாந்தி சுப சோபனாதி நடத்தும். எ-று.

உள்ளதோரிரவிகாலச்சக்கரம்வரிற்கண்ணோயும்
தெள்ளியபிணியுங்காவல்சிறையுமாதாவுநாசம்

ஒள்ளியபிள்ளைபெண்டீர்சிநேகிதருறவுமானி
மெள்ளவேசிரரோகத்தான்மேனியுமிகவருந்தும்.

(இ - ள்.) சூரியன்பலனாவது— நேத்திரவியாதி, பீடை, காரா கிருகபிரவேசம்,மாதுருக்கரிஷ்டம், புத்திர களத்திர மித்திரவிரோதம், தலைநோயினால் தேககூஷீணம் செய்யும். எ-று.

வருந்திடாவேந்தன்காலச்சக்கரம்வரிற்பொன்னோடு
திருந்தியபூமிலாபந்திடம்பெறும்புதல்வருண்டு
பொருந்தியசுபவிவாகம்பூபதியாற்சன்மானம்
தருந்திறன்மன்னர்பூசைசகலபாக்கியஞ்சொல்சேரே.

(இ - ள்.) பிரகஸ்பதி பலனாவது— திரவியலாபம், பூமி வரவு, நல்ல புத்திரப்பேறு, சுபசோபனம், ராஜசன்மானம், ராஜ பூஜிதம், சகல சம்பத்தும் உண்டாக்கும். எ-று.

சேருமேகாரிகாலச்சக்கிரஞ்செறிந்தகாலை
பாரிபொன்புதல்வர்நாசம்பயமனத்துக்கமுண்டு
சீருளவன்னைநாசஞ்செப்பியமகாவியாதி
வாரணிமுலையார்வேண்டார்வருந்துவர்பிணியினாலே.

(இ - ள்.) சனிபலனாவது—களத்திரம், பொருள், புத்திரநாசம், பீதி, மனோதுக்கம், மாதா வியோகம், வியாதிபீடிதம், ஸ்திரீவிரோதம், வியாதியால் தேக நலிவு கொடுக்கும். எ-று.

தாண்டல் முதலியது.

பிணிதத்துமருவும்வாறுபின்மீனத்திருந்துதேளில்
தணியவேபாயுங்கன்னிதனினின்றுநண்டிறத்தும்
அணிசிங்கத்திருந்துதண்டிற்புராணுமன்புடன்வினின்று
பணியுமேடத்தைப்பற்றிவிழுமிந்தப்படிக்கறிவாய்.

(இ-ள்.) பீடையுண்டாவது—மீனராசியிலிருந்து விருச்சிகத்தில் கிரகம் பாயும்போதும், கன்னிராசியிலிருந்து கடகத்தில் தத்தும்

போதும், சிங்கவிராசியிலிருந்து கடகத்தில் புரளும்போதும், தனுசுவிராசியிலிருந்து மேஷத்தில் விழும்போதும். எ-று.

அதற்குவிபரம்.

அறிந்துவிழுந்தால்சுரமுண்டுபாயிலவன்பெண்டிருக்குஞ்
செறிந்தசுரமாம்புரண்டிடினோய்சேர்ந்துதத்திலவனன்னைக்
குறுஞ்சுத்தங்களினக்கொள்வரொருதண்டுற்றேசிங்கத்திற்
பிறிந்துசென்றுலிரணமதாம்பேசுங்காலச்சக்கிரமே.

(இ-ள்.) விழும்போது — சுரபீடிதம், பாயும்போது களத்திரசுரம், புரளும்போது - வியாதிபீடிதம, தத்தும்போது மாதாவைச்சார்ந்த பந்துநாசம், மிதுனத்திலிருந்து சிங்கத்தில் குதிக்கும்போது விரணமுண்டாம். எ-று.

இலக்கணமுதல்.

துவாதச பாவக விபரம்.

சீர்பெறுஞ்சென்ம லக்கினத்ததியர் சேர்ந்தினி திருந்திடமெந்தப், பேர்தருபலன்கண் மெய்நிறஞ்சுரூபம் பெருநிதியுதிரமத்தகமும், ஏர்பெறுமுபாங்கஞ் சிந்திதங்கிலேசமிலக்கணங்கீர்த்தி மூர்த்திகளும், பார்தருஞ்சுபசந் தோஷமும்வயதும் பகர்தனுத்தானமென் றுரைக்கும்.

(இ-ள்.) சிறப்புபொருந்திய, ஜெனனலக்கினதிபதி,பொருந்திய பலன் கொடுத்திடும்படியான காமத்தை விளக்கும் பிரயோஜனகரமுள்ளசரீரம், காந்தி, வடிவம், பொக்கிசம், இரத்தம், சிரம், அழகிய பிரியமிசம், நினைப்பு, மனவாட்டம், லக்ஷணம், கீர்த்தி, மூர்த்திகரம், பூமியிலடையவேண்டிய சுபகரம். சந்தோஷம், ஆயுர்முதலியவை தெரியச்சொல்லுமிடத்து முதற்றான மாகுமிடம். எ-று.

உரைத்திடுஞ்சவ்புாக் கியந்தனங்குடும்ப மொளிசெறி நேத்திரம்வித்தை, தரைப்பெறுஞ்செல்வ முடன்புகல் வாக்கு சாத்திரக்கேள்விகண் முற்றும், விரைத்தெழுகமன மனமுமுத்தேசீ மேம்படவிரும்புசெம்பொன்னும், நிரைத் திடுநவரத் தினமிரண்டிடத்தி னிலைமைகண் டுரைசெய்வர் நின்றே.

(இ-ள்.) சொல்லும்படியான—பூர்ணபாக்கியம், தனம், குடும்பம், பிரகாசம்பொருந்திய நேத்திரம், கல்வி, பெருத்த செல்வம், வசனம், சாத்திர விசாரணை, முதலியதும், கமனம், மனசு, உத்தேசம், மேன்பாடடைதல், பொன்னாபரணம், ரத்தினாபரணம், முதலியவைகளைத் தெரியச்சொல்லுமிடத்து இரண்டாகுமிடமாம். எ-று.

நின்றிடுமூன்றுமிடத்தினிற்பலன்க ணிருபாலுரை செயும்பலன்கள், வென்றிகொள்போகமடிமையாள்கானம் வீரியஞ்சத்துவந்துணைவர், பொன்றிடாதினிய காதுநோய் கன்ன பூடணம்புசித்திடுங்கலன்கள், துன்றுவிக்கிரமஞ்சேவகாவிருத்தி சூழ்தயிரியங்களுஞ்சொல்வர்.

(இ-ள்.) மூன்றுகுமிடத்தைக் குறிக்குமிடத்தில், ராஜகாரியம், வெற்றி வைபோகம், ஆளடிமை, சங்கீதம், பராக்கிரமம், சாந்தம், சகோதரம், அணிகலம், காதுநோய், கர்ணபூஷணம், போஜனபாத்திரம், வீரம், உத்தியோகம், தயிரியம். எ-று.

சொல்லியவித்தைவாகனஞ்சுபங்கள் சூழும்யாபாரமுமனையும், வெல்லுமேம்பாடுஞ்சவுக்கியமன்னை விரும்புநல்லுறவினராகும், நல்லநிட்சேபம்பரவிஷயங்கண றைகமழ் பாற்பசுகன்று, வல்லதோர்தேவத்தானமிப்பலனை வழுத்துநான்காமிடங்கொண்டே.

(இ-ள்.) படிக்கின்றகல்வி, வாகனம், சுபகரம், வியாபாரம், பூமி வெல்லத்தகுந்த மேன்மை, சுகம், தாய், விருந்து, சுற்றம், புதை,

பரஸ்திரீ கவனம், வாசனைத்திரவியம், பழுவுள்ள பசுவும், கன்றும், தேவாலய முதலியவை நான்காமிடப்பலனெனக்கொள்ளுக. எ-று.

கொண்டதோர்மாமன் பிதாபெறும்புதல்வர் குலவு பூருவஞ்செய்புண்ணியமும், தண்டமிழ்வாணர் புகல்பிர பந்தத் தரித்திடுங்கர்ப்பமந்திரங்கள், மிண்டியவித்தை வித ரணம்புத்தி விரும்புமிப்பலனெலாமறிந்தே, கண்டுரைத் திடுவரைந்தாமிடங்கொண்டே கற்றுணர்ந்தருளுமாதவரே

(இ-ள்.) அம்மான்வர்க்கம், தகப்பன்வர்க்கம், புத்திராள், முன் ஜெனனத்தில் செய்த நல்வினை, மகாவித்துவான்களால் பிரபந்தம் பெறல், கர்ப்பாதானம், மந்திரோபதேசம், சத்காலக்ஷேபம், வித ரணம், புத்தி முதலியவை ஐந்தாகுமிடத்தைக் கொண்டு சொல் லுக. எ - று.

மாதுகேள்வியாதி சத்துருபீடை மற்றுமாயுதங்களா விரணம், ஓதியஞாதி யால்வருந்துன்பம் யுத்தமெய்வாதை பொற்கண்டம், பேதமாங்கள்ளர்புனல்மடந்தையரால்பிறங் குபாம்பாலுநோயுளது, நீதிசேர்பிரதா னிக்கமுஞ்சிறையி னிலைமையாறுமிடங்குறித்தே.

(இ - ள்.) வியாதி, சத்துரு, துக்கம், ஆயுதகாயம், பங்காளி வழக்கு, துன்பம், சண்டை, தேகநோய், பொல்லாத ஆபத்து, திரு டராலும், ஜலத்தாலும், ஸ்திரீகளாலும், சர்ப்பத்தாலும், அபாயம், அதிகாரம் செலுத்தல், காவல்படல், முதலியதை ஆறுகுமிடத்தைக் கொண்டு சொல்லல், எ-று.

குறித்திடுங்கமன மணம்மடந்தையர்க்குங் குமரர்க டமக்குநல்லின்பம், நிறுத்திடுவிபகா ரந்தமர்கூட்ட நேமி யோருதவுசன்மானம், பிறித்தறிவியாபா ரம்மனம்புரிநாள் பின்மனையாள்வியம்பெறுதல், மறிக்கயல்விழியா யேழிடங் கொண்டு வழுத்துவர் மறைமொழிப்புலவர்.

(இ-ள்.) யாத்திரை, கலியாணம், பெண்டுபிள்ளைகளுக் குண்டாகும் சுகம், விபகாரவிசாரணை, பந்துக்கள்வரவு, ராஜப்பிரபு சன்மானம், கொள்ளல் விற்கலான வியாபாரம், மங்களநடக்குங்காலம், களத்திரபோக முதலியவைகளை ஏழாகுமிடத்தைக்கொண்டு சொல்லுதல். எ-று.

புலவுறும்படையால் வாதைசேருயுத்தம் பொருப்பின்
மேலேறிவீழ்ந் திடுதல், நிலைபெறும்வியாதி விக்கினங்கி
லேச நீண்டலதுன்பமோடிரணம், சிலவினுனட்ட மிவ்வி
ழுக்காடு செறிபகைமரணமித் தனையும், உலகினிலுயர்ந்
தோ ரட்டமபலன்கண் டுரைசெய்வருண்மைபெற்றிடவே.

(இ-ள்) ஆயுதபீடை, உயுத்தியம், மலையேறி விழுதல், வியாதி பீடிதம், விக்கினம், கிலேசம், மிகுதியான பலதுக்கம், விரணம், விரயம், நஷ்டம், பகைசேரல், சாதல் முதலியவைகளை, எட்டாகுமிடத்தைக்கொண்டு சொல்லுதல். எ-று.

பெற்றிடுந்தந்தை மகம்பயிலதருமம் பெருமைசேர்பா
க்கியமடங்கள், உற்றதோர்பரம புண்ணியங்குளமு முயர்
திருப்பணி யுபதேசம், வெற்றிசேர் நீக்கா வணம்புகழ்
கூபம் விரும்பிய செல்வமீதெலலாம், கற்றறிந்தோர்களொ
ன்பதாமிடத்தாற் கருணையும்பெறமொழிந்திடுவார்.

(இ-ள்.) தகப்பன், யாகாதிகிருத்தியம், தானதர்மம், கீர்த்தி, பாக்கியம், சத்திரம் சாவடி, புண்ணியகருமம், தடாகமுண்டாக்கல், தேவாலய பிரதிஷ்டை, குருவினிடத்தி லுபதேசம்பெறல், பேர்விளங்குத் தண்ணீர்ப்பந்தர் வைத்தல், தர்மத்திற்கு கிணறு வெட்டுவித்தல், நிலைத்த செல்வ மனுபவித்தல், ஜீவகாருண்யம் முதலியவைகளை, ஒன்பதாகு மிடத்தைக்கொண்டு சொல்லுதல். எ-று.

மொழிந்திடும்பலபுண் ணியம்புவியாளல் முயன்றுபட்
டணங்க டர்பித்தல், பொழிந்திடுங்கரும மிரக்கமெய்ஞ்

ஞானம் பூசனைமனைபிதாப்பவங்கள், ஒழிந்திடுமினிய தேவ தாபத்தி யுயர்சவுரியம்பிரதாபம், இழிந்திடுமிரவு கருப்ப மூண்சுவையு மிவைபத்தாமிடப் பெயரென்னே.

(இ-ள்.) பற்பலதர்மம், ராஜாதிக்கம், தன்பேரால் நாடுநகர முண்டாக்கல், அவ்வியசவ்வியம், தயை, ஞானம், தெய்வபூஜை, நிலகெட்டு, தகப்பன் செய்பாவமொழித்தல், தெய்வபத்தி, பராக்கிரமம், பெரும்பிரதாபமும், இரவிற்சையோகம், போஜனருசி முதலியவற்றை, பத்தாகுமிடத்தைக்கொண்டு சொல்லுதல். எ-று.

என்னுமூத்தவர்சே வித்திடும்பேர்க ளிளங்கொடிமனை விபொன்வித்தை, மின்னியலாபம் பயிர்பரிவேழம் விளங்கு கல்லறிவுதண்டிகையும், உன்னியமனத்திற் றுக்கமுந்தீரு முத்தரீயஞ்செறிவகையும், பன்னியபதினோ ராமிடங்கொண்டு பரிந்தருள்புரிவர் பாவலரே.

(இ-ள்.) ஜேஷ்டபிராதாக்கள், சேவகஞ்செய்பவர், இளமைப் பெண்சாதி, பொன், கல்வி, வரும்படி, பயிர்பச்சை, அஸ்வம், கஜம், கல்லறிவு, ஆந்தோளி, மனோவியாகுலம் போக்கல், ஆடையாபரணம், முதலியவற்றைபதினொன்றாகுமிடத்தைக்கொண்டுசொல்லுதல்எ-று.

பாவமங்கியதே சத்திலுத்யோகம் பணச்செலவுடனு றும்போகம், மேவியசயன சவுக்கியம்விவாதம் விளைந்திடுந் தொழில்புரிகன்மம், ஆவதோர்தானம் புண்ணியந்தியாக மருண்மகஞ்சார்வதா விருத்தி, சேவலங்கொடியோ னருளி னுற்பெரியோர் செப்புவர்துவாதசப்பலனே.

(இ-ள்.) இப்பாவகத்தால்—பிரதேசவுத்தியோகம், தன விரயத்தோடு உண்டாகும்போகம், நித்திரை சவுக்கியம், விவாதமுண்டாகுதல், தொழிற்றுறைச் செய்கை, தானதர்மம், பரவுபகாரம், கொடை, பாபநிவிருத்திய விருத்தி முதலியவற்றை சேவற்கொடி

படைத்த சிவசுப்பிரமணியக்கடவுள் கிர்பைபெற்ற சான்றோர்கள், பனிரண்டாகு மிடத்தைக்கொண்டு துவாதசபாவகபலன் சொல்லுதல். எ - று.

வேறு.

நவக்கிரக காரகம்.

சனிக்கும், இரவிக்கும்.

விருத்தன்மரவேலைகளவாயுவுயிர்வேதை
 மேதிசிறையற்றுதைவெட்கமின்மேனெய்வீண்சொல்
வருத்தமிரும்படிமையன்வாயடித்தல்கடுகு
 வயற்களநீலுழுந்தசுபஞ்சேவகமெண்ணெயுமாம்
பருத்தசிரஞ்சிலும்பன்மயிர்பயித்தியசரீரம்
 பான்மிளகுரசவாதம்பண்டிதங்கோதும்பை
யொருத்தலைநோவானைசிவம்லோகம்வச்ரம்வலக்கோ
 வுயிர்த்தவன்யாத்திரைபகலீதினற்குளகாரகமுமே.

(இ-ள்.) மரவேலை, களவு, தீர்க்காயுள ஆத்ம இம்சை, எருமை வர்க்கம் சிறைப்படல், நிசிகாலத்துப்பிதா, வெட்கமில்லாதவை, ரோகம், வீண்வார்த்தை, துன்பம், இரும்பு, ஆளடிமை, சாத்தாண், வாயடித்தல், கடுகு, வயற்களம், நீலரத்னமுதலானவை, உழுந்து, அசுபகர்மம், சேவகாவிர்த்தி, எள்ளு, எண்ணெய், இவை முதலானவைக்கெல்லாம் சனியேகாரகன். பருத்தசிரம், சிலும்பினமயிர், பைத்தியசரீரம், பால், மிளகு, ரசவாதம், வைத்தியம், கோதும்பை, ஒற்றைத்தலைநோவு, ஆனை, சதாசிவம், பஞ்சலோகம், வச்சிரரத்னம் வலதுநேத்திரம், பிதா, யாத்திரை, பகற்பொழுது, இவைகட்கெல்லாம் சூரியனேகாரகன். எ-று.

மதிக்கும், சேய்க்கும்.

அகளங்கன்சிவையூண்மாவாய்துயில்வெண்கலமுப்
 பளர்வண்ணார்வெண்ணெய்குடையரிசிபனிப்பயறும்
பிகழ்வாலங்கம்மிடக்கண்கயரோகமுழவன்
 யாபாரமச்சமுத்தம்வஸ்திரமிவைக்கெலாங்

குகன்முனவன்றுவரைதுவர்கோவிகுலாலன்றீக்
குளவினையர்துணைவரிகல்குருதிரணஞ்சிவப்புத்
தகர்சுயம்பாகங்காயஞ்சாகசந்தாம்பிரம்பூ
தனையாவிரணங்காளிதழலிவர்காரகமே.'

(இ-ள்.) பராசத்தி, போசனம் குதிரை, மாதரு, சித்திரை வெண்கலம், உப்பளவர், வண்ணர், வெண்ணெய, குடை, அரிசி, பனிப் பயறு, உப்பு, சிறிதுநாட்ருத்து மீனைத்துமிருக்குஞ்சரீரம், இடக்கண், சயரோகம், உழவன், மச்சம், முத்து, புடவை, இவை களின்வியாபாரம், இவைகட்செல்லாம் சந்திரனேகாரகன். சுப்பிர மணியர், விக்கினேசுரர், துவரை, பவளம், கோபவான், குலா லன், அக்கினி முகமாகச்செய்யுந் தொழிலினர், சகோதரர், யுத் தம், இரத்தம், கடன், சிவந்தரத்னமுதலானவை, ஆட்டுவர்க்கம், சுயம்பாகம், காயம், சாகசம், செம்பு, பூபாலர், விரணம், பத்திர காளி, இவைகட்கெல்லாஞ் செவ்வாயே காரகன். ப - று.

புதனுக்கும், வியாழனுக்கும்.

கார்வணன்றேர்ப்பாகனம்மான்கல்விமரகதஞ்சேங்
கன்றிலேவாணிபன்றாதன்கணக்கனபுஞ்சிகனுந்
தேர்கதைகாவியந்தாதன்சேணடனமெழுத்துச்
செவ்விஷையன்ருசிபரன்றிரவசனுதிக்கன்
பாரறிவன்பயறுதராவெங்தையமால்பாலர்
பசும்பொன்மதுவான்கடலேபார்த்திபராண்ராகம்
போதிகன்சிரகஞ்சிவன்மணிமேதகம்விப்
பிரன்பிரமனுண்டிகுருப்பேரிவர்காரகமே.

(இ-ள்.) விஷ்ணுபகவான், தேர்ப்பாகன், அம்மான், கல்விமுத லானவை, பச்சைரத்னமுதலானவை, செங்கன்றுவர்க்கம், இலை முதலானவை, வைசியன், தானுபதி, தூதுவன், கணக்கன், அலி, தேர், கதைகாவியம், தாதன், அந்தர நாட்டிய முதலானவை, விதைம், விஷையசோரன், தாசிபரன், திரவசனுதிகன், சகல

பிரபஞ்சமு மறிந்தவன், பாசிப்பயறு, தாா, வெந்தயம், இவை முதலானவைக்கெல்லாம் புதனேகாரகன். புத்திரர், சொர்னம், தேன், சிஷ்பவர்க்கம், கடலை, அரசர், புருடராகரத்னம், பட்டப்பேர், சிரகம், வைரோியரத்னம், கோமேதகரத்னம், விப்பிரவர்க்கம், பிரமா, ஆண்டி வர்க்கம், இவை முதலானவைக்கெல்லாம் வியாழனேகாரகன். எ - று.

சுக்கிரனுக்கும், இராகுவுக்கும், கேதுவுக்கும்.

பேரிலெற்காய்தாசர்பசுபெண்டிருறவூர்தி
பேரியைவாத்தியமுதற்சங்கீதநடப்பிரியங்
தார்கொடிடாறுவிமுதலாயபரிமளவா
சனேசயனவணைமுதல்வெண்சாமரைசையோக
மேரிளமைமொச்சைபுளியீயமன்னபயஞ்சோ
றெப்பொழுதும்பரியாசப்ரசங்கமிரக்ஷகன்மால்
சூர்மலர்ப்பெண்ணிரசித(மாசுணஞ்)சோரம்வெகுபேச்
சுவ்வேடத்தொழில்(சிகி)துர்த்தொழிலிவர்காரகமே.

(இ-ள்.) பட்டப்பெயர், கிரகம், பகற்காலமாதரு, தாசி தாசன் முதலானவர், பசு, களத்திரம், மித்திரம், வாகனம், பேரியைமுதலானவாத்தியம், சங்கீதம், நாட்டிய முதலானவைகளிற்பிரியம், மலை முதலானவை, கொடி, டால்முதலானவை, நாவிப்பிள்ளை முதலாகிய நானுவித பரிமளவாசனதிகள், கட்டில் மெத்தை, சப்பிரமஞ்சமுதலானவை, வெண்சாமரை, போகபோக்கியம், அழகு, இளமை, மொச்சை, புளி, ஈயம், தயிர், பால், அன்னம், எப்போதும் விகடவினோதப் பரியாசப் பிரசங்கப்பிரியம், சனரக்ஷகம். ஆசை, தேவப்பெண்கள், இலக்குமிதேவி, வெள்ளி, இவைமுதலானவைக் கெல்லாஞ் சுக்கிரனேகாரகன் - களவு, வெகுபேச்சு, நானுவிதவேடத்தொழில், சூப்பிடுவித்தை, இவை முதலானவைக்கெல்லாம் இராகுவேகாரகன். கபடத்தொழில் முதலானவைக்கெல்லாம் கேதுவேகாரகன் - இவை காரகாதிபாவர்க்கம். எ-று.

இலக்கினபலன்சுருக்கம்.

தற்பெயர்மற்றுள்ளவைக்குந்தற்பெயரிற்சொலன்மேற்
சாற்றுதலக்கினபலனுந்தவுமுனியேதகர்ப்பேர்
முற்பவனமாகவரிலரசர்வெகுமான
மூர்க்கன்வெகுசனப்பிரியன்மோகிதயிரியவா
னற்பனனுசாரன்மனதமைதிபொறையறிவ
னுகம்ரம்யன்மனப்பயமெய்யனற்றருவாயுதத்தாற்
கற்படன்மட்சுவர்விழுதலாலவிரணுதிக்கன்
களத்ரத்வயன்றனையரற்பங்கனிட்டசிரேட்டர்களே.

(இ-ள்.) சொன்னவையல்லாமல் மற்றது எது உதயமோ அத்தப் பேர்ப்படி பலன்சொல்லுக - அசுத்திடனே லக்கினபலன் கேட்பாயாக. லக்கினமேடமாகில் இராசவெகுமானம், மூர்க்கன், வெகுசனப்பிரியன், மோகி, தைரியவான், அற்பன், அனுசாரன் - அடக்கமுடையவன், பொறுமை அறிவு அழகு மனோபயம் இவையுடையவன், அனல் மரம் ஆயுதம் கல்சுவர்விழுதல் இந்தவர்க்கங்களினுலே விரணுதிகமுள்ளசரீரம், உபயகளத்திரம், அற்ப புத்திரர், சகோதரசிரேஷ்டன். எ-று.

களத்திரதோஷங்கனையர்காலாந்த்ரமுளர்தற்
கார்யபரன்குணதோஷங்கண்டறிவன்கபடத்
துளத்தவனும்விஷயசளனனையுபையமனைவி
யுரைக்குடையன்மூத்ரகிரிச்சனுதிரரோகி
வளர்த்திசொற்பகனமறவழக்கறிவன்கணக்கன்
மைதுனவபேட்சையவமனையுமகாகபடி
யளப்பிலவமானமுளனற்பசுதர்காமத்
தழுந்துசதாதுக்கியிவையான்கனூதநண்டதற்கே.

(இ-ள்.) லக்கினம் இடபமாகில் களத்திரதோஷம், காலாந்த்ர புத்திரர், சுயகாரியபரன், குணதோஷமறிவன், மனோகபடியெ ன்க. மிதுனமாகில் விஷயாதிகள், உபயமாதா, களத்திரத்தின் சொற்கேட்பவன், மூத்திரகிரிச்சனன், உதரரோகி, வளர்த்தி

வசனாதிகன், வார்த்தைசோர்வில்லாதவன், வழக்கறிவன், கணக்கன், மைதுனஅபேட்சி, ரோககளத்திர னென்க - கற்கடகமாகில் களத்திரசுகவீனன், கபடுள்ள அவமான களத்திரம், அற்பபுத்திரர், வெகுகாமி, சதா துக்கியென்க. எ-று.

அதர்மகர்மிநேத்ரசிரசானனநோயின்றோர்க்
காகுலன்கெம்பீரவசனத்தவனுமழகு
சுதரதிகம்பின்னிரக்கம்வஞ்சகந்துராசை
சுயகார்யபரன்பிறராற்றொழிற்றனம்பெற்றுடையோ
னிதமகிதமிரண்டுமறிந்தினசனபெந்துவினு
லெப்பொழுதும்பூச்யமுளனுமிரக்கம்பீதி
மதனசுகிபொறுமைபுகழ்மதிகுணம்வல்லமைநல்
வடிவறிவாஞ்சீயமுதற்றுலைவரைக்குமாமே.

(இ - ள்.) லக்கினம் சிங்கமாகில் பாவகர்மி, நேத்திரசிரமுகரோகி, மாதர் பிதுர்த்துவேஷி, கெம்பீரவசனியென்க - கன்னியாகில் அழகு, வெகு புத்திரர், பின்னிரக்கம், மனோவஞ்சகம், துராசை, சுயகாரிய பரன், பிறராற்றொழிற்றனம் பெற்றுடையோன், இதமகிதம் இரண்டுஞ்செய்பவன், பந்துசன பூச்சியனென்க துலாமாகில் இரக்கம், மனோபீதி, மன்மதசுகி, பொறுமை, புகழ் நல்ல புத்தி நல்லகுணம், வல்லமை, அழகு, அறிவு, இவையுடையவன். எ-று.

வரைவில்விஷையப்பிரியன்பெந்துசனத்வேஷி
வஞ்சகனுதுலனுபையமானிமதிமானு
முரையில்வணங்கினவருறவுண்மையபிமான
முத்யோகபரனும்விசாலயனுபாயி
திரமதிதுராசையினனுகுமகடண்ட
தெரித்திரன்மித்திரரையினல்செய்பவனுந்தெய்வம்
பெரியவர்பிராமணர்தம்மிடத்ததிகபத்தி
பெருஞ்செலவுதேண்முதற்சேளலவிவைபேசுவதே.

(இ-ள்.) லக்கினம் விருச்சிகமாகில் வரையற்ற விஷயப்பிரியன், பந்துசனத்துவேஷி, வஞ்சகன், தரித்திரன், வெகுமானி, அவமானி, புத்திமானென்க - தனுசாகில் நல்லவசனன், மித்திரன், சத்தியவான், அபிமானி, சதா உத்தியோகபரனென்க. மகரமாகில் வாய்சாலகன், உபாயி, திரபுத்திமான், துராசையுடையவனென்க - கும்பமாகில் அகண்டவயிறு, தரித்திரன், மித்திரரை யுபாதிப்பவனென்க - மீனமாகில் தேவபிராமணர் பெரியவரிடத்திற் பத்தியுடையவன், வெகுசெலவாளி. எ-று.

இலக்கின நவக்கிரக உபக்கிரக பலாபலன்.

பேசுவதவ்வோரைமுதற்சட்டியாங்ஸம்வரைக்கும்
பேரசுபசுபமதற்காய்ப்பேசுவதப்பலனும்
வாசமலரிறையுதயம்வரிற்சிரநேத்திரநோய்
வழிப்பயணசஞ்சாரமரசனன்மாய்பீதி
கேசமசனந்தனயரற்பமதியாகிற்
கீர்த்திதயவழகுசுபகிரியைசளன்றமலேற்
பூசல்களத்திரவீனஞ்சஞ்சலம்பொறுமை
பூமிசகோதரலாபம்புரவிரணங்கரவே.

(இ-ள்.) லக்கினவோரை முதற்சட்டியாங்கிசம் வரைக்குமுள்ள பேர்ப்படி அசுபசுபமறிந்து அதற்கு அதுவாப்பலன் சொல்லுக - லக்கினத்தில் ரவிநிற்கில் சிரநேத்திரரோகம், வழிப்பயண சஞ்சாரம் இராசாக்கினி மிருகபயம், அற்பகேசம், அற்பபோசனம், அற்பபுதல்வரென்க - மதியாகில்கீர்த்தி, தயவு அழகு, நல்லதொழில், காரியக்காரனென்க. சேயாகில் யுத்தம், களத்திரவீனம், சஞ்சலம் பொறுமை, பூமியாற் சகோதரத்தால் லாபம், சரீரவிரணம், சோரம். எ-று.

புரப்புதனேல்வித்தைதனம்புகழ்வேசர்சங்கம்
புலவன்வெகுசனபூச்யன்பொறுமைபுத்தியறிவு
குருப்பெயரிலனேகசனரட்சகன்விவேகி
குலேசனதிருபனுலகுடையவர்கொண்டாடும்
வரக்கவிதைதெய்வீகவசனம்வெகுமான
மதியறிவுநல்லகுணமனசுபுகராகில்
விரைக்குழலார்வசியசுமுகன்விஷையகுசலன்
வெகுமானியிவர்க்குடையகாரகமிக்குளதே.

(இ-ள்.) லக்கினத்திற்புதனுகில், வித்தை, தனம், புகழ் வேசியர் சங்கம், புலவன், வெகுசனபூச்சியன், பொறுமை, புத்தி, அறிவென்க-குருவாகில், அனேகசனரெட்சகன், விவேகி, குலேசன், அதிரூபன், உலகுளோர் கொண்டாடும் வரகவிதை, தெய்வீகவசனம், வெகுமானம், நல்லபுத்தி, அறிவு, நல்லகுணம், நன்மனசுஎன்க - சுக்கிரனுகில் ஸ்திரீவசியன், சுமுகன், விஷயகுசலன், வெகுமானியென்க - இவர்களுடைய காரகமுங்கூட்டிச்சொல்லுக.

மிக்கபவச்சனியுதயமேவிலவமானம்
விதனம்வெகுபோசனம்விசாரநிருவித்தை
யக்கிரமம்பொய்கொலைசெய்யவக்யாதிசோர
மனுசாரம்வாயடித்தலடித்ததட்டிப்பறித்த
றுக்கமனமடிவுறக்கஞ்சோம்பலரவாகிற்
சோரம்வெகுசனபூச்யன்றுர்தொழில்விரோத
மக்கள்வெகுபாக்யமனேவஞ்சகந்தியாகம்
வர்மமகாகோபம்வெகுவார்த்தையுடையவனே.

(இ-ள்.) லக்கினத்திற் சனியிருக்கில் அவமானம், தரித்திரம், வெகுபோசனம், விசாரம், நிருவித்தை, கிரமத்தப்பு, பொய்சொலல், கொலைசெய்தல், அவக்கியாதி, சோரம், அனுசாரம், வாயடித்தல், அடித்ததட்டிப்பறித்தல், துக்கம், மனமடிவு, சதாநித்திரை,

சோம்பலென்க-ராகுவாகில் சோரம், வெகுசனபூச்சியம், துர்த்தொழில், விரோதம், புத்திரர், வெகுபாக்கியம், மனவஞ்சகம், தியாகம், மனோவர்மம், மகாகோபம், வெகுவார்த்தை யுடையவன். எ-று.

அவமதிதுற்சிகியுதிக்கில்யாசகமபாய
மவமானமரசர்பயமதிகசனத்வேஷம்
பவம்வதைசெய்குதன்முதலாம்பாதகம்விகாதம்
பயமிலதாமாந்தியெனிற்பயங்குடிலங்கெறுவஞ்
கவைவிகடமந்தபுத்தியில்ன்பவனன்கதுவிற்
காரியவிக்கினநிதனங்காலன்மரணஞ்செய்
குவன்மதிநந்தனன்முதல்வர்தற்பெயர்தற்பலனைக்
குணமகுணத்திறனளவுங்கூறுவதவ்வியல்பே.

(இ-ள்.) லக்கினத்திற்கேது இருக்கில், பாவபுத்தி, பொல்லாதவன், யாசகசீவனம், அபாயம், அவமானம், இராசபயம், வெகுசனத்துவேஷம், பாவம், வதைசெய்தல்முதலாகிய பாதகம், விகாதம், மனோநிடமென்க குளிகனாகில்மனோபயம், குடிலம், கெறுவம், சஞ்சலம், விகடம், மந்தபுத்தியென்க. குளிசபவனனாகில் காரியவிக்கினம், தரித்திரமென்க காலனாகில் மாரணமென்க - கலக்கியான பாதன் முதலானவராகில் அவரவர்பேர் போலும் பலன்சொல்லுக - இந்தப்படி, கஉ, மிடம்வரைக்கும் குணகுணமறிந்து பலன்சொல்லுக. எ-று.

ஆண் பெண்ணறிக.

வொச்சகம்.

சந்திரனிலக்கினத்திற் றங்கில்குற்றமெலாம்போம்
எந்தவிதமுஞ்சசிபெண் ணேர்கலைமிகுமேலாணும்
நந்தவிலாககோணேக்கினூற்பானெட்டான்டென்றே
கொந்தலர்பூவின்குழலாய்கூர்ந்தறிவோர்சொல்வாரே.

(இ - ள்.) இலக்கினத்தில் சந்திரனிருக்கில் யாதொரு தோஷமுமில்லை, பிறந்தகுழந்தை பெண், விர்த்தி சந்திரனாகில் பிறந்த குழந்தை ஆண். நல்லோர்காணில் வயது-சஅ, என்று சொல்லுக. எ-று.

இதுவுமது.

விருத்தம்.

பாரின்மந்தன் பரிந்தொற்றை ராசியில்
சேரநிற்கிலாண் பிள்ளை ஜெனித்திடும்
சீருலாவிய செவ்வாயிரட்டையில
பேரவாவொடு நிற்கிற்பெண்பிள்ளையே.

(இ-ள்.) சனி ஜனனலக்கினாதிகிற்கு ஒற்றிற்ற ராசியில் இருக்குமாகில் பிறந்த குழந்தை ஆணென்றும், செவ்வாய் இரட்டித்த ராசியி லிருக்குமாகில் பெண்ணென்றும் சொல்லவும். எ-று.

வியாதியும் பாலும் உண்டாமென்பது.

விருத்தம்.

பூவையேலக்கினதி புதன்குஜன்மிதுனங்கன்னி
மேவிடப்பரிதிபார்க்கில்விளைக்குமாசனத்தில்ரோகம்
ஏவுறுசசிக்குமூன்று மதிபனேடிராகுங்கூடில்
பாவைபோனேஞ்சையாகிபலர்முலைப்பாலுங்கொள்வன்.

(இ-ள்.) இலக்கினதிபதி புதனுகவாவது குஜனுகவாவதா யிருந்த மிதுனம் - கன்னியி லமர சூரியனும்பாக்க - ஜாதகனுக்கு ஆசன ரோக முண்டாம். சந்திரனுடன் மூன்று மதிபதியும் ராகுவுங்கூடி யிருக்க - ஜாதகன் மரப்பாவைபோன்று - இளைத்து தாயார் முலைப் பாலன்றி - அன்னியமாதர் பாலையு முண்பன். எ-று.

போஜன பாத்திரம்.

சந்த விருத்தம்.

எண்ணியவொண்டாமாதி லாபமூன்றுதி
யிதமில்லாப்பாவியர்கா ணிடந்தனிலேநின்றால்
உண்ணலுநற்கலமில்லா னுகந்தவொண்டாம்வீட டி
லுயருஞ்செங்கதிரோனு முலகிலுள்ளோர்காண

கண்ணியதோர்சனிமேவ ரெண்டாம்வீட்டாதி
கண்பொடுமூன்றும்வீட்டி னயந்துநிற்கத்தானும்
பண்ணுடனேசுபர்பார்க்கிற் பால்வெள்ளிககலமே
பாவக்கோள்விழிநோக்கப் படைப்பதுவெண்கலமே.

(இ-ள்.) இலக்கினத்திற்கு உ - கக - ந - க் குடையவாகளை பாபக் கிரகம் பாத்திருந்தால் உண்ணவும் உண்ணப்பாத்திரமும் இல்லாமையாம் உல் - சூரியன் சனி இருக்க உ - க் குடையவன் ந - ல் இருக்க சுபக்கிரகபாாவையுண்டாகில் பாலுடனே வெள்ளிக் கலமு முண்டு குரூரக் கிரகபாாவை யுண்டாகில் உண்ணும் பாத் திரம் வெண்கலமாம். எ-று.

வேறு.

கல்வித்திரம்.

பிரக்கினேசேர்திரிகோணங் கேந்திரத்தும்
பிரியமதிபுதனிருக்கிற் றமிழ்வித்தையாகும்
இருக்கில்லாரவிசெவ்வா யுற்றிருந்தால
தெலுங்குவித்துவானுகும் கருங்கோணிற்கில்
லெருக்கவேதுருக்குமா ரியபாஷைக்கு
நிபுணவித்துவானுகும் வெள்ளிகுருமேவில்
கிரக்கனமாஞ்சாத்திரங்க டமக்குவலல
திடவித்வானுமெனவுஞ் செப்பிடவுமாமே.

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய திரிகோணத்திலும் கேந்திரத் திலும் புதனிருந்தால் தமிழ்பாஷை சூரியன் செவ்வாயிருந்தால். தெலுங்குபாஷை, ராகுவிருந்தால் துருக்கு - இந்துஸ்தான்பாஷை, சுக்கிரன் குரு விருந்தால் - கிரசாய்விளங்கும் சாஸ்திரசம்பத்து சனியிருந்தால் இங்கிலீஷ் முதலானது உண்டாம். எ-று.

சீவனம்.

வேறு.

அம்புவியோர்செய்தொழிலாற்சீவனமுண்டாகும்
அவையறிலக்கினஞ்சோமனுதவன்மும்மனைக்கும்
தம்பமொடுபத்தாம்வீட்டங்கிசையிலிருந்தோர்
தம்மிலதிகப்பலமாத்தரித்தவரங்கிசைதான்
வெம்புரவித்தேரோனங்கிசத்தவனேடலமே
மேவிற்புல்வைக்கோலும்விற்றுணர்வேகொள்வன்
செம்பொன்விற்பதுராசிப்பலனூலுங்கோரை
திக்குபலமுண்டாகிற்செய்வன்வயித்தியங்கள்.

(இ-ள்.) உலகத்தின்கண்வர்த்த - மானிடர் செய்யுந் தொழிலை லடையும், பலனைத் தெரியச்சொல்லுமிடத்து ஜனன லக்கினம் சந்திரனிராசி, சூரியனிருக்கப்பட்டவீடு, இம் மூன்றிடத்திற்குத் தனித்தனி பத்தாம்வீட்டின்கிரகம், எந்த அமிசத்தி லிருந்ததோ அந்த அமிசத்தில் வலிமைபெற்ற கிரகத்தின் அமிசத்தைக்கொண்டு பலன் சொல்லுக, அதுவே சூரியனுடைய அமிசமாகில் புல் - வைக் கோல் விற்று ஜீவனம், இராசியாதிபதி யமிசமாகில் பொன்பொருளால் ஜிவனம், இலக்கனாதிபதி யமிசமாகில் நூல் - கோரையினாலும், வயித்தியமுஞ் செய்து ஜீவனம். எ-று.

களங்கமிலாவெண்டிங்களங்கிசமேயாகி
கமழுமிலக்கினத்திறையக்காணமுதலாகில்
விளங்கியநற்பயிர்த்தொழிலேபுரிந்துணவுகொள்வன்
மேவியவெண்டாந்திறையைக்காணமதேயாயின்
வளங்கொள்சிந்துவிற்சம்மான்கப்பல்சோங்கோட்டி
வாழ்வன்மூன்றாந்திறையக்காணமுமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும்பழித்தநடைமடவார்
இணக்கத்தாற்சீவனமுண்டென்பரினியோரே.

(இ-ள்.) வளர்பிறைச் சந்திர னமிசத்தில், முதலாந்திரேக்காணமாகில் நல்ல பயிரபச்சையிட்டு ஜீவிப்பன், ஷை இரண்டாந்திரேக் காணமாகில் சமுத்திரத்தில் தோணி கப்பல் படகோட்டி ஜீவிப்பன், மூன்றாந்திரேக்காணமாகில் கிளிததியானையி னடையையும் அன்னநடையையும் சரியல்லவென்ற ஸ்திரீகள் மூலமாய் ஜீவிப்பன். எ-று.

இனியசெவ்வாயங்கிசத்திலக்கினமேவலுக்கில்
இரும்புவெள்ளிசெம்பொனும் விற்றுய்வனவாங்கிசை
கனியபலமாயிடிலக்கினியிலுறுதொழிலே [தான்
நடத்திடுவன்றிரிம்சாங்கிசம்பலமேயாயின்
தனியுறுமாயுதம்பிடித்துச்சேவிப்பனேழாந்
தானமதுபிலனுகிற்றக்கதொழில்செய்வன்
கனிமொழியாயிரவிமுதல்சனிமட்டுமெண்ணிக்
' கண்டதுசப்தாங்கிசமேழாம்பலன்கண்டீரே.

(இ-ள்.) செவ்வாயினுடைய அமிசத்தில் லக்கினம்சம் பலத்தால் ஈயம், இரும்பு, வெள்ளி, பொன்விற்று ஜீவிப்பன், நவாம்சம் பலத்தால் நெருப்பிடத்து வேலைசெய்து ஜீவிப்பன், ' ஏழாவது அமிசம்பலத்தால் வருத்தத் தொழிலால் ஜீவிப்பன், முக்கனியொத்த மொழியினையுடைய பெண்ணே ? சூரியன்முதல் சனிவரையிலெண்ணி சத்தமமாகிய ஏழாம் அமிசத்தின் பலன் சொல்லுதல். எ - று.

கண்டபுதனங்கிசத்தின்பலனவனங்கிசையேல்
காவியங்கற்பன்றுவாதசாங்கிசமேயாயின்
மிண்டுசிற்பசாஸ்திரமேயறிந்துணவுகொள்வன்
மேவதிரிம்சாங்கிசமேயெழுதுந்தொழிலாளன்
கொண்டவறுபதிலோரையங்கிசமேற்கணிதம்
குறித்திடுவன்புதனிருந்தராசிதனைப்பிரித்து
மண்டியவறுபதுபங்குவதிலொற்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலிதுவேவமுத்தல்வேண்டும்.

(இ-ள்.) புதனமிசப் பலனுவது, நவாமிசையில் தான்பலத்தால் இலக்கணவிலக்கியவித்தையால்ஜீவிப்பன், துவாதசாம்சையில் பலத்தால் சிற்பசாஸ்திரமூலமாய் ஜீவிப்பன், திரிம்சாம்சத்தில் பலத்தால் எழுத்துமூலமாய் ஜீவிப்பன், சஷ்டியாம்சத்தில் லக்கினும்சம் வலுத்தால் கணிதசாஸ்திரமூலமாய் ஜீவிப்பன், புதனிருந்த ராசிதனை கூ0 - பங்குசெய்ய ஒற்றிற்றங்கில் புதனிருந்தால் மேற்சொன்ன பலனைச்சொல்ல வேண்டுமென்பதாம். எ-று.

வேண்டுகுருவங்கிசத்தின் முதற்றிரையக்காணம்
விப்பிரராற்பலனிரண்டாந் திரேக்காணந்தன்னில்
பூண்டதேவதைகளினுற் பலன்மூன்றுங்காணம்
புண்ணியத்தாற்பயனுகுஞ் சுக்கிரனங்கிசைக்குத்
தாண்டுசுரபிகளொருமை பெறுமூன்றுங்காணம்
தக்கவெள்ளிவிற்பனடுத் திரையக்காணந்தான்
மீண்டுமுதற்றிரையக்கா ணம்மதுவேயாயின்
விரவுநவரத்தினமே வியாபாரஞ்செய்வன்.

(இ-ள்.) குருவினுடைய அமிசத்தில் க-வது திரேக்காணமாகில், பிராமணமூலமாய் ஜீவிப்பன். உ-வது திரேக்காணமாகில் தெய்வகடாக்ஷத்தினுல் ஜீவிப்பன். ௩-வது திரேக்காணமாகில் தர்மவழிகயில் ஜீவிப்பன். சுக்கிரனுடைய அமிசத்தில் பிறந்தவன் காலி மாடு பசு எருமையினுல் ஜீவிப்பன். ௩-வது திரேக்காணமாகில் வெள்ளிவியாபாரத்தால் ஜீவிப்பன். உ-வது திரேக்காணமாகிலும் க-வது திரேக்காணமாகிலும் நவரத்தின வியாபாரத்தால் ஜீவிப்பன். எ-று.

செய்யசனியங்கிசத்திற் பலன்சிறுவன்றுனுஞ்
செப்பியமித்ராங்கிசமே பிரயாசத்தொழிலாம்
வெய்யபாவக்கிரகம் லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவுஞ்சுமைசுமந்து மெய்க்குணவுகொள்வன்

ஐயமிலக்கினந்தன்னை நீசருங்கண்டாக்கால்
ஆகாதகாரியங்க ளவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற்சுபக்கிரகங்கூடில்
துலங்கிடவேதான்சொற்பத்தொழில்செய்துவாழ்வன்.

(இ-ள்.) சனியமிசத்தின் பலனுவது—மித்திராம்சம் பெற்ருல் கஷ்டஜீவனம், குருரக்கிரகம் லக்கினத்தைப் பார்க்கில் சுமை சுமந்து ஜீவிப்பன், நீசக்கிரகம் பார்த்தால் தகாத வேலைசெய்து ஜீவிப்பன், சனியமிசத்தில் சுபக்கிரகமிருக்கில் சொற்பத்தொழிலால் ஜீவிப்பன். எ-று.

வேறு.

ஆதவன்சசி லக்கினமூன்றிற் கதிபரி லதிகமாய்ப்பலத்தோன், அடைந்தவங்கிசந்தான் பரிதியங் கிசமே யாகில் புல்வைக்கலும் விற்று, நீதியாய் வயித்தியங்களுஞ்செய்வன்நீள்பிறையங்கிசமாயின், நீரினிற்சோங்கு நடத்தியேயுய்வன் நிலமகனங்கிசையாயின், ஓதுமக்கினியாலிரும்புபொன்வெள்ளி யுருக்கலாயுதங்களினுலும், உணவுகொண் டிடுவன்புந்தியங்கிசமே லுரைத்திடுகணிதமுங்கணக்கும், தீதறுசிற்பத் தொழில்கள்காவியத்தாற் சீவனம்வேந்தனங்கிசைக்கு, தெய்வமா மறையோர்பெரியவராலுஞ் சீவனம்புரிந்தினி திருப்பன்.

(இ-ள்.) சூரியன், சந்திரன், லக்கினம், இம் மூன்றிடத்ததிபதி வலுத்திருந்தாலும், அல்லது இம்மூவிடத் தமிசைக்கிரகம், சூரியனமிசமாகில் புல்வைக்கோல்விற்று ஜீவிப்பன், மேலும் வயித்தியமூலமாய் ஜீவிப்பன். சந்திரனமிசையாகில் ஜலத்தில் கட்டுமரமுதலிய மரக்கலம்விட்டு ஜீவிப்பன், செவ்வாயி னமிசையாகில் அக்கினியிடத்தில் ஈயம், இரும்பு, பொன், வெள்ளி யுருக்கியும், ஆயுதம்பிடித்தும் ஜீவிப்பன். புதனமிசமாகில் மேன்மையாய் கணி

தசாஸ்திரம் கணக்கு குற்றமற்ற சிற்பத்தொழில் இலக்கணசாஸ்திரம், இதுமூலமாய் ஜீவிப்பன், குருவினுடைய அமிசமாகில், தேவதையாலும் வேதியராலும் சான்றோர்களாலும் ஜீவிப்பன். எ-று.

கலிவிருத்தம்.

இருந்தசுக்கிரனங்கிசமேறிலோ
திருந்தரத்தினம்வெள்ளியாற்சீவனம்
பொருந்தசுன்னங்கிசம்புகவீனமாய்
வருந்திடுந்தொழிற்செய்வன்வளமிலான்.

(இ-ள்.) சுக்கிரனமிசமாகில் இரத்தினம், ரசிதம், இதனால் ஜீவிப்பன். சனியமிசமாகில் ஈனத்தொழில் செய்தும் மெய் வருத்தும் படியான ஜீவனஞ்செய்வன் கஷ்டப்பிராணி. எ-று.

வேறு.

இருப்பிடம்.

தானமாஞ்ஜென்மவீடு சரமெனிற்பரதேசத்தில்
ஆனதோர்திரமதாயின மருவன்சுதேசந்தன்னில்
ஈனமிலுபயமாகி லிதரதேசத்திற்பாதி
ஊனமிற்சுதேசந்தன்னி லுறைவன்பாதியுங்காண்வீரே.

(இ-ள்.) ஜாதகன் ஜனனலக்கினம் - சரமாகில் பிரதேசவாசம், திரமாகில் சுதேசவாசம், உபயமாகில் பிரதேசத்தில் சிலகாலமும் சுதேசத்தில் சிலகாலமும் வாசமாம். எ-று.

வேறு.

விவாக மின்மை.

எண்ணுதபாவியர்களத்திரத்திலெய்திட
நண்ணுகவாறெட்டுபன்னிரண்டினண்ணிட
துன்னுருஞ்சத்துருநீசம்பெறத்தோன்றிட்டான்
மின்னுரைக்கைப்பிடித்துவேட்டல்செயமாட்டானே.

(இ-ள்.) இயாதொரு ஜாதகத்திற்கு ஏழாமிடமாகிய களத்திரத்தானத்தில் குரூரக்கிரகங்க ளிருந்தாலும் அந்தஸ்தானுதிபன்

ஷட்டாஷ்டம விரயத்தானத்தி லிருந்தாலும் சத்துருஸ்தானம் நீசஸ்தானம் அடைந்தாலும் இவ்விதக் குறிப்புகளில் பிறந்தவன் பாணிக்கிரகணஞ்செய்து மணம்புரியமாட்டான். எ-று.

வேறு.

மரிப்பிடம்.

வரத்தினிற்பார்க்கவனுதயமறையவன்பெண்மதியாய்
வருடையிலாங்கிசமானதலுப்புறமாய்வரினும்
தரத்தினிலந்தணனுறினுஞ்சிவலோகமிரவி
தழலிவர்கள்பெலக்கினரருலகிலிரசதமு
கிரத்துகலைக்குளவிதுவும்பெலத்தல்பிதுருலக
நிதிமீனத்துதயமுறினிமலருடன்கூடித்
திரத்துதயகேந்திரத்திற்றிவிக்கிரயிற்சமாச்
சீவனுறிலிவன்சேர்தல்பிரமபதமெனுமே.

(இ-ள்.) எ-ல், சுக்கிரனும், க-ல், குருவும் கன்னியிற் சந்திரனுமாக லக்கினம் தனுவாகி மேடாங்கிச மேறிலும், லக்கினத்தில் வியாழன் இருக்கிலும் சிவலோகம் அடைவனென்க - கிரகாதிபரில் ரவி சேய் பெலக்கில் பூலோகத்தை அடைவனென்க - சுக்கிரனும் பூருவபக்ஷத்துச் சந்திரனும் பெலக்கில் பிதுருலகம் அடைவனென்க - மீனலக்கினமாகி குரு விருக்கிலும் திவியிற்றிரமும் நிசியிற்சரமும் லக்கினமாக கேந்திரத்திற் சுபருடன் வியாழன் கூடியிருக்கிலும் பிரமபதம் அடைவனென்க. எ-று.

தேவருலகடைபவன் நரகஞ்சேர்பவன்
வைதண்டம் பெறுபவன்.

பதப்பதியுமிதற்கிறையுமுற்றவர்பார்த்தவரும்
பார்ப்பான்றன்வர்க்கமுறிற்பண்ணவராகுவராற்
சிதப்பதியுமெட்டீறுஞ்சுபராசியாகித்
தீதகலச்சுபர்பார்க்கிற்றேவருலகடைவர்

மதப்பதிமன்பெலக்கவசையீறிவர்கணீச
மடைந்திடினுநரகமைக்கோணேர்பூமிவான
முதற்பதிமற்றப்புறமாய்மொழிவர்குருவர்க்க
முதற்புதனேச்சனிபார்க்கின்மாலுலகமுறலே.

(இ-ள்.) கஉ-ம், இதற்குடையவனும் இதில் இருந்தவனும் பார்த்தவனும் குருவர்க்கமேறில் தேவனுவனென்க - ௧0, அ, கஉ-ம், சுபராசியாகி பாவமில்லாச் சுபர்பார்க்கில் தேவருலகத்தை அடைவனென்க எ-க்குடையவன் பெலக்க, க, அ, கஉ, க்குடையவர்கள் நீசவர்க்கம் அடையில் நரகம் அடைவனென்க-மேடக்கோண முதல் நாற்கோணில் லக்கினமானதுகண்டு பூலோகம் அந்தரலோகம் சுவர்க்கலோகம் நேர்வைத்துச் சொல்லுக. லக்கினம் குருவர்க்கமாகி புதனிருக்க சனிபார்க்கில் வைகுண்டம் அடைவனென்க எ-று.

வே று.

நக்ஷத்திரபாதபலன்.

அச்சுவினி.

ஆசிரியவிருத்தம்.

சீர்பெறுகோளன் சஞ்சலன்பாவி செறிந்திடும் ரூபமேயில்லான், செப்பியபிலுக்க னங்கியர்க்கன்பு செய்குவ னச்சுபதிமுதற்கால், தார்செறிபிறரின் குணத்தினை யறிவன் சவுந்தரவானலம் புரிவன், சாத்திர முறைக்குஞ் ஞானமுட்பார்வை தருமிருகாலினிற் சனித்தோன், ஏர்பெறுகணிதவித்தையிற்பிரிய னினிதுளபுத்தியே புகல்வன், இசைந்திடு மூல ரோகிகிற்கரும மெண்ணுவன் மூன்றதாங்காலான், போர்செறியுடம்பு வளைவுகாமதிக புத்திமான்சோதிடமறிவான், புரந்தரன்காமி சத்தியவானும் புகழுநாற்காலினிலுதித்தோன்.

(இ - ள்.) சிறப்புப்பொருந்திய குற்றம் பேசுதலும் சபலமும் பாலமும் - அழகில்லாமையும் டம்பமும் - அன்னியமானவர்களுக்குப் பிரியம் செய்தலும் அசுவனி நக்ஷத்திரமுதற் பாதத்தவர்க்குண்டு.

கூர்மையுடன் எதிரியின்மனதை யறிதலும்-சுந்தரமும்-நன்மை செய்தலும் சாத்திரங்கள் முறையிடும்படியான மெய்ஞ்ஞானத்தில் திர்ஷ்டியும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

அழகுபொருந்திய சோதிட சாஸ்திரத்தில்-அபிலாஷையும் இனிப்பான புத்தியைச் சொல்லுதலும் மூலரோகமும் நற்செய்கையை விரும்புதலும் ஷை மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

சண்டைசெய்தலின் சோம்பலில்லாமல் தேகத்தைவளைத்தலும்-மகாவிவேகமும் - சோதிடசாஸ்திர மறிதலும் - இந்திரபோகமும் ஆசையும் சத்தியமும் ஷை நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

பரணி.

காலமாஞ்சிவப்பன் மிகுபராக்கிரமன் கனபலனீதியுமுள்ளான், கருதலர்சிங்கஞ் செங்நிறமயிரான் காணுமே பரணியின் முதற்கால், கோலமாமானி நிபுணனும் வசியன் குணமுளன் புத்திமான்காமி, கூறிய தருமசாத்திர்முறைப்பின் குலவியபரணிகா லிரண்டான், சாலவுங்கோபி யுருட்சியுள்கண்ணன் றன்னியன் மானிசந்தோஷி, சற்குணனெடியோ னுகுமூன்றுங்கால் சாற்றிய பரணியாமதன்மேல், தூலதேகத்தன் கோபியாமரசர் துன்னுசேவகத்துவமுள்ளன், துர்ச்சனன்கருவி யாகுமேபரணி தோன்று நாற்காலினுற் சொல்லே.

(இ-ள்.) ஜனனகாலவிசேஷம் சிவந்ததேகமும் உத்தண்டமும் மிகுந்த பலமும் விபகாரமும் சத்துருக்களை ஜயிக்கும் கோளரிபோலும் சிவப்புரோமமும் பரணிநக்ஷத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

அழகிய அபிமானமும் வெகுவல்லமையும் ராகித்தலும் நல்ல குணமும்; விவேகமும், ஆசையும், தர்மசாஸ்திரஞ் சொல்லுதலும் பொருந்திய ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

மிகுந்தகோபமும் வட்டமாகிய கண்ணும் எல்லாத்திறமையும் அபிமானமும் - உத்சாகமும் நற்குணமும் தேகதாட்டியும் ஷெ மூன்றாம் பாதத்தவர்க்குண்டு.

காத்திரதேகமும் கோபமும் ராஜத்துவாராவில் உத்தியோகமும், துன்மார்க்கமும், கெர்வமும் ஷெ நான்காம் பாதத்தவர்க்குண்டு எ-று.

கார்த்திகை.

சொல்லுமாசாரன் வித்துவான்பிரபு தோன்றியவிலா பமுள்ளவனும், சூரனுநேசன் புத்திமான்ரோகி தோன்றிடு மாரலின் முதற்கால், வெல்லுமாசார வீனன்மானிடர்கள் வெறுத்திடுகோபமுள் ளவனும், வெற்றிசேர்பிறரைச் சேர்ப்பனூறன்னே விரும்பிடான் கார்த்திகையிருகால், புல்லுவனிட்ட மடந்தையர்தம்மைப் புத்தியிலான் மிகுசூரன், பொருந்திடாக்கோபி கருவிபொல் லாங்கைப் புரிகுவனுமொரு மூன்றில், அல்லுறுமிடியன் கலைபலவறியா னுமனத்தாப மேயுள்ளான், அடைந்திலான் பொறுமைதுக்கவான் ரோகி யாகுநாற்காலதன்பொருளே.

(இ - ள்.) சொல்லத்தகுந்த - ஆசாரமும் வித்துவத்தன்மையும் பிரபுத்துவமும் நினைத்தபடி இலாபவரும்படியும் சூரமும் நேசமும் அறிவும் கிஞ்சித்ரோகமும் கிருத்திகைமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

அனுசாரமும் எல்லோரும் அசங்கியம்படும்படியானமூர்க்கமும் தான் முயற்சிபடச் சிலரைச் சேர்த்துக்கொள்ளலும் சாஸ்திரங்களைப் பாராட்டாமையும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

கெட்ட கடைபடிப்பெண்களைச் சேர்தலும் புத்திகுறைவும் அதிக சூரத்தவமும் - வீண்கோபமும் கர்வமும் கொடுமையைச் செய்தலும் ஷெ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

தரித்திரமே குடிகொண்டிருத்தலும், படிப்பில்லாமையும், மனவெறுப்பும், பொறுமை யில்லாமையும், துயரமும், வியாதியும், ஷெ நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

ரோகணி.

பொருளழகுள்ள னலைச்சலான்காமி புறத்தியார்க்கியற்றுவன்றுன்பம், பொறையிலான்வர்ம்மி ரோஷவான்ரோகி பொருந்துரோ கணிமுதற்காலான், அருளுயர்சாந்த குணமுளான்ரோகி யான்சத்ய வாக்கியாசாரன், அமர்ந்ததோர் பெண்ணை மணப்பன்வாய்ச்சால னன்புளனுமிருகாலான், குருவருள்கணித வித்தைசங்கீதன் கூறியமந்திரன் சுகவான், குலவியபஞ்ச காவியமறியுங் கொள்கையானுகுமூன்றுங்கால், இருளிலாத்தத்வ ஞானியருடைமைக் கிச்சைசெய் புத்தியானினிய, ஏந்திழைமேலலன்ரோகணிநாற்கா லினில் வருவோன்பல னுரைக்கில்.

(இ-ள்.) நற்பொருளடைதலும் திரிச்சலும் அவாவும் அன்னியருக் கிடையூறு செய்தலும், பொறுமை யில்லாமையும், மர்மமும், சூரத்வமும், வியாதியும் ரோகணி நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

இருபைபொருந்திய தண்மையும் பீடையும் பேச்சு நிலைமையும், சீலமும் இல்வாழ்க்கைக்குத் தகுதியான பெண்ணைக் கலியாணம் செய்தலும் வாக்கு ஜம்பமும், பிரீதியும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

ஆசாரியனுடைய கிருபையும், கணிதசாஸ்திரமும், கானவித்தையும், மாந்திரீகமும் சௌக்கியமும் பிரகாசம்பொருந்திய பஞ்ச காவியங்களை யறிதலும் ஷெ மூன்றும் பாதத்தவர்க்குண்டு

அழகுள்ளதேசமும் பிறர்பொருளை யிச்சிக்கும் படிக்கான குண மும் புத்தியுள்ளவனும் ஸ்திரீ லோலத்துவமும் ஷை நான்காம் பாத த்தவர்க்குண்டு எ-று.

மிருகசீரிஷம்.

உரைத்திடுதனவான் சத்ருசங்கார னுதித்திடுங் தேக னுங்கோபி, உண்மையாசார வீனன்ராக்ஷதனு மோங்கு மான்றலேமுதற்காலான், தரைக்குணல்வழக்கே யுரைப்ப னுத்தேசி சாதுவாமனோகரம் பெற்றோன், சத்தியவாக்கி யரிவையர்லோலன் சாற்றிடு மிரண்டதாங்காலான், உரைக் குநல்லுதார குணமுளனல்ல னுத்தமன்சாதுசந்தோஷி, உசி தவாசாரன் புத்திமான்சீமா னுற்றமூன் றும்பதத்துதித் தோன், விரைத்துறுபுத்தி சத்தியன்சாது மேவியதருமனற் காமி, வீரியன்கோபி வஞ்சகனென்றே விளம்புநாற்பாதமா மினியே.

(இ - ள்.) சொல்லத்தகுந்த திரவியமும் சத்துரு நாசமும் காத் திரசரீரமும் கோபகுணமும் சுத்தமில்லாத ஆசாரயீனமும் ராக்ஷ சநடையும் மிருகசீரிட நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

உலகத்திற்குச் சரியான வழக்கத்தைச் சொல்லலும் யோசித்த லும், தண்மையும் மனசந்துர்ஷ்டியும் சத்தியவசனமும் ஸ்திரீகமன மும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

பிரபலமான ஔதாரியகுணமும் யோக்கியமும் உத்தமநடக் கையும் பரமசாதுவும் சந்தோஷகுணமும் உச்சிதம்பொருந்திய ஒழுக்கமும் விவேகமும் சும்பத்காரமும் ஷை மூன்றாம் பாதத்தவர்க் குண்டு.

விரைவுள்ள புத்தியும் சத்தியமான வசனமும் சாந்தகுணமும் தருமமும் ஆசையும் வீரியமும் கோபமும் கபடமும் ஷை நான் காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

திருவாதிரை.

இனியநல் வசன குணமுளன் மகத்மா யெவ்வன நாரியர்க்கினியன், இயலுறுநல்ல வாதிரைமுதற்கா லினில்வருங்குணத்தினனென்ப, தனியுரைவாய்சா லகனுநிட்டூரன்றருக்கியன்கர்விதீக்ஷையிலான், தகுதியாய் மடவாருடன்சாற்றியபாதமோ ரிரண்டில், குனியவிலலாதரோகமுமுள்ளோன் கோபிதண்கிருபையு மிலலான், கோளனுமஞ்சு நாரியர்தமக்கே குணமிலான் காலொருமூன்றில், துனியுநலவேகிவுறவினர்ப் பகையான்றுன்றியவீனமா மனத்தன், துர்ப்புத்தியூத்தை யுடம்புளன்பொலலாத் துர்ச்சனனுகுநாலென்றே.

(இ-ள்.) இனிமையான வார்த்தையும் நற்குணமும் பரமாத்துமமும் யவ்வனஸ்திரீகளுகளுக்கிஷ்டமும் திருவாதிரை நட்சத்திரமுதற் பாதத்தவாக்குண்டு.

ஒப்பற்றவாக்கு தாட்டியும் பழிபோடலும் வாதுபேசுதலும கர்வப்படுதலும் விரதமில்லாமையும் தகுதியான ஸ்திரீகளுடன் கமனம் பண்ணுதலும் ஷை இரண்டாம் பாதத்தவாக்குண்டு.

குனியக்கூடாத வியாதியும் கோபமும் சாந்தம் தயையில்லாமையும் கோள்சொல்லுதலும் பெண்களுக்குப் பயப்பட்டாலும் குணமில்லாமையும் ஷை மூன்றும் பாதத்தவாக்குண்டு.

கோபத்தில் சுறுசுறுப்பும் உற்றார்பகையும் ஈனமாகியகுணமும் துஷ்டபுத்தியும் அழுக்கடைந்த தேகமும் கொடுமையுள்ள துஷ்செய்கையும் ஷை நான்காம் பாதத்தவாக்குண்டு.

புநர்பூசம்.

என்றுமெய்தூலப் பிலுக்கனற்போகி யினசந்திடுசெவிடனுங்காமி, ஏனமாமயிர னிதுபுநர்பூச மாமுதற்காலினி லிசைந்தோன், துன்றியபித்த னுட்டினதேகி சோம்பலா

சாரமு மில்லான், துக்கமேநித்தம் பொருந்துவனிருகா ரேுன்றியநாட்புலன் மிகவே, அன்றிறுங்குட்ட ரோகியாஞ் சாது மலேச்சலான்காரிய மறிவான், அந்தமுடந்தரோக வான்றீர்க்க வயதுளான்பாதமூன் றதனில்; நன்றினிற்பிரிய முள்ளவன்குள்ளன்வல்லவனழகுளானென்றே, நடியபார் வை லக்ஷணமறிவ னுற்பதமறிந்துரைதனக்கே.

(இ - ள்.) ஸ்தூலதேகமும் சளுக்கும் நன்று யனுபவித்தலும் காது கேளாமையும் ஆசையும் பன்றிமயிரைப்போன்ற ரோமமும் புனர்பூச நட்சத்திரம் முதலாம் பாதத்தவாக்குண்டு.

இளைத்தபயித்தியமும் காங்கையுள்ள தேகமும் அசத்தியும் அனு சாரமும் சார்வதாய் துயரமும் ஷை இரண்டாம் பாதத்தவர்க் குண்டு.

ஜெனனமீனபோது விளைந்த குஷ்டவியாதியும் வெகு மேதக மும் அலைச்சலும் காரியந்தெரிதலும் பலத்த பல்ரோவும் நீண்ட வாயுளும் ஷை மூன்றும் பாதத்தவாக்குண்டு.

நன்மையான காரியத்தி லிஷ்டமும் வாமனமும் வல்லமையும் அந்தமும் யாவரும் நாடும்படியான பாவையும் ஷை நான்காம் பா தத்தவர்க்குண்டு எ-று:

பூசம்.

தனக்கொடிமாதே சூலேநிட்ரேன் றருமவான் கோபி புத்தியுளான், தாழ்வறுந்தீர்க்க வாயுளான்றீயன் றகுமிளிர் பூசநாண் முதற்கால, தினத்தினிற்பிரபு சர்வவியாபகனுஞ் சனங்களைத் தாபரித்திடுவான், செப்பியநிதானியந்நியர்சி நேகி சேர்ந்திடுமிரண்டதாம் பதத்தில், இனத்தினர்க்கினி யன் புத்திமான்ஞானி யினியசந்தோஷியானேசன், இதத் தினுனல்ல காரியமுடிப்ப னெழில்பெறு மூன்றதாங்கா லான், மனக்குறுசண்டை யுடையவன்கோபி வாஞ்சையா

ஞூரியர்தமக்கே, மகிழ்ந்திடுகமனன் பூசநன்ஞற்கால் வரும் பலனறிந்துணர் மின்னே.

(இ-ள்.) பொற்கொடிபோன்ற பெண்ணே - சூட்டைப்பற்றிய ரோவும் கிஷ்றேமும் தர்மகுணமும் கோபமும் புத்தியும் குறை வற்ற ஆயுவும் கொடுமையும் பூசநட்சத்திர முதலாம் பாதத்தவர்க் குண்டு.

பிரதிநாளிலும் பிரபுத்துவமும் சகலத்திலும் வியாபகமும் ஜன கூட்டங்களைக் காப்பாற்றலும் சொல்நிதானமும் பிறரைச் சிநேகஞ் செய்தலும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

பந்துக்களிடத்திலிஷ்டமும் அறிவும் விவேகமும் மிகுந்த சந் தூர்ஷ்டியும் சிநேகமும் பக்குவமாக நற்கருமஞ் செய்தலும் அழகு பொருந்திய ஷை மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

தைரிய மில்லாமையும் சச்சுரவும் சினமும் விசுவாசமும் ஸ்திரீக ளிடத்தில் சந்தோஷமாச் சேர்தலும் ஷை நான்காம் பாதத்தவர்க் குண்டு. எ - று.

ஆயிலியம்.

மின்னியதனமும் பெண்வடிவுள்ளான் மேன்புத்தி யுடையன்சந்தோஷி, மிகுநலஞை தொழில்புரிந்திடுவன் வேண்டுமொயிலியத்தின் முதற்கால், அன்னியரேவற்ருெழில் புரிந்திடுவனழகுளனேக்கமுமுள்ளான், அசங்கியனடையன் றர்புத்தியுடைய ஞயில்யங் காலிரண் டதற்கே, நன்னியற் கோபி நாரியை வதைப்பன் ஞானியாலசியஞநிபுணன், நல மிலாவார்த்தைப் பற்றவேயுரைப்ப னயமிகுபாதமூன்ற தற்கே, புன்கொலைநாசம் புரிபவனசுபுன் புகர்தனைச்செய்ப வர்க் கினியன், புலைச்சியர்சங்கம் பண்ணுவனேயைப் பு ணர்ந்திடுகான்கதாங்காலே.

(இ-ள்.) பிரகாசிக்கும்படியான திரவியமும் ஸ்திரீ ரூபமும் மே ன்மையான விவேகமும் உத்சாகமும் மிகுதியான நன்மையும் அனேக

மான காரியங்களைச் செய்தலும் ஆயிலிய நட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

அசலார் இட்டவேலையைச் செய்தலும் சௌந்தரமும் வியாக்கூலமும் ஒழுக்கங்கெட்டநடத்தையும் துன்மார்க்கமும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

இயற்கையிலே கோபமும் ஸ்திரீகளைத்துன்பப்படுத்தலும் தெளிதலும் சோம்பலும் கெட்டித்தனமும் பிரயோசனமில்லாத வார்த்தையைப் பேசுதலும் ஷெ மூன்றாம் பாதத்தவர்க்குண்டு.

பொல்லாத கொலைசெய்தலும் அமங்களமும் புரட்டு செய்யப்பட்டவர்களிடத்தில் பிரியமும் நீசஸ்திரீசங்கமும் வியாதியும் ஷெ நான்காம் பாதத்தவர்க்குண்டு எ-று.

மகம்.

காலனைப்போலப் பயமுளசிவந்த கண்ணன்பேராசையான்யூகி, கருதிடுசிவந்த மெய்யினன்சேர்ந்த குஞ்சியான்மகமுதற்காலான், போலியான்புத்தி யனல்வடிவுடையோன் பொருட்செலவானசந்தோஷி, பொன்னிறக் கண்ணன் காதிரேயுடையோன் பொருந்திய காலிரண்டதற்கே, சாலவும்பலவான் மிக்கநோயுள்ளான் சாதுபொல்லாதவன் கடினன், ருன்மிகவாசை யுடையவன்றூயன் ரகுதிகான்மூன்றினி லுதித்தோன், சீலனுநாரி பேச்சினைக் கேட்பன் சிரங்குடனேயுமுற்றிடுவன், சிந்தைநோயுடையோன் மதுரவாசகனுந் தெளிந்துரைநாற்பதமாமே.

(இ-ள்.) சண்டாளனைப்போலவும் பயந்தரும்பார்வையும் இரத்தக்கண்களும் பெருத்தஆசையும் யோசனையும் சிவந்த நிறத்தேகமும் சிவந்தசிகையும் மகநட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

போலித்தனமும் தேகத்தில் நெருப்புக்காயமும் திரவியச்செலவில் சந்தோஷமும் பொன்மயம்போன்ற விழியும் கர்னரோகமும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

மிகுந்த பலாட்டியமும் அதிகமான வியாதியும் சாத்விகமும் அண்டக்கொடுக்காத கோபமும் கண்டகமும் பேராசையும் பரிசுத்தமும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

பரிசுத்தமும் ஸ்திரீகளுடைய வார்த்தையைக் கேட்டலும் புண்ணும் சிலரோயும் மனக்கவலையும் தித்திப்பானவார்த்தையும், ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

பூரம்.

ஆமெனுந்திர னின்சொலன்கோபி யானவன் சவுரியன் சிறுவீ, டாக்கமில்லாதான் வியாபாரஞ்செய்வா னுனபூரம் முதற்காலான், தாமெனுமுழவுத் தொழில்புரிகுடிருன் றுக முங்கிலேசமு முள்ளோன், தானொருசகாயம் பிரபலனில்லா தவனென்ப விரண்டதாங்காற்கே, நாமனுங்குணவானுகுமேன்பாட்டா னல்லதோர் கீர்த்திமானுகும், நாடிய மூன்றும் பதமெனும் பொருளை நாட்டினி லுரைப்பர்நல்லோரே, தேமுறுந்துக்கங் குரவடுவுள்ளன் சொற்றிடுநிந்தையேபுரிவன், சோர்வறுமறையோர் தேவதூஷணத்தைச் சொல்லுவனுன்கெனக் கண்டே.

(இ-ள்.) தைரியமும் மாதுரியமான வார்த்தையும் கோபமும் வீவோசலில்லாமையும் வர்த்தகஞ் செய்தலும் பூரநட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

மிகுந்த பயிர்த்தொழில் செய்யும்படிக்கான சம்சாரியும் இல்லாமையும் கவலையும் உபகாரம்செய்தலில் பிரபலமில்லாமலிருத்தலும் ஷ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

குணக்கியமானபேரும் மேன்மையும் சுபகீர்த்தியும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

சார்வதாய் துக்கமும் குருநிந்தையும் அபாண்டமும் போடுதலும் சோம்பலைச்சீக்கும் பெரியோர்களையும் தெய்வங்களையும் தூஷித்தலும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

உத்திரம்.

கண்டெனமிருது வசனனுங்கீர்த்தி கன்னியன் றீர னிங்கிதனுங், கருதியகிளைஞர் மேன்விருப் புடையான் காணுமுத்திரமூதம் காலோன், கொண்டிடுங்கர்மி தரித்தி ரனுரணன் கோதுறுசஞ்சலசித்தன், கூறியநித்தம் யாசகனு கும் குலவியவிருபதத் றுதித்தோன், அண்டிடும்பிலுக்கன் பழுதிலா வுரையா ளுக்களை மேய்த்திடு மவனும், ஆனவா சார வானதாமூன்றி லாகியபிறப்புடை யவனே, வண்டனு நன்றி மறந்திடான்பிறரை மதித்திடான்றுஷண மறைவன்; வாலிபந்தன்னிற் ருய்மறித்திடுவள் வழங்குவர் நான்கெனப் பெரியோர்.

(இ-ள்.) சொற்சுவையுள்ள மிதபாஷிணியாயும் கீர்த்தியும் கன் னியமும் தைரியமும் இங்கிதவார்த்தையும் பந்துக்கள்மீது சந்தோஷ மும் உத்திரநட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

கர்மியும் இல்லாமையும் அதிகதிண்டியும் குற்றமுற்ற சகலகுண மும் பிரதிதினம் பிட்சையெடுத்தலும் ஷ இரண்டாம் பாதத்த வர்க்குண்டு.

டம்பமும் பரிசுத்தமான வசனமும் பசுமாட்டுமந்தைகளை மே ய்த்தலும் யோக்கியதையும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

போக்கிரித்தன்மையும் ஒருவர் செய்த சகாயத்தை மறக்காம லும் ஒருவரையும் லட்சியம் செய்யாமலும் தூறுபேசுதலும் சிறுவய திலேயே பெற்றவள்சாதலும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டு.

அஸ்தம்.

பெரியதோர்கலகம் பண்ணுவித்திடுவன் பேசியபொய் யனுங்கர்வி; பிலுக்கனுசாரன் பசுக்கடம் மிடத்திற் பிரிய னுமத்தத்தின் முதற்கால், அரியதோர்குணவான் செய் தொழிலறிவா னனதோர் வாலிபந்தன்னில், அன்னைபோம் பாட்டோ டாடலிற்பிரிய னதியுரை யுடையனு மிரண்டில்,

தரியலர்போல மனத்தினுன்றந்தை தானறுஞ் சிறுவயத தனில், தந்திரவாதி ரோகியாபாரி சார்ந்திடுமூன்றதாங்கா லான். உரியநன்னடையா னீகையா னெடியோனேதுசந் தோஷவானுகும், உசிதனுமன்னைக் கினியன்மெய்க்கீர்த்தி யுடையனுற்காற்பலனறியே.

(இ-ள்.) பிரபலமான கலகத்தை உண்டுபண்ணுதலும் பொய் வார்த்தைப் பேசுதலும் ஆங்காரமும் டம்பமும் சுசியும் காலிமாடுக ளிடத்திற் பிரியமும் அஸ்தநட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

அரிதானகுணமும் செய்யுந்தொழிலில் திறமையும் சிறுவயதில் பிதா யிறந்திடுதலும் ஆடல்பாடலில் சந்தோஷமும் அதிகமாய்வார்த் தையாடுதலும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

சத்துருவைப்போல மனதைக் காட்டலும் இளம்பிராயத்தில் தகப்பன் சாதலும் சூதும் பீடையும் வாணி[illegible]யமும் ஷை மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

ஒப்பத்தகுந்த நன்மார்க்கமும் உதாரத்துவமும் உயரமும் சந் தோஷகுணமும் அபூர்வமான செய்கையும் தாய்சொற் றவறுமை யும் புகழுடலமும் ஷை நாலாம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

சித்திரை.

அறிந்திடாப்பொல்லாக்காரியம்பண்ணவறிகுவனேத் திரரோகி, ஆக்குவான்வியாக்கி யானஞ்சஞ்சாரி யாகிடுஞ் சித்திரை முதற்கால், பெறுந்தனிவசனன் றேகபோஷணை யான் பெருமிடியானெடி யோனும், பேணியதபசிசஞ்சல னென்றே பேசுவர் மாசிலாரிரண்டால், செறிந்திடுங்கீர்த்தி மான்பராக்கிரமன் றிட்டுறும் வித்துவான்ஞானி, செப்பு நன்னடையோ னறிவுடையாளன் றிரிபதமதிலுதித்தோனு ம், எறிந்திடும்பகைவர் தமைமடக் கிடுவனியல்புத்தியான் சய முள்ளான் - ஏதமற்றிடுநாற் காலினுக்கென்றே யியம் புவர் மேன்மைபெற்றோரே.

(இ-ள்.) அறியக்கூடாமல் பொல்லாங்கான காரியஞ்செய்ய உபாயங் தெரிந்திருத்தலும் நேத்திரரோகமும் மொழிபெயர்த்தலும் தேசசஞ்சாரமும் சித்திரை நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

ஒருவருடைய போதகத்திற் கெதிர்பாராமல் பேசுதலும் சரீரத்தை நன்றாய்க்காப்பாற்றலும் வெகுதரித்திரமும் உன்னதமும் தபசிரோஷ்டமும் வியாக்கூலமும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

பிரபலமான கீர்த்தியும் வெற்றியும் தேர்ந்த வித்வத்தன்மையும் அறிவும் நற்குணமும் நற்செய்கையும் ஷெ மூன்றாம் பாதத்தவர்க்குண்டு.

எதிர்துபேசப்பட்ட சத்துருக்களை வசியம்பண்ணுதலும் இயற்கையில் விவேகமும் விஜயமும் குற்றமற்ற ஷெ நான்காம் பாதத்தவர்க்குண்டு எ-று.

சுவாதி.

பெற்றிடுதீரன்சொப்பனன்ஞானி பிரபுவையடைந்தி
னிதிருப்பன், பெருமைசேர்வித்தைப் பிரசங்கிசாது பேசி
யசோதியின் முதற்கால், உற்றநற்றிடவா னுரும்வாய்ச்சால
னுத்திமான்காரியவாதி, உண்மையானந்த ரங்கவான்காமி
யோதுகாலிரண்டதாம் பலனே, வெற்றிவிற்றொழிலன் சூரு
ரனுங்குடிலன் மேவுநல் னடையிலான்கலக, மியத்துவான்
சோதி விளம்புமூன்றாகு மெனும்பதத் துதித்திடுவோனே,
சொற்றிறன்கோபி கலகமேற்பிரியன் றுர்ச்சனன் சீலவான்
காமி, சோரனுநான்காம் பதத்தினிலுதித்தோன் றோற்றிய
வடிவமைத் தோளாய்.

(இ-ள்.) சுபாவத்தில் தைரியமும் கனவுகாணலும் தெளிந்த ஞானமும். மகாப்பிரபலவான்களைச் சிநேகஞ் சேர்ந்திருத்தலும் சிறப்புபொருந்திய கல்வியும் பிரசங்கதாட்டியும் சாத்விகமும் சோதி நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

வலிமை பொருந்திய சரீரமும் வாக்கு சாதுரியமும் விவேகமும் காரியத்தில் ஜாக்கிரதையும் நிலைமையும் ரகசியமும் ஆசையும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

வல்லமைபொருந்திய வில்வித்தையும் கொடுமையும் விஷமும் நன்மார்க்க மில்லாமையும் கலகப்பிரியமும் ஷை மூன்றும் பாதத் தவர்க்குண்டு.

சொல்நிலைமையும் ஆத்திரமும் விகற்பம் செய்வதில் பிரீதியும் துன்மார்க்கமும் சீலமும் சந்தோஷமும் சோரமும் ஷை நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

விசாகம்.

அமைத்திடுவஞ்சன் கலையியாளுது மறுவன்சோதிடஞ்
சவுக்கியவான், அறிவுறுபுலவன் வாணிபம்புரிவா ளுகுமே
விசாகத்தின் முதற்கால், தனைப்புழ்ந்திடுவன் மந்திரன்
காமி சத்தியனீதிமான்ரோகி, சரசவாளுஞ்சந் தோஷியிங்
கிதவான் சாற்றிருகாற்பல னென்பாய், இமைத்திடுபில
வான் சோரனுங்குள்ள னினியகாரியமறிந் திடுவன், எழில்
பெறும் பரஸ்திரிக மனன்வாய்ச்சாலனேதமின் மூன்றதாங்
காலான், அமைப்பெரும்புத்தி யுடையனும்யோகியருந்தன
முடையவன்ஞானி, அழகுறுந்தார மமான்றுளனெடியோ
ஞ்கும்வாய்ச் சாலனும்பதமே.

(இ-ள்.) வஞ்சகநிறைவும் படித்ததன்மையும் சோதிடசாஸ்திர மறிதலும் ஆசோதையும் கல்வித்திறமும் வியாபாரஞ் செய்தலும் விசாகநட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

தன்னைத்தான் புகழ்ந்துக்கொள்ளுதலும் மந்திரவித்தையும் அபிலாஷையும் நிலைமையும் நீதியும் பிணியும் விளையாட்டும் வேடிக்கையும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு,

பார்வைக்குப்பலமும் சோரத்தனமும் குள்ளமும், உபாயமாய் காரியத்தை ரஷித்தலும் அழகிய பெண்களைப் புணர்தலும் வாயாடுதலும் ஷை குற்றமற்ற மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

அமைந்த. விசாலமான புத்தியும் அவதூதித்தன்மையும் அரும் பொருளுடைத்தா யிருத்தலும் கியானமும் சௌந்தரியமுள்ள வெர ரேமஞ்சவியும் உயரமும் வாக்குதாட்டியும் ஷை நான்காம் பாத த்தவர்க்குண்டு. எ-று.

அநுஷம்.

பதமுளனீதி யிங்கிதமறிவான் பண்புறு சத்தியவா னும், பகருமாசாரன் மந்திரசீலன் பற்றியவ னுஷநாண்முத ற்கால், — இதமுள புள்ளாங் குழலினிற்பிரிய னிசைந்தவா ய்ச்சாலனும்புத்தி, யெய்தியசிறப்பன் மானிகாமியனுமிருப தப்பொருளென வுரைப்பர், —விதமுளபுத்தி மான்சவுந்த ரியன் மென்குரலோசையா னெழுதும், வித்தை சாதுரிய னடுப்புளோனென்றே விளம்பு மூன்றும் பதத்திற்கே, — அதஞ்செயும் விஷவாக் கன்பரத்துரோக மண்ணியதமை யர்களுள்ளா, னன்புறுமோசை நாணமுமுடைய னவிர் சிரங் குடையனுங்தெரியே.

(இ - ள்.) மேலானபதமும் விவகாரமும் பக்குவமறிதலும் மே ன்மை பொருந்திய பிரமாணமும் விரதமும் மாந்திரிகமும் ஒழுக் கமும் அனுஷநட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

இன்பமாகிய நாதசுரங்களில் பிரியமும் பொருந்தியவாக்கு ஜாலமும் புத்தியில் விசேஷமும் அபிமானமும் காமாதுரந்தரமும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

பகுத்தறிவும் சுந்தரமும், மிருதுவாகிய குரலோசையும் எழுத்தி யில் சாமர்த்தியமும் ஓடுப்புள்ள யுத்தியும் ஷை மூன்றும் பாதத் தவர்க்குண்டு.

நாசத்தைக்கூறும் அறவாக்கும் பரமாத்ம துரோகமுள்ள அண் ணர்களும் இனிப்புள்ள கண்டத்தோசையும் வெட்கமும் புஞ் சிரமும் ஷை நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

கேட்டை. ஏகமும்

தெரிந்துதானெழுத வல்லவன்கர்வி செயும்பரிக்ஷி யான்காந்தி, செறிவிளையாட்டு நடக்கைசந்தோஷி சீர்மிகுங்கேட்டையின் முதற்கால்,—பொருந்துசங்கீதப் பிரியன் வாய்ச்சாலி புகழுநல்லீகையான் சுகவான், போகிகன்மனத்தன் ரோகியாமென்றேபுகலுவ ரிரண்ட தாங்காலே,—திருந்துகண் ரோகிபசுவுளன்கலகன் செப்பிய வினபுத்தியினன் செய்குவன்பிறர்கா ரியந்தனதென்றே சீர்பெறுஞ்சாதுமூன் றுங்கால், —வருந்திடுங் கலகப் பிரியன்முன்கோபி வஞ்சகன்குரூரமே புரிவன், வந்திடுங்குலத்தின் மேன்மை கூறிடுவன் மன்னியவீரிருதாளே.

(இ-ள்.) நன்றுயோசித்து எழுதுந்திறமும் கர்வமும் குசோத்தியமும் பிரகாசமான விளையாட்டு நடைபடியும் உல்லாசமும் சிறப்புப்பொருந்திய கேட்டை நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.'

பொருந்தியிருக்கின்ற கீதங்களிடத்தி லிஷ்டமும் வசனசாமர்த்தியமும் பெருமையும் கேட்டதைக்கொடுத்தலும் சுகவாசமும் போகமும் கடினமனதும் வியாதி பீடிதமும் ஷை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

திருத்தமுள்ள நேத்திரத்தில் வியாதியும் பசுமாடு விர்த்தியும் கிள்ளிவிட்டு கூத்துபார்க்கலும் இலேசான விவேகமும் ஒருவருடைய காரியத்தைத் தன்காரியம்போலச் செய்தலும் அமரிக்கையும் ஷை மூன்றும்பாதத்தவர்க்குண்டு.

ஒருத்தர் வருத்தப்படும்படிக்கான சண்டையை மூட்டலும் முன்கோபமும் கபடமும் பொல்லாக்குணம் தன்னுடைய வமிசப்பரம்பரைப் பெருமையை எடுத்துப் பேசுதலும் ஷை நான்காம் பாதத்தவர்க்குண்டு, க-அ.

மூலம்.

தானுறுமுணவிற் கிழங்கின்மேற் பிரியன் சூத்திரம் பாபமேபுரிவன், தாழ்விலாரோகியுன் மத்தனென்றே சாற்றுவர் மூலநான்முதற்கால், — வானுயர்புலமை வயிற்றினோயுடையோன் வாய்மையும் புத்தியுமுளனும், வளமுடைமானிபக்ஷ முள்ளவனு மருவுகாலிரண்டினில் வந்தோன்,— ஈனமாம் பிலவிசூனியமறிவா னெழிலுளான் சோம்பலான் காமி, இனியநற்கனிமேற் பிரியனுமூன்றி லெண்ணியபல மிஃதென்ப, —கோனெனும் பலவா னிபுணனுஞ்சாதுகோபமே நீகுவன்ஞானி, கூறுசத்துருவை யடக்குவன் கழுத்திற் கொண்டநோயுளனதனீறே

(இ-ள்.) தான்சாப்பிடும் படியானதில் கிழங்கு தினுசுகளைப்பிரியமாய்த் தினறலும் கோபமும் பாபகாரியங்களைச் செய்தலும் குறையாத வியாதியும் உன்மததமென்ற பயிததியமும் மூல நட்சத்திர முதலாம் பாதத்தவாக்குண்டு.

பிரக்கியாதியான புலமையும் குன்மவியாதியும் நிலைமையும் விவேகமும் வளப்பம்பொருந்திய மானமும் அன்பும் டிை இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

ஈனத்தொழிலாகிய சூனியவித்தை யறிதலும் அழகுண்டாயிருத்தலும் அசதியும் இனிப்பான பழவர்க்கங்களின்மேல் பிரீதியும் டிை மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

மிகுந்தவலிமையும் அதிகசாமாாத்தியமும் சாந்தமும் ஆத்திரத்தையடக்கலும் கியானமும் சத்தருக்களை யதஞ்செய்தலும் கண்டமாலைவியாதியும் டிை நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

பூராடம்.

ஈறிலாவணக்க முடையவன்சேயே விலாதவன்விகாதமபுரிவன், இயம்பிடுசூரன் மத்திமவயதாமென்பர் பூரா

டத்தின்முதற்கால், —பேறுறும் யோகி சவுந்தரியோனும் பெட்புறுஞ் சிநேகிதமில்லான், பேதையன்வேசை கமன னென்றுரைப்பர் பெரியவரிரண்ட தாங்காற்கே, —மாறிலாச்சுகவான் பாக்யவான்மாதா வாலிபந்தன்னிலே மரிப்பள், வளர்பெருநோயன் குணமுளன்றெளிவன் மன்னிய மூன்றதாங்காலே, —வீறிலான் முதுகி னேயுளன்றிருடன் விளம் பபவாதவான் பலவான், மேவியதுரோகி சிறுவயதிற்சாம் விளம்பிய தந்தைநாற்காற்கே.

(இ-ள்.) கெடுதலில்லாத மரியாதையும் புத்திரவீனமும் விகாதம் பண்ணுதலும் வீம்பும் மத்திம வயதும் பூராடநட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

மோக்ஷமடைதற்கான தவசும் அழகும் நற்சிநேக மில்லாமையும் அறியாமையும் வேசியாஸ்திரீகளைப் புணாதலும் ஷ இரண்டாம்பாதத்தவர்க்குண்டு.

மாறுத சுகமும் சௌபாக்கியமும் இளம்பிராயத்தில் தாயிறத்தலும் பெருத்த வியாதியும் நல்லகுணமும் தேர்ச்சியும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

தனிமையுள்ள முதுகில் நோயும் திருடலும் சோரமும் நிந்தையும் பலீஷ்டமும் அபகரிக்குங் குணமும் சிறுபோதிலேயே தகப்பன் இறந்துபோதலும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

உத்திராடம்.

ஏரியனல்ல புத்திமானீகை யான்றகு நூல்பலவறிவன் ஏதிலாதாசான் றனேயுபசரிப்ப னேனப்புகலுத்தி ராடத்தின். —ஊரதாங்காலிலுயர் பெருவாக்கிலோபி யாம்பிலுக் கனற்றிடவான், உசிதமாய்கருமம் ராஜ்ஜியத்தியற்று முயரிரண்டாகிய காற்கே, —கூறியகர்வி பெருமொழியாளன், சூதாளும் கலங்கின மனதான், கோபியார்நல வடிவுள

னென்றே கூறுமூன்றென்றதோர் காற்கே,—வீரியனல்ல தன்மமே முடிப்பன் விசேஷகாரியமுளான்லோக, வேயா ரமுடையன் பந்துமேற் பிரியன் வேண்டிய நாற்பதம் வந்தோன்.

(இ-ள்.) அழகிய விவேகமும் உதாரகுணமும் தகுதியான பல சாஸ்திரங்களை யறிதலும் குறைச்சலில்லாமல் ஆசாரியனை உபசாரஞ்செய்தலும் உத்திராட நட்சத்திர முதலாம் பாதத்தவாக்குண்டு.

உயர்ந்த பிரபல பிரசங்கமும் உலுத்தத்தன்மையும் ஜம்பமும் தாஷ்டிகமும் விநோதமாகிய செய்கைகளைச் செய்தலும ஷை இரண்டாம் பாதத்தவாக்குண்டு.

கூர்மைபொருந்திய காவமும் மிகுதியான வார்த்தையும் விஷமியும் மனக்கிலேசமும் ஆத்திரமும் பருத்தவுடலு ஷை மூன்றும் பாதந்தவர்க்குண்டு.

வீரமும் நல்ல தாமத்தை முடித்தலும் விசேஷமான காரியங்களுடைத்தா யிருத்தலும் உலகநடத்தை தெரிதலும் பந்துக்களிஷ்டமும் ஷை நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

திருவோணம்.

வந்திடும்புத்தி மானுடல்பெருத்தோன் மைந்தரில்லான்போகவானும். மன்னுமுற்சாகி கலகவான்கர்வி மாந்திருவோணத்தின் முதற்கால்,—சந்ததம்பிர்மக் ஞானியாய்காமிதயவிலான் லோபியாஞ்சினேகம், தானிலாமனென்றேசாற்றவரிரண்ட தாகியகாலதாம்பலனே,—தந்திடுங்காமிரோகிற்போகி தனமுளன்மெத்தவுதாரன், தயவிலானென்றேயுரைத்திடுவார்க டரும்பத மூன்றி னின்பயனே,—சிந்தாநுதல்வே சையர் விருப்புடையன் சீலனுந்தருமவான்தியாகி, சிறப்புளன்றனவான் பயிரிடுவோனுஞ் செய்யுநாற்கால்பலவகையே.

(இ-ள்.) விவேகசாலியும் காத்திரதேகமும் மக்களில்லாமையும் சம்பிரமமும் சந்தோஷமும் சண்டைமூட்டுதலும் ஆங்காரமும் திருவோண நட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

சார்வதாய் பிரமக்கியானமும் காமமும் கிருபையில்லாமையும் உலோபத்வமும் நேசமில்லாமையும் ஷ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

காமவாஞ்சையும் வியாதியும் நல்லபோகமும்திரவியமும் மிகுக்தயிகையும் தாக்ஷண்ணிய மில்லாமையும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

நெற்றியில் சிருங்காரமாகத திலதமிடுதலும் வேசியாஸ்திரீகள் மேல் கமனமும் ஆசாரயோக்கியமும் தானதாமமும் உதாரத்துவமும் கன்னியமும் அயிஸ்வரியமும வெள்ளாண்மையும் ஷ நான்காம் பாதததவாக்குண்டு எ-று.

அவிட்டம்.

வகையிலான்காமி பசிபொருள் மனதில் வசையுறுகிலேசனிட்ரேன், வளம்பெறுதூல சரீரவான்கரியன் மருவியவிட்டத்தின் முதற்கால்,— தகையிலான்மனதிற் பேதகமுடையான் சத்தியன்புத்திமான் மிடியன், க்ஷாத்திரவாதியூக்கமுள்ளோனுந் தருமவானிருபதமென்ப, திகைசெறிகுணவான் குறுகியமெய்யன் சேர்ந்திடுதிடமுளன்மானி, செப்புநன்னுடையான் செந்நிறவானுந் தெரிந்திடு மூன்றதாங்காலில், —தொகைமிகுதனவான் குரூரனுந்தூல தேகவான்கர்வி பேதகனும், துலங்கியரோம வழகுடையோனுஞ் சோர்வறு நாற்பதந்தொட்டோன். ௬

(இ-ள்.) வழியில்லாமையும் காமமும் பசிதாளாமையும் மனதில் குடிலமும் சஞ்சலமும் கிபஞ்சொல்லுகையும் வளப்பம் பொருந்திய பருத்ததேகமும் கரியநிறமும் அவிட்ட நட்சததிரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

பெருமை யில்லாமையும் மனதில் வேற்றுமை நினைத்தலும் உண்மையும் அறிவும் தரித்திரமும் அடஞ்செலுத்தலும் தைரியமும் தருமச்சிந்தையும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

கீர்த்தி பொருந்திய குணமும் குட்டையாகிய சரீரமும் கெட்டியான மனதும் அபிமானமும் நன்மார்க்கமு சிவந்தநிறமும் ஷெ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

விசேஷதனமும் குருபுத்தியும் காத்திரதேகமும் ஆங்காரமும் வேற்றுமையும் மயிரழகும் ஷெநான்காம் பாதத்தவர்க்குண்டு.எ-று.

சதயம்.

தொட்டநற்குணவா னழகுளானுதாரன் சுசியனும்விப் பிரர்மேலும், துலங்கியபசுக்கண்மேலு நற்பிரியஞ் சொர்ண மும் சதயமொன்றுங்கால், —பொட்டெனக்கோப முடை யவன்கிலேசி பொருந்து நற்பேதகம் புரிவான், புநிதமதி ல்லா னிழிகுலந்தன்னிற் பொருந்துவனிரண்ட தாங்கா லே,—பட்டநற்கருமம் பொறுத்துடன்முடிப்பன் பசியுள ன்வயிற்றினோயுள்ளான், பண்புடன் பித்தன் சேவகாவிரு த்தி பண்ணுவன் மூன்றதாம்பதமே, —நட்டினையுணர்வனு த்தேசிமாமானி நாடியகாரிய முடிப்பன், நல்லவன் சுகவா னும்பதமென்றே நவின்றனர் நான்மறையோரே.

(இ-ள்.) மிகுந்த நற்குணமும் சுந்தரமும் தாதுருத்வமும் ஆசாரமும் பிராமணர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் மிகுந்த விசுவாசமும் பொருள்சேர்த்தலும் சதயநட்சத்திர முதலாம் பாதத்தவர்க்குண்டு.

அடிக்கடி கோபமும் சஞ்சலமும் வித்தியாசமும் சுசியில்லாமையும் ஈனனுடைய சகவாசமும் ஷெ இரண்டாம் பாதத்தவர்க்குண்டு.

சரீரபிரயாசைப்பட்டு நினைத்த காரியத்தை நிறைவேற்றலும் பசியும் வயிற்றுவலியும் பித்தமும் உத்தியோகவிர்த்தியும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

கூத்தாட்டிற் பிரீதியும் யோசனையும் அண்டினபேரிடத்தில் இஷ்டமும் எண்ணியகருமத்தை முடித்தலும் நல்னெறியும் சௌக்கியமும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டு. எ-று.

பூரட்டாதி.

மறையவன்பரந்த முகமுளன்பலவான் மனைவிமேற்பிரியன்போர்புரிவன், மதியுணர்வுடைய னுத்தேசி சுகவான் மன்னுபூரட்டாதி முதற்கால். —இறையவன்சிரேஷ்ட மந்திரமறிவ னிளைத்திடான் மனதுமேயொல்கி, எவர்க்குமே வணங்கிக்காரியமுடிப்போ னிருபதஞ் சந்துர்ஷ்டிமானும், —பொறையுளானல்ல நடையுடைப் புலவன் பிறர்மனைப் போசனப்பிரியன், போதஞ்செய்பித்த ரோகியனுரும் புத்திமான்பேசிடு மூன்றில், —தறைபுகழ் குணவான் சத்திய னழகன் றாழ்வுறுசினேகிதப்பிரியன், சற்றொழிற் புரியுஞ் சுகமுளன்சிமான் சாற்றுநாற்பதமுறுநாடே.

(இ-ள்.) பிராமணீகமும் விசாலவதனமும் திடதேகமும் பெண்சாதியிடத்தி லிஷ்டமும் சண்டைசெய்தலும் நன்குணமும் புத்தி விசாலமும் ஒன்றின்மேல் நாட்டமும் சுகமும் பூரட்டாதி நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

இராஜத்வமும் மேலான பீஜாக்ஷர மந்திரந்தெரிதலும் பின்னுக்குவாங்காதகுணமும் மனந்தாழ்ந்து எவர்களுக்கும் வணக்கமாக இருந்து காரியத்தை நடத்திக்கொள்ளுதலும் ஷ இரண்டாம்பாதத்தவர்க்குண்டு.

பொறுமையும் நன்னெறியும் புலமையும் அசலார்வீட்டில் அதிகபோசனப்பிரியமும் பித்தரோகமும் ஆசைகொள்ளலும் வித்தைபோதித்தலும் வைத்திய விவேகமும் ஷ மூன்றாம் பாதத்தவர்க்குண்டு.

உலகங் கொண்டாடத்தகுந்த கீர்த்தியும் பிரமாணமும் சௌந் தரியமும் மேன்மையானவர்களைச் சிநேகம் செய்தலும் நற்கருமஞ் செய்தலும் சுகமும் லட்சுமீகரமும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண். டாம். எ-று.

உத்திரட்டாதி.

நாடொறுங்கோபி சஞ்சலன்றுதா நாடினவுடம்பினின் மயிரன், நலம்பெறுசிரேட்டன் பிரதானனென்றே நவில் வருத்திரட்டாதி முற்கால், — நீடுறும்ரோஷக் காரனுஞ்சா து நிறைந்திடுமுடியனற் குணவான், நிலைத்தனன்னடையா னறிவுளானென்றே நிகழ்த்துவ திரண்டாங் காற்கே, — கோடுறுபுத்தியிலான் பத்திமான்முன் கோபிசந்தோஷிசெ ம்மயிரன், கோளனுமூன்றுங் காற்பலனென்றே கூறுவர்ம றையுணர்புலவர், — பீடறுஞ்சொற்கேட் பவன் மிகவாடும் பேதியானு தாரனற்பயிரைப், பேணுவான்கோபி கிலேச வானுகும் பெட்புநாற்காற் பலன்றேனே.

(இ-ள்.) நாள்தோறும் ஆத்திரமும் வியாக்கூலமும் தேகமெ ல்லாம் ரோமமும் அக்கிரகண்ணியமும் பிரதானமும் உத்திரட்டாதி நட்சத்திரமுதலாம் பாதத்தவர்க்குண்டு.

நீண்டரோஷமு சாத்மீகமும் தரித்திரமும் நல்லகுணமும் நிலைபெற்றநன்மார்க்கமும் விவேகமும் ஷ இரண்டாம் பாதத்தவா க்குண்டு.

குற்றமற்ற விவேகமும் பத்தியும் முன்கோபமு உதசாகமும் செந்நிறம்பொருந்திய ரோமமு ஒருவர்பேரில் குற்றஞ் சாற்றுத லும் ஷ மூன்றும் பாதத்தவர்க்குண்டு.

துப்பற்ற கெட்டவார்த்தையை கேட்கலும் மனவாட்டமும் மனம் பேதிக்காதலும் ஔதாரியமும் விவசாயமும் கோபமு கிலேச மும் ஷ நான்காம் பாதத்தவர்க்குண்டாம். எ-று.

இரேவதி.

தேன்மொழிகலகப் பிரியனுனிபுணன் செறிகுணவித்துவான்யாண்டும், செப்பியகிலேசி பிரியமூமுள்ளான் றிடம்பெறுரேவதி முதற்கால், — தானெனுஞ்சோரன் றீரமானனத்தன் சவுக்கியன்கோபிநற்காமி, சஞ்சலன்மிருது வாஞ்சரீரத்தன் முனிருகாற்பலனென்றே, —பான்மொழி புத்தியிலாதவன்பாவி படிறனே தனமிலானுதும், பரிந்திடுமுதாரன் குணமிலானென்றே பகருமூன்றாம்பத மதற்கே, நானெனுந்தீரன் சத்தியவாக்கி நவின்றிடுங் குலததினிற்கேடன், நாடியசுகவான் சத்ருசங்கார னலம்பெறு சூரனாற்பதமே

(இ-ள்.) இனிப்பான வார்த்தையும் கலகஞ்செய்தலும் மிகுந்த வல்லமையும் நிறைந்த நல்லகுணமு பாண்டியததிலும் சார்வதாய் கிலேசமும் உவப்பும் ரேவதிநட்சததிர முதலாம் பாதத்தவாக்குண்டு

திருட்டுப் பட்டமும் உறுதியான மனசும் சுகமும் அவசரப்படுதலும் மிகுந்த ஆசையும் வியாகூலமும் மெலிந்ததேகமு ஷெ இரண்டாம் பாதத்தவாக்குண்டு.

வெளிளைச்சொல்லும் அறிவில்லாமையும் பாபமும் திருட்டுத்தனமும் காசில்லாமையும் எல்லாககாரியததிலும் முயலுதலும் ஈகையும் குணக்கேடும் ஷெ மூன்றாம் பாதத்தவாக்குண்டு.

தன்னைத்தானே தயிரியசாலியெனச் சொல்லுதலும் சொல்கிலையும் பிறந்தகுலத்திற்கு கேடும் தனமட்டும் சவுக்கியமும் பகையாளிகளை துவம்சம் செய்தலும் வீரமும் ஷெ நான்காம் பாதத்தவர்க்குண்டாம். எ-று.

நவக்கிரகதிசாபுக்திபலன்.

பூமேவுங்கார்த்திகைமுன்பூரமளவுங்கிரகந்
தாமேவுவாரிரவிசந்திரனும்-கோமளஞ்சேர்

அங்காரகன்கரும்கோளானகுருமந்தன்புத
னுங்கேதுசுக்கிரனுகும.

(இ-ள்.) இலக்ஷ்மீகரம் பொருந்திய - கிர்த்திகை நக்ஷத்திர முதல் பூரநக்ஷத்திரம் வரையிலுள்ள நாள் ஒன்பதனுள் கிரமமாக ஒவ்வொன்றில் பொருந்திவருங் கோள்களாவது சூரியன் - சந்திரன்- அழகுபொருந்திய செவ்வாய் - இராகு - குரு-சனி - புதன் - கேது - சுக்கிரன் - என்பதாம். எ-று.

இன்னவகைநட்சத்திரமிருபானேழையுமுன்
சொன்னபடியேதொகுத்தறிவா - யன்னவகை
யுத்திரம்பூராடமட்டுமுத்திராடம்பரணி
யித்திறமுன்சொல்கிரகமே.

(இ - ள்.) இந்தவகைக்கு - நக்ஷத்திரம், இருபத்தேழையும் - முன்கூறியபடி சேர்க்கத்தெரிந்துகொள்ள எவ்வாறெனில் - உத்திர நக்ஷத்திரமுதல் பூராட நக்ஷத்திரம்வரையிலும், நாள்-கூ, உத்திராடநக்ஷத்திரமுதல் பரணி நக்ஷத்திரம் வரையிலும், நாள் - கூ, இவற்றில் ஒவ்வொருநாளை ஒவ்வொருகோளும் முன்போல் பொருந்திவருமாதலால் மாந்தரில் ஒவ்வொருவருடைய ஜன்மநக்ஷத்திரம், எதுவாகுமோ - அதற்குரியகோள் முன்சொன்ன திசைக்கிரகமாமென்றறிந்து கொள்கவென்பதாம்.

பானுமுதற்சுக்கிரன்பின்பானநவக்கிரகந்
தானிருந்துவாழ்வுதரும்வருடம் - மாநிலத்தோர்
கேட்டுவப்பர்சாலக்கிருபையினுலித்தொகையை
நாட்டமுடன்சொல்லுகின்றேனுன்.

(இ-ள்.) சூரியன் ஆதியாகவும், சுக்கிரன் - அந்தமாகவும், கோள்ளில் ஒன்பது கிரகங்களாகும். இவர்கள் பலன்கொடுக்கும் ஆண்டளவை இதனடியில் யான் - சங்கியைத்தொகையாகச் சொல்லுகின்றபடியால் - உலகத்தி னுள்ளோர்-என்மீதுமிகக் கிருபைவைத்து கேட்டு சந்தோஷிப்பார்களென்பதாம். எ-று.

சுவைவாயுவாரிதுய்புராணம்மிந்
திவன்கலைஸ்மிருதியின்னும் - புவியில்
புனைபேர்விகுதிபுயல்ராவணன்கை
எனவிஃது நாற்றிருபானே.

(இ - ள்.) சுவை-சு, வாயு - க0, வாரி-எ, புராணம்-கஅ, சந்திர கலை-கசு, ஸ்மிருதி-கக, பெயர்விகுதி-கஎ, புயல் - எ, இராவணேச் சுரன்கை - உ0, ஆககூடியதொகை ருப்கஉ0, ஆகையால் இஃது நவக்கிரகங்களின் திசைவருஷங்களாகு மெனபதாம். எ-று.

ஓந்தோர்ம்ஹாதிசையிலொன்பதுகோளும்புசிக்க
வந்தேயிருக்கவகையறிய - அந்தத்
திசையாம்வருடத்தைச்சேர்த்துவருமுன்
றிசையினலேபெருக்கல்செய்.

(இ-ள்.) உவந்து ஒவ்வொருகோளின்திசையில் - அந்தக்கிரக முதலிய நவக்கிரகங்களும் பலனைப்புசிந்துண்ணவந்திருக்கும் புத்திப் பிரிவாவது - முந்திவருங்கிரகத்தின் திசைவருஷத் தொகையைப் பிந்திவருங்கிரகத்தின் திசைவருஷத் தொகையைக் கொண்டுமாற வேண்டுவ தென்பதாம். எ-று.

கண்டதொகையைக்கருதிமகாதிசைகள்
கொண்டவருடத்தொகையிற்கூறிடத்து - உண்டதொகை
தானேபுசிப்பந்தத்தன்மைபோலேத்திசைக்குங்
கானேர்குழலணங்கேகாண்.

(இ-ள்.) முன்மாறின மொத்தத்தொகையை - மகாதிசையின் வருஷத்தொகையாகிய கஉ0றி-கொடுக்க, உண்டாகிய ஈவுதானே, அந்த அந்தக்கிரகத்தினுடைய புத்தியளவாகும், அத்தன்மைபோலவே எந்தக்கிரகத்தின் திசையாண்டாலும், எந்தக்கிரகத்தின் புத்தியை பார்த்துக்கொள்க வென்பதாம். எ-று.

தக்கதிசையும்புசிப்புந்தானறியும்வாறிதுவே
மிக்கதிசைமூன்றுவிதமுண்டா-மொக்கவிவை
சாற்றுங்காலந்தரந்தான்சூக்ஷமம்பின்னும்
ஈற்றிற்பிராணதிசையே.

(இ-ள்.) திசைப்பிரிவும் - புக்திப்பிரிவும் - அறியத்தக்க வகை இதுவேயாம் பின்னும் மூன்றுவகைப்பிரிவுக ளிருக்கின்றன அவைகளில் அந்தரப்பிரிவு - சூட்சமப்பிரிவு, கடையாகிய பிராணப்பிரிவாம் - அவற்றிற்கும் இவ்வடைவே மாறியீதலென்பதாம்.எ-று.

இந்ததிசைமுன்னியம்புந்தொகையாலே
சிந்தைகளிகூர்ந்துதெளிவாகச் - சந்ததமும்
பார்க்கும்பெரியோர்கள்பாதம்புயமலரைச்
சேர்குந்தமியேன்சிரம்.

(இ-ள்.) இதுமுன் கூறிவந்த கணக்கைக்கொண்டு மனோச்சாகத்தினாலே - தெளிவுறச்சதாகாலமும், விசாரணை செய்யும்படியான மேதாவிகளுடைய பாததாமரையை எனது சிரத்தின் மீது அணிவேனென்பதனால் அவர்களுடைய ஆசீர்வாதம்பெற்று இந்நூல் இடையூறின்றி முடியுமென்று வணக்கம் செய்யப்படுமென்பதாம்.

கூறும்பலனைக்கொடுமென்போன்போதகனும்
வேறுபண்ணிதட்டிவைப்போன்வேதகனுந் - தேறுபலன்
கூட்டிவைப்போன்பாசகனுங்கோலமஹாதிசையி
லீட்டுபொருள்காரகனீவான்.

(இ-ள்.) ஒவ்வொருகோளின் திசையில் - வரும்புக்திக்கிரகங்களில் தனது பாகப்பலனைக் கொடுக்கச்செய்யுங் கோள்போதகனெனவும் அப்பாகப்பலனை மாறு படுத்துங்கோள் வேதகனென்வும் தேறியபலனைக் கிடைக்கச்செய்யுங் கோள்பாசகனெனவும் சம்பாதித்த பொருளைப்பெறச்செய்யுங் கோள் காரகனெனவும் சொல்வரென்பதாம். எ-று.

பானுதிசையின்மந்தன்பாசகனுஞ்சுக்கிரனே
மானேகேள்வேதகனுமாவேந்தன் - தானேதான்
காரகனுகுஞ்செவ்வாய்காசினியோர்தாமறிய
ஏரணியும்போதகனுமே.

(இ-ள்.) சூரியனுடைய திசையில் - சனி - பாசகன், சுக்கிரன் வேதகன், குரு - காரகன், செவ்வாய் - போதகனென்பதாம். எ-று.

இந்துதிசையில்வெள்ளியோர்த்ததோர்பாசகனும்
விந்தமலரின்னண்பன்வேதகனும் - மந்தனே
கங்காநதிபுடைசூழ்காசினியிற்காரகன்பி
சங்காதசேய்போதகன்.

(இ-ள்.) சந்திரனுடைய திசையில் - சுக்கிரன் - பாசகன், சூரியன் - வேதகன், சனி - காரகன், செவ்வாய் - போதகனென்பதாம். எ-று.

மங்கலன்றன்றிசையின்மார்த்தாண்டன்பாசகனும்
திங்கள்பெரும்போதகனுஞ்சேயிழையீர் - பொங்குபுக
ழீயுமால்வேதகனுமித்தரணியோரறிய
வாயுசனிகாரகனும்வந்து.

(இ - ள்.) செவ்வாயினுடைய திசையில்-சூரியன்-பாசகன், சந்திரன் - போதகன், புதன்-வேதகன், சனி-காரகனென்பதாம். எ-று.

புந்திதிசையிற்-புரவலனேபோதகனுஞ்
சந்திரனேபாசகனுத்-தானுகும் - இந்துநுதல்
மின்னேசெவ்வாய்தானேவேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ்காரகனும்வந்து.

(இ-ள்.) புதனுடைய திசையில் - குரு - போதகன், சந்திரன் - பாசகன், செவ்வாய்-வேதகன், சுக்கிரன்-காரகனென்பதாம்.

வேந்தன்மறைதிசையில்வெய்யவனேவேதகனும்
போந்தவருஞ்செவ்வாயேபோதகனுங்-காந்திசெறி

சந்திரனேகாரகனுந்தையலேதாரணியில்
மந்தனேபாசகனும்வந்து.

(இ-ள்.) குருவினுடைய திசையில் - சூரியன் - வேதகன், செவ்வாய் - போதகன், சந்திரன்-காரகன், சனி-பாசகனென்பதாம். எ-று

வெள்ளிமஹாதிசையில்வேந்தனேபோதகனுந்
தெள்ளியமால்பாசகனுஞ்செங்கதிரோன் - மெள்ளவருங்
காரகனேதானுகுங்காரியேவேதகனும்.
வாரணியுங்கொங்கைமயில்.

(இ-ள்.) சுக்கிரனுடையதிசையில் - குரு - போதகன், புதன்-பாசகன். சூரியன் - காரகன், சனி - வேதகனென்பதாம். எ-று.

சனியின்றிசையில்சசிபோதகனு
மினியகுஜன்வேதகனென்றோர்க்கும் - கனிமொழியாய்
வெள்ளியேபாசகனும்வேந்தனேகாரகனுந்
தெள்ளியநூலாலறியுஞ்சீர்.

(இ-ள்.) சனியினுடைய திசையில் - சந்திரன்-போதகன், செவ்வாய்-வேதகன், சுக்கிரன் - பாசகன், குரு-காரகனென்பதாம். எ-று.

ஒருவன்மஹாதிசையிலுற்றபலனுண்ண
வரும்நவக்கிரகமட்டுந் - தெரியவே
போதகனும்பாசகனும்போற்றுபொருள்காரகனும்
வேதகனுமாகிவரும்.

(இ-ள்.) ஒரு கிரகதிசையிலுள்ள பலனைப் பகுந்து புசிக்கும்படியான கிரகங்களுள் - போதகனென்றும், பாசகனென்றும், காரகனென்றும், வேதகனென்றும், வருவார்களென்பதாம்.

இந்தப்படிநால்வரெய்தியொருவன்றிசையில்
வந்துபலனுண்ணும்வகையறிந்தே - சிந்தித்
துரைக்கில்பலனெற்றிருக்குமொண்டொடியேசொல்லிவை
தரைக்குள்வந்தோரறியத்தான்.

(இ-ள்.) இவ்வகையாக - நான்குபெயரும், ஒவ்வொரு கிரகத்தின் திசையில் - அவரவருக்குள்ள பாகப்பலனைப்புசிப்பர், அஃது - விபரந்தெரிந்து யோசித்துப் பலனைச் சொல்லில் பொருந்தியிருக்கும் ஆகையால் பிரகாசம்பொருந்திய வளையலையணிந்திருக்கும் - மாதே - இப்பூமிபூமிகண் ஜனனமெடுத்த மாந்தாகள் அறிந்துக்கொளளும்படி கூறுவாயெனபதாம் எ-று.

ரவிதிசாபலன்.

அக்கினியாற்பீடையமர்விருத்திப்பொன்சேதம்
மிககபயன்சத்துருவால்மேவுபகை - யொக்குமே
கண்ணோய்சிரரோகங்காதலபிதாமிருத்யு
வெண்ணுமிரவித்திசையிலே

(இ-ள். அக்கினியயமும் - சஞ்சைசச்சரவும் தனச்சேதமும் - சத்துருபயமும், பகையும், நேத்திரவ்யாதியும் - சிரநோயும் ஆசைப்பிதாவரிட்டமும், இவைமுதலிய தீயபலனகளைக கொடுக்கும், இஃது-சூரியனுடைய திசைக்கு, சொல்லவெனபதாம். எ-று.

ரவிபுத்திபலன்.

மன்னர்பகைமிருத்யுவாணிபஞ்செட்டாகாது
பின்னும்பொருள்போம்பிதாமிருதயு - மன்னுஞ்
சிரரோகமும்பயமுஞ்சேருங்கண்ணோயா
மிரவிதிசையில்லிரவியே.

(இ-ள்.) அரசாபகை சாவு தொழில்கேடு-தனச்சேதம் - பிதாமரணம்-தலைநோய-திகில்-கண்ணோய் - இவைமுதலிய தீயபலனைக்கொடுக்கும், அஃது-சூரியனுடைய திசையில் - சூரியனுடைய புத்தி ... நாள்-கஅ-ல் என்பதாம்,

சசிபுத்திபலன்.

தனலாபமாம்பகைபோஞ்சம்பத்துண்டாகு
மினமானபீடைகள்விட்டேகு - மனநோயால்
... தபிணிதீரும்மார்த்தாண்டன்றன்றிசையில்
... ந்திரன்வந்தேபுசிக்கில்தான்.

(இ-ள்.) திரவியலாபம்-பகையிராது-சம்பத்கரமுண்டு, இனத்தி னுண்டாகிய துன்பநிவர்த்தி, மனவருத்தத்தா லுண்டாகிய துன்ப நிவாரணம், இவைமுதலிய நல்லபலன்களைக் கொடுக்கும். இஃது-சூரி யனுடையதிசையில் சந்திரனுடைய புக்தி - மீ௴ சு - ல், என்பதாம்.

குஜபுக்திபலன்.

செல்வந்தனலாபஞ்செம்பொன்னவமணியு
முல்லாசமாய்வந்துறையுமே - யெல்லோன்
பொருந்துமஹாதிசைக்குட் பூபாலன்செவ்வா
யிருந்துபுசித்தேயிடில.

(இ-ள்.) ஐஸ்வரியம் பொருள் விருத்தி பொன்னாபரணமும் ரத்னாபரணமும் வந்து சேரும். இவைமுதலிய நல்ல பலன்களைக் கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் பூமாதேவியின் புத்திர னாகிய செவ்வாயினுடைய புக்திமீ௴ ச - நாள் சு - ல் என்பதாம்.

இராகுபுக்திபலன்.

மிகுபிணிமுயாந்தனம்போம்பின்னுசமாகும்
தகுமானசத்துருவாம்சண்டை - மிதாகுக்குமுட
னெப்பொருளுஞ்சேதமிரவிதிசைக்குள்ராகு
தப்பிவந்துப்புசிக்கில்தான்.

(இ-ள்.) நோய்விர்த்தி, பொருள் நஷ்டம், லட்சுமிவிலகும், தகு தியான ஒரு சத்துருவினால் சண்டை - உடனே சகலபொருளும் நஷ்டம். இவைமுதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சூரிய னுடைய திசையில் இராகுவினுடைய புக்திமீ௴ க0 - நாள் உச - ல் என்பதாம்.

குருபுக்திபலன்

பாவம்பகைபோம்பரவுமனநோயகலும்
மேவியசம்பத்துமிகுதியாங் - தாவுபுகழ்
செங்கதிரோன்றன்னில்செய்யபிரகஸ்பதிதான்
பொங்கமுடனேபுசிக்கும்போது.

(இ-ள்.) தரித்திரம் - சத்துருத்வம் - மனவியாதி முதலாய் போய்விடும், செல்வம் விருத்தியாகும், கீர்த்தியுண்டு. இவை முதலிய நல்ல பலன்களைக் கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் பிரகஸ்பதியினுடைய புக்தி மீ ௬ - நாள் ௧௮-ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

சத்துருவுமன்னவருந்தக்கவுறவின்முறையை
மெத்துவகைப்பொன்சேதமெய்துமே - எத்திக்கும்
பொல்லாப்புமுண்டாம்புகலாதவன்றிசையில்
வல்லசனியுண்ணவரில்.

(இ-ள்.) பகைஞரும் - அரசாகளும் - உறவினர்களும் எத்திப் பொருளை அபகரித்துக் கொள்வர்கள் - மேலும் எந்த இடத்திலும் பொல்லாப்பும் இவை முதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் சனியினுடைய புக்தி மீ ௧௧ - நாள் - ௧௨-ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

குட்டம்வருநெஞ்சங்குலைமார்பிணியாகும்
மட்டற்றுப்போம்போகமாறியே - துட்டர்
அடிக்கவடிபடுவனுதவனில்வித்தை
மடுத்தபுதன்புசிக்கில்பார்.

(இ-ள்.) குஷ்டவியாதியும்-குலைநோயும் மார்படைப்பும் ஸ்திரீ வாஞ்சை நீக்கமும் - துன்மார்க்கரா லடிபடுதலும் இவை முதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் - புதனுடைய புக்திமீ ௧0 - நாள் ௬-ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

எண்ணியிருப்பூர்தனைவிட்டேகுவிக்கும்பொன்சேதம்
கண்ணுமுறவின்முறையுநாசமே - பண்ணும்
மரணம்வரும்வெய்யோன்மாதிசையிற்கேது
இரணமிதுதான்புசிக்கில்.

(இ-ள்.) நல்லதென் றெண்ணியிருந்த ஸ்தானத்தைப் பேர்த்தலும் - தனவிரயமும் - பந்துபீடையும் சாவும் - இவைமுதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் கேதுவினுடைய புக்திமீ ச - நாள் கூ-ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

சூலையதிசாரஞ்சுரரோகந்தன்னுடனே
காலிற்கரத்திலூனங்காட்டுங் - கோலப்
பருதிமஹாதிசையிற்பண்பாம்பிருகு
கருதிபுசிக்கிலிதுகாண்.

(இ-ள்.) பக்கசூலை - அதிசாரபேதி - சுரவியாதிகளு மல்லாமல் காலிலும் - கையிலும் ஊனம இவைமுதலிய தீயபலன்களைக்கொடுக்கும். இஃது சூரியனுடைய திசையில் சுக்கிரனுடைய புக்தி(வரு) க-ல்- என்பதாம்.

மதிதிசைப்பலன்.

ஆரோக்கியஞ்சுபமுமர்த்தலாபம்பிரியஞ்
சீராம்புவிலாபஞ்செல்வருமாம் - பாராளப்
பாக்கியமுமின்பம் பரவும்விவாகமுமே
தேக்குவிக்குஞ்சசிதிசை.

(இ-ள்.) ஆரோக்கியம் - சுபகாம் திரவ்யலாபம், இஷ்டம், மேலான பூமிலாபம்-பேர்கொண்டு வரும்படியான புத்திரர்கள் பாக்கியம், சந்தோஷம் விவாகத்தைக் கூட்டலும் இவைமுதலிய நல்ல பலன்களைக் கொடுக்கும். இஃது சந்திரனுடைய திசையில் என்பதாம்.

மதிபுக்திபலன்.

மனைவியுமுற்றுறும்வருவர்மகிழ்ந்தே
இனம்விவாகந்துகிலுமெய்துங் - கனகா
பரணமுடனன்மைப்பயிலுஞ்சசியில்
தரணிமதியேபுசிக்கில்தான்.

(இ-ள்.) களத்திரம் உறவினர்கள் மனமகிழ்ச்சியுடன் வருவார் கள்-பக்தக்களும்-சுபசோபனமுமுண்டாகும், வஸ்திராபரணம் நன்மை இவைமுதலிய நல்ல பலன்களைக் கொடுக்கும். இஃது சந்திரனுடைய திசையில் சந்திரனுடைய புக்தி மீ க0-ல் என்பதாம்.

குஜபுக்திபலன்.

வாதங்கிரந்திபித்தம்வாய்ந்தவெகுநோயிவையோ
டோதுகள்ளரக்கினியாலும்மெலிவாங் - காதலினால்
துக்கம்வருமாந்துலங்குஞ்சசிதிசையில்
தக்ககுஜன்வந்துபுசித்தால்.

(இ-ள்.) அண்டவாதம் கிரந்தி பயித்தியம் பொருந்திய பல வியாதி - இன்னும் திருடர்களினாலும் அக்கினியினாலும் ஸ்திரீவிஷயத்தினாலும் துன்பம் இவைமுதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சந்திரனுடைய திசையில் செவ்வாயினுடைய புக்திமீ எ - ல் என்பதாம்.

இராகுபுக்திபலன்.

சத்துருவாற்றுக்கந்தனச்சேதம்ரோகபயம்
புத்திமதிநாசம்பொருந்தியே-மெத்த
மெலிவாங்கிஞ்சத்போகமேவுஞ்சசியில்
வலியகருங்கோளுண்வரில்.

(இ-ள்.) பகையாளிகளால் துன்பம் - திரவியநாசம், ரோகபயம் புத்திமதிபிராத - கிஞ்சத் சவுக்கியங்கிடைப்பது மரிது இவை முதலிய தீயபலன்களைக் கொடுக்கும். இஃது சந்திரனுடைய திசையில் இராகுவினுடைய புக்திஙூ கஉ-ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

வேந்தரானன்மைவருமேகலையுண்டாஞ்சயமாம்.
போந்துசுபலாபம்பொருந்துமே - சேர்ந்த
பிறைமிற்பிரகஸ்பதிபோய்வந்துண்ணும்
முறைமையறிந்தேதீமொழி.

(இ-ள்.) அரசர்கள் சன்மானம் - வஸ்திராபரணம் ஜயப்பிர தம்-சுபம் - லாபம் - இவைமுதலிய நல்லபலன்களைக் கொடுக்கும் இஃது சந்திரனுடைய திசையில் குருவினுடைய புக்தி ஹ-க-மீ ௬-ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

துக்கம்பயமிகுநோய்சூழ்வலங்கப்பீடை
தக்கமனைவிற்கீனந்தானகு - மக்கினியால்
பீடைமரணம்பெருகுஞ்சசிதிசையில்
நாடுஞ்சனிபுசிக்குநாள்.

(இ-ள்.) வியசனம் - பயம் - மிகுந்தநோய் - நெருங்கிய பந்துக் களில் பீடை களத்திரவாணி - அக்கினிபயம் சாவுசமாச்சாரம். இஃ தெல்லாம் சந்திரனது திசையில் சனியினுடைய புக்திஹ க - மீ எ-ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

கொற்றவர்கண்மெச்சிக்குதிரைகுடைதண்டிகையிட்
டுற்றவெகுமானமுடன்செய்வர் - மற்றுங்
குலத்திரிக்காண்பிள்ளைகுளிர்சந்திரனில்
நலத்தபுதன்புசிக்குநாள்.

(இ-ள்.) இராஜப்பிரபுக்கள் புகழ்ந்து அஸ்வம் - க்ஷத்திரம் பல் லக்கு முதலாகிய வெகுமதி செய்வர் பின்னும் பத்தினி ஆண்பிள்ளை பெறுவள். இஃதெல்லாம் சந்திரனதுதிசையில்புதனுடைய புக்திஹ க - மீ ௫-ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

மார்பிற்பிணியாமனதில்வெகுசஞ்சலமாம்
பார்வையுறவும்பகைநாசஞ் - சேரும்
சுதன்மரணமும்பயமுஞ்சொல்சந்திரனில்
இதமிற்கேதுப்புசிக்கிலே.

(இ-ள்.) மார்பில்நோய் - மனதில் வெகுவித வியாகூலம் பார்வைபார்த்தல் பந்து நாசம், புத்திரஹனி - இதிலும் இஃதெல்லாம் சந்திரனது திசையில் கேதுவினுடைய புத்திமீ ஏ-ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

வாகனம்பொன்முத்துவருமனேவியுஞ்சேரும்
கோகனகச்செல்வங்கொடுப்பனே - பாகுமொழி
மானேசசிதிசையில்வால்சுக்கிரபகவான்
தானேபுசிக்கிலிதுதான்.

(இ-ள்.) வாகன சவுக்கியம் பொன்னுபரணம் - முத்தாபரணம் வரும்-விவாகமுண்டாகும்-திரவியசம்பத்து உண்டாகும். இஃதெல்லாம் சந்திரனது திசையில் சுக்கிரனுடைய புக்திஒ௫ க-மீ அ-ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

தக்கமிருகங்களினுற்சத்துருவால்மன்னவரால்
அக்கினியாலும்பயமுண்டாகுமாம் - திக்கெனவே
பீடைசரீரப்பிணியாஞ்சசிதிசையில்
நாடுங்கதிர்புசிக்குநாள்.

(இ-ள்.) நாற்கால் ஜீவன்களாலும் - சத்துருக்களாலும் அரசர்களாலும் - அக்கினியாலும் பயமுண்டாகும் - இருந்தாப்போலிருந்து சரீரத்தில் நோயுண்டாகும் இஃதெல்லாம் சந்திரனது திசையில் சூரியனுடைய புக்திமீ சு - ல் என்பதாம்.

குஜதிசைப்பலன்.

சித்தம்பிரமையாஞ்செங்கோலர்ற்சோரரால்
மெத்தபயமிருத்யுவெண்குட்டம் - ரத்தப்
பிரமியமாமீனேபெருகிவருஞ்செவ்வாய்
பரவுமகாதிசையின்பண்பு.

(இ-ள்.) உன்மாதம் - அரசர்பகை - திருடரால்சாவு-வெண்மை யான குஷ்டநோய் - ரத்தப்பிரமியம் ஈளைவியாதி யுண்டாகும் இஃ தெல்லாம் செவ்வாயினது திசைஞுபு எ-ல் என்பதாம்.

நுஜபுக்திபலன்.

அரசர்பகைகலகமாயுதத்தாற்பிடை
விரவிற்றருமேவிரோதந் - தரைமிசையில்
அச்சம்வெகுவாகுமங்காரகன்றிசையில்
மெச்சிக்குஜன்புசிக்குமேல்

(இ-ள்.) இராஜகலகம் ஆயுதத்தினலே துன்பம் உடனே சினே கவிரோதம்-பூமியின்மீது பயப்பிராந்தி யுண்டாகும். இஃதெல்லாம் செவ்வாயினது திசையில் செவ்வாயினுடைய புக்தி மீ ௪ - நாள் உஎ-ல் என்பதாம்.

ராநுபுக்திபலன்.

பித்தச்சுரம்வாதபிடைகழியக்கினியால்
சத்துருவினுண்மரணந்தாஞகு - மெத்தலத்தும்
கள்ளர்பகையாகுமங்காரகன்றன்றிசையில்
மெள்ளவிராகுபுசிக்கில்.

(இ-ள்.) பித்தச்சுரம் - வாயுபிடை தண்டம் அக்கினி சத்துரு முதலியவர்களால் மரணம் எந்தவூர் போனாலும் அந்தவூரில் திருட்டு குடையரோஷ்டு - உண்டாகும் - இஃதெல்லாம் செவ்வாயினது திசையில் ராகுவினுடைய புக்திஞுபு க-நாள் கஅ-ல் என்பதாம்.

நுருபுக்திபலன்.

கல்விதனஞ்செறியுங்காரிகையார்தம்முடனே
செல்வமுஞ்சேருஞ்சிறப்புண்டாம் - சொல்லுலகில்
அங்காரகன்றிசையிலானபிரகஸ்பதிதான்
மங்காமலேபுசிக்குமாண்பு.

(இ-ள்.) கல்வியும் தனமும் லாபமாகும் ஸ்திரீயும் ஐஸ்வரியமு முண்டு - கீர்த்திகிடைக்கும். இஃதெல்லாம் செவ்வாயிது திசையில் குருவினுடைய புக்திமீ கக, நாள கூ-ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

செவ்வாயிற்சுன்வந்துசேருநாண் மூந்நூறு
மொவ்வாகுந்தொண் ணூற்றேமொடொன்பதுநா - ளவ்வளவுஞ்
சத்துருவினாற்பயமுஞ்சஞ்சலதுககங்கள்வரு
மெத்துந்திருநாசமே.

(இ-ள்.) சத்துருபயம் - சஞ்சலமாகிய துக்கமுண்டாகும் லக்ஷு மீகரம் நீங்கும். இஃதெல்லாம் செவ்வாயினது திசையில் சனியினு டைய புக்தி ஷூ க - மீ க-நாள் கூ-ல் எனபதாம்.

புதபுக்திபலன்.

ஆபரணவத்திரமுண்டாகும்பிரமிபமும்
தாபமுடன்றிததிப்புதானுகுஞ் - சோபங்கொள்
நீரிழிவுநோய்வருமேநீண்டசெவ்வாய்த்திசையி
லாரும்புதன்புசிபபிலாம்.

(இ-ள்.) வஸ்திராபரணமுண்டு ஆறுல் விடாய்ப்படும்படியான நீரில் திததிப்புகாணும் சோபததைச் செய்யும் படியான நீரிழிவு நோயுண்டாகும். இஃதெல்லாம் செவவாயினது திசையில் புதனு டைய புக்திமீ கக-நாள் உஎ-ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

வெகுநோய்பயங்கடினம்வேந்தர்பகையங்கித்
தொகுதியாலாயுதத்தாற்றுன்பம் - மிகுதியாஞ்
செவ்வாயிற்கேதுதினநூற்றிநாற்பத்தே
ழிவ்வாறுதான்புசிக்கிலே.

(இ-ள்.) வெகு வியாதியும் பயமும் சங்கடமும் அரசர்பகையும் அக்கினியினாலும் அஸ்திரத்தாலும் துன்பம். இஃதெல்லாம் செவ்வா யினது திசையில் கேதுவினுடைய புக்திமீ ச-நாள் உஎ - ல் என் பதாம்.

கவிபுக்திபலன்.

கானத்துறைவிலங்காற்கள்ளராற்சத்துருவா
லீனங்கிஞ்சத்போகமெய்துமோர் - மாளனேயாள்
தன்னேடிருந்தசுகந்தாழ்வாகுந்துக்கமாம்
மின்னேசுங்கன்புசிப்புமேல்.

(இ-ள்.) காட்டிற் சஞ்சரிக்கின்ற மிருகத்தினலும், திருடரா லும்-பகையாளியாலும்-துன்பமுண்டு பின்னும் கொஞ்சம் சவுக்கிய த்தைத்தரும் ஸ்திரீயினுடைய சுகம் குறைந்து, துயரமுண்டாகும். இஃது செவ்வாயினது திசையில் சுக்கிரனுடைய புக்தி - ௵ - உ மீ உ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

தனம்ராஜபூஜிதமுஞ்சம்பத்துண்டாகும்
இனமானமின்போகமெய்தும் - கனகநிதி
அங்காரகன்றிசையிலாதித்தனூற்றிருப
திங்குவருநாளாறினில்.

(இ-ள்.) திரவியம் - ராஜபூஜிதம்-சம்பத்து - ஸ்திரீ சௌக்கி யம் பணப்புதையல் கிடைக்கும். இஃது செவ்வாயினது திசையில் சூரியனுடைய புக்தி - மீ ச - நாள் சு - ல் என்பதாம்.

மதிபுக்திபலன்.

அதிகசுகநதனமுண்டாகுங்கமலப்
பதியாள்தருஞ்செல்வப்பண்புங் - குதிகொள்ளுந்
துய்யமுத்திரத்தினமுஞ்சொர்னஞ்செயமுண்டாஞ்
செய்யசசிபுசிக்குஞ்சீர்

(இ-ள்.) மேலான சௌக்கியம் - தனவரத்து - லட்சுமீகரம் பொருந்தியிருக்கும் - பரிசுத்தம் பொருந்திய முத்து, ரத்தினம் பொன் - சுபகாமுண்டு. இஃது செவ்வாயினது திசையில் சந்திரனு டையபுக்தி - மீ எ-ல் என்பதாம்.

ராகுதிசைப்பலன்.

துச்சேஷ்டைநோய்நஷ்டந்துக்கந்துருவிருத்தி
அச்சமனதிற்சோபமக்கினியால் - மிச்சபயம்
நாசவிஞசம்பாரினல்குமற்பபாக்கியமுந்
தேசுதரும்பாம்பின்றிசை.

(இ-ள்.) கொடியதொந்தரை - பிணி - விரயம் - வியாகூலம் கெட்டசெய்கை - மனோபயம் - தாபம் - அக்கினியால் பயம் - கேடு மேல்கேடுண்டு ஆனல்-சிலபோது கிஞ்சத்பாக்கியத்தையுங் கொடுக்கும். இஃது இராகுவினது திசை வருடம் - க அ-ல் என்பதாம்.

ராகுபுக்திபலன்.

சற்பபயமரணந்தன்றலம்விட்டோட்டிவிக்கும்
நிற்குமதிநாசம்நிதிமோசம் - முற்படுநோய்
மேவுங்கருங்கோள்மிளிர்திசையிலக்கோளே
தாவிப்புசிக்கிலிதுதான்.

(இ-ள்.) பாம்பின்பயம் - சாவு - ஸ்தானப்பிரஷ்டம் - அறிவில்லாமை - பொருள் மோசம் - முன்சேஷமிருந்த வியாதிகள் அதிகரிக்கும். இஃது இராகுவினது திசையில் ராகுவினுடைய புக்தி வருஷம் உ மீ அ - நாள் கஉ - ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

துக்கமற்நோயகலுந்துர்ஜனரால்பீடையிலே
மிக்கதெய்வவிப்பிரரால்மேன்மையா - மக்காலத்
தன்னியமின்போகமனுகுங்கருங்கோளின்
மன்னிமாசன்புசிப்பிவ்வாறு.

(இ-ள்.) துன்பநிவாரணை - வியாதிநீங்கும் - துஷ்டரால் கேடி தேவப்பிராமணரால் மேன்பாடு. அன்னிய ஸ்திரீ சஞ்சார இஃது இராகுவினது திசையில் குருவினுடைய புக்திவருஷம் நாள் உச - ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

சித்தப்பிரமைகொண்டுசேர்தலம்விட்டேகுவிக்கும்
பித்தமிகும்பீடைபெருகுமாம் - அத்தம்
அகலும்பிதிர்பீடையாம்வாதமாகும்
மிகுகலகம்மந்தன்வினை.

(இ-ள்.) மதிகெட்டு இருந்த இடத்தை விட்டோட்டும், பித்தோபரியான வியாதிவிர்த்தி, தனவிரயம் பிதாவரிட்டம் வாயு சம்பந்த வியாதி கலகமுமுண்டு. இஃது இராகுவினது திசையில் சனியினுடைய புக்தி - வருப - உ மீ ௪௦ - நாள் ௬ - ல் என்பதாம்.

புதபுக்திபலன்

கூர்ந்தறிதன்மைமிகுங்கூட்டந்தமரோர்கள்
சார்ந்தசகோதரம்பெண்சாதிவகைச் - சேர்ந்தவின
மெய்துங்கொஞ்சந்துக்கமெண்ணுந்தொளாயிரநா
ளுய்யபதினெட்டுபுதனூண்.

(இ - ள்.) நல்ல ஆலோசனை - மேன்மைபந்துக்கள்வரவு, தன்னுடன் பிறந்தோர் பெண்சாதிவர்க்கவரவு அற்பதுக்கமும், உண்டு. இஃது இராகுவினது திசையில் புத புக்தி - வருப - உ மீ ௬ - நாள் ௧அ - ல் ஏன்பதாம்.

கேதுபுக்திபலன்.

சுரமரசரக்கினியால்துன்பந்தொடுத்த
கருமங்கெடுமனைவிக்குங்காண் - பிரிய
சுதனுக்குமாயுதத்தால்துன்பம்பிதுர்க்கு
சதிகேதுகோள்புசிக்கிலதான்.

(இ-ள்.) சுரத்தினாலும் - அரசராலும் - அக்கினியாலும் துன்பம் சேரிடும் - எடுத்தகாரியங்கெடும் - பெண்சாதிக்கும் புத்திரனுக்கும் ஆயுதத்தினால் பீடை - பிதாவுக்குமோசம் உண்டு. இஃது இராகுவினது திசையில் கேதுவினுடைய புக்தி - வருப க - நாள் ௧அ - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

சுக்கிரனுண்டோர்மூன்றுந்துய்யதனஞ்சேரும்
மிக்கதெய்வதாசியின்பமெய்துமே - தக்கபடி
ஆளடிமைசேருமரசர்மானஞ்செய்வர்
நீளகருங்கோளினினீர்க்கோள்.

(இ-ள்.) சற்பாத்திரவழியில் திரவியஞ்சேரும் - தேவதாசியினுடைய சிநேகம் - அடிமையாள்வரத்து - அரசர்கள்மெச்சி பரிசிகொடுப்பர், இஃது இராகுவினது திசையில் சுக்கிரனுடைய புக்தி வரு ௩ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

வன்னிகள்ளர்சத்துருவால்மாவிரணரோகமதா
லுன்னுபயிர்பொன்சேதமுண்டாகும்-துன்னுகரும்
பாம்பின்றிசையிற்பரிதிநாண்முந்நூறுந்
தாம்புசிங்குநாளாமிற்றன்.

(இ-ள்.) அக்கினி - திருடர் - சத்துரு - ராஜரணம் - பயிர் - திரவியமுதலாகியவைகளினால் கஷ்டமுண்டாகும். இஃது ராகுவினது திசையில் சூரியனுடைய புக்தி - மீ க0-நாள் உச - ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

பூமிதனலாபமுடன்போந்தமனையாள்லாபம்
ஆமிதனுலேகாணியாளர்பகை - கோமளஞ்சேர்
ராகுதிசையிற்சசிதானல்கியமாதம்பதினெட்
டாகுமிவைகண்டறியலாம்.

(இ-ள்.) மனைலாபமு மல்லாமல் - தகுதியான களத்திரலாபம் முண்டு, இவைகளினாலே பங்குபங்காளிகளுடைய பகையுண்டு. இஃது ராகுவினது திசையில் சந்திரனுடைய புக்தி - வரு ௧௬ - ல். என்ப

ருஜபுக்திபலன்.

நாடியதோர்யாத்திரையோநாசமாஞ்சோரபயம்
நீடுவன்னியால்பயமுநேரிடுமே - ஆடரவில்
செவ்வாயொருவருடஞ்சேர்ந்தமூவாறுநாள்
இவ்வாறுதான்புசிக்கிலே.

(இ-ள்.) உத்தேசித்திருந்த யாத்திரைதடை - திருடராலும்அக்கினியால் நஷ்டம். இஃது ராகுவினது திசையில் செவ்வாயினுடைய புக்தி - ஷ்ல க - நாள் கஅ - ல் என்பதாம்.

ருருதிசைப்பலன்.

வித்தைசெயம்புத்திரர்சம்பத்துமிகுமேலரசர்
சித்தமகிழ்சன்மானஞ்செய்வரே - மெத்த
அபிஷேகபூஷணமுமாதிபத்தியங்கள்
லபிதங்குருதிசாபலன்.

(இ-ள்.) வித்யாலாபம் - ஜயப்பிரதம் - புத்திரபாக்கியம் மேலான அரசர்கள் கிருபைவைத்து வெகுமானஞ்செய்து மிகவும்வஸ்திராபரணமளித்து பெருமையான சுயாதிபத்தியமும் தருவார்கள். இஃது குருவினது திசை - ஷ்ல கசு - ல் என்பதாம்.

ருருபுக்திபலன்.

புத்திரர்மன்னர்சேர்வைபூலாபமாரோக்கியம்
நித்தியவிவாகமாநிட்சேபம் - வத்திரம்பொன்
ஞபரணமுண்டாகுமாசான்றிசையிலவன்
பாபமிலாப்புசிப்பில்பார்.

(இ-ள்.) புத்திரலாபம் - நிருபர்தரிசனம் - பூமிலாபம் - சௌக்கியம், சர்வதாய் சுபகாம் - புதையலிலாபம் - வஸ்திராபரணசித்தி. இஃது குருவினது திசையில் குருவினுடைய புக்தி ஷ்ல - உ மீ ௲ - நாள் கஅ - ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

மன்னன்மகாதிசையிலமந்தனதுமாசமுப்பான்
உன்னியநான்குநாளூற்றிடும்போ - திந்நிலத்தில்
வேசியராலின்பங்கண்மேவுமிதுவல்லாமல்
பேசுதனலாபமுமாம்பின்.

(இ-ள்.) அன்னியஸ்திரீ சஞ்சாரமும் தனலாபமுமுண்டு. இஃது குருவினது திசையில் சனியினுடைய புக்தி ஷ உ௭ நாள் கஉ - ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

தனதானியலாபஞ்சத்துருக்கள்பத்தி
மனைவிக்குநன்மைமருவு - மினமுடனே
தக்கதமையன்றனக்குநோய்மன்னவனில்
மிக்கபுதன்புசிக்கின்மேல்.

(இ-ள்.) தனந்தானியம்லாபம் - சத்துருக்கள் விநிதமாவார்கள் பெண்சாதிக்கு நன்மையுண்டாகும் - பந்துக்கள்வரவு தமையனுக்கு நோய்காட்டும். இஃது குருவினது திசையில் புதனுடைய புக்தி ஷ உ மீ கூ - நாள் கூ - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

துக்கம்விஷநோய்சுரரோகமும்வருமே
தக்கதலத்திற்பிரமைதான்கொள்வன் - மிக்கதமிழ்
வித்வஜனர்பகையாம்வேக்துதிசையிற்கேது
புத்திதனைத்தானறியும்போது.

(இ-ள்.) துபரமும் - விஷத்தினால்பீடையும் - சுரரோப் பீடிதமும் இருந்த இடத்தில் பிரமைகொள்ளலும் - வித்வஜனர் பகையுண்டு. இஃது குருவினது திசையில் கேதுவினுடைய புக்தி - மீ [illegible] நாள் கூ - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

சத்துருவினால்நாசம்தன்மனையாளும்பிரிவள்
வித்தையகலுங்கலகமேவுபயம் - மெத்ததிறல்
மன்னன்மகாதிசையில்மாதநாலெட்டசுரர்
தன்குருவங்தேபுசிக்கில்தான்.

(இ-ள்.) சத்துருவினாலே நஷ்டம் - தன்பெண்சாதியும் பகையாவள் - படித்தபடிப்பும்போகும் - கலகமும் பயமுமதிகம் உண்டாகும். இஃது குருவினது திசையில் சுக்கிரனுடைய புக்தி ஊ - உ மீ அ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

புண்ணியஞ்சேருஞ்ராஜபூஜிதமுஞ்சவுக்ய
மெண்ணுஞ்சவுரியமுண்டெங்நாளு - நண்ணி
வருஞ்சத்துருநாசம்மார்த்தாண்டனுர்வங்
திருந்துபுசிக்கிலிவை.

(இ-ள்.) தாமமுண்டாகும் - ராஜபூஜிதமுண்டு-சார்வதாய்சௌக்கியம் வெகுதயிரியமுண்டு - தேரும் - சத்துருக்களைநாசம் பண்ணும். இஃது குருவினது திசையில் சூரியனுடைய புக்தி - மீ க - நாள் கஅ - ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

விலைமாதரால்போகம்வேந்தரால்நன்மை
தலைநாட்பகைநட்புதானுகும்-விலகும்நோய்
பாராளரசன்பகர்திசையிற்சந்திரனும்
நோய்புசிக்கும்நெறி.

(இ-ள்.) கணிகைமாதருடைய சைபோகம், அரசர்சன்மானம் கெலோனையபிகையாளியும் இஷ்டமாவர் - பிணிநீங்கும். இஃது குருவினது திசையில் சந்திரனுடைய புக்தி ஊ - க । மீ க-ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

மெய்யிற்குருநோயுமேதமக்குஞ்சுரமுஞ்
செய்யசவுபாக்கியமுஞ்சேருமே - யெய்யவருஞ்
சத்துருக்கணசஞ்சவுரியங்களுஞ்சுபமும்
மெத்தசெய்வாய்புசிக்கின்மேல்.

(இ-ள்.) தேகத்தில் கண்டமேகசுரமும் தமக்கும் - நல்லசவுக்கியமுண்டாகும் - சத்துருக்கள் நாசமாம் - சவுரியமுண்டு - சுபம்தீர்க்கமாகும். இஃது குருவினது திசையில் செவ்வாயினுடைய புக்திமீ கக - நாள் சு - ல் என்பதாம்.

ராகுபுக்திபலன்.

கலகமிகுமிருகங்கள்ளரால்துக்கம்
தலபேதமாம்புத்திதாழ்வாங் - குலவுபுகழ்
வீரியங்கண்டமிகுந்தவுறவும்பகையாம்
காரியராகுப்புசிப்பில்காண்.

(இ-ள்.) கலகவிர்த்தி - மிருகத்தினாலும் - சோரராலும் துக்கம் இடம்விட்டுப்போதல் - யோசனையிராது - கீர்த்திபிரதாபங்கள்குறையும் பந்துக்களின்பகை. இஃது குருவினது திசையில் ராகுவினுடைய புக்தி ௵ - உ மீ சு - நாள் உசு - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

சோகம்பயமிலங்குந்துக்கமகோதரமுண்
டாகுமபிமானமதுகேடாம் - வாகையுள
மாட்டுக்குச்சேதம்வருமுயுத்தமுண்டாகும்
நீட்டுசனியின்றிசை.

(இ-ள்.) சோகமும் - பயமும் - துக்கமும் மகோதர வியாதியும் உண்டாகும் - ஒருவர்வைத்த அபிமானங்கெடும் - மாட்டுக்குச்சேதம் வரும் - சண்டைடைக்கும். இஃது சனிதிசை ௵ கக -ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

மனைவிபுதல்வர்பொருள்வாழகம்பீடை
தினவழக்குநோய்பயிருஞ்சேதம் - கனவிலங்கு
பூண்டிருப்பனூர்விட்டுப்போவன்சனிதிசைமூன்
றுண்டுநாள்மூன்றுகுமால்.

(இ-ள்.) களத்திரம் - திரவியம் - புத்திராள் - குடியிருந்த வீடு முதலியவைகளினால் துன்பம் - நித்தியம்வழக்கு - ரோகம் பயிரச் சேதம் தளையுண்டு - ஸ்தானபிரஷ்டம்செய்யும். இஃது சனியினது திசையில் சனியினுடைய புக்தி வருப ௩ - நாள் ௩ - ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

ஆசாரம்பூஜைஜெயமன்புசவுபாக்கியமும்
மாசாரமுளநோன்பும்வந்தெய்தும் - தேசார்
சவுக்கியமாமந்தன்றிசைதன்னிற்புதனும்
புவிக்குள்புசிக்கின்றபோது.

(இ-ள்.) சீலமும் பூஜையும்-புண்யகரமும்-பிரியமும் - சந்தோஷமும் சாராம்சமுமுள்ள விரதமும் - மேன்மைபொருந்திய சவுக்கியமும் உண்டாகும். இஃது சனியினது திசையில் புதனுடைய புக்தி வருப - உ மீ அ - நாள் ௬ - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

அனுசாரமாம்புதல்வராற்பீடைபொல்லாக்
கனவாம்பொருட்சேதங்காட்டு - மனோதிடம்போம்
துக்கம்வாதஞ்சோபந் தோன்றுந்தாரத்தாலும்
அக்கியினாற்கேதுாணனை.

(இ-ள்.) அனுசாரமும் - புத்திரபீடையும் - பொல்லாக்கனவும் பொருள்சேதமுண்டு - மனோதைரியம்போம் - துக்கமும் - வாக்கு வாதமும் பெண்சாதியாலும் - அக்கிப்புண்ணினாலும் சோபமுண்டாகும். இஃது சனியினது திசையில் கேதுவினுடைய புக்தி வருப-க-மீ ௩ - நாள் க - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

சுத்தந்தவர்களால்தோழரால்கன்மைவரும்
நத்துமனைவியரால்நாடுசுகம் - அத்தும்
சகலசவுபாக்கியமுஞ்சந்தானமந்தன்
தருந்திசையிற்சுக்கிரன்வந்தால்.

(இ-ள்.) நெருங்கிய பந்துக்களாலும் - சினேகிதராலும் - நன்மையுண்டாகும் - ஸ்திரீசவுக்கியமுண்டு - சகலசவுபாக்கியமும் சந்தானலாபமுமுண்டு. இஃது சனியின் திசையில் - சுக்கிரனுடைய புக்தி ௵ ந - மீ௴ உ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

செய்யதந்தைதேசாந் திரம்போவன்புத்திரரால்
தையலால்பொன்னினால் மான்சேதம் - உய்யவே
உற்றபுவிக்குள்பயங்களுண்டாஞ்சனிதிசையைப்
பற்றிகதிர்புசிக்கும்பண்பு.

(இ-ள்.) அன்புள்ளதந்தை தேசாந்திரம்போகவும் புத்திரராலும் - ஸ்திரீகளாலும் - டவைத்தினாலும்சேதம் - சுவதேசபயம். இஃது - சனியினது திசையில் சூரியனுடைய புக்தி மீ௴ ௧௧,நாள் ௧உ-ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

மனைவிகுருமரணம்வாழ்ந்தகம்பொல்லாப்பும்
தனமதனாலும்பிரிவுதானு - மினமாய்
கபால்வாயுப்பிடிப்புங்காரிதிசைதன்னில்
உபாயமதிபத்தொன்பதும்.

(இ-ள்.) பெண்சாதியும் ஆசாரியரும்மரணம் - வீட்டில்கலகம் திரவியத்தினால் பிரிவுபடச்செய்யும் - கபாலத்தில் வாயுவும் - ஊங்கால்பிடிப்பும் - உண்டாகும். இஃது சனி திசையில் சந்திரனுடைய புக்தி ௵ ௧ - மீ௴ எ - ல் என்பதாம்.

குஜபுக்திபலன்.

அன்னைபிணிகொள்வளத்தங்கணுசமா
முன்னியேவாழ்தலம்விட்டோட்டுமே - பின்னுமோ
நானுதுக்கம்மெய்துநாற்றிசையெண்காரிதனில்
மானுபரஞ்சேய்வரில்.

(இ-ள்.) தாய்கஜூக்குவையாவள் - பொருள்விரயம் - இருந்த இடத்தைவிட்டுப்பேர்க்கும் - நாலாவிதத்திலும் துக்கமுண்டு - இஃது சனியினது திசையில் செவ்வாயினுடைய புக்தி ஷூ க - மீ க- நாள் கூ - ல் என்பதாம்.

ராகுபுக்திபலன்.

அங்கத்திற்கீனமதிசாரமுஞ்சுரமுந்
தங்குஞ்சிரநோய்தனச்சேதம் - பங்கமிகும்
சத்துருவால்பீடைசனிதிசையிலேராகு
புத்திவருகின்றபோது.

(இ-ள்.) அங்கத்திற்கேடு - அதிசாரம் - சுரம் - தலைநோய் தனச்சேதம் - பங்கம்வரும் - சத்துருக்களால்பீடை. இஃது சனிதிசையினில் ராகுவினுடையபுக்தி ஷூ உ - மீ கo-நாள் கூ - ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

பூமிபொருள்புதல்வர்பூசிதமும்வந்தெய்தும்
தாமிருந்துபோனதலஞ்சேர்வர் - நேமிதனில்
உற்றாரால்நன்மையுயர்காரியின்றிசையில்
பற்றியாசானாண்பலன்.

(இ-ள்.) பூலாபம் - புத்திரலாபம் - பொருள்வரவு - மேம்பாடு பழயபடிதன்னிடம் வந்துசேரல் - நெருங்கியபந்துக்களால் நலமுண்டாகும். இஃது சனியினது திசையில் குருவினுடைய புக்தி ஷூ உ மீ கூ - நாள் கஉ - ல் என்பதாம்.

புதன்திசைப்பலன்.

பண்ணியமேழிப்பயிர்பச்சைத்தான்பலிக்கும்
நண்ணும்விவாகமனைலாபமா - மெண்ணுந்
தனலாபம்பங்குகொளத்தானும்மிகுதி
கனமாம்புதன்றிசைக்குள்காண்.

(இ-ள்.) உழுதுபயிரிடும்படியான விவசாயப்பலிப்பும் - விவாகமும் - பூமிலாபமும் - திரவியலாபமும் - பங்குகொள்ளில்கூடுதலும் உண்டாம். இஃது புதன்திசை வரு௲ கஎ - ல் என்பதாம்.

புதன்புக்திபலன்.

பூசிக்குமாமக்கள்பூமியுற்றுருந்தூரத்
தேசந்தனிற்பொருளுஞ்சேருமே - பேசரிய
ஞானந்தமையனர்நன்மைசுகந்தர்ம
தானம்புதன்புசிக்கிற்றுன்.

(இ-ள்.) புகழ்பெறும்படியான பிள்ளைகளும் - பூமியும் - பந்துவர்க்கங்களும் - தூரதேசத்திலிருந்து திரவியமும் - உண்டாகும் - ஞானேதயமும் - தமையனா நன்மையாக இருக்கவும் - சுகந்தகமும் தர்மதானமுமுண்டு. இஃது புதனது திசையில் புதனுடைய புக்தி வரு௲ உ மீ௸ ச - நாள் ௨எ - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

உற்றூர்பகைதுக்க மோடுதனமுஞ்சேதம்
மற்றவராலும்வரும்பீடை - பற்றிகள்ளர்
தன்னுல்குலத்திற்குத் தாட்சியுடன்கேடு
மின்னுளேகேதுமேவிடில்.

(இ-ள்.) உறவினருடைய் பகையும் துக்கமும் தனநாசமும் அக்கம் பக்கத்தாரால் பீடையுமுண்டாகும், சோரர்களால் குலத்திற்கு ஈனம் - குறைவுமுண்டாகும், இஃது புதனது திசையில் கேதுவினுடைய புக்தி மீ௸ கக - நாள் உஎ - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

அக்கினிஷிட்டோமங்குருவா லாசரிக்குந்தேவதையால்
தக்கநன்மையுள்ளமைந்தர்தானுமுண்டு - மிக்க
வலங்காரவஸ்திரம்பொன் னன்பாய்வருமே
இலங்குபுதனில்வெள்ளியே.

(இ-ள்.) அக்கினியாலும் - ஆசாரியனாலும் - இஷ்டதேவதையா லும் தகுதியான நன்மையும் புத்திரருமுண்டு - வஸ்திராபரணஞ்சித் திக்கும். இஃது புதன்திசையில் சுக்கிரனுடை புக்தி வரு உ மீ ௧0 - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

புனல்வன்னியால்நன்மைபொன்வித்தைபோகம்
கனபுத்திபூமிகடாக்ஷம் - மனைகட்டி
நாற்காலிருகாலுள்நல்ஜீவம்ரத்தினமும்
ஏற்கவுண்டாங்கதிரிலே.

(இ-ள்.) சலத்தினாலும் அக்கினியினாலும் - நன்மையுண்டு, பொன் னும் - வித்தையும் - வைபோகமும் - மேலானபுத்தியும் பூமியில்புதை யலும், நூதனகிரகங்கட்டலும் - நாற்கால்ஜீவன்வரத்தும் இருகால் ஜீவன் வரத்தும் நல்லரத்தினமுமுண்டு. இஃது புதன் திசையில் சூரியனுடைய புக்தி மீ ௧0 - நாள் கூ - ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

புந்திமகாதிசையில்போந்தசசிமாதம்
வந்தபதினேழுமட்டுக்கும் - நொந்தே
இளைப்பன்க்ஷயரோகமெய்தும்பயத்தால்
களைப்பன்மற்றவ்வளவேகாண்.

(இ-ள்) தேகம்கிரிஷிக்கும் - க்ஷயரோகமுண்டாகும் - பயப் பட்டு களைதாக்கும். இஃது புதனதிசையில் சந்திரனுடைய புக்தி வரு க - மீ ரு - ல் என்பதாம்.

குஜபுக்திபலன்.

ஆயுதத்தினற்கிரந்தி யாற்பீடையுற்றால்
ஏயுங்கலகமெழிலுமே - நோயுடனே
செந்துகிலும்புண்ணியமுஞ்சேருமன்னாால்வாழ்வு
புந்தியிற்செவ்வாய்புசித்தபோது.

(இ-ள்.) ஆயுதத்தினும் கிரந்திப்புண்ணினும் பீடை - பந்துக்களால்கலகம் - கீர்த்தியுண்டு - நோயுண்டு - சிவந்தவஸ்திரமும் புண்ணியவிஷயமும் - சேரும் - அரசர்களால் வாழ்வுமுண்டு. இஃது புதன்திசையில் - செவ்வாயினுடைய புக்தி மீ ௧௧ - நாள் உ௭ - ல் என்பதாம்.

ராகுபுக்திபலன்.

வாதமிருகத்தினல் வாதைப்பிரமாதம்
மோதுமுற்றார்நாசமுன்கோபம் - போதுகால்
நித்திரைரோகம்வருமேநீண்டபுதனிற்கருங்கோள்
பத்திரமாகப்புசிக்கிற்பன்.

(இ-ள்.) வாதவியாதியும் - மிருகத்தினல்தொந்தரையும் - பிரமாதமுமுண்டாகும் - பந்துக்கள்நாசம் - முன்கோபம் - விடியற்காலத்தில் நித்திரையுண்டாகும் - வியாதியுண்டு. இஃது புதனுதிசையில் ராகுபுக்தி வருஉ - மீ ௬ - நாள் ௧௮ - ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

பொன்பொருளைத்தேடப்போவன்பிரதேசம்
இன்பப்ரதாபமும்வந்தெய்துமே - புன்மைப்
பிணிசத்துருபயமாம்பேசும்புதனில்
அணியரசன்வந்துபுசித்தால்.

(இ-ள்.) பொன்னையும் - பொருளையுந்தேடப் பிரதேசம்போகும்படியாகும் - இன்பமும் - பிரதாபமும் உண்டாகும் - அல்பவியாதியும் சத்துருபயமுமுண்டு. இஃது புதனது திசையில்குருவினுடைய புக்தி வருஉ - மீ ௩ - நாள் ௬ - ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

கெண்டம்பிரமாணக்கேடுறவுக்கினமாம்
மண்டலத்திற்புத்திரரும்வந்தெய்தும் - கண்டீர்நாற்
கால்ஜீவலாபமுங்காட்டுந்தனக்கினம்
மால்திசையில்மந்தன்வரில்.

(இ-ள்.) கெண்டம் - பிரமாணக்கேடு - பந்துநாசம் - புத்திரருண்டு - நாற்கால் ஜீவன்வரத்து - தொந்தறை. இஃது புதனது திசையில் சனியினுடையபுக்தி ௵ உ - மீ ௬ - நாள் கஉ - ல் என்பதாம்.

கேதுதிசைப்பலன்.

பித்தம்க்ஷயரோகம்பெண்மருந்திஞலிளைப்பன்
சுத்ததரித்திரமுஞ்சூனியமும் - மெத்த
வருமாடுபாயுமேவாய்ந்ததிறற்கேது
உருவாய்மருவுதிசைக்குள்.

(இ-ள்.) பித்தோபரி - க்ஷயவியாதி - ஸ்திரீயால் மருந்திடஇளைப்பன் - இல்லாமையும் - சூனியம் வைக்கப்படும் - மாடுமுட்டும். இஃது கேதுவினது திசை ௵ க - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

குலத்திற்கோர்துக்கங்கொடுங்கோலாலச்சம்
பிலந்தவொருசத்துருவால்பீடை - நிலத்தில்
புதல்வருக்கும்பீடைபொருள்கலகங்கேது
பதியிலவன்புசிக்கும்பண்பு.

(இ-ள்.) குடும்பத்தில்துக்கம் - அன்னீதியால்பயம் - ஒருசத்துருவிஞலேதுன்பம் - புத்திராள்கஷ்டம் - பொருள்விஷயத்தில் பொல்லாப்பு. இஃது கேதுவினதுதிசையில் கேதுவினுடைய புக்தி மீ ௪ - நாள் உஎ - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

தனமிகுஞ்சாந்தந்தயிரியமுத்ஸாகங்
கனமரசரால்வாதங்காணும் - மனைவி
தன்னாற்கலகந்தருங்கேதுவில்வெள்ளி
பன்னாள்புசிப்பின்பயன்.

(இ-ள்.) பொருளுண்டாகும் - சாந்தமும் தயிரியமும் - உல்லா சமுமுண்டாகும் - இராஜப்பிரபுவினால் வாக்குவாதமுண்டாகும் - களத்திரத்தினால் கலகமுண்டு. இஃது கேதுவினது திசையில் சுக்கிர னுடையபுக்தி வரு க - மீ உ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

தாகமழலேச்சுரமுஞ்சத்துருவாலக்கினியால்
போகனெனும்மன்னவரால்போர்பீடை - யேகதலம்
வேற்றுமையாங்கேதுவினில் வெய்யோன்வந்தேபுசிக்கும்
நூற்றிருபத்தாறுநாளும்.

(இ-ள்.) தாபமும் சூட்டின்பேரில்சுரமும் - சத்துருக்களாலும் - அக்கினியாலும் - அரசர்களாலும் - சண்டைசச்சுரவும் - ஸ்தானப்பிர ஷ்டமும் நடக்கும். இஃது கேதுவினது திசையில்சூரியனுடையபுக்தி மீ ச - நாள் சு - ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

துக்கஞ்சுகங்கலகந்தோகையர்பொன்னாலாயம்
மிக்கதனச்சேதம்மிகப்புசிப்பு - மொக்கலாம்
செம்பாம்பிலிந்தேழு திங்கள்புசித்திட்டால்
அம்பாம்வேற்கண்ணையறி.

(இ-ள்.) பயமும் - சுகமில்லாமையும் - ஸ்திரீயினாலும் பொரு ளினாலும் - தீவானத்தாலும் - தனவிரயம் - அதிகமாகச்சாப்பிடலு முண்டு. இஃது கேதுவினதிசையில் - சந்திரனுடைய புக்திமீ எ - ல் என்பதாம்.

குஜபுக்திபலன்.

வாதுசெய்வார்தன்னினத்தோர்வாய்க்குந்தேகப்பீடை
ஓதுகள்ளரால்பயமுமுண்டாகும் - கேது
திசையிற்செவ்வாய்புசிக்குந்திங்களொருநாளோ
டிசையுநாள்மூவொன்பதே.

(இ-ள்.) பந்துக்குரோதம் - தேகத்தில்ரோகம் - சோரபயம். இஃது கேதுவினது திசையில் - செவ்வாயினுடையபுக்தி மீ ச - நாள் உஎ - ல் என்பதாம்.

ராகுபுக்திபலன்.

இல்லில்விரோதமியற்கையனுசாரம்
வல்லகள்ளர்சத்துருவால்வாதைவரும் - நல்ல
கலகமிருபாம்புங்கலந்தோர்வருட
மூலவியநாளீரொன்பதும்.

(இ-ள்.) கிரகேகலகம் - அனுசாரங்குடிகொள்ளும் - கள்ளராலும் - சத்துருக்களாலும் சங்கடமாகும் - கலகமும்வரும். இஃதுகேதுவினது திசையில் - ராகுவினுடையபுக்தி வருடம் க - நாள் கஅ-ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

சம்பத்தாசாரமுடன்றக்கபிரக்கினையும்
இன்பமனையாள்புதல்வரெய்துமே - அம்புவியில்
மானேகேதின்றிசையில்வந்தபிரகஸ்பதியாங்
கோனேபுசிப்புகொள.

(இ-ள்) சம்பத்கரம் - சீலம் - நல்லறிவு - இஷ்டதாயபிள்ளை பெறுவான். இஃது கேதுவினதுதிசையில் - குருவினுடையபுக்தி மீ கக - நாள் கூ - ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

அங்கத்திற்கீனமாமக்கினியாற்பீடையாம்
பொங்குதலப்பேதம்பொருட்சேதம் - திங்கள்
பதின்மூன்றுமொன்பதுநாள்பாழ்வாதபித்தம்
அதுவருமந்தன்புசிக்கவாம்.

(இ-ள்.) சரீரத்திற்கீனம் - அக்கினியால்சங்கடம் - இடம்விட்டுப்பேர்தல் - பொருள்விரயம் - வாதபித்ததொந்தவியாதியும் உண்டு இஃது கேதுவினதிசையில் - சனியினுடையபுக்தி வருட க - மீ ௩ நாள் க - ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

சீமையினல்தன்னுல்சிலுவில்லைமைந்தருற்றார்
தாமும்வருவர்தலஞ்சேர்வர் - பூமி
வெகுலாபம்செம்பாம்பில்மேவிப்புதனும்
தொகுதியுடனேபுசிக்கிற்சொல்.

(இ-ள்-) ஊரினுலும் - தன்னுலும்சிக்கில்லை - புத்திரபாக்கியம் - பந்துக்கள்வரவும் - தன்னிடம்வந்துசேரச்செய்யும் - பூமியினுல் அதிகலாபமுண்டு. இஃது கேதுவினதிசையில் - புதனுடைய புக்தி மீ கக - நாள் உஎ - ல் என்பதாம்.

கவிதிசைப்பலன்.

மன்னர்மற்றையோர்தமரோர்வாஞ்சிப்பர்வேள்வியுடன்
உன்னுகூத்ரகூாமரைபொன்னுண்டாகும் - மின்னுஞ்
விபாகம்சுபப்ரீயம்மெய்யிற்பிணிபோம்
சுபாவமிதுசுக்கிரனிற்சொல்.

(இ-ள்.) அரசர்கள் - வேதபிராமணுள் - பந்துக்கள் - சிநேகம் செய்வர்கள் - யாகம் - குடை - சாமரை - பொன் - லாபமாம் யங்கு பாகம்வரும் - சுபகரம் - சந்தோஷமுண்டு. இஃது சுக்கிரனதிசை வரு உ௦ - ல் என்பதாம்.

கவிபுக்திபலன்.

தன்மார்த்தகாமியஞ்சௌரியங்களுண்டாகும்
துன்மார்க்கரைச்செயிக்கத்துப்புண்டா - நன்மார்க்கம்
எண்ணேந்துதிங்களெழில்சுக்கிரன்றிசையில்
நண்ணியவன்புசிக்குநாள்.

(இ-ள்.) அறம் - பொருள் - இன்பம் - சவுரியம் - உண்டு, துன்மார்க்கரை ஜயிக்கச்சக்தியுண்டு - நன்னெறியாகும். இஃது சுக்கிரனதுதிசையில் சுக்கிரனுடைய புக்தி ௵ ௩- மீ ௪ - ல் என்பதாம்.

ரவிபுக்திபலன்.

கண்வலிமெய்பீடைதுக்கங்காவலர்தம்மால்பயமாம்
எண்ணுஞ்சுரதாபமெய்துமே - நண்ணி
பிருகுமகாதிசையில்பேரானவெய்யோன்
வருபன்னிரண்டுமதி.

(இ-ள்.) கண்ணோய் - தேகவியாதி - துயரம் - அரசர்களால் பீதி - எப்போதுஞ்சுரமும் - தாபமுமுண்டு. இஃது சுக்கிரனதுதிசையில் - சூரியனுடையபுக்தி ௵ க - ல் என்பதாம்.

சசிபுக்திபலன்.

சிரரோகங்காமாலைசெய்யமுதம்பந்தும்
வரவாம்மனைகட்டிவைப்பன் - சரீரம்
உருக்கும்பிருகிலொளிர்மதிவந்துண்ணப்
பெருக்குமதிநாலைந்துபேசு.

(இ-ள்.) சிரநோய் - காமாலை - விருந்து - பந்துவரத்து நூதன கிரகசித்தி - தேகம்இளைக்கும். இஃதுசுக்கிரனதுதிசையில் சந்திரனுடைய புக்தி ௵ க - மீ அ - ல் என்பதாம்.

குஜபுக்திபலன்.

பீனிசமாம்மார்பிற்பிணியாகுஞ்சஞ்சலமாம்
மாகிலுத்திலாபமேவந்தெய்தும் - ஆனசெவ்வாய்
ஈரேழுதிங்களியல்சுக்கிரன்றிசையில்
பாரோரறியவுணும்பண்பு.

(இ-ள்-) பீநிசம் - மார்பில்நோய் - சஞ்சலம் - பூமியினுலாப முண்டு. இஃது சுக்கிரனதிசையில் - செவ்வாயினுடையபுக்தி ஹுப க - மீ௵ உ - ல் என்பதாம்.

ராதுபுக்திபலன்.

புலவர்பகையிருந்தாப் போலேசிரநோய்
குலவுந்தியாகங்கொடுப்பன் - விலைமாதர்
போற்றவேசுக்கிரனைப்பூண்டுகரும்பாம்பு
ஏற்றவருடம்மூன்றினில்.

(இ-ள்.) வித்வஜனபகை - திடீலென்றுதலைநோய் - தானங்கொடுப்பிப்பன் - தேவதாசிகள்கூட்டம் இஃது சுக்கிரனதிசையில் ராகுவினுடையபுக்தி ஹுப ௩ - ல் என்பதாம்.

குருபுக்திபலன்.

இல்லாளானன்மைசுகமெய்துந்தனலாபம்
தொல்லைமனையில்சந்தோஷமே - பல்லோரும்
கண்டுசந்தோஷக்களிப்பினுலெட்டுமெதி
உண்டுகவிபொன்னனுணவு.

(இ-ள்.) களத்திரத்தினுல் நன்மையும் சுகமும் தனலாபமும் - பழயபூமியினுலே சந்தோஷமும் - சகலரும்பார்த்து சந்தோஷிக்கும் படியான இஷ்டமும் ஆம். இஃது சுக்கிரனதிசையில் - குருபுக்தி ஹுப உ - மீ௵ அ - ல் என்பதாம்.

சனிபுக்திபலன்.

பட்டினமூர்சாலப்பரபத்தியஞ்செய்வன்
வட்டமுலைதுர்க்கந்தவுஞ்சிதனை - இட்டமே
செய்வன்சுரர்குருவைச்சேர்ந்தசனிமாதம்
உய்யமுப்பானெட்டுணர்.

(இ-ள்.) ராஜதானிமுதல் பிரதேசங்கள்வரையில், பெரிதான வியாபாரஞ்செய்வன் - மலினஸ்திரீயைப்புணருவன். இஃது சுக்கிரனதிசையில் - சனிபுக்தி ஹுப க - மீ௵ உ - ல் என்பதாம்.

புதபுக்திபலன்.

சிந்தித்ததெல்லாம்ஜெயமர்த்தலாபமாம்
மைந்தராற்றேழாரால்மாநன்மை - முந்தும்
சவுபாக்கியம்பிருகுதன்னிற்புதன்வந்
தவுபோஜனஞ்செய்யுமால்.

(இ-ள்.) நினைத்தகாரியமெல்லாஞ்சித்தி - திரவியலாபம் - புத்திராளாலும் - சினேகிதராலும் - லாபமும் நல்லபாக்கியமும் உண்டாம். இஃது சுக்கிரனது திசையில் - புதபுக்தி ௵ உ - மீ௱ கO - ல் என்பதாம்.

கேதுபுக்திபலன்.

சத்துருவினுற்கூட்டுதானுண்டுபீடையுடன்
சித்தமதிலெண்கருமஞ்சேதமாம் - மெத்த
கலகமுற்றூர்நாசமதுகாட்டும்பிருகில்
இலகியகேதுபுசிக்கில்.

(இ-ள்-) வியாபாரம்செய்வதில் சதத்துருகூட்டுண்டு தூர்க்குறித்ம் - நினைத்தகாரியஞ்சேதம் - மிகவும் கலகபந்துநாசம். இஃது சுக்கிரனதுதிசையில் - கேதுவினுடைய புக்தி ௵ க - மீ௱ உ-ல் என்பதாம்.

மாரகதிசாயோகபலன் வழத்துகின்றது.

மாரகன்றன்றிசையின்மன்னுஞ்சுபர்புசிப்பில்
மாரகத்தைப்பண்ணனம்மானவர்க்கு - மாரகத்தைப்
பண்ணுவான்றன்றிசையில்பற்றுவகத்தவர்கள்
திண்ணும்புசிப்பிற்செறிந்து.

(இ-ள்.) மனிதர்க்குமாரகன் றன்திசையில் தன்னுடன் சம்பந்தமுற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புத்திகளில் மாரகத்தைக்கொடான், தன்னுடன் சம்பந்தமில்லாமலிருக்கிற பாபக்கிரகங்களுடைய புத்திகளிலே துணிந்துகொல்வான் என்பதாம்.

(க - ரை.) மற்றைமாரகவிலக்கண மனைத்து முன்சொன்னபடி யே கொள்கவென்க.

சனி சுக்கிரான்பலன் கூறுகின்றது.

பிருகுதிசையிற்சனிதன்பேரார்புசிப்பில்
பெருகுசுபாசுபங்கள்பேணித் - தருகுவன்
அன்னவனுமப்படியேயாழ்ந்தறிவாய்நீர்சூழும்
இந்நிலத்தோர்யாவர்க்குமென்று.

(இ-ள்.) கடல்சூழ்ந்த இப்பூமியிலுள்ளயாவர்க்கும் சுக்கிரன்தன் திசையில் சனியின்புசிப்பில் தனக்குண்டான பெரிதாகிய சுபாசுபங் களை விசேஷமாய்க்கொடுப்பன். அந்தச்சனியும் தன்றிசையில் சுக்கி ரன்புத்தியில் தனக்குண்டானசுபாசுபபலன்களைக் கொடுப்பனென்று ஆலோசித்தறிவாய் என்பதாம்.

கோள்களின் குணங்களைப் பகுத்தறிதல்.

ஓரைதொறுமுன்னமுரைத்தபடிகோட்குணங்கள்
சேரவரிசையதாய்ச்செப்பிடுவன் - காரமர்கட்
காம்புறுதோட்கன்னடார்சொற்கார்க்கூந்தற்காரிகையாய்
பாம்புறுநல்லல்குலினைப்பார்த்து.

(இ-ள்.) கருமைபொருந்திய கண்களையும் மூங்கில்போன்றதோ ள்களையும் கற்கண்டிற்கொப்பாகியமொழிகளையும் மேகம்போன்றஅள கத்தையும் படம்போன்ற நிதம்பத்தையுமுடைய பெண்ணே? மேஷ முதல் பன்னிரண்டுபாவங்களும் முன்சொல்லியபடியே சூரியன்முத லான கிரகங்களுடைய சுபாசுபகுணங்களை வரிசையாகத் தொகுத் துச்சொல்லுகிறேன் என்பதாம்.

மேடவிராசிபலன் விளம்புகின்றது.

**மந்தனெடுமால்சுங்கன்மாபாவிநல்லவர்கள்
கொந்தலர்பூங்கோதாய்குருவிரவி - சந்ததமும்
தீயபலன்காரியொடுதேவர்பிரான்சேர்ந்தக்கால்
ஏயுமவனேடொற்றதே.**

மாரகத்தானப்பதியாமன்னுகின்றபார்க்கவனும்
மாரகத்தைப்பண்ணும்மானவர்க்கும்-மாரகத்தைச்
செய்வார்சனிமுன்னோர்செவ்வியமேடம்பிறந்தோர்க்
கிவ்வாறீரைப்பிரிருந்து.

(இ-ள்.) பூங்கொத்துகள் பொருந்திய அழகியமாலையினை யுடையவளே? சனி - புதன் - சுக்கிரன் இவர்கள்பாபிகள் - குரு - சூரியன் இவர்கள் நல்லவர்கள், சனிசம்பந்தமுற்ற குரு எப்போதும் அவனுக்கேற்ற பாபபலனைக்கொடுப்பன். இதற்குதாரணம் தன்ம கன்மப்பதிகடாமெட்டுடன் பதினொன்றின் றலைவராகி லவரென்று முன்னங்கூறியவதனால் சனி பதினொன்றின் றலைவனாவதுதான் - மாரகஸ்தானாதிபதியாகிய சுக்கிரன்கொல்லான், சனிமுதலானவர்கள் கொல்வரென்று மேடவிராசியிற் பிறந்தோர்க்குக்கூறுவாய் என்பதாம்.

இடபவிராசிபலனியப்புகின்றது.

குருவெள்ளியிந்துங்கொண்டாடாக்கொடியர்
மருவுசுபக்கோண்மந்தன்மன்னுங் - திருவுறுமா
யோகங்கொடுப்போனொருவனவன்சனியே
ஆகுமம்பாவாயறி.

குருமுதலாய்க்கூறுகின்றகோட்களேகொல்லும்
இருவினையராயினென்றுந் - தெரியும்
படியிடபவோரையினிற்பார்மிசையிற்றோன்றும்
முடியுடையோர்கட்குமொழி.

(இ-ள்.) பிரதமைபோன்றவளே ; குருவும் வெள்ளியுஞ் சந்திரனும் பாபிகள் - சனியும் இரவியும் நல்லவர்கள், சனியொருவனே சிறப்புப்பொருந்திய மேலான இராசயோகங் கொடுப்போன். குருமுதலானவர் கொல்வரென இப்பலனை ஆராய்ந்து பார்க்கும்போதுபூமியின்கண் இடபவிராசியிற் பிறக்கின்ற கிரீடத்துடைய அரசர்க்கு தெரியும்படி சொல்லுவாய் என்பதாம்.

(க - ரை.) குரு சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களை யாராய்ந்து அவர்கள் நிலைகளறிந்து சொல்லத் தக்கதென்க.

மிதுனவிராசிபலன் கூறுகின்றது.

சேயரசனேடிரவிசேராக்கொடுங்கொடியர்
ஆயில்புகனேரொருவனனகோள் - சேயிழையாய்
மந்தனெடுமெந்திரியுங்கூட்டமென்னிலிம்மண்ணில்
நந்துமேடப்படியேநாடு.

அசமர்த்தனிந்துகொல்கைக்கங்காரகன்முன்
அசமர்த்தரல்லரிதாராயில் - இசையுற்
றிலங்குமதிமுகத்தாயென்றறிமூன்றுகும்
நலங்கொளிராசிக்குநவில்.

(இ-ள்.) செவ்விதாகிய வாபரணங்களையும் புகழ்பெற்றுப்பிரகாசிக்கும் பூரணச்சந்திரன்போன்ற வதனத்தையுமுடையவளே அங்காரகன் குரு சூரியன் கொடியபாவிகள் சுக்கிரன் ஒருவனேசுபன், குரு சனியுடன் சேருவானாகில் மேடவிராசியில் பிறந்தோர்க்கொத்தபடி அவயோககாரனுவான், சந்திரன் துதியாதிபத்தியதோஷத்தை அடைந்தவனாயிருந்தாலும் மாரகங்கொடான், குசன், குரு, சூரியன் இவர்கள் மாரகத்தைக்கொடுப்பார்களென்று மூன்றுமிராசியாகிய மிதுனவிராசியிற் பிறந்தோர்க்குச் சொல்வாயாக.

(க - ரை.) குருவும்சனியும் தருமகருமாதிபதிகளாகையால்யோககாரகாள்வலி அறிந்துசொல்கவெனக்கொள்க.

கடகவிராசிபலன் கூறுகின்றது.

சுங்கனிந்துமைந்தனிவர்சூழாக்கொடுங்கோட்கள்
மங்கலன்மாவேந்தனிவர்மன்னுகின்ற - துங்கமுள்ள
நல்லவர்களல்லயோ கத்திறைவனுகுமவன்
சொல்லுறிற்பூசுதனுச்சொல்.

ஆதித்தன்கொல்லான்மற் றோரென்னிற்கொல்லுமவர்
சோதித்துரைக்கிற்சுங்கன்முதலாய் - தீதற்றோர்
கண்டென்றுகண்டோ ருவக்குஞ்சொற்காரிகையாய்
நண்டிலுதித்தோர்க்குநவில்.

(இ-ள்.) கற்கண்டென்று கண்டோர்களுள்ளங்களிக்குஞ் சொற்களையுடைய பெண்ணே! ஆலோசிக்கும்போது சுக்கிரன் புதன் பாபிகள், செவ்வாயுங் குருவும் விசேஷசுபர், யோககாரகன் செவ்வாய் ஒருவனே, சூரியன் கொல்லான். கொல்வாராரெனில் சுக்கிரன் முதலியோர் கொல்வாரகளென்று, கடகவிராசியிற் பிறந்தோர்க்கு இப்பயனைக்கூறுவாய் என்பதாம்.

சிங்கவிராசிபலன் கூறுகின்றது.

புந்தியும்பார்க்கவனும்போற்றுக்கொடும்பாபர்
செந்திறத்தசெவ்வாயேசெம்மைக்கோள் - அந்திறத்தில்
யோகமுற்றார்தீப்பலனையோராதளித்திடுவ
ராகுமதியாரல்புகர்.

புந்திமுதலாப்புகலும் பொல்லாரேபூமிசையோர்க்
கந்தமதாக்கொல்வரவர்வினையில் - பந்தமுற்றார்
ஆமாகிலூயிழையர் யார்கலிசூழ்வையகத்தில்
தாமாண்சிங்கத்தவர்க்குச்சாற்று.

(இ-ள்.) சிவந்தநிறத்தையும் ஆராய்ந்தெடுத்த வாபரணங்களையுமுடையவளே கடல்சூழ்ந்த பூவுலகத்தில் புதன் சுக்கிரன் துதிக்கத்தகாதபாபிகள், செவ்வாயொருவனே நல்லவன், யோககாரகாள் செவ்வாயும் சுக்கிரனும் இவர்கள் சம்பந்த முற்றால் தீயபலனைக்கொடுப்பார், புதன் முதலானபேர் மாரகக்குறியுற்றாரானால் கொல்வரென்று சிங்கவிராசியிற் பிறந்தோர்க்கு ஆலோசித்துச் சொல்வாயாக.

கசு

(க - ரை.) செவ்வா யோககாரகனானபோதிலும் சதுர்த்த கேந்திராதிபதி சம்பந்தத்தினால் தீயபலனைக் கொடுப்பாரென்றதாயிற்று.

கன்னியிராசிபலன் கூறுகின்றது.

செவ்வாயுஞ்செம்பொன்னுஞ்சேணார்மதியுமிவர்
வெவ்வாயர்வெள்ளிவிளம்புங்கால் - ஒவ்வுசுபன்
பார்க்கவனும்பங்கயமா வைரிமைந்தன்றானிவர்கள்
ஏர்க்கமிகுயோகத்தரே.

கொல்லான்பெரிய பிருகுகுஜன்முதலாய்
எல்லாருங்கொல்லுமியல்புடையர் - நல்லாயென்
றெந்நாளுங்கூறுவா யோரரிவைமீதுவந்த
மன்னுமவர்க்குமகிழ்ந்து.

(இ-ள்.) செவ்வாய் குரு சந்திரன் பாபிகள், வெள்ளியொருவனே சுபன், வெள்ளியும் புதனும் யோககாரகாள், வெள்ளி கொல்லான், குசன் முதலானபேர்கள் எப்போதுங் கொல்வாரென்று கன்னிராசியிற் பிறந்தோர்க்குச் சொல்வாய் என்பதாம்.

(க - ரை.) சுக்கிரன் துதியாதிபதியாயிருந்தாலுங் கொல்லானென்றறிக.

துலாவிராசிபலன் கூறுகின்றது.

குருவிரவிசேய்கொடியர் கூறுசனிபுந்தி
மருவுநலமுடையார்மண்ணில் - திருவுறுமா
யோகத்தாரிந்துவுமொண்சுதனுமொண்ணுதன்மீ
தாகுமனகத்தாயறி.

சேயவன்கொல்லான்பின்னேசிலன்முன்னனவர்கள்
தேயுமதியனையசெந்நுதலாய் - ஆயும்
அறிவினோர்க்கெல்லாமளந்தறியக்கோளின்
குறியாகுமென்றுநீகூறு.

(இ-ள்.) ஒளிபொருந்திய நெற்றியையு மேலாகிய கூந்தலையு முடையவளே பிரகஸ்பதி சூரியன் செவ்வாய் இவர்கள் பாபிகள் சனியும் புதனும் சுபாள் சந்திரனும் புதனும் யோககாரகாள் செவ்வாய் கொல்லான் குருமுதலானவர்கள் கொல்லுவாரென்று துலா விராசியிற் பிறந்தோர்க்கு யூகித்துச்சொல்வாய் என்பதாம்.

(க - ரை.) செவ்வாய் சப்தமாதிபதியாயிருந்தபோதிலுங் கொல்லான்.

விருச்சிகராசிபலன் கூறுகின்றது.

புந்தியுஞ்சேயும்புகரும்பொல்லாக்கொடியர்
இந்துமொருத்தனேயேந்திழையாய் - சந்ததமும்
நல்லனிருஞாலநலனளிப்போன்ஞாயிறுடன்
அல்லவனுமாகவறி.

குருவென்பவஞ்கொல்லான் கோதாய்கொல்வோர்கள்
மருவுபுதன்முதலோர்மன்னும் - திருவிலியர்
என்றுரைப்பாய்தேட்பிறந்தோ ரேலலார்க்குமிப்படியே
குன்றெனவேகூறுமுலே

(இ-ள்.) ஆபரணங்களையும் மலைபோன்ற கொங்கைகளையுமுடையவளே புதன் செவ்வாய் சுக்கிரன் பாபிகள், சந்திரன் ஒருவனே சுபன். சூரியனும் சந்திரனும் யோககாரகாள், குரு துதியாதிபதியாயிருந்தபோதிலும் மாரகத்தைச் செய்யான. புதன் முதலானவர்கள் கொல்வார்களென்று விருச்சிக இராசியிற் பிறந்தோர்களுக்குச் சோதித்து அறிவாய் என்பதாம்.

தனுவிராசிபலன் கூறுகின்றது.

ஒருவன்புகர்பொல்லானெண்சேயிரவி
மருவுநலயோகமதுமன்னுங் - திருவுடையோர்
பார்க்கரனும்புத்தியென்று பாம்பேரகலல்குல்
சீர்க்கமலச்சேயிழையாய்செப்பு.

கதிரவன்சேயாகிவளர்காரிகொல்லான்கொல்வார்
மதிநுதலாய்வெள்ளிமுன்னோர்மன்னும் - திதியுடைய
பாபிகளென்றோர்ந்திப் படிமிசையிலெந்நாளும்
சாபமதிலுற்றவர்க்குச்சாற்று.

(இ-ள்.) அரவப்படம்போன்ற வல்குலையும் சிறப்புற்ற தாமரை மலரில் விளங்கிய இலக்குமிக்குச் சமானமும் பிறைபோன்ற நெற்றியினையுமுடையவளே! சுக்கிரன் ஒருவனே பாபி, செவ்வாயும் சூரியனும் சுபாள். சூரியனும் புதனும் யோககாரகாள், சனி ஒருவனே கொல்லான். சுக்கிரன் முதலானவர்கள் எப்போதும் கொல்வார்களென்று பூமியின்கண் தனுசுவிராசியிற் பிறந்தோர்க்குச் சொல்வாய் என்பதாம்.

(க - ரை.) சனி துதியாதிபதியா யிருந்தபோதிலும் கொல்லானென்றறிக.

மகரவிராசிபலன் கூறுகின்றது.

ஆரல்பொன்னிந்துபொல்லாரானவர்சுங்கன்புந்தி
வீரமிகுயோகபரன்வெள்ளியே - காரனைய
கூந்தன்மடமானேகேள் கும்பிகொல்லானென்றே
ஆய்ந்துணர்ந்தோர்தாமுரைத்தாராம்.

சேய்முதலாய்முன்னமேசெப்புமவரேகொல்வர்
வாய்ந்தமகரமதில்வந்துதித்துக் - காந்திபெற
வாழுமவர்க்கென்றேவகுத்துரைத்தாரென்றுமிகச்
சூழுமடமாமயிலேசொல்.

(இ-ள்.) மேகத்தை நிகர்த்த கூந்தலையும் மலையை நிகர்த்தசாயலையுமுடைய பெண்ணே? செவ்வாய் குரு சந்திரன் பாபிகள், சுக்கிரனும் புதனும் சுபர், வெள்ளி ஒருவனே இராசயோககாரகன், சனி கொல்லான், செவ்வாய் முதலானபேர் கொல்வாரென்று தெரிந்தவர்கள் ஆலோசித்துச் சொன்னார்களென்று மகரவிராசியிற் பிறந்தோர்க்குச் சொல்வாயாக என்பதாம்.

(க - ரை.) சனி துதியாதிபதியா யிருந்தாலும் மாரகத்தைக் கொடான்.

கும்பவிராசிபலன் கூறுகின்றது.

பொன்மதிசேய்பொல்லார்புகரொருவனேபுனிதன்
நன்னயஞ்சேர்யோகநயந்தளிப்போன் - கன்னனிகர்
ஆனமொழிமாதே யசுரர்தமக்கெஞ்ஞான்றும்
ஞானநிலையுரைப்போனன்கு.

வேந்தனென்போன் கொல்லான் வெறிகமழ்பூங்கோ தைகொல்வார், ஆய்ந்துணரிலாரன் முன்னனவரே - தேர்ந் துரையாய், வேலைபுடைசூழுலகில் வெம்புங்குடந்தன்னி ல், சாலவுதித்தோர்க்கென்று சாற்று.

(இ-ள்.) சருக்கரையை நிகரான சொற்களையும் வாசனை வீசும் பூமாலையினையுமுடையவளே! குரு சந்திரன் செவ்வாய் இவர்கள் பாபிகள், சுக்கிரன் ஒருவனே சுபன், அந்த சுக்கிரனே யோககார கன், குரு கொல்லான் செவ்வாய் முதலானபேர்கள் கொல்வார்க ளென்று சமுத்திரஞ் சூழ்ந்த பூமியின்கண் கும்பவிராசியிற் பிறந் தோர்க்குக் கூறுவாயாக என்பதாம்.

(க - ரை.) குரு துதியாதிபதியா யிருந்தபோதிலும் மாரகத் தைக்கொடான் என்றறிக.

மீனவிராசிபலன் கூறுகின்றது.

காரிபுகர்வெய்யோன்மால் காணுக்கடுங்கொடியர்
ஆரலோடிந்துவிவரானவரே - சேரக்கால்
செய்யோன்குருவிவரோசெல்வமளிக்கும்பெரியோர்
ஐயநுண்ணூலிடையாயாய்ந்து.

பூசுதன்கொல்லான்கொல்வார் போற்றுச்சனிமுதலாந்
தேசுபெரும்பாவரென்றுதேர்ந்துரைப்பாய் - கார்சினியில்
கட்டழகியென்றுகதிர்த்துவளர் மீனத்தின்
உட்பிறப்போர்க்கொண்ணுதலாயோர்ந்து.

(இ-ள்.) சந்தேகமுற்ற நூல்போன்ற யிடையினையும் ஒளிபொருந்திய நெற்றியினையுடையவளே? சனி சுக்கிரன் சூரியன்புதன்பாபிகள், செவ்வாயும் சந்திரனும் சுபர். செவ்வாயும் குருவும் இராசயோககாரர்கள், செவ்வாய்கொல்லான், சனிமுதலானவர்கொல்வாரென்று மீனவிராசியிற் பிறந்தோர்க்குக்கூறுவாய் என்பதாம்.

(க - ரை.) செவ்வாய் துதியாதிபதியாயிருந்தபோதிலுங் கொல்லான், கிரகங்களுடைய வலிமையை யூகித்துச் சொல்லுகவென்க.

சுபாசுபர்களைப்பொதுவிற் கூறுகின்றது

நல்லார்பொல்லாரென்றுநாடிநவிலாத
எல்லாருமிவ்வுலகோர்க்கேந்திழையாய் - சொல்லுகின்ற
தானமதற்குந்தம்மைச் சார்ந்தசகவாசத்திற்
கானுகுலமாயீவராய்ந்து.

(இ-ள்.) ஆபரணங்களை யணிந்தவளே; பூமியிலுள்ளவர்கட்குச் சுபாசுபர்களென்று குறித்துச்சொல்லாத எல்லாகோட்களும் எல்லாருஞ்சொல்லுகின்ற தங்கள்தானத்துக்கும் சுபாளுடன் பிறர் சம்பந்தமுற்றிருக்கிறதற்கும் அனுகூலமாய் பலன்களைக் கொடுப்பார்களொன்று ஆராய்ந்துசொல்வாயாக என்பதாம்.

(க - ரை) சுபர்கள் பாபர்சம்பந்தப்பட்டு துர்ஸ்தானங்களிலாவது மாரகஸ்தானங்களிலாவது இருந்தால் பாபபலனைக்கொடுப்பார்கள், பாபிகள் சுபர்சம்பந்தப்பட்டுக் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் சுபபலனைக்கொடுப்பார்களென்க.

ஸ்தானபலன் பகர்கின்றது.

புத்திரதாராதிகளைப் போற்றுகின்றபாவத்திற்
கொத்தசுபக்கோட்டிசையிலொண்புஜிப்பிற் - புத்திரதா
ரம்முதலாய்ப்பேரளிப்பராயிழையாயார்கலிசூழ்
அம்புவியில்வாழுமவர்க்கு.

(இ-ள்.) ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யுடையவளே கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குப் புத்திரகளத்திரஸ்தானமுதலான

ஸ்தானத்துக்கொத்த சுபக்கிரகங்களுடைய திசாபுத்திகளிற் புத்திர தாராதி சுப பலன்களைப் பெறும்படிக்குக்கொடுப்பார்கள் என்பதாம்.

(க - ரை.) புத்திர தாராதி ஸ்தானங்களுக்கொத்த சுபராரெனில், அத்தானாதிபதிகளும் காரகாளுந்தான்.

கோட்சாரங்கொண்டுகுறிப்பறிதன் மானவர்வாழ்
நாட்பலனைநான்முகனையன்றியே - வாட் கண்ணாய்
ஆர்வல்லார் கூறுவதற்கார் வல்லார் கேட்பதற்கிங்
கார்வல்லாராராய்வதற்கு.

(இ-ள்.) வாள்போலும் கண்களை யுடையவளே; மனிதர்களுக்குத் தினபலன் சொல்வதற்குச் சோதிடநூல் வல்லவர்கள் கிரகசாரங்களைக்கொண்டு யுத்தியாகச்சொல்லிக் காண்பிப்பாகளேயன்றி தாரதம்மியங்களைப் பிரிவினையாய்ச் சொல்லவேண்டுமென்றால் பிரமதேவனொருவனைத்தவிர சொல்வதற்கும் கேட்பதற்கும் ஆராய்வதற்கும் யார் வல்லவர் என்பதாம்.

யோகமிலுற்பவித்து மோய்க்கும்பயனின்றித்
தாகமிகவுற்றிருப்பர்தாரணிக்குள் - வாகான
காசுமீரகண்டக் கழுதைகளென்செய்யுமவர்
தேசுதிசைசேராவிடில்.

(இ-ள்.) பூமிக்குள் மிகவும் வளமைபொருந்திய காசுமீரகண்டத்தில் கழுதைகளானவைகள் பிறந்திருந்தாலும் அவைகள் என்ன பலனையடையும் அத்தன்மைபோல யோகத்திற்பிறந்தாலும் உயர்ச்சிசெய்யும்படியான யோககாரகதிசை வராதாயின் அந்த யோகபலனனுபவமில்லாமல் ஆசைமாத்திர மிகுதி யாயடைந்திருப்பார்கள் என்பதாம்.

எல்லாக்கோள்களுடைய நன்மை துன்மை கூறுகின்றது.

ஐந்தொன்பானதிபரா யாவர்வரினுமவர்
அந்தமிலின்பப்பலனையாற்றுவார் - அந்தமிறுன்
பப்பலனையாற்றுவார் மூன்றாறுடன்பதினொன்
றுப்பதிகளிவ்வுலகுளோர்க்கு.

(இ-ள்.) இவ்வுலகத்துள் பிறந்தோர்களுக்கு இலக்கினத்துக்கு ரு-ம் இடத்துக்கும்-கூ - ம் இடத்துக்கும் அதிபராய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத இன்பப்பலனைக் கொடுப்பார்கள் ரு-ம் இடத்துக்கும் சு-ம் இடத்துக்கும் கக-ம் இடத்துக்கும் அதிபராய் எந்தக் கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத துன்பப்பலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(க - ரை.) முன்சொன்ன ரு-சு-கக-ம் இடங்களிலிருக்கிறவர்கள் பாபபலனைக் கொடார்கள் என்றறிக.

கோள்களுக்குரித்தாதஞ் சுபகேந்திரமும் பாபகேந்திரமுங் கூறுகின்றது.

கொடியோர்கள்கேந்திரத்தோராகிற்கொடார்கள்
கொடியபலனல்லோர்கொடுப்பர் - கடல்புடைசூழ்
வையகத்தோர்தங்கட்கு வைவேன்மலர்விழியாய்
ஐயப்பாடின்றியறி.

(இ-ள்.) கூர்மை பொருந்திய வேல்போலுமலர்ந்த கண்களையுடைய பெண்ணே, சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குப் பாபக்கிரகங்களாகிற சூரியன் செவ்வாய் சனி இவர்கள், கேந்திரங்களாகிற - க - ச - எ - க0 - ம் - இடங்களுக்கு அதிபரானால் சுப பலத்தைக் கொடுப்பார்கள். சுபக்கிரகங்களாகிற குரு சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் கேந்திராதிபதிகளானால் பாப பலத்தைக் கொடுப்பார்கள். முன்சொன்ன எல்லாக்கோள்களும் ஒன்றுக்கொன்று விசேஷபிரபலராவர் அஃதாவது ரு - ம் இடத்ததிபதிக்கு - கூ - ம் இடத்ததிபதி பிரபலன். இலக்கினாதிபதிக்கு - சு - ம் இடத்ததிபதி பிரபலன், அவனுக்கு எ - ம் இடத்ததிபன் பிரபலன் அவனுக்கு க0 - ம் இடத்ததிபதி பிரபலன் ரு-ம் இடத்ததிபதிக்கு சு - ம் இடத்ததிபதி பிரபலன் அவனுக்கு - கக - ம் இடத்ததிபதி பிரபலன், இவைகளை சந்தேகமில்லாமல் அறிவாயாக என்பதாம்.

எட்டுக்கிறைவனியல்பு கூறுகின்றது.

பாக்கியநாசத்திறையாம் பாவத்தாலெட்டதிபன்
வீக்குவெம்பார்முலையாய்மேதினியோர்க் - காக்கமிலாத்
துன்பமீவன்னவனேதூயவோராதிபனேல்
இன்பமீவன்னிகலியே.

(இ-ள்.) கச்சுக்கட்டிய தனங்களையுடையவளே, பூமியிலுள்ளவர்களுக்கு அ-ம்-இடத்ததிபதியாகியத்தானத்திற்கு விரயத்தானுதிபதியான பாவகத்தினுலே நன்மைப்பெருக்க மில்லாத துன்பத்தைக் கொடுப்பன் அந்த அ-ம் இடத்ததிபதிதானே இலக்கினுதிபதியானுல் மாறுபட்டின்பத்தைக் கொடுப்பன் என்பதாம்.

(க-ரை.) அ-ம் இடத்ததிபதியைப்போல மிகவுந்துன்பத்தைக் கொடானெனவுணர்க.

கேந்திராதிபத்தியதோஷத்தைக்கூறுகின்றது.

கண்டத்ததிபராம்பாவத்திற்காரிகையாய்
கொண்டகுருவெள்ளிகொடியரிவர் - தண்டாமல்
ஆயுவியத்திருப்பா ராமாகிலையமிலா
தாயுவியஞ்செய்திடுவாராங்கு.

(இ-ள்.) பெண்ணே, கேந்திராதிபத்திய தோஷத்தில் குருவும் வெள்ளியும் மிகவும் பலவான்கள் இவர்கள் நீங்காமல் ஆயுஸ்தானத்திற்கு வியத்தானமாகிய உ-எ-ம் இடங்களில் நின்றுராகில் சந்தேகமில்லாமல் ஆயு வியஞ்செய்வார்கள் என்பதாம்.

(க-ரை.) மாரகத்தானுதிபதியைப் பார்க்கிலும் அந்த மாரகத்தானத்திலிருப்பவர்கள் பலவான்களெனக்கொள்க. இவர்கட்குக் கேந்திராதிபத்திய தோஷத்தாற் கூறப்பட்டது மாரகத்தான விலக்கினை மேற் கூறுகின்றது.

பொதுச்சுபயோகம் புகல்கின்றது.

கோணக்கோள்கண்டக்கோள் கூடலுடனேபார்த்தல்
பேணுற்றொருவரில்லிற்பெட்புடனே - காணுற்
றொருவருற்றாகி லொழிந்தோருறாமல்
இருநலத்தையீவா ரிவர்க்கு.

(இ-ள்.) திரிகோணாதிபதியும் கேந்திராதிபதியும் - ரு - கூ - அ - கக - ம் இடங்களுக்குரிய அதிபதிகளுடன் கூடாமல் தங்கடங்கள் சம்பந்தமான வேறிடத்து ஆதிபத்திய தோஷமில்லாமல் இருவருங்கூடல் ஒருவரை ஒருவர் பார்த்தால் ஒருவரில்லிலொருவரிருத்தலான சம்பந்த முற்றாகில் இவ்வுலகத்தோர்க்கு விசேஷ சுபபலனைக் கொடுப்பார்களென்பதாம்.

(க-ரை.) தானவிசேஷத்தால் சுபபலனைக் கொடுப்பவராளுலும் ஒருவருக்கொருவர் சம்பந்தத்தால் விசேஷசுபபலனைக் கொடுப்பார்களென்றறிக.

இராஜயோகங் கூறுகின்றது.

தன்மகன்மப்பதிக டங்களிற்றமாறியுமே
அன்னியமாய்த்தங்கட்கறையுமிடத் - தின்பமுடன்
உற்றிடுவாராகிலொளிவளையாயிவ்வுலகோர்
பெற்றிடுவார்யாவர்பெரிது.

(இ-ள்.) பிரகாசம் பொருந்திய வளையல்களையுடையவளே, தருமாதிபதியுங் கருமாதிபதியுந் தங்களிடத்திற் றங்களிருந்தாலும் தங்களுக்கு அன்னியமாகச் சொல்லுமிடத்திற் சேர்ந்திருந்தாலும், தருமத்தானத்தில் கருமாதிபதி கருமத்தானத்தில் தருமாதிபதி தானிருந்தாலும் இவ்வுலகத்திலுள்ளவர்கள் யாவரும் பெரிதாகியயோகபலனைப் பெறுவார்கள் என்பதாம்.

(க-ரை.) தருமகருமாதிபதிகள் தோஷத்துடனே கூடியிருந்தாலும் தோஷத்துடனே கூடாதிருந்தாலும் இராஜயோகத்தைக் கொடுப்பார்கள் எனக்கொள்க.

யோகதிசையிரண்டி னுண்ணடுவின்றோன்றிசையும்
யோகபலனளிப்பனெள்ளியநன் - னாகப்
படமனையவல்குலாய்பாரினிற்கோட்கள்
உடனுறைதலின்றேலுரை.

(இ-ள்.) ஒளிபொருந்திய நல்லபாம்பின் படத்தை நிகர்த்த வல்குலையுடையவளே, இராசயோகங் கொடுக்குமவர் திசையிரண்டினுள் நடுவினின்றவன் திசையும் அவர்களுடன் சம்பந்தமில்லாம லிருந்துள்ளளவில் அவ்வரசயோக பலனைக்கொடுக்குமென்று சொல்வாயாக என்பதாம்.

கண்டங்கோணத்தி லிருந்தகடுங்கோட்கட்குக்
கெண்டைவிழிச்செவ்வாய்கிளிமொழியாய் - ஒண்டொடி
ஆதிபனோடலலாவிடத்துண்டேற்சம்பந்தம் [யாய்
கோதில்யோகங்கொடுப்பார்கூர்ந்து.

(இ-ள்.) சேல்போலுங்கண்களையுஞ்சிவந்த வாயினையுங்கிளிபோலுஞ் சொற்களையும் ஒளிபொருந்திய வளையல்களையு முடையவளே, கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது இருந்த விராகு கேதுகளுக்கு அல்லாத விடத்ததிபதியுடனே சம்பந்தமுண்டாகில் அந்த இராகு கேதுக்கள் குற்றமற்ற பெரிய யோகபலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(க-ரை.) அல்லாவிடத் ததிபதியுடனே சம்பந்தமுறுமென்றாலுங் கேந்திரத்திலிருந்தால் திரிகோணாதிபதியுடனும் திரிகோணத்திலிருந்தால் கேந்திராதிபதியுடனும் சம்பந்தமுறல் பிரபலத்தான பிரபல கிரக சம்பந்தக்கிரக அனுசாரியாய் விசேஷசுபபலன்களைக் கொடுப்பாரென்றறிவது.

கேந்திரகோணத்தலைவர்கேட்கிலொருவரே
லாந்திரமாயோகமளிப்பரன்றே - கூர்ந்தறிவீர்
அன்னியகோணத்தவனோ டார்ந்திடினீயும்பலன்கள்
என்னுலறிவரிதாமிங்கு.

(இ-ள்.) கேந்திராதிபதியும் திரிகோணாதிபதியும் ஒருவராகில் நிறைந்த திறமாயிருக்கப்பட்ட யோகபலனைக் கொடுப்பார். அவர் அன்னிய திரிகோணாதிபதியுடனே சம்பந்தமுற்றாராகில் அவர் கொடுக்கும் பலன்களை என்னாலளவிட்டறியப்படாதென் றறிவீர் என்பதாம்.

(க-ரை.) அவர்கள் பலத்திற்கு அனுசாரியாய் பலத்தை விசாரித்துச் சொல்லுவது.

இராஜயோகபங்கம்.

தன்மகன்மப்பதிகடாமெட்டுடன்பதினொன்
றின்றலைவராகிலவரின்பமுற்ற - நன்னயஞ்சேர்
சம்பந்தத்தாலேசகத்திலுள்ளோர்தமக்குத்
தம்பலனீயாரென்றுசாற்று.

(இ-ள்.) தரும கருமாதிபதிகள் அட்டம இலாபாதிபதிகளாயிருந்தாலும் அட்டம இலாபாதிபதியுடைய சம்பந்தம் வந்தாலும் பூமியிலுள்ளோர்கட்குத் தங்கள் சுபபலனைக் கொடார்களென்று சொல்வாயாக என்பதாம்.

(க-ரை.) இவர்கள் சம்பந்தத்தால் இல்லையெனவே அன்னிய யோக காரகசம்பந்த முண்டாயிருந்தால் யோகபலன் அடைவரெனக் கொள்க.

மாரகவிலக்கணம் வழுத்துகின்றது.

எட்டுமேதற்கெட்டுமிரண்டனையுமாயுவென்று
திட்டமுடனறிந்துசீரிலா - கட்டத்தை
மாரகமென்றுவகுத்தறிவாய்மாழ்பிலே
ஆர்கலிசூழும்புவியுளார்க்கு.

(இ-ள்.) பெருமை பொருந்திய மயில்போலுஞ் சாயலையுடையவளே, இலக்கணத்திற்கு - அ - ம் - இடமும் அதற்கு - அ - ம் - இடமான - உ - ம் இடமும் ஆயுத்தானமென்று பேர். இவைகளுக்

குச் சிறப்பில்லாத விரயத்தானங்களாகிய - எ - ம் இடத்தையும் உ-ம் இடத்தையும் கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குமாரகத்தானமென்று வகுத்தறிவாயாக என்பதாம்.

(க-ளா.) பிரவம் - கஉ - றும் இப்படியே பகுத்தறிவது.

நித்தியபலன்.

விருத்தம்.

செங்கதிருறு நட்சத்திரமுதலாய் திங்கணட்சத்திரமட்டும், சேரவேயெண்ணிரெண்டினிற்பெருக்கித் தெரிந்தவன் ஜென்மநாண்முதலாய், பொங்கமாயந்நட் சத்திரமளவும் பொருந்தியதொகையுடன் வாரம், போதமூவகையுங் கூட்டியொன்பானிற் பொற்புடன் கழித்தசேடங்கள், இங்கிதஞ்செறியுமிரவி சந்திரன்சே யிராகுபொன் சனிபுதன் கேது, இனியசுக்கிரனாதிசைப்படியே யிசைதொகைபாதிநா ழிகையாம், அங்கதுநித்ய பலனெனச்சொல்வரவைதனில்வரும்பலபாவம், அருண்மகாதிசையின் பலனதுபோலவறிந்துநித்தியபலனுரைமின்.

(இ-ள்) சூரியனிருக்கும் நக்ஷத்திரமுதல் - சந்திரனிருக்கிறநக்ஷத்திரம் வரையிலெண்ணி - இரட்டித்து வைத்து ஜென்மநக்ஷத்திரமுதல் - அன்றையநக்ஷத்திரம் வரையிலெண்ணி அன்றையவாரத்தொகையுஞ் சேர்த்து-மூன்றின் மொத்தத்தை கூ-ல் கழித்துநின்றதைதிசாக்கிரமப்படிக்கு கிரகதிசை வருஷம் க - று ௨ - நாழிகை யாகக்கொண்டு - பலபாவமும் சொல்லுதல் நித்தியபலனும் என்பதாம்.

இராசிசக்கிரம்.

உயிர்-உடல்.

வெண்பா.

ஜெனித்தகடிகைக்குச்சேர்ந்துவருஞ்சக்ரம்
தனித்ததுவேலக்கினமாச்சாற்றத் - தினத்தில்வரும்
நக்ஷத்திரத்திற்குநாடுமிடஞ்சசிதன்
பக்ஷத்திராசியெனப்பார்.

(இ - ள்.) மாதலக்கினத்தில் - நின்றநாழிகைமுதல் - ஜனித்த நாழிகைக்குரிய - சக்கிரமே - இலக்கினமென்றும் - அச்செனித்ததினத்தில்வரும் நட்சத்திரத்திற்குரிய சக்கிரமே - இராசியென்றும் பேர்பெறும் எ-று.

காலசக்கிரம்.

தேகம்-ஜீவம்.

ஒட்டியவிராசியுட லொட்டிவிட்டதேஜீவம்
வட்டவலச்சக்ரவகைமாற்றிடமாய் - திட்டமிது
மத்தியிலுறுங்கோள்தம்மாட்சிபலன்றாட்சிபலன்
சொற்றிடுகோட்பாதத்தொடர்.

(இ-ள்.) காலசக்கிரவகையில் யாதொருஜாதகனுடைய ஜென்ம நக்ஷத்திரபாதம் - எந்தராசியைததொடருகிறதோ - சவ்வியத்திற்கு அதுவேதேகம் - அதுதொடர்ந்து விடுகிறராசிஎதுவோ அது - ஜீவம் அபசவ்வியத்திற்கு - தேகராசி - ஜீவமாகவும் - ஜீவராசிதேகமாகவும்மாறும் இவ்விருராசியின் மத்தியிலுள்ள கிரகருணுகுணப்படி - பலாபலன்சொல்லுதல் எ-று.

ஸ்ரீஜாதகம்பார்க்கதம்வகை.

ஒதிடுவாய்கன்னிகைக்குவொன்பானிடக்கணவன்
வேறியாவேழிடமேபெண்பிள்ளைச்சாதிடும்பொருள்
ஐந்தாமிலக்கினத்தாலம்புலியால்பேதைகுணம்
பைந்தோட்கயற்கண்ணுய்பார்.

(இ-ள்.) பெண்பிள்ளைகளுடைய ஜனன ஜாதகத்திற்கு - ஒன்பதாமிடத்தைக்கொண்டு - பதியினுடையபலனையும் - ஏழாமிடத்தைக்கொண்டு - புத்திரர் - புத்திரிகள்பலனையும் - ஐந்தாமிடத்தைக்கொண்டு - வரும்படிபலனையும் - இலக்கினம் - இராசி [illegible]கொண்டும் இவ்விடங்களிலிருந்த கிரகங்களைக்கொண்டும் அந்தஜாதகியினுடைய [illegible]குணங்களைச்சொல்ல - மற்றெல்லாப்பலன்

கனை - ஆண்பிள்ளைகளுக்குப் பார்த்துச்சொல்லுவதுபோல் சொல்லுதல். எ-று.

அங்காரகதோஷம்.

விருத்தம்.

வாக்கினின்றன்கேழெட்டின்மருவுமீராறிற்செய்வாய்
தேக்கியவரன்றனக்குத்திருந்தவேவந்துநிற்கில்
ஆக்கியமனையாள்சாவாளாயிழைதனக்குநிற்கில்
பாக்கியபுருஷன்செற்றுப்பார்தனில்விதவையாமே.

(இ-ள்.) உ - ல் ச - ல் எ - ல் அ - ல் சஉ - ல் செவ்வாய் புருஷனுடைய ஜாதகத்திருக்கில் பெண்சாதி வியோகமாவாள். பெண்சாதியினுடைய ஜாதகத்தி லிப்படியிருக்கில் புருஷனிறந்து விதவையாவாள். இருவருக்குமிப்படி யிருந்தாலும், இல்லாவிட்டாலும் நல்லதே எ-று.

துற்பலன்.

வெண்பா.

முக்கிரகநீசமுறின்மூடங்களாகிவிடில்
வக்கிரமானாலுமேவையத்துள் - துக்கம்
துயரமுந்துன்பமுஞ்சொல்லுநேர்நேராய்
கயல்விழியாய்மாதேகணித்து.

(இ-ள்.) மூன்றுகிரகம் - ஒருஜாதகத்தில்-நீசமானால்-துக்கமே மூடமானால- துயரமே - வக்கிரமானால் - துன்பமே. எ-று.

நற்பலன்.

முக்கிரகமுச்சமூறிலாட்சிமொய்நட்பு
தக்கபடியுற்றிருக்கச்சக்ரவர்த்தி - இக்கரசன்
மந்த்ரிகிரனிறையாய்மன்னுமெனச்சொல்லுவாய்
கொந்தள[illegible]க்கோதாய்குறித்து.

(இ-ள்.) மூன்றுகிரகம் - ஒருஜாதகத்தில் - உச்சமாகில் - சக்கிரவர்த்தி - ஆட்சியாகில் - இராஜா - நட்பாகில் - மந்திரியெனச்சொல்

லவாய் ஆனல்கல்ல ஆதிபத்தியமும் - மூலத்திரிகோணமும் பெற்றிருக்கையிலே. எ-று.

பிரசவவீடுமுதலிய வடையாளம்.

சேயுதிக்குமனையிருக்குந்திசைகடகஞ்சிங்கம்
சென்மலக்கினமாயிற்றெற்குமூலை
யாயிருக்குங்கன்னிதனுர்சேன்மிதுனம்வடக்கு
ஆடிடபமகரகும்பமதற்கோமேற்கு
வேயுருண்டதோளணங்கேவிரிச்சிகங்கோலாயின்
விளங்கமரர்வேந்தனுர்திசையெனவேவிளம்பாய்
தேயின்பிறைநெய்தீபத்தில்லைவளர்பிறைக்கோ
செப்பிடுவாய்நெய்விளக்கினிறைவுவெனத்தேர்ந்தே.

(இ-ள்.) குழந்தைபிறந்த - திக்கறிய - லக்கினம்கடகம் - சிங்கமாகில் தெற்கு, கன்னி - தனுசு - மீனம் - மிதுனமாகில் - வடக்கு, மேஷம் - ரிஷபம் - மகரம் - கும்பமாகில் - மேற்கு - விருச்சிகம் - துலாமாகில் - கிழக்கென்க, அபரபக்ஷகாலமாகில் - விளக்கில் - எண்ணெய்குறைவு - பூர்வபக்ஷகாலமாகில் - எண்ணெய் - நிறைவென்கவென்பதாம்.

நிறைந்தபெண்ணுமிலக்கினத்திலுதிதீபம்
நீண்டிருக்குங்குறைந்திருக்குமந்தமாயின்
புறந்தரவிலக்கினந்தான்சரமாயிற்றீபம்
புறம்பாகுமுபயமெனிற்றிரமிருளாமெனுப
அறைந்தசனியங்கிசவீடாகிலதிற்காரி
யம்புலியைப்பார்க்கவிருளகமதேயாகும்
சிறந்தமதிக்குஞ்சேய்க்குமங்கிசவீடதனேச்
செவ்வைசனிபார்க்கிலோசெவிப்புபுலந்தெரிவாய்.

(இ-ள்.) இலக்கினம் - பெண்ணுமாகில் முற்பாதியுமாகில் - பிரசவித்தவறையில் - விளக்குப்பிரகாசமாகவும், பிற்பாதியுமாகில் - பிரகாசமிராதாகவும், சரமாகில் - விளக்கிருந்ததென்றும், உபயமாகில் வெளிப்புறத்திலிருந்ததென்றும் - திரமாகில் - விளக்கில்லையென்

றும் சந்திரனுக்கும் - செவ்வாய்க்கும் - லக்கினம் அம்சமாகி சனி பார்வையுமுண்டாகில் - குழந்தை பிறந்தவிடம் - சழனிகட்டு - என்பதாம்.

தெரிவைக்குந்துன்பமில்லைலக்கினத்தாதிக்கே
  திடமுடனேயந்தமெனிற்றேமொழிக்குத்துன்பம்
மருவியலக்கினமுதற்சந்திரனிருக்குமட்டும்
  மன்னுதொகைமடவார்கண்மருவியருகிருப்பர்
சருவியநற்சுபர்காணிற்றுன்றேன்றும்விரவிற்
  சனிகுசன்பார்த்திடிற்றுயேசஞ்சலமுற்றிடுவள்
பெருமையுடனிருந்தகோணிறங்குழவிதனக்குப்
  பெறுமென்றேபெரியோர்களுரைப்பர்மிகத்தானே.

(இ-ள்.) இலக்கினம் - ஆதியாகில் - பெற்றவளுக்கு வருத்தமில்லை - அந்தமாகில் வருத்தமுண்டு, இலக்கின முதல் - சந்திரனிருக்கிறவரையில் - எத்தனை கிரகங்களிருந்ததோ - அத்தனைபேர் - அருகிலிருப்பார்களென்க, இலக்கினத்தை சுபக்கிரகம் பார்க்கில் - அனுயாசமாய் தாய்பெற்றிருப்பள். சனி செவ்வாய் பார்க்கில் - ஆயாசமாய் பெற்றிருப்பள் - பின்னும் கிரகங்களுடைய - நிற முதலானதைக்கொண்டு - குழந்தையினுடைய வடிவ முதலியதைச் சொல்லென்பதாம்.

தானருகேயிருந்தமடவார்பருவங்கூறில்
  சனியிருந்துகண்டக்காற்றலைநரைத்தகறுப்பி
ஊனமிலாக்குசனிருந்துகாணின்முதுவயதே
  யிசையகிழஞ்சிவப்பாகவிருப்பளமங்கலையாம்
நானிலமெண்குருவெள்ளிசசியிருந்துகண்டால்
  நாரிசுமங்கலைவாலைநற்புதன்மத்திமையாம்
மாநிலமேற்பாம்பிருந்தாலனுசாரமடந்தை
  மகவுறாலேதரித்துவந்திடுங்கண்டீரே.

(இ-ள்.) சமீபத்திலிருந்த பெண்களுடைய - பருவத்தைப்பே சில் லக்கினத்தில் - சனியிருந்தாலும் - அதைப்பார்த்தாலும் - நரைத்தமயிர் - கறுப்பியெனவும், செவ்வாயிருந்தாலும் - பார்த்தா லும் - முதுமைவயது, சிவப்பி, அமங்கலியெனவும், குரு - சுக்கிரன் - சந்திரன் - இருந்தாலும் - பார்த்தாலும் - சுமங்கலி - பாலியமென வும், இராகு - கேது - இருந்தாலும் - பார்த்தாலும் - ஆசாரமில் லாதவளெனவும், . குழந்தை மாலை போட்டு வந்ததெனவும் - சொ ல்லுக.

கண்டுமொழிமாதாவின்பருவங்காரி
கதிர்குருமூவருங்கண்டால்விருத்தையவளாகும்
மண்டுவெள்ளிசேய்பார்க்கவயதுநடுவாகும்
மதிபுதனுங்கண்டக்காலவள்வாலையாவள்
மிண்டுமூடவன்னிருந்தால்வீடுபுராதனஞ்சேய்
மேவில்வெந்துகட்டினதோர்வீடாகுமென்னே
பண்டுசசிபார்க்கிலகம்புதியதுவேயாகும்
பரிதிக்குமரந்திரண்டபதியெனச்சொல்வாரே.

(இ-ள்.) குழந்தையைப் பெற்றவளுடைய - பருவத்தைக்குறித் துச் சொல்லில் சனி - சூரியன் - குரு - இம்மூவரும் - லக்கினத்தி லிருந்தாலும் பார்த்தாலும் - முதிர்வயது, சுக்கிரன் - செவ்வாயிருந் தாலும் பார்த்தாலும் - நடுவயது, சந்திரன் - புதனிருந்தாலும் பார்த் தாலும் - இளவயது எனவும், சனியிருந்தாலும் - பார்த்தாலும் - குழந்தை பிறந்த வீடு பழமை, செவ்வாயிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு நெருப்புப்பட்டது, சந்திரனிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு புதுமை, சூரியனிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு - செடி - செட் டுள்ளது, என்புதாம்,

சொல்லுபுதன்பார்த்திருந்தாற்சித்திரவீடாகும்
சுக்கிரன்பார்த்திருக்கக்காற்சுசிவீடதாகும்

வில்லரசனிருந்துகண்டாற்கெட்டியகமாகும்
மின்னனையாள்விரும்புசுவைவெய்யவனேலுறைப்பாம்
நல்லமதிக்குப்பாகுஞ்சேய்துவர்ப்பைநாடும்
நாலுவகைச்சுவைபுதனேநல்கிவிப்பனிப்பால்
அல்லலறுங்குருமதுரம்வெள்ளிபுளிப்பாகும்
யணிகாரிகசப்பிலக்கினத்திசையில்சிரசே.

(இ-ள்.) புதனிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு - சித்திரவிசித்திரம், சுக்கிரனிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு பரிசுத்தம், குருவிருந்தாலும் - பார்த்தாலும் - வீடு - அழுத்தம், பெற்றதாய் புசிப்பைப்பற்றிச்சொல்ல - சூரியன் - காரம், சந்திரன் - தித்திப்பு, செவ்வாய் - துவர்ப்பு, புதன் - நாலுதினுசும், குரு - மதுரம், சுக்கிரன் - புளிப்பு, சனி - கசப்பு, என்பதாம்.

சிரசரராசியிற்சுங்கனிருக்கவிளக்கசையும்
திரங்களைப்பாவர்கள்பார்க்கிற்றீர்க்கமுறுந்தீபம்
உரைமருவும்லக்கினத்துக்கிருபாலுநான்கு
மோதுதசந்தனிலிருந்தாருடன்கூடியிருப்பர்
இரவிபுந்திபளிங்குகேந்திரத்திருக்கிற்கிழக்காம்
இரணியன்மீட்டீராந்தேறியிருந்திடிலுத்தரமே
அரவுசெவ்வாய்சென்மத்திலுறினுந்தெற்காகும்
அணியுமனேசேர்காரிக்ககமேற்குவாசல்.

(இ - ள்.) சரராசி யுதயமாக - சுக்கிரனிருக்க - விளக்கொளியசைவும் - நிலைபேதகமும், திரலக்கினத்தில்ஜனிக்க - பாவர்கள்பார்க்க - விளக்கின் சுடர்மேல்நோக்கியும் நிலைமாறுமல்நிற்கும், (உபயலக்கின முதயமாகில், பிரசவ அறையிலிருந்த விளக்கையெடுத்துவிட்டு வேறுவிளக்கை வைப்பார்கள்.) இலக்கினத்திற்கு உ - ச - ௬0 ௧௨-ல் எத்தனைகிரகங்கள் நின்றதோ - அத்தனை பெண்கள் பிரசவ அறையில் - பிரசவகாலத்தில் தாபுடனிருப்பார்கள். கேந்திரத்தில்

சூரியன் - புதன் - சுக்கிரன் இருக்கில் - கிழக்கு, குருவிருக்கில் - வடக்கு, செவ்வாயும் - இராகும் இலக்கினத்திலிருக்கில் - தெற்கு, சனியிருக்கில் - மேற்கு, இத்திசைகளிற் பொருந்திய வாசற்படியுள்ள வீடாயிருக்கும் என்பதாம்.

வாசமுறுமூன்றுறிற்பதினொன்றிற்பாவர்
வந்திருக்கச்சனிபத்தாமனையதனிற்சார
நேசமடந்தையரிருந்துபுரிவர்பரிகாரம்
நீண்டசனிசுபர்மனையிலேறிநல்லோர்காணில்
ஆசிலினைத்தொழில்செய்நாரியருகிருப்பர்
ஆமென்றேசுருதியறிந்துரைத்தாராய்ந்தோர்
தேசுறுநற்கலைநிறையுந்திங்கண்முகமயிலே
செப்பினரிப்பலபாகந்தெரிந்துகொளத்தானே.

(இ-ள்.) ௩ - ௬ - ௧௧ - ல் பாபக்கிரகமிருந்தாலும், ௧௦ - ல் சனியிருந்தாலும், நீச ஸ்திரிகள் பெற்றவனுக்கு உபசாரம் செய்வார்கள்; அந்தச் சனியே சுபர்களுடைய வீட்டிலிருந்து சுபர் பார்வையும் பெற்றால், தாழ்ந்தஜாதிப் பெண்டுகளிருந்து உபசாரஞ் செய்வார்கள் என்பதாம்.

சதுரங்கபலயோகம்.

வெண்பா.

ஒன்றுநான்கேழ்பத்தி லொவ்வொருநற்கோளிருக்கி
லன்றுசதுரங்கபலயோகமா - மென்றுணர்வீர்
ஆக்கதற்குப்பலனே வாயுவிர்த்திதீங்கில்லை
ஓங்குமிசைகல்வியுமுண்டு.

(இ-ள்.) ௧ - ௪ - ௭ - ௧௦ - என்கிற கேந்திரத்தில் ஒவ்வொரு சுபக்கிரகமிருந்தாற் சதுரங்கபல யோக ஜாதகமாகும்; அதன்பலன் ..... தீங்கில்லை, கீர்த்தி, கல்வி யுண்டென்பதாம்.

ஆருடம்.

விருத்தம்.

நல்லதோர்பொருளைப்போக்கிநாடியேவருவோர்பக்க
வில்லதிலரவங்காரியிரவிசேயிருப்பாராகில்
சொல்லதுவின்றேசேருந்தொனிப்பவர்கோணமாகில்
அல்பகனுண்மூன்றைந்திலலறியேவரப்பார்மாதே.

(இ-ள்.) பாபக்கோள் நின்ற ராசிப்பக்கம் பொருளைப் போக்கி வைவா வந்திருந்து கேட்கில் உடனே கிடைத்தது எனவும், மூலையில் வந்திருந்து கேட்கில் ௩ - நாளில் ௫ - நாளில் தப்பில் ௧௫ நாளில் கிடைக்கப்படும் என்று சொல்லவும்.

இப்படிநல்லோர்நின்றவிடத்தினிற்கேட்பாராகில்
பொய்ப்படும்போனசொத்துப்புலன்வரமெதுவாமென்
மெய்ப்படச்சொல்லலாகும்மேவியகோணமாகில்
துய்ப்படவேதமூர்த்திசொன்னதுதவறேமாதே.

(இ-ள்.) சுபக்கோள் நின்ற ராசிப்பக்கம் வந்து கேட்கப்பட்டவர் சொத்து கிடைக்காது; மூலைப்பக்கமிருந்து கேட்கப்பட்டவர் சொத்து ஜமதுவில் கிடைக்கலாம் என்று சொல்லவும்.

ஈநரக்கிரகதற்ற நிவர்த்தி.

வெண்பா.

ஒருநாறு கோள்புத னோராயி ரங்கோள்
பிருகுவி லககங்கோள் பீதன் - திருகேந்த்ரம்
பெற்றாற் பவமில்லை பின்பென்ன வேறுகுறை
பற்றாது பாலன்வரப் பார்.

(இ-ள்) புதன், சுக்கிரன், வியாழன் இம்மூவர் கல்லகேந்திரம் பெற்றிருந்தால் பிறந்த குழவிக்கெல்லாத் துற்றங்களைப் போக்கும்.

வந்தனம்.

விற்பூட்டுவெண்பா,

என்னைத்தலைமிதிக்குமென்னுடையோர்மேலிருக்கத்
தன்னைப்புகழத்தகாதக்தை - யன்னையின்பேர்
சோதிடநூல்கற்கமுனைஞ்சொல்லெனிதன்பேராமல
ஓதிடக்கொள்வாருவப்பு.

வாழ்த்து.

மெய்ம்மைபுணர்வோர்வாழ்க வேதஞ்சுருதிபிநூல்
மெய்ம்மையிலாவிந்துஜனம்பூவைசியர் - துய்யமையி[illegible]
விஜயகொடிசக்ரேஸ்வரியாம்விக்டோரிதங்கிளையும்
ஜெயபசுபாதநீதி.

வழாநிலை.

ஓர்தந்தைதாயிற்குடம்பெடுத்தோரிந்நூலைப்
பார்த்தவில்வேறைச்சிற்பதியார்கள் - யார்விரும்பிலே
[illegible]லைத்தோர்சந்ததியார்கோன்புகெடாமலவா
பாவிசேர்க்கிடிற்பெறுவர்பண்பு.

சீர்தலப்புலசேகரம் முற்றிற்று.